தமிழ்நாடு அரசு

ஒன்பதாம் வகுப்பு

முதல் பருவம்

தொகுதி 1

தமிழ்

ENGLISH

விற்பனைக்கு அன்று

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு
இலவசப்பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2013
திருத்திய பதிப்பு – 2014
(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006

நூல் அச்சாக்கம்
தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006

இந்நூல் 80 ஜி எஸ் எம் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது

விலை : ரூ.

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

பாடநூல் வலைதளம்
www.textbooksonline.tn.nic.in

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

SHORT VERSION

Jana-gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Jaya he, jaya he, jaya he
Jaya jaya, jaya, jaya he.

AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல், பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

THE NATIONAL INTEGRATION PLEDGE

"I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation."

"I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means."

A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vandemataram!

Signature

பொருளடக்கம்

தமிழ் (1 – 108)

இயல்	தலைப்பு	பக்க எண்
1.	வாழ்த்து	2
	திருக்குறள்	4
	திராவிட மொழிகள்	9
	மாமரம்	13
	எழுத்து	16
2.	சிறுபஞ்சமூலம்	36
	பாஞ்சாலி சபதம்	38
	இக்காலக் கவிதைகள்	43
	கண்ணதாசன் கவியின்பம்	48
	சொல் : பகாப்பதம், பகுபதம்	52
	ஆகுபெயர் : எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்	56
	பொருள்கோள் : ஆற்றுநீர்ப்பொருள்கோள், மொழிமாற்றுப்பொருள்கோள், நிரல்நிறைப்பொருள்கோள்	58
3.	ஒய்வும் பயனும்!	73
	திருவிளையாடற் புராணம்	76
	கடற்பயணம்	83
	கெலன் கெல்லர்	88
	யாப்பு :செய்யுள் உறுப்புகள் (எழுத்து, அசை, சீர்)	92
	அணி:இல்பொருள் உவமையணி, வேற்றுப்பொருள் வைப்பணி	96

மனப்பாடப் பகுதி

இயல்	செய்யுள்	அடிகள்
1.	வாழ்த்து	4
	திருக்குறள் (1, 4, 5, 6, 8)	10
2.	சிறுபஞ்சமூலம்	4
	பாஞ்சாலி சபதம் (2)	8
3.	ஒய்வும் பயனும்!	4
	திருவிளையாடற் புராணம் (4, 10)	8
	மனப்பாடஅடிகள் மொத்தம்	38

(பாடநூலுள் * இவ் உடுக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதி)

தமிழ்

ஒன்பதாம் வகுப்பு

முதல் பருவம்

வாழ்த்து

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே. *

– கம்பர்

பொருள் : உலக உயிர்கள் அனைத்தையும் படைத்தும் காத்தும் அழித்தும் அளவற்ற திருவிளையாடல்களை இடைவிடாது புரிபவர் இறைவர். அவர் நமக்கெல்லாம் தலைவர். அத்தகைய இறைவரையே நாம் அடைக்கலமாகப் பற்றுவோம்.

சொற்பொருள் : உளவாக்கல் – உண்டாக்குதல் (படைத்தல்); நிலைபெறுத்தல் – காத்தல்; நீக்கல் – அழித்தல்; நீங்கலா – இடைவிடாது; அலகிலா– அளவற்ற; அன்னவர் – அத்தகைய இறைவர்; தலைவர் – இறைவர்; சரண் – அடைக்கலம்.

இலக்கணக்குறிப்பு : யாவையும் – உம் – முற்றும்மை; ஆக்கல், நீக்கல், விளையாட்டு – தொழிற்பெயர்கள்; அலகிலா விளையாட்டு – ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம் : உடையார் = உடை + ய் + ஆர். உடை – பகுதி; ய் – சந்தி; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

ஆசிரியர் குறிப்பு : கம்பர் நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூரில் பிறந்தார். இவர் கம்பராமாயணம், ஏர் எழுபது, சிலை எழுபது, சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இவர், குலோத்துங்கச் சோழனின் அவைப்புலவராக விளங்கினார்; திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றார். இவர், கவிச்சக்கரவர்த்தி எனவும் கல்வியில் பெரியர் கம்பர் எனவும் போற்றப்படுகிறார். இவரின் காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு எனக் கூறுவர்.

நூற்குறிப்பு : வடமொழியில் வான்மீகி முனிவர் எழுதிய இராமாயணத்தைத் தழுவித் தமிழில் கம்பர் எழுதியதே கம்பராமாயணம். கம்பர்,இந்நூலுக்கு இராமாவதாரம் என்றே பெயரிட்டார். இது பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம், கிட்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் என ஆறு காண்டங்களை உடையது. கம்பராமாயணப் பாலகாண்டத்திலுள்ள முதற்பாடல் வாழ்த்துப் பாடலாக இடம்பெற்றுள்ளது.

---

* மனப்பாடப் பகுதி.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பிரித்தெழுதுக.

1. தாமுள = __________
2. விளையாட்டுடையார் = __________
3. அலகிலா = __________

2. பொருத்துக.

உளவாக்கல் – அழித்தல்
நிலைபெறுத்தல் – இறைவர்
நீக்கல் – காத்தல்
தலைவர் – படைத்தல்

3. கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தைக்கொண்டு நிரப்புக.

1. இறைவர் அ __ கிலா விளையாட்டுடையவர். (ல / ள / ழ)
2. அ __ னவர்க்குச் சர __ நாங்களே. (ண் / ந் / ன்)

4. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கல்வியில் பெரியர் என அழைக்கப் பெறுபவர் __________.
2. கம்பராமாயணம் __________ காண்டங்களை உடையது.
3. கம்பர் பிறந்த ஊர் __________.

ஆ) குறுவினாக்கள்

1. இறைவரின் முத்தொழில்கள் யாவை?
2. இறைவர் எத்தகையவர் ?
3. கம்பர் எவ்வாறு புகழப்படுகிறார் ?
4. கம்பர் இயற்றிய நூல்கள் யாவை ?
5. கம்பரை ஆதரித்த வள்ளல் யார் ?
6. வாழ்த்துப் பாடலில் இடம்பெற்றுள்ள எண்ணும்மையை எடுத்தெழுதுக.
7. வாழ்த்துப் பாடலில் இறைவனைச் சுட்டும் பதிலிப் பெயரை எழுதுக.
8. வாழ்த்துப் பாடலில் இடம்பெற்றுள்ள ஏகாரச் சொற்களை எழுதுக.

இ) சிறுவினாக்கள்

1. கம்பர் – குறிப்பு எழுதுக.
2. இறைவரின் இயல்புகளாகக் கம்பர் கூறுவன யாவை ?

தமிழ்

திருக்குறள்

பொறையுடைமை

(பிறர் செய்யும் துன்பங்களைப் பொறுத்தல்)

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத், தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. *

பொருள் : நிலமானது, தன்னைத் தோண்டுபவரையும் தாங்குவதுபோல, நம்மை இழிவுபடுத்துவோரையும் நாம் பொறுத்துக்கொள்வதே சிறந்த பண்பு.

சொற்பொருள் : அகழ்வாரை – தோண்டுபவரை; இகழ்வார் – இழிவுபடுத்துவோர்; தலை – சிறந்த பண்பு.

இலக்கணக்குறிப்பு : பொறுத்தல் – தொழிற்பெயர்; அகழ்வார், இகழ்வார் – வினையாலணையும் பெயர்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : அகழ்வார் = அகழ் + வ் + ஆர். அகழ் – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

அணி : உவமையணி.

2. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

பொருள் : பிறர் செய்யும் துன்பத்தை ஒருவர் பொறுத்துக்கொள்ளுதல் சிறந்தது; அதனைவிடச் சிறந்தது அத்துன்பத்தை மறந்துவிடுதல்.

சொற்பொருள் : பொறுத்தல் – பொறுத்துக்கொள்ளுதல்; இறப்பினை – பிறர் செய்த துன்பத்தை.

இலக்கணக்குறிப்பு : மறத்தல், பொறுத்தல் – தொழிற்பெயர்கள்; நன்று – குறிப்பு வினைமுற்று.

பகுபத உறுப்பிலக்கணம் : மறத்தல் = மற + த் + தல். மற – பகுதி; த் – சந்தி; தல் – தொழிற்பெயர் விகுதி.

3. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

பொருள் : விருந்தினரை வரவேற்க இயலாது தவிர்க்கும் நிலை, வறுமையுள் கொடிய வறுமையாகும். அதுபோல, அறிவற்றார் செய்யும் தீங்குகளைப் பொறுத்துக்கொள்ளுதல் வலிமையுள் சிறந்த வலிமையாகும்.

சொற்பொருள் : இன்மை – வறுமை; ஒரால் – தவிர்த்தல்; மடவார்–அறிவற்றார்.

இலக்கணக்குறிப்பு : விருந்து – பண்பாகு பெயர்; ஒரால், பொறை – தொழிற்பெயர்கள்.
அணி : எடுத்துக்காட்டு உவமையணி.

4. நிறையுடைமை நீங்காமை வேண்டின், பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். *

பொருள் : நற்குணங்கள் நம்மைவிட்டு நீங்காதிருக்கவேண்டுமானால், பொறுமையை நாம் போற்றிக் கடைப்பிடித்தல் வேண்டும்.

சொற்பொருள் : நிறை – சால்பு.

இலக்கணக்குறிப்பு : நீங்காமை – எதிர்மறைத் தொழிற்பெயர்; போற்றி – வினையெச்சம்.

(இந்நாலு குறட்பாவும் பொறுமையின் சிறப்பினைக் கூறுகின்றன.)

5. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே, வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. *

பொருள் : பிறர் செய்யும் தீங்கைப் பொறுத்துக்கொள்ளாமல் தண்டிப்பவரைச் சான்றோர் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்; ஆனால், பொறுத்துக் கொள்பவரைப் பொன்போல் மதித்து மனத்துள் வைத்துக்கொள்வர்.

சொற்பொருள் : ஒறுத்தாரை – தண்டித்தவரை; ஒன்றாக – ஒரு பொருட்டாக; பொதிந்து வைப்பர் – (மனத்துள்) வைத்துக்கொள்வர்.

இலக்கணக்குறிப்பு : ஒறுத்தார் – வினையாலணையும் பெயர்; பொதிந்து – வினையெச்சம்.
பகுபத உறுப்பிலக்கணம் : வைப்பர் = வை + ப் + ப் + அர். வை – பகுதி; ப் – சந்தி; ப் – எதிர்கால இடைநிலை; அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

6. ஒறுத்தார்க் கொருநாளை இன்பம், பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். *

பொருள் : பிறர் செய்யும் தீமையைப் பொறுத்துக்கொள்ளாது தண்டித்தவர்க்கு ஒரு நாள் மட்டுமே இன்பம் கிட்டும்; அதனைப் பொறுத்துக்கொண்டவரின் புகழ், உலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும்.

சொற்பொருள் : பொன்றும் துணையும் – உலகம் உள்ளவரை.

இலக்கணக்குறிப்பு : ஒறுத்தார், பொறுத்தார் – வினையாலணையும் பெயர்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : ஒறுத்தார் = ஒறு + த் + த் + ஆர். ஒறு – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

7. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்(து)
அறனல்ல செய்யாமை நன்று.

பொருள் : செய்யத்தகாத துன்பச் செயல்களைப் பிறர் தனக்குச் செய்தாலும், தான் அத்துன்பத்துக்கு வருந்தி, அறத்துக்கு மாறான செயல்களை அவருக்குச் செய்யாதிருத்தல் நல்லது.

சொற்பொருள் : திறனல்ல – செய்யத்தகாத; நோநொந்து – துன்பத்துக்கு வருந்தி.

இலக்கணக்குறிப்பு : தற்பிறர் – ஏழாம் வேற்றுமைத் தொகை; செய்யினும் – இழிவுச் சிறப்பும்மை; நொந்து – வினையெச்சம்; அறன், திறன் – ஈற்றுப்போலிகள்.

8. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். *

பொருள் : செருக்கினால் தீமை செய்தாரையும் தத்தம் பொறுமையினால் வெற்றி கொள்ளல் வேண்டும்.

சொற்பொருள்: மிகுதியான் – மனச்செருக்கால்; மிக்கவை – தீமை; தகுதியான் – பொறுமையால்.

இலக்கணக்குறிப்பு: செய்தாரை – வினையாலணையும் பெயர்; விடல் – அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று.

(இந்நாலு குறட்பாவும் பிறர் செய்த தீங்கினைப்
பொறுத்துக்கொள்ளுதல்பற்றிக் கூறுகின்றன.)

9. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

பொருள் : வரம்புகடந்து பேசுவோரின் தீய சொற்களையும் பொறுத்துக்கொள்பவரே பற்றற்ற துறவியரினும் மேலானவர்.

சொற்பொருள்: துறந்தார் – பற்றினை விட்டவர்; இறந்தார் – வரம்பு கடந்தவர்; இன்னா – தீய; நோற்கிற்பவர் – பொறுப்பவர்.

இலக்கணக்குறிப்பு : இறந்தார், துறந்தார், நோற்கிற்பவர் – வினையாலணையும்பெயர்கள்; இன்னாச்சொல் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம் : இறந்தார் = இற + த் (ந்) + த் + ஆர். இற – பகுதி; த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்த கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

10. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

பொருள் : உண்ணாநோன்பு மேற்கொள்ளும் பெரியவர்களைவிடத் தம்மை இகழ்வோரின் தீயசொற்களைப் பொறுத்துக்கொள்பவரே மேலானவர் ஆவார்.

சொற்பொருள் : நோற்பார் – நோன்பு மேற்கொள்பவர்; இன்னாச்சொல் – தீய சொல்.

இலக்கணக்குறிப்பு : உண்ணாது – வினையெச்சம்.

(இவ்விரு குறட்பாவும் பிறரின் இழிச்சொற்களைப்
பொறுத்துக்கொள்ளுதல் பற்றிக் கூறுகின்றன.)

ஆசிரியர்குறிப்பு: திருவள்ளுவர், திருக்குறளில் அனைத்து நாட்டினரும் இனத்தினரும் தமக்கே உரியதெனக் கொண்டாடும் வகையில் பொதுமைக் கருத்துகளைப் படைத்தவர்.

நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர் என்னும் சிறப்புப் பெயர்களும் இவருக்கு உண்டு. இவரின் காலம் கி.மு.31ஆம் ஆண்டு என அறிஞர் கூறுவர்.

நூற்குறிப்பு: திரு + குறள் = திருக்குறள். திரு – செல்வம், சிறப்பு, அழகு, மேன்மை, தெய்வத் தன்மை எனப் பல பொருள் கொண்ட ஒருசொல். குறள் – குறுகிய அடி உடையது. ஏழுசீர்களைக் கொண்ட ஈரடி வெண்பாக்களால் ஆனது, திருக்குறள்.

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது; அறம் 38 அதிகாரங்களாகவும், பொருள் 70 அதிகாரங்களாகவும், இன்பம் 25 அதிகாரங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது.

இது, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலைப் போற்றிப் பாராட்டிய பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவமாலை.

திருக்குறளுக்கு அந்நாளிலேயே பதின்மர் உரை எழுதியுள்ளனர். அவ்வுரைகளுள், பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர் தமிழ்ச் சான்றோர்.

இன்றும் பலர் திருக்குறளுக்கு உரை எழுதி வருகின்றனர்.

திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மர் :

1. தருமர்
2. மணக்குடவர்
3. தாமத்தர்
4. நச்சர்
5. பரிதி
6. பரிமேலழகர்
7. திருமலையர்
8. மல்லர்
9. பரிப்பெருமாள்
10. காளிங்கர்

இங்கிலாந்து நாட்டு மகாராணியார் விக்டோரியா, காலையில் கண்விழித்ததும் முதலில் படித்த நூல் திருக்குறள்.

தமிழ்

தமிழ்

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தைக்கொண்டு நிரப்புக.
   1. இகழ்வார்ப் பொறுத்தல் த ___ (லை/ளை)
   2. ஒ ___ த்தார்க்கு ஒ ___ நாளை இன்பம் (ரு/று)
2. பொருத்துக.

அறம்	–	எழுபது
பொருள்	–	இருபத்தைந்து
இன்பம்	–	முப்பத்தெட்டு

3. எதுகைச்சொற்களை எடுத்தெழுதி அடிக்கோடிடுக.
   1. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
      தகுதியான் வென்று விடல்.
   2. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
      இகழ்வார்ப் பொறுத்தல் தலை.
4. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்துக.

   இறப்பினை என்றும் பொறுத்தல் அதனினும்
   நன்று மறத்தல் அதனை.
5. பொருள் வேறுபாடு அறிக.
   1. பொறுத்தல் / பொருத்தல் ________________, ________________.
   2. இறத்தல் / இரத்தல் ________________, ________________.
   3. நிறை / நிரை ________________, ________________.
   4. வண்மை / வன்மை ________________, ________________.
6. இருபொருள் தருக.
   1. நிறை ________________, ________________.
   2. தலை ________________, ________________.

ஆ) குறுவினாக்கள்

1. தலை சிறந்த பண்பு எது ?
2. பொறுத்தாரைப் போற்றுதல் எங்ஙனம் ?
3. போற்றிக் காக்கவேண்டியது எது ?
4. துறவியரினும் மேலானவர் யார் ?

இ) சிறுவினாக்கள்

1. திருக்குறள் – நூற்குறிப்பு எழுதுக.
2. பொறையுடைமையின் சிறப்புகள் யாவை ?
3. பிறர் செய்த தீங்கை எங்ஙனம் பொறுத்தல் வேண்டும் ?
4. பிறர் கூறுகின்ற தீயசொற்களைப் பொறுத்துக்கொள்பவர் எத்தகு சிறப்புக்குரியவர் ஆவர் ?

ஈ) நெடுவினா

‘பொறையுடைமை’ அதிகாரத்தில் வள்ளுவர் வழங்கும் வளமார்ந்த கருத்துகளைத் தொகுக்க.

திராவிட மொழிகள்

உலகம் தோன்றிய நாள்முதல் இன்றுவரை வியத்தகு படைப்புகளும் கண்டுபிடிப்புகளும் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. ஆயினும், கண்ணால் காணமுடியாத, நிலையான வடிவத்தைத் தரவியலாத காற்றினால் ஏற்படும் ஓசையை ஒலியாக்கி, அதற்கு வரிவடிவம் தந்து, மொழியாக நிலைபெறச் செய்த மனிதனின் செயலுக்கு இணையான படைப்போ கண்டுபிடிப்போ இந்நாள்வரை தோன்றவில்லை என்பதே உண்மை.

மொழியும் மொழிக்குடும்பமும்

தம் எண்ணங்களையும் கருத்துகளையும் பிறருக்கு அறிவிக்கும் கருவியாக விளங்குவது, மொழி. உலகில் பல்வேறு மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. அவற்றுள், தனக்கெனத் தனிச்சிறப்பும் பல மொழிகள் தோன்றிவளர அடிப்படையாகவும் உள்ள மொழியே மூலமொழி. அதிலிருந்து தோன்றி வளர்ந்த மொழிகள் கிளைமொழிகள். அவற்றின் பொதுத்தன்மையின் அடிப்படையில், அவற்றை ஒரே மொழிக்குடும்பத்தில் அடக்குவர், மொழியியல் அறிஞர்.

இந்தியமொழிக் குடும்பங்கள்

இந்தியாவில் பேசப்படும் மொழிகள் அனைத்தையும், இந்தோ–ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ– ஆசிய மொழிகள், சீன – திபெத்திய மொழிகள் என மொழியியல் அறிஞர் நான்கு மொழிக்குடும்பங்களுள் அடக்குவர். நம் நாட்டில் ஆயிரத்து முந்நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளும், அதன் கிளைமொழிகளும் பேசப்படுகின்றன. ஆதலால், இந்திய நாட்டை, 'மொழிகளின்காட்சிச்சாலை' (Museum of Languages) எனக் குறிப்பிட்டுள்ளார் மொழியியல் பேராசிரியர் ச.அகத்தியலிங்கம்.

திராவிடமொழிக் குடும்பங்கள்

இன்று இருபத்து மூன்றனுக்கும் மேற்பட்ட திராவிடமொழிகள் உள்ளன. இம்மொழிகளைத் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூவகையாகப் பிரிப்பர். இவற்றுள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கும் திராவிடப் பெருமொழிகள் எனப்படும்.

திராவிடம்

உலக நாடுகளின் பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று என்பது மொகஞ்சதாரோ – அரப்பா அகழ்வாய்வுக்குப் பிறகு நிறுவப்பட்டுள்ளது. கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னரே பரந்து விரிந்திருந்த இந்திய நாகரிகம் உலகநாகரிகங்கள் அனைத்துக்கும் தாயாகவும் வழிகாட்டியாகவும் விளங்கி

தமிழ்

இருக்கிறது. இவ்வாறு, இந்தியா முழுவதும் பரந்து விரிந்திருந்த அப்பழம்பெரும் நாகரிகத்தையே திராவிடநாகரிகம் என அறிஞர் கருதுகின்றனர்.

தென்திராவிட மொழிகள்	நடுத்திராவிட மொழிகள்	வடதிராவிட மொழிகள்
தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு தோடா, கோத்தா, கொரகா, இருளா.	தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, முண்டா.	குரூக், மால்தோ, பிராகுய்.

திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழியாகும். திராவிடம் என்னும் சொல் திராவிடநாடு என்னும் பொருளைத் தருவது. திராவிட மொழிகள், திராவிட இனம், திராவிட நாகரிகம் என்னும் சொற்றொடர்களுள் திராவிடம் என்னும் சொல் பெயரடையாக வந்துள்ளது எனக் கால்டுவெல், தமது திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் குறிப்பிட்டு உள்ளார். குமரிலபட்டர் திராவிடம் என்னும் சொல்லை முதன்முதலில் உருவாக்கினார். கால்டுவெல் அதனைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தார்.

மொழியியல் அறிஞர், தொடக்கக் காலத்தில் தமிழையும் அதன் கிளைமொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய தென்னிந்திய மொழிகளையும், தமிளியன் (Tamilian) அல்லது தமுலிக் (Tamulic) என்று வழங்கினர். அவற்றுள் தமிழ், மிகுந்த சிறப்பும் பழைமையும் வாய்ந்தது. எனினும், பல திராவிட மொழிகளுள் தமிழையும் ஒன்றாகக் கொண்டனர். ஆகவே, இவ்வின மொழிகள் அனைத்தையும் இணைத்துத் திராவிட என்னும் சொல்லைத் தாம் கையாண்டதாகக் கால்டுவெல் கூறியுள்ளார்.

திராவிட மொழிகளுள் தமிழுக்குரிய இடம்

திராவிட என்னும் சொல்லே தமிழ் என்னும் சொல்லிலிருந்து உருவானது. தமிழ் > திரமிள > திரவிட > திராவிட என உருவாயிற்று எனக் கூறுகிறார் மொழியியல் அறிஞர் ஈராஸ் பாதிரியார். திராவிட மொழி என்றாலே தமிழ்மொழியையே குறிக்கும். திராவிட மொழிகளுள் மிகவும் தொன்மையான, பண்பட்ட மொழி தமிழே.

சிறுபஞ்சமூல நூலின் 21ஆவது ஓலைச்சுவடி

யுனெஸ்கோ நிறுவனம், அழிந்து வரும் பண்டைய தமிழ் ஓலைச்சுவடிகளைப் புதுப்பித்துப் பாதுகாக்க, பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



இலெமூரியாக் கண்டம் : கடல்கோளால் கொள்ளப்பட்ட பழந்தமிழ்க் குமரிக்கண்டம்.

திராவிடமொழிகளுள் மூலத் திராவிடமொழியின் வடிவத்தையும் மொழிக்கூறுகளையும் வேர்களையும் பெருமளவில் கொண்டுள்ள மொழி, தமிழே. இத்தகைய தொன்மைச் சிறப்பும் தலைமைச் சிறப்புமே தமிழை இன்று உயர்தனிச் செம்மொழியாய் உயர்ந்து நிற்கச் செய்துள்ளது.

தொன்மைச் சிறப்பு

கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் தமிழ்மொழி தோற்றம் பெற்றிருத்தல் வேண்டும் என ஒரு பிரிவினரும், மத்தியத்தரைக்கடல் பகுதியிலிருந்து திராவிட இனமும் அவர்தம் மொழியும் இந்தியாவுக்கு வந்திருத்தல் வேண்டும் என மற்றொரு பிரிவினரும் கருதுகின்றனர். ஆரியர் வருகைக்கு முன்னரே தமிழ்மொழி வழங்கி வருவதாக வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். தமிழ்மொழியில் இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகப் பழைமையான நூல் தொல்காப்பியம். இந்நூல் ஓர் இலக்கண நூலாகத் திகழ்வதனால், இந்நூலுக்கு முன்பே பல இலக்கிய நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவு.

தலைமைச் சிறப்பு

திராவிட மொழிகள் அனைத்துக்கும் மூலமான மொழியை, முன்னைத் திராவிடமொழி, மூலத் திராவிடமொழி, தொன்மைத் திராவிடமொழி எனப் பல்வேறு சொற்களால் குறிப்பர். அம்மூலமொழியே தமிழ்மொழி. ஏனைய திராவிட மொழிகள் தமிழிலிருந்து தோன்றி வளர்ந்தவை. எண்பது விழுக்காடு அளவுக்குத் திராவிட மொழிக்கூறுகளைக் கொண்டுள்ள ஒரே திராவிடமொழி, தமிழ். இத்தகு தலைமைச் சிறப்புக்குரிய மொழி, நம் தமிழ்மொழி.

செவ்வியல் சிறப்பு

தொன்மை, தனித்தன்மை, மொழிகளின் தாய், சொல்வளம், இலக்கிய இலக்கண வளம், சிந்தனைவளம், கலைவளம், பண்பாட்டுவளம் இவற்றுடன் பன்னாட்டு மொழியாக

விளங்கும் தன்மையைப் பெற்ற மொழியே செவ்வியல்மொழி எனப்படும். இவையே செம்மொழிக்கான (Classical Language) கூறுகளாகவும் கருதப்படுகின்றன. மேற்கண்டவற்றை அளவுகோல்களாகக்கொண்டு நோக்கும்போது, செவ்வியல்மொழியாக ஒளிர்வது நமது தாய்மொழியாம் தமிழே.

தமிழின் சிறப்பை நிலைக்கச் செய்வதும் மேலும் வளரச் செய்வதும் தமிழராகிய நமது கடமையாகும். இதனை உணர்ந்து தமிழின் சீரிளமையைக் காக்க, என்றும் பாடுபடுவோம்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. மொழிகள் பல தோன்றி வளர அடிப்படையான மொழியை ________ என்பர்.
2. இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை எனக் குறிப்பிட்டவர் ________.
3. ஒரு மூலமொழியிலிருந்து தோன்றி வளரும்மொழியை ________ என்பர்.
4. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர்________.
5. தமிழ்மொழியிலுள்ள மிகப் பழைமையான நூல் ________.

2. விடைக்கேற்ற வினா அமைக்க.

1. இந்திய நாட்டை மொழிகளின் காட்சிச்சாலை என அகத்தியலிங்கம் குறிப்பிடுகிறார்.
2. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியன திராவிடப் பெருமொழிகள்.

ஆ) குறுவினாக்கள்

1. மொழிக்குடும்பம் என்றால் என்ன ?
2. இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை என வழங்குவதேன் ?
3. திராவிடப் பெருமொழிகள் யாவை ?
4. தமிழ் என்னும் சொல் குறித்து ஈராஸ் பாதிரியார் கூறுவது யாது ?
5. செம்மொழித் தகுதிக்கான அளவுகோல்களுள் எவையேனும் நான்கனை எழுதுக.

இ) சிறுவினாக்கள்

1. இந்திய மொழிக் குடும்பங்கள் குறித்து விளக்குக.
2. திராவிடம் என்னும் சொல்பற்றிக் கால்டுவெல் கூறுவன யாவை ?
3. திராவிட மொழிகளுள் தமிழ்மொழி பெறுமிடம் யாது ?

ஈ) நெடுவினாக்கள்

1. தமிழின் சிறப்புகளைத் 'திராவிட மொழிகள்'பாடத்தின்வழி விளக்குக.
2. திராவிட மொழிக்குடும்பம்பற்றி எழுதுக.

மாமரம்

“நீங்கள் கேள்விப்பட்டது சரியன்று. நான் எந்த மரத்தையும் கும்பிடுகிறவன் அல்லேன். ஆனால், இந்தத் தேன்மாமரத்தின்மீது எனக்கு நெருக்கமான சிநேகிதம். என் மனைவி அஸ்மாவுக்கும் அப்படித்தான். மகத்தான பெரிய மனிதர் ஒருவரின் அடையாளம்தான் இந்த மாமரம். நான் விளக்கமாகச் சொல்கிறேன்” என்று ஆரம்பித்தார் என் பக்கத்து வீட்டுக்காரரான ரஷீத்.

நாங்கள் எல்லாரும் அவருடைய வீட்டிற்கு முன்னால், வளர்ந்து கனி கொடுத்துக் கொண்டிருக்கும் மாமரத்தடியில் கூடியிருந்தோம்.

மரம் நிறைய மாங்காய்கள் கொத்துக்கொத்தாகக் காய்த்திருந்தன. மாமரத்தடியில் விசாலமான இடத்தில் வெள்ளை மணல் பரப்பப்பட்டிருந்தது. அதனைச் சுற்றிலும் வட்டமாக இரண்டு வரிசை செங்கல் பதிக்கப்பட்டு, சிமெண்ட் பூசப்பட்டு, நடுவே ரோஜாச்செடிகள் வளர்க்கப்பட்டிருந்தன. பல நிறங்களில் ரோஜாப்பூக்கள் பூத்துக் குலுங்கின.

ரஷீத் – அஸ்மா இருவருமே பள்ளி ஆசிரியர்கள். அவர்களுக்கு ஒரு மகன் உண்டு. ரஷீதின் மனைவி, மாம்பழங்களை அழகாக நறுக்கிப் பதினெட்டு வயதுள்ள தன் மகனிடம் ஒரு தட்டில் வைத்துக் கொடுத்தனுப்பினாள்.

நாங்கள் அதனைச் சாப்பிடத் தொடங்கினோம்.

“மாம்பழம் எப்படியிருந்தது ?”

“தேன்தாங்க”

“இந்தப் பழத்தெ நாம் சாப்பிடற சந்தர்ப்பம் கெடச்சதை நெனச்சா ஆச்சரியமா இருக்கு”.

“இதனை யாரு நட்டது ?”

“இந்த இடத்தில் நட்டது, அஸ்மாவும் நானும் சேர்ந்துதான். ஆனா, இந்த மாமரத்தைப் பத்தி வேறு ஒரு கதை இருக்கு. ரொம்பப் பேருகிட்ட நான் அந்தக் கதையெ சொல்லியாச்சு. கேட்டவங்க, கதையெல்லாம் மறந்து போய், இந்த மரத்தைக் கும்பிட ஆரம்பிச்சிட்டாங்க. இந்த மரத்திலெ அப்பிடி யொன்னும் சக்தியில்லெ. ஆனா, ஒரு மகத்தான சம்பவத்தோட நினைவு இதில இருக்கு.

என் தம்பி அந்தக் காலத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டரா இருந்தான். இங்கிருந்து எழுபத்தஞ்சு மைல் தூரத்தில் இருக்கிற ஓர் ஊர்ல நான் ஒரு தடவெ தம்பியெ பார்க்கப் போயிருந்தேன். கொஞ்சநாள் அங்க தங்கியிருந்தேன். அஃது ஒன்றும் பெரிய ஊர் இல்லை. இருந்தாலும் சுத்திப் பார்க்கலாமே அப்படீன்னு ஒரு நாள் தெரு வழியா போயிட்டிருந்தேன்.

நல்ல வெயில் காலம். சூடா காத்தடிச்சிட்டிருந்தது. தண்ணிக் கஷ்டம் வேற. நான் அப்படியே போயிட்டிருந்தப்போ வழியோரத்தில, ஒரு மரத்தடியில், வயசான ஒருத்தர் சுருண்டு கெடக்கிறது கண்ணில் பட்டுச்சு. தாடியும் தலமுடியும் நீளமா இருந்திச்சு. எம்பது வயது இருக்கலாம்னு தோணிச்சு. சாகப்போகிற நெலமெ. என்னைப் பாத்த உடனே அல்ஹம் துலில்லா, மகனே, தண்ணீ!'' அப்படின்னு சொன்னாரு.

“நான் உடனே பக்கத்திலிருந்த ஒரு வீட்டுக்கு ஓடினேன். வீட்டுத் திண்ணையில் ஓர் இளம்பெண் பேப்பர் படிச்சிகிட்டிருந்தா. விஷயத்தைச் சொல்லி, தண்ணி கேட்டேன். அவள் உள்ளே போய் ஒரு பாத்திரத்தில தண்ணி கொண்டு வந்தா.

நான் அத வாங்கிட்டு புறப்பட்டப்போ அவளும் என் பின்னால வந்தா. பெரியவர் விழுந்துகிடக்கிற எடத்துக்குப்போயி அவரைத் தண்ணி குடிக்கவச்சேன். கொஞ்சமா குடிச்சிட்டு அவரு மெதுவா எந்திரிச்சு உக்காந்தாரு. அப்புறம், ஓர் ஆச்சரியமான காரியம் செஞ்சாரு. என் கையில் இருந்த தண்ணிப் பாத்திரத்த வாங்கிட்டு மெல்ல நடந்து ஓர் ஓரத்துக்குப் போனாரு. அங்கே ஒரு சின்ன மாஞ்செடி மொளச்சிருந்தது. யாரோ மாம்பழம் தின்னுட்டுப்போனவங்க தூக்கி எறிஞ்ச மாங்கொட்டெ பூமியில் விழுந்து தானா மொளச்ச செடி அது. தண்ணியில்லாமெ வாடிப்போயிருந்துச்சு. வேரெல்லாம் மேலெ தெரிஞ்சது.

அந்தப் பெரியவர் நாங்க குடுத்த பாத்திரத்திலிருந்த தண்ணியில பாதிய அந்த மாஞ்செடிக்கு ஊத்தினாரு! அப்புறம் மெல்ல நடந்து வந்து மரத்தடியில உக்காந்து பிஸ்மில்லா சொல்லி மிச்சத் தண்ணியெக் குடிச்சாரு.

கடவுள வாழ்த்திட்டு, எங்ககிட்ட அவரு பேசினாரு.'' “தம்பீ, எம்பேரு யூசுப் சித்திக். எம்பது வயசு. சொந்த பந்தம் யாருமில்லெ. இப்பிடியெ பக்கீராயி ஊர் சுத்திக்கிட்டிருந்தேன். நான் இப்ப சாகப்போறேன். உங்க ரெண்டு பேரோட பேரு என்ன ?'' அப்பிடீன்னு கேட்டாரு.

“நான் சொன்னேன். ‘எம் பேரூ ரஷீத்’ பள்ளி ஆசிரியர். அந்தப் பொண்ணு சொன்னா: ‘எம் பேரு அஸ்மா’ நானும் பள்ளிக்கூடத்தில் டீச்சராத்தான் வேல பாக்கறேன்!

உங்களை அல்லா காப்பாத்துவாருன்னு சொல்லிவிட்டு, அவர் அப்படியே தரையில சாஞ்சுட்டாரு. கொஞ்ச நேரத்தில் அவர் உயிர் போயிடுச்சு. எங்க கண் முன்னால, அந்த யூசுப் சித்திக் எறந்திட்டாரு.

நான் உடனே போயி, என் தம்பிகிட்டெ விஷயத்தைச் சொன்னேன். அவன் ஒரு 'வேன்' அனுப்ப, உடலெ பள்ளிவாசலுக்குக் கொண்டுபோயி, குளிப்பாட்டி, புதுத்துணியெல்லாம் உடுத்தி, அடக்கம் பண்ணினோம். பெரியவரோட பையில ஆறு ரூபாய் இருந்துச்சு. நானும் அஸ்மாவும் ஆளுக்கு அஞ்சு ரூபா போட்டு மிட்டாய் வாங்கிப் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கெல்லாம் குடுத்தோம். பின்னாடி நான் அஸ்மாவெ கல்யாணம் பண்ணிகிட்டேன். அந்த மாஞ்செடிக்கு அஸ்மா தொடர்ந்து தண்ணீர் ஊத்திக்கிட்டே வந்தா. நான் இங்க எடம் வாங்கி வீடு கட்டி முடிச்சப்போ, அந்த மாஞ்செடியெ மண்ணோட தோண்டி எடுத்து, ஒரு சாக்குப் பையில கட்டி, இங்க கொண்டு வந்தோம். ரெண்டு மூணு நாளு, அது அஸ்மாவோட அறையிலதான் ஒருமூலையில் பத்திரமாக இருந்திச்சு.

அப்புறம் இந்த இடத்தில குழிதோண்டி நல்ல மண்ணும், காஞ்ச சாணியும் போட்டு நட்டு தண்ணி ஊத்தினோம். இது வளர்ந்தப்போ நாங்க ரொம்ப சந்தோஷப்பட்டோம். அப்பப்போ எலும்புத்தூளும், பச்சில உரமும் போட்டு வளர்த்தோம். அது இப்போ இப்பிடிப் பெரிய மரமா ஆயிட்டது'' என்று கதையை முடித்தார் அவர்.

சாகற சமயத்திலயும், வாய்பேச முடியா ஒரு மாஞ்செடி சாகாம இருக்க, தண்ணி ஊத்தின அந்தப் பெரியவர் ஒரு மகான்தான். ரொம்ப அதிசயமான சம்பவம்.

" நான் இதெ மறக்கவே மாட்டேன்'' என்று சொல்லிவிட்டு, அவரிடம் விடைபெற்று நகர்ந்தேன்.

அப்போது, அவர் என்னை அழைத்தார்; நின்று திரும்பிப் பார்த்தேன்.

ரஷீதின் மகன், சில மாம்பழங்கள் அடங்கிய ஒரு பொட்டலம் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து, "உங்க சம்சாரத்துக்கும், குழந்தைகளுக்கும் குடுக்கச் சொன்னாரு அப்பா'' என்றான்; வாங்கிக் கொண்டேன்.

"தம்பி படிக்கிறயா ?''

"ஆமாங்க, காலேஜில்''

"உம் பேரென்னப்பா ?''

"யூசுப் சித்திக்''

"என்ன சொன்னே ?''

"யூசுப் சித்திக்''.

நன்றி : புவியரசு, இரவின் அறுவடை.

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. ரஷீத்துக்கு மாங்கன்று எவ்வாறு கிடைத்தது ?
2. ரஷீத் தனக்குக் கிடைத்த மாங்கன்றை எவ்வாறு பாதுகாத்து வளர்த்தார் ?

எழுத்து

மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துவது மொழி. ஒருவர், தம் கருத்தை வெளிப்படுத்தவும், அதனைக் கேட்போர் புரிந்துகொள்ளவும் கருவியாக அமைவதும் மொழியே.

அம்மொழியைப் பிழையின்றிப் பேசவும் கேட்கவும் படிக்கவும் எழுதவும் துணைசெய்வது இலக்கணம் ஆகும்.

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் எனத் தமிழிலக்கணம் ஐவகைப்படும்.

எழுத்துகளின் வகை

முதலெழுத்து, சார்பெழுத்து என எழுத்துகள் இருவகைப்படும்.

முதலெழுத்துகள்

அ முதல் ஔ வரை உள்ள உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், க் முதல் ன் வரை உள்ள மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகளாகும். இவை சார்பெழுத்துகள் தோன்றுவதற்கு முதற்காரணமாய் இருப்பதனால் முதலெழுத்துகள் எனப்பட்டன.

சார்பெழுத்துகள்

முதலெழுத்துகளைச் சார்ந்து இயங்கும் எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும். இவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனப் பத்து வகைப்படும். இவற்றுள் உயிரளபெடை, ஒற்றளபெடை குறித்துக் காண்போம்.

அளபெடை

ஆசிரியர் : இனிய குழந்தைகளே! வணக்கம்.

செந்தில்வடிவு! தெருவில் சிலர் பொருள்களைக் கூவி விற்றுக்கொண்டே செல்கிறார்கள். அவர்கள் என்னென்ன பொருள்களை விற்கிறார்கள் எனச் சொல்.

செந்தில்வடிவு : பூ, பழம், கீரை, மோர் என இப்படிப் பலபொருள்களை விற்கிறார்கள், ஐயா.

ஆசிரியர் : மகிழ்ச்சி, நீ அவற்றையெல்லாம் கவனித்திருக்கிறாய்! சரி. பூ, பழம் இவற்றை அவர்கள் எவ்வாறு கூவி விற்கிறார்கள் ? வெற்றி! நீ சொல்.

வெற்றி : பூவோஒ பூவு, பழமோஒ பழம், கீரையோஒ கீரை, மோரோஒ மோரு.

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய்! பூ, பழம் இப்படிச் சொல்லி விற்றால் வாங்குகிறவர்கள் காதுகளில் சரியாக விழாது. நீட்டிச் சொல்லும்போதுதான் அவர்கள் என்ன விற்கிறார்கள் என்பது தெளிவாகப் புரியும், இல்லையா ?

மாணவர் : ஆமாங்க, ஐயா.

ஆசிரியர் : இதேபோலத்தான் புலவர்களும் தாம் இயற்றும் செய்யுளில் ஓசை குறையும்போது, அதனை நிறைவுசெய்ய அளபெடையைப் பயன் படுத்துகிறார்கள்.

வெற்றி : இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள், ஐயா!

ஆசிரியர் : சொல்கிறேன். செய்யுளில் ஓசை குறையும்போது, ஒரு சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கும் நெட்டெழுத்துகள் தமக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிக்கும். அவ்வாறு நீண்டு ஒலிப்பதனை அளபெடை என்கிறோம்.

அளபு = மாத்திரை. எடை = எடுத்தல் என்பது பொருள்.

எழுத்தினது மாத்திரை அளவில் நீட்டி ஒலித்தல்.

செந்தில்வடிவு : அளபெடை எத்தனை வகைப்படும், ஐயா ?

ஆசிரியர் : இருவகைப்படும். முதலாவது உயிரளபெடை, இரண்டாவது ஒற்றளபெடை.

வெற்றி : உயிரளபெடை என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : செய்யுளில் ஓசை குறையும்போது, அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெடில் எழுத்துகள் ஏழும் அளபெடுக்கும். இஃது, உயிரளபெடை எனப்படும். அவ்வாறு அளபெடுக்கும்போது, அவற்றுக்கு இனமான குறில் எழுத்துகள் குறியீடாக அதன்பக்கத்தில் வரும். ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனஎழுத்தாகவரும். இவ்வுயிரளபெடை மூவகைப்படும்.

வெற்றி : என்னென்ன வகைகள், ஐயா ?

ஆசிரியர் : செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை. செய்யுளில் இசையை நிறைக்க வரும் அளபெடையைச் செய்யுளிசை அளபெடை என்பர். ஓசை குறையாவிட்டாலும் இனிய ஓசைக்காக அளபெடுத்தலை இன்னிசை அளபெடை என்பர். இவ்விரண்டும் அல்லாமல் பெயர்ச்சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வரும் அளபெடை, சொல்லிசை அளபெடையாகும்.

செந்தில்வடிவு : சான்றுகளோடு விளக்கிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : செய்யுளில் ஓசை குறையும் இடத்தில், அந்த ஓசையை நிறைவுசெய்ய சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நின்ற உயிர்நெடில் எழுத்துகள் ஏழும், உரிய மாத்திரையிலிருந்து மிக்கு ஒலிக்கும். இதனையே

செய்யுளிசை அளபெடை எனக் கூறுவர்.

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. – குறள், 809

இக்குறளைப் படித்துப் பாருங்கள். கெடா என்பது கெடாஅ என இறுதியிலும், விடார் என்பது விடாஅர் என இடையிலும் அளபெடுத்து வந்துள்ளது. எனவே, இது செய்யுளிசை அளபெடை ஆகும். இதற்கு இசைநிறை அளபெடை என்னும் வேறுபெயரும் உண்டு.

இன்னிசை அளபெடை

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. – குறள், 15

கெடுப்பதும், எடுப்பதும் என ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசை தருவதற்காக து என்னும் குறில் தூ என நெடிலாக மாறி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

சொல்லிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் பெயர்ச்சொல் வினையெச்சப் பொருள் தரும் பொருட்டு அளபெடுப்பது சொல்லிசை அளபெடையாகும்.

குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.– குறள், 544

இக்குறட்பாவில் தழீஇ என்னும் சொல் அளபெடுத்து வந்துள்ளது.

தழீ – தழுவுதல் என்னும் தொழிற்பெயர்ச் சொல், தழீஇ (தழுவி) என வினையெச்சச் சொல்லாகப் பொருள் தருவதற்கு அளபெடுத்ததனால் இது சொல்லிசை அளபெடை ஆயிற்று.

கண்ணன் : ஒற்றளபெடை என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : செய்யுளில் ஓசை குறைந்தால் மெய்யெழுத்துகளும் அளபெடுக்கும். இஃது ஒற்றளபெடை எனப்படும்.

எங்ங்கி றைவனுள னென்பாய்.

வெஃஃகுவார்க் கில்லை வீடு.

இத்தொடர்களில் உள்ள ங் மற்றும் ஃ ஆகிய எழுத்துகள் இருமுறை வந்துள்ளன. இவ்வாறு ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்து மெய்யும், ஃ ஒன்றும் ஆகப் பதினோர் எழுத்துகளும் ஒரு குறிலை அடுத்தும் இருகுறில்களை அடுத்தும் செய்யுளில் இனிய ஓசை வேண்டி அளபெடுக்கும். இவ்வாறு அளபெடுப்பதற்கு ஒற்றளபெடை என்பது பெயர்.

நினைவிற் கொள்க.

தமிழ்

1. செய்யுளிசை அளபெடை (இசைநிறை அளபெடை) – செய்யுளின் ஓசையை நிறைவு செய்ய ஈரசைகொண்ட சீர்களாக மட்டும் வரும். (எ.கா.) உழாஅர், படாஅர்.

2. இன்னிசை அளபெடை – இனிய இசைக்காகக் குறில் நெடிலாக அளபெடுத்து, மூவசைச் சீர்களாக மட்டும் வரும். (எ.கா.) கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்.

3. சொல்லிசை அளபெடை – பெயர்ச்சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வரும். இ என்னும் எழுத்தில் முடிவு பெற்றிருக்கும். (எ.கா.) நசைஇ, நிறீஇ.

4. ஒற்றளபெடை – வல்லினத்து க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும், இடையினத்தில் ர், ழ் என்னும் இரண்டும் ஆக இந்த எட்டு மெய்யெழுத்துகள் தவிரப் பிற மெய்யெழுத்துகள் அளபெடுக்கும்.

எழுத்துவகை		மாத்திரை
உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில்	–	ஒன்று
உயிர்நெடில், உயிர்மெய்நெடில்	–	இரண்டு
மெய், ஆய்தம்	–	அரை
உயிரளபெடை	–	மூன்று
ஒற்றளபெடை	–	ஒன்று

பயிற்சி : பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

1. பெறாஅ, கொடுப்பதூஉம், தழீஇ, அண்ணன்.
2. வாழ்ழ்க்கை, சங்ங்கு, நெஞ்ஞ்சு, கண்ண்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் – இத்தொடரில் ____________ அளபெடை இடம்பெற்றுள்ளது.

   அ) இன்னிசை ஆ) செய்யுளிசை இ) சொல்லிசை

2. உடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு – இக்குறட்பாத் தொடரில் ____________ அளபெடை வந்துள்ளது.

   அ) சொல்லிசை ஆ) இசைநிறை இ) இன்னிசை

3. கீழ்க்காண்பனவற்றுள் சொல்லிசை அளபெடை ____________.

   அ) எச்சம் பெறாஅ விடின் ஆ) வரனசைஇ இன்னும் உள்ளேன்.
   இ) உண்பதூஉம்

2. பொருத்துக.

தமிழ்

ஒற்றளபெடை – குடிதழீஇ
செய்யுளிசை அளபெடை – அரங்ங்கம்
இன்னிசை அளபெடை – உழாஅர்
சொல்லிசை அளபெடை – உடுப்பதூஉம்

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அளபெடை என்னும் சொல்லுக்கு ________ என்பது பொருள்.
2. அளபெடை ______ வகைப்படும்.
3. செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் குறில் _______ ஆகி அளபெடுப்பது ______ அளபெடை.

ஆ) குறுவினாக்கள்

1. உயிரளபெடையைச் சான்று தந்து விளக்குக.
2. உயிரளபெடையின் வகைகள் யாவை?
3. ஒற்றளபெடை என்றால் என்ன?
4. இன்னிசையளபெடையைச் சான்றுடன் விளக்குக.

செயல்திட்டம்

திருக்குறளின் அறத்துப்பாலில் அளபெடை இடம்பெற்றுள்ள குறட்பாக்களைத் தொகுக்க. அவற்றை அளபெடைகளின் அடிப்படையில் வகைப்படுத்துக.

எழுத்துகளின் பிறப்பு

எழுத்துகள் பிறப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவை ஒலியணுக்கள்.

மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலிஎழுத்து. – நன்னூல், 58

உயிருள்ள உடம்பினுள்ளே எழுகின்ற காற்று மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகியவற்றைப் பொருந்தி உதடு, நாக்கு, பல், மேல்வாய் (அண்ணம்) ஆகிய இவ்வுறுப்புகளின் முயற்சியால் வெவ்வேறு ஒலிகளாகப் பிறக்கின்றன.

இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு

எழுத்துகளின் பிறப்பை இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு என இருவகையாகப் பிரிக்கலாம். எழுத்துகள் தோன்றுகின்ற மார்பு முதலானவற்றை இடப்பிறப்பு எனவும், உதடு முதலான உறுப்புகளின் தொழில் வேறுபாட்டினால் ஒலிப்பதனை முயற்சிப் பிறப்பு எனவும் கூறுவர்.

உயிரெழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் முதலெழுத்துகள் எனப்படும். மெய்யெழுத்துகளை ஒலிக்கும்போது வேறுபட்ட மூன்று ஒலிகளை நாம் கேட்கலாம். அவை வல்லின ஒலி, மெல்லின ஒலி, இடையின ஒலி என்பன. அவ்வொலிகள் வேறுபடுவதற்குக் காரணம், அவை பிறக்கும் இடங்கள் வேறுபடுவனவே.

எழுத்துகளின் பிறப்பை நன்னூலார் கூறியதனைப்போலவே மொழியியல் அறிஞர் ஒலி

எழுத்துகளின் பிறப்பு
(ஒலி உறுப்புகள்)

- இடப்பிறப்பு (காற்றறைகள்)
  - மார்பு
  - கழுத்து
  - தலை
  - மூக்கு
- முயற்சிப்பிறப்பு (ஒலிப்பு முனைகள்)
  - இதழ்
  - நா
  - பல்
  - அண்ணம்

ஒலிப்புப் பயிற்சி



நூலுள் அடக்குவர்.

ஒலி எழக் காரணமான காற்று நிலைபெறும் இடங்களைக் காற்றறைகள் எனவும், ஒலி எழுவதற்குத் துணை செய்யும் உறுப்புகளை ஒலிப்புமுனைகள் எனவும் கூறுவர்.

முதலெழுத்துகளின் இடப்பிறப்பு

- ❖ பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், இடையின எழுத்துகள் ஆறும் கழுத்திலிருந்து பிறக்கின்றன.
- ❖ மெல்லின எழுத்துகள் ஆறும் மூக்கிலிருந்து பிறக்கின்றன.
- ❖ வல்லின எழுத்துகள் ஆறும் மார்பிலிருந்து பிறக்கின்றன.

ஆவி இடைமை இடமிடறு ஆகும்
மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை. – நன்னூல், 75

(ஆவி – உயிரெழுத்து; இடைமை – இடையினம்; மிடறு – கழுத்து; மென்மை – மெல்லினம்; உரம் – மார்பு.)

முதலெழுத்துகளின் முயற்சிப் பிறப்பு

அ) உயிர் – பன்னிரண்டு

- ❖ அ, ஆ ஆகிய இவ்விரண்டு உயிர்களும் வாயைத் திறந்து ஒலிப்பதனால் பிறக்கின்றன.

அவற்றுள்,
முயற்சியுள் அஆ அங்காப் புடைய. – நன்னூல், 76

(அங்காப்பு – வாயைத் திறத்தல்)

- ❖ இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்து எழுத்தும் வாயைத் திறப்பதனோடு மேல்வாய்ப் பல்லை நாவிளிம்பு தொடுவதனால் தோன்றுகின்றன.

இஈ எஏ ஐஅங் காப்போ(டு)
அண்பல் முதல்நா விளிம்புற வருமே. – நன்னூல், 77

- ❖ உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்து எழுத்தும் உதடுகளைக் குவித்து ஒலிப்பதனால் தோன்றுகின்றன.

உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே. – நன்னூல், 78

ஆ) மெய் – பதினெட்டு

- ❖ க், ங் – இவ்விரு மெய்களும் நாவினது முதற்பகுதி அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன.
- ❖ ச், ஞ் – இவ்விரு மெய்களும் இடைநா (நடு நா), நடு அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன.
- ❖ ட், ண் – இவை நாவினது நுனி, அண்ணத்தின் நுனியைத் தொடுவதனால் தோன்றுகின்றன.

கஙவும் சஞவும் டணவும் முதலிடை

நுனிநா அண்ணம் உறமுறை வருமே. – நன்னூல், 79

- (நா – நாக்கு; அண்ணம் – மேல்வாய்ப் பகுதி; க, ங, ச, ஞ, ட, ண என்னும் உயிர்மெய்கள் – க், ங், ச், ஞ், ட், ண் என்னும் மெய்களைக் குறிக்கும். பின்வரும் நூற்பாக்களில் உள்ளவற்றையும் இவ்வாறே கொள்க.)
- த், ந் – மேல்வாய்ப் பல்லின் அடியை, நாக்கின் நுனி பொருந்துவதனால் இவ்வெழுத்துகள் தோன்றுகின்றன.

அண்பல் அடிநா முடியுறத் தநவரும். – நன்னூல், 80

- ப், ம் – மேல் உதடும் கீழ்உதடும் பொருந்த இவை தோன்றும்.

மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும். – நன்னூல், 81

- ய் – இது நாக்கின் அடிப்பகுதி, மேல்வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதனால் தோன்றுகிறது.
- அடிநா அடியணம் உறயத் தோன்றும். – நன்னூல், 82
- ர், ழ் – இவை மேல்வாயை நாக்கின் நுனி தடவுவதனால் பிறக்கின்றன.
- அண்ணம் நுனிநா வருட ரழவரும். – நன்னூல், 83
- ல் – இது மேல்வாய்ப் பல்லின் அடியை, நாவின் ஓரங்கள் தடித்து நெருங்குவதனால் பிறக்கிறது.
- ள் – இது மேல்வாயை நாவின் ஓரங்கள் தடித்துத் தடவுவதனால் பிறக்கிறது.

அண்பல் முதலும் அண்ணமும் முறையின்
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும். – நன்னூல், 84

- வ் – இது மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்துவதனால் பிறக்கின்றது.

மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே. – நன்னூல், 85

- ற், ன் – இவை மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதனால் பிறக்கின்றன.

அண்ணம் நுனிநா நனியுறின் றனவாகும். – நன்னூல், 86

சார்பெழுத்துகளின் இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு

ஆய்தமாகிய சார்பெழுத்து, தலையை இடமாகக்கொண்டு பிறக்கிறது. அதன் முயற்சிப் பிறப்பு வாயைத் திறந்து ஒலித்தலே ஆகும். பிற சார்பெழுத்துகள் யாவும், தத்தம் முதலெழுத்துகள் தோன்றுதற்குரிய இடத்தையும், அவை பிறத்தற்குரிய முயற்சியையும் தமக்கு உரியனவாகக் கொண்டு ஒலிக்கின்றன.

ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி
சார்பெழுத் தேனவும் தம்முதல் அனைய. – நன்னூல், 87

பயிற்சி: உதடுகள் ஒட்டா எழுத்துகள் கொண்ட சொற்களை வட்டமிடுக.

கம்பம், நான்கு, வேம்பு, தாவரம், உலக்கை, பார்வை

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. முதல் எழுத்துகளின் எண்ணிக்கை ____________ ஆகும்.
   அ) 12 ஆ) 18 இ) 30
2. கழுத்தினின்று பிறப்பது ____________.
   அ) வல்லினம் ஆ) மெல்லினம் இ) இடையினம்
3. வல்லின எழுத்துகளின் இடப்பிறப்பு ____________.
   அ) மார்பு ஆ) கழுத்து இ) மூக்கு
4. உதடுகள் இரண்டும் பொருந்துவதனால் பிறக்கும் எழுத்துகள் ____________.
   அ) ப், ம் ஆ) ய், ர் இ) க், ங்

ஆ) குறுவினாக்கள்

1. முதலெழுத்துகள் என்பன யாவை ?
2. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3. எழுத்துகள் எவ்வாறு பிறக்கின்றன ?
4. முதலெழுத்துகள் பிறக்கும் இடங்களை எழுதுக.

வகுப்பறைத்திறன்கள்

(அடிப்படைத்திறன்களில் பயிற்சி பெறுவதற்காக வகுப்பறைத்திறன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்பாற்றல், கலந்துரையாடல் முதலியனவும் மொழித்திறன் பயிற்சிகளில் பாடப்பகுதியைச் சார்ந்த, சாராத மொழிப்பயன்பாட்டுக் கூறுகளும் உள்ளன. தமிழெண்களை அறிவோம், வாழ்க்கைத்திறன், மதிப்புக்கல்வி, பண்பு, தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம் ஆகிய பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.)

எழுதுதல் திறன்

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக. (மாதிரி)

மருத்துவத்தைப் பொறியியலைத் தமிழில் கற்று
மக்கள்நலம் காப்பாற்ற விரும்பு கின்ற
கருத்துடைய மாணவர்கள் தோன்ற வேண்டும்
கடும்உழைப்பால் தமிழர்புகழ் ஓங்க வேண்டும்
வருங்காலத் தமிழரெலாம் அறிவால் இந்த
வையத்தை வியப்படையச் செய்ய வேண்டும்
இருண்டிருக்கும் நிலைமாறத் தமிழில் கற்போம்
என்றென்றும் தலைநிமிர்ந்து வாழ்வோம்! வெல்வோம்!

வினாக்கள்

1. இப்பாடலுக்குப் பொருத்தமான தலைப்பைத் தருக.
2. தமிழர் புகழ் எதனால் ஓங்க வேண்டும்?
3. எத்தகைய மாணவர்கள் தோன்றுதல் வேண்டும்?
4. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பெயர்ச்சொற்களைப் பட்டியலிடுக.
5. இப்பாடலிலுள்ள வினையெச்சச் சொற்களை எடுத்தெழுதுக.
6. இப்பாடலில் இரண்டாம் வேற்றுமையுருபு இடம்பெற்றுள்ளது. அதனைக் கண்டறிந்து எழுதுக.

விடைகள்

1. தாய்மொழிவழிக் கல்வி.
2. தமிழர் புகழ், அவர்தம் கடும் உழைப்பால் ஓங்குதல் வேண்டும்.
3. மருத்துவம், பொறியியல் முதலிய தொழிற்கல்விகளைத் தாய்மொழியான தமிழில் கற்று மக்கள்நலம் காக்க விரும்பும் மாணவர்கள் தோன்றல் வேண்டும்.
4. மருத்துவம், பொறியியல், தமிழ், மக்கள், மாணவர்கள், தமிழர், வையம் – பெயர்ச்சொற்கள்.
5. காப்பாற்ற, தோன்ற, ஓங்க, செய்ய, வியப்படைய, நிமிர்ந்து – வினையெச்சங்கள்.
6. இரண்டாம் வேற்றுமை உருபு ஐ. மருத்துவத்தை, பொறியியலை, வையத்தை.

பயிற்சி

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பாரதியார் உலககவி! அகத்தில் அன்பும்
 பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்!
ஒரூருக் கொருநாட்டுக் குரிய தான
 ஓட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர்; மற்றும்
வீரர்அவர்! மக்களிலே மேல்கீழ் என்று
 விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும் என்போர்!
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க் கின்ற
 செம்மைநலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்.

– பாரதிதாசன்

வினாக்கள்

1. பாரதியார் எத்தகையவர் எனப் பாரதிதாசன் கூறுகிறார்?
2. பாரதியார் எத்தகைய நினைப்புடையவர் அல்லர்?
3. மக்களிடையே நிலவும் பாகுபாடு குறித்துப் பாரதியார் கூறுவன யாவை?
4. பாடலில் இடம்பெற்றுள்ள பெயரெச்சங்களை எடுத்தெழுதுக.
5. பாடலுக்கேற்ற பொருத்தமான தலைப்பைத் தருக.

தமிழ்

மொழித்திறன் பயிற்சி

மயங்கொலிச் சொற்கள் – வேறுபாடு அறிந்து பொருள் எழுதுக.

(எ.கா.) ர, ற	அரை – பாதி	அறை – கட்டடப் பகுதி			
	உரை –	உறை –			
	கரை –	கறை –			
	கூரிய –	கூறிய –			
	கூரை –	கூறை –			
	பரவை –	பறவை –			
	இரங்கு –	இறங்கு –			
	எரிதல் –	எறிதல் –			
	இரை –	இறை –			
ண, ன	மணம் –	மனம் –			
	பணி –	பனி –			
	ஆணி –	ஆனி –			
ல, ழ, ள	அலை –	அழை –	அளை –		
	இலை –	இழை –	இளை –		
	உலை –	உழை –	உளை –		
	கலை –	கழை –	களை –		
	அலகு –	அழகு –	அளகு –		
	வால் –	வாழ் –	வாள் –		
	தால் –	தாழ் –	தாள் –		
	ஆல் –	ஆழ் –	ஆள் –		

தமிழெண்களை அறிந்து கொள்வோம்.

1	க	11	கக	21	உக	31	௩க	41	௪க
2	உ	12	கஉ	22	உஉ	32	௩உ	42	௪உ
3	௩	13	க௩	23	உ௩	33	௩௩	43	௪௩
4	௪	14	க௪	24	உ௪	34	௩௪	44	௪௪
5	ரு	15	கரு	25	உரு	35	௩ரு	45	௪ரு
6	சா	16	கசா	26	உசா	36	௩சா	46	௪சா
7	எ	17	கஎ	27	உஎ	37	௩எ	47	௪எ
8	அ	18	கஅ	28	உஅ	38	௩அ	48	௪அ
9	கூ	19	ககூ	29	உகூ	39	௩கூ	49	௪கூ
10	கO	20	உO	30	௩O	40	௪O	50	ருO

தமிழ்

பயிற்சி

1	க	11		21		31		41	
2		12		22		32		42	
3		13		23		33		43	
4		14		24		34		44	
5		15		25		35		45	
6		16		26		36		46	
7		17		27		37		47	
8		18		28		38		48	
9		19		29		39		49	
10		20		30		40		50	

விடுபட்ட இடத்தில் தமிழெண்களை எழுதுக.

1. க, ______, ______, ______, ரு, ______, ______, அ, ______, ______.
2. கக, கஉ, ______, ______, ______, கரு, ______, ______, ______, உ௦.

கட்டுரைப் பயிற்சி

நான் விரும்பும் நூல் (திருக்குறள்)

குறிப்புச்சட்டகம்

முன்னுரை – பொருளுரை (நூலின் அமைப்பு, நூல் கூறும் கருத்துகள், பயன்கள், நான் இந்நூலை விரும்புவதற்கான காரணம்) – நிறைவுரை.

தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

இனியன், தன் வீட்டு வாயிலில் விளையாடிக்கொண்டிருந்தான். அவ்வழியே ஓய்வுபெற்ற அரசு அலுவலரும் தமிழ்ப் பற்றாளருமான தமிழவேள் வருகிறார். இனியனிடம், 'தம்பி, அப்பா இருக்கிறாரா ?' என வினவியபடியே வீட்டிற்குள் நுழைந்தார்.

அவரை வரவேற்ற இனியனின் தந்தை நம்பி, "வாங்க, வாங்க. இனியா..., சேர் எடுத்து வா, ஃபேன் சுவிட்சைப் போடு என்றார்.

தன் மனைவியை நோக்கி, கமலா... பிரிஜ்ஜிலிருந்து ஐஸ்வாட்டர் எடு" எனப் பரபரப்பாகக் கூறினார். நாற்காலியில் உட்கார்ந்தார், தமிழவேள்.

ஐயா டீ, கூல் ட்ரிங்ஸ் என்ன குடிக்கிறீர்கள் ? எனக் கேட்டார்.

தமிழவேள் பொறுமையுடன், "நம்பி! நல்ல தமிழ்ச்சொற்களை விடுத்து, ஏன் பிறமொழிச்சொற்களை வலிந்து பேசுகிறீர்கள் ?".

சேர் என்பதனை நாற்காலி எனவும், ஃபேனை மின்விசிறி எனவும் கூறலாமல்லவா?'' என்றார். நம்பி, வெட்கத்துடன் தலைகுனிந்தார்.

தமிழ்ச்சொல்லறிவோம்!

சுவிட்ச்	–	சொடுக்கி	பிரிஜ்	–	குளிரூட்டும்பெட்டி
ஐஸ்வாட்டர்	–	குளிர்நீர்	டீ	–	தேநீர்
கூல் ட்ரிங்ஸ்	–	குளிர்சாறுகள்	வாஷிங்மெஷின்	–	வெளுக்கை இயந்திரம்
கிரைண்டர்	–	மின்அரைவை	டெலிபோன்	–	தொலைபேசி

வாழ்க்கைத்திறன்

தன்னையறிதல்

பள்ளியில் முதல் பாடவேளை முடிந்து அடுத்த பாடவேளை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பள்ளியை ஆய்வுசெய்யும்பொருட்டுப் பள்ளித்துணை ஆய்வாளர் முன்னறிவிப்பின்றிப் பள்ளிக்கு வருகை புரிந்தார். தலைமையாசிரியரையும் அழைத்துக்கொண்டு முதலில் ஒரு வகுப்புக்குள் நுழைந்தார். ஆசிரியரும் மாணவர்களும் அவருக்கு வணக்கம் கூறினார்கள். ஆய்வாளர், ஆசிரியர் நடத்திக்கொண்டிருந்த பாடத்திலிருந்து மாணவர்களிடம் வினாக்களைக் கேட்டார்.

மாணவர்கள் விடை தெரியாததனால் அமைதியாக இருந்தார்கள். மூன்றாம் வரிசையில் இருந்த சுடரொளி எழுந்து விடைகூறத் தொடங்கினாள். தான் கேட்ட அனைத்து வினாக்களுக்கும் உரிய விடையைக் கூறிய சுடரொளியைப் பாராட்டிய ஆய்வாளர், அடுத்த வகுப்புக்குச் சென்றார். சுடரொளி விடை கூறியதனைக் கேட்ட அனைவரும் வியந்தனர். காரணம், வகுப்பிலேயே அவள்தான் பேசாமடந்தை. ''வகுப்பில் நான் எதனைக் கேட்டாலும் பேசாமல் இருப்பாய். புதியவரான ஆய்வாளரிடம் தயக்கமின்றி உன்னால் எவ்வாறு பேசமுடிந்தது?'' என ஆசிரியர் கேட்டார்.

''எனக்கு விடைதெரிந்தாலும் தவறாக இருக்குமோ என்னும் ஐயத்தினால் விடைகூறத் தயங்குவேன். இன்று யாருமே விடைகூறாததனால், ஆய்வாளர் நம் பள்ளியைப்பற்றித் தவறாக எண்ணிவிடுவாரே என்பதனால், துணிந்து கூறிவிட்டேன்'' என்றாள், சுடரொளி.

''நானும் இந்நாள்வரை உனக்கு விடைதெரியாததனால்தான் பேசாமல் இருக்கிறாய்'' என நினைத்தேன். உன்னையே நீயும் அறிந்துகொள்ளாமல் இருந்திருக்கிறாய். உன்னால் முடியும் என அறிந்து செயல்படு'' என ஆசிரியர் ஊக்கப்படுத்தினார்.

1. உங்களுக்கு இதுபோன்ற நிகழ்வு எப்பொழுதாவது நிகழ்ந்திருக்கிறதா?
2. உங்களிடமுள்ள திறனும் திறனின்மையும் என்னென்ன?

உன்னையே நீ அறிவாய் – சாக்ரடீஸ்

தமிழ்

கடமை

நீதிபதி பம்மல் சம்பந்தனாரின் துணைவியார் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதனால், அவர் நீதிமன்றத்திற்கு அன்று வரமாட்டார் என்று பலரும் நினைத்தனர்.

ஆனால் பம்மல் சம்பந்தனார், தமது துணைவிக்குச் செய்யவேண்டிய அனைத்துக் காரியங்களையும் செய்துவிட்டுச் சரியாக 11.00 மணிக்கு நீதிமன்றம் வந்தார். அவரைப் பார்த்ததும், அனைவரும் வியப்படைந்தனர்.

"இன்றுகூடவா நீங்கள் வரவேண்டும் ?'' என்று மற்றொரு நீதிபதி கேட்டார்.

அதற்கு, "என் வருத்தம் என்னோடுதான் இருத்தல் வேண்டும். இன்று பார்க்கவேண்டிய வழக்கைத் தள்ளிவைத்துவிட்டு மற்றவர்களுக்குத் துன்பத்தைத் தரக் கூடாது,'' என்று கூறினார்.

இழப்பிலும் கடமை உணர்வுடன் வாழ்ந்தார், பம்மல் சம்பந்தனார்.

மொழியாக்கம் செய்க.

Air pollution is high in the urban and industrial centers. It threatens the life of the people and animals. The gases from industrial centers go higher than oxygen in the air and make it polluted. Pollution affects plants, animals and human beings. It causes diseases like asthma and cancer. Children are easily affected.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. Bend the tree while it is young.
   ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா ?
2. As is the mother, so is her daughter.
   தாயைப்போலப் பிள்ளை; நூலைப்போலச் சேலை.
3. A friend in need is a friend indeed.
   உயிர்காப்பான் தோழன்.
4. A man of courage never wants weapons.
   வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
5. Blood is thicker than water.
   தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.

வளரறி செயல்பாடுகள்

கேட்டல் திறன்	செயல்பாடு – 1

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

அறிஞர் அண்ணாவின் சிறுவயதில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. ஒருநாள் இவரின் பெற்றோர் வெளியில் சென்றிருக்க, வீட்டில் பாட்டி மட்டுமே இருந்தார். அப்போது அவர், தம் நண்பர் சிலரை அழைத்துக்கொண்டு, வீட்டின் பின்புறம் சென்றார். அங்கு அனைவரும் சேர்ந்து 'அரிச்சந்திரா' நாடகம் நடத்தத் திட்டமிட்டனர்.

அறிஞர் அண்ணா, அரிச்சந்திரன் வேடம் புனைந்து நடிக்கத் தொடங்கினார். வீட்டின் பின்புறத்திலிருந்து ஏதோ பேரொலியைக் கேட்ட அவர்தம் பாட்டி, என்னவென்று அறிய அங்கு விரைந்து சென்றார். அவரைக் கண்டதும் அண்ணாவின் நண்பர் சிட்டாகப் பறந்துவிட்டனர்; அதனால், நாடகம் இடையிலேயே நின்றது. அண்ணா மட்டும் பாட்டியிடம் தனியாக மாட்டிக் கொண்டார்.

அவர் அண்ணாவிடம், 'இங்கு என்ன நடந்தது ? கூச்சல் ஏன் ஏற்பட்டது ?' என வினவினார். 'ஒன்றுமில்லை' எனக் கூறி, பாட்டியிடமிருந்து அண்ணா தப்பித்துக் கொண்டிருக்கலாம்.

நண்பர் யாரும் அவருடன் இல்லாததனால் அண்ணா கூறுவதனைப் பாட்டியும் நம்பியிருக்கலாம்; ஆனால், 'அரிச்சந்திரன் வேடம் போட்டவராயிற்றே, பாட்டியிடம் எப்படிப் பொய் கூறுவார் ?' அதனால், அண்ணா உண்மையைக் கூறிவிட்டார். 'படிக்கிற பையனுக்கு நாடகம் என்னடா வேண்டியிருக்கு ?' எனக் கூறி, அண்ணாவின் முதுகில் அடித்தார், பாட்டி.

அன்று நாடகம் போட்டதற்காக அடி வாங்கிய அறிஞர் அண்ணாதான் பிற்காலத்தில் ஆசிரியர் கல்கி அவர்களால் 'தமிழ் நாடகக்கலைக்கு ஒரு பெர்னாட்ஷா' எனப் பாராட்டப்பட்டார். (அயர்லாந்து நாட்டைச் சார்ந்த ஜார்ஜ் பெர்னாட்ஷா புகழ்பெற்ற எழுத்தாளரும் சிறந்த நாடக ஆசிரியரும் ஆவார்.)

வினாக்கள்

1. அறிஞர் அண்ணா, தம் நண்பருடன் வீட்டின் பின்புறம் ஏன் சென்றார் ?
2. நாடகத்தில் அறிஞர் அண்ணா புனைந்த வேடம் என்ன ?
3. நாடகம் இடையில் நிற்கக் காரணம் யாது ?
4. அறிஞர் அண்ணா, பாட்டியிடம் உண்மையை மறைக்காதது, ஏன் ?
5. இவ்வுரைப்பத்திக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக.

பேசுதல் திறன்	செயல்பாடு – 2

கீழ்க்காணும் பாடலைப் படித்து, அதன்பொருள்குறித்து ஐந்து மணித்துளி பேசுக.

நிலமகளே வெல்வாள்!

நமக்கென்றே இருப்பவளை வாழ்நாள் எல்லாம்
நலிவுறுத்தி வருகின்றோம்; தலை யிடத்துச்
சுமக்கவென மரம்வைத்தோம்; மனைகள் கட்டத்
தூண்வைத்தோம்; கல்வைத்தோம்; காலும் வைத்தோம்;
எமக்கென்ன என்றவள்மேல் உமிழு கின்றோம்;
இரும்பெடுத்தே அவளுடலை அகழு கின்றோம்;
சுமக்கின்றாள்; பொறுக்கின்றாள்; பொறுமை சாலி!
தொழிலாளி போலிருக்கும் திறமை சாலி!

கடல்சுமந்தாள்; மலைசுமந்தாள்; கான்சு மந்தாள்;
கால்நடைகள் பலசுமந்தாள்; மாந்தர் என்ற
உடல்சுமந்தாள்; வயல்சுமந்தாள்; நதிசு மந்தாள்;
ஊர்சுமந்தாள்; நகர்சுமந்தாள்; செடிசு மந்தாள்;
குடல்சுமந்து பெற்றெடுத்த அன்னை இல்லாக்
குலப்பிள்ளை போலாகி நின்றாள்; அந்தோ!
மிடல்சுமந்த அவள்உறுத்துச் சினந்து நின்றால்
மேலாளர் வாழ்வெங்கே? அவளே வெல்வாள்!

– முடியரசன், மனிதனைத் தேடுகின்றேன்

படித்தல் திறன்	செயல்பாடு – 3

கீழ்க்காணும் நிகழ்வை வாய்க்குள் படிக்க.

வறுமையில் வாடிய புலவரொருவர், திருவேங்கடநாதர் என்னும் வள்ளலைப்பற்றிக் கேள்விப்பட்டு அவரைத் தேடிச் சென்றார். வள்ளல், புலவரை வரவேற்று மகிழ்ந்தார். அவர், புலவரிடம் வினாக்கள் சிலவற்றைக் கேட்டார். வள்ளல் கேட்ட எந்த வினாவுக்கும் விடையளிக்காத புலவர், இறுதியாகத் திருவேங்கடநாதா எனக் கூறினார். புலவர் அவ்வாறு கூறியவுடன், வள்ளல் மிகவும் மகிழ்ந்து புலவருக்குப் பொன்னும் பொருளும் வாரி வழங்கினார். வள்ளல் கேட்ட வினாக்கள்தான் என்ன? அவர் பொன்னும் பொருளும் வாரி வழங்கியது, ஏன்?

புலவரே, உம்மிடம் இல்லாதது என்ன?	திரு (செல்வம்)
உங்கள் உள்ளம் எப்படி உள்ளது?	வேம் (வேகின்றது)
உணவுக்கு என்ன செய்கிறீர்கள்?	கடம் (கடன்பட்டுத்தான்)
சுவையற்றது எது?	நா (என் நாக்கு)
கொடு என்பதன் வேறு சொல் என்ன?	தா

தமிழ்

அகர வரிசைப்படுத்துதல்	செயல்பாடு – 4

கீழ்க்காணும் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

கைவேலை, சக்கரம், கெஞ்சினான், குங்குமம், காட்சிக்கூடம், கம்பராமாயணம், சேவடி, சித்திரைத்திங்கள், சொல்லேருழவர், செந்தமிழ்

க – ________ , ________ , ________ , ________ , ________

ச – ________ , ________ , ________ , ________ , ________

சொல்வதனை எழுதுதல்	செயல்பாடு – 5

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழி. திராவிடம் என்னும் சொல் திராவிட நாடு என்னும் பொருளைத் தருவது. திராவிட மொழிகள், திராவிட இனம், திராவிட நாகரிகம் முதலிய சொற்றொடர்களில் திராவிடம் என்னும் சொல் பெயரடையாக வந்துள்ளது எனக் கால்டுவெல், தமது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவரே திராவிடம் என்னும் சொல்லைப் பயன்பாட்டுக்குக்கொண்டு வந்தார்.

குறிப்புகளைக்கொண்டு உரைப்பத்தியமைத்தல்	செயல்பாடு – 6

கீழ்க்காணும் குறிப்புகளைக்கொண்டு, உரைப்பத்தியமைத்து எழுதுக. பத்திக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக.

கம்பர்

பிறப்பு – நாகப்பட்டினம் மாவட்டம் – மயிலாடுதுறை – தேரழுந்தூர் – பணி – குலோத்துங்கச் சோழனின் அவைப் புலவர் – சிறப்பு – கவிச்சக்ரவர்த்தி, கல்வியில் பெரியவர் கம்பர் – இயற்றிய நூல்கள் – ஏர் எழுபது, சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், கம்பராமாயணம் – ஆதரித்தவர் – திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் – காலம் – கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

____

____

____

____

____

____

____

____

____

தமிழ்

பாடலில் இடம்பெற்றுள்ள நயங்களை எழுதுதல்	செயல்பாடு – 7

கீழ்க்காணும் குறட்பாக்களில் இடம்பெற்றுள்ள நயங்களை அட்டவணைப்படுத்துக.

வ. எண்	குறள்	மோனை	எதுகை	அணி
1.	அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை.		அகழ்வாரைத் இகழ்வார்ப்	உவமையணி
2.	இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை.			
3.	ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.			
4.	திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்(து) அறனல்ல செய்யாமை நன்று.			
5.	மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம் தகுதியான் வென்று விடல்.			

எழுதுதல்	செயல்பாடு – 8

உரையாடலில் உள்ள கணினிப் பயன்பாட்டுச் சொற்களைக் கண்டறிந்து அவற்றுக்கான தமிழ்ச்சொற்களை எழுதுக.

அன்பு : வா கதிர். . . ஏதோ உதவி வேண்டும் என்றாயே ?

கதிர் : ஆமாம், அன்பு. உன் கம்பியூட்டரில் ‘இண்டர்நெட்’ வசதி உள்ளதா ?

அன்பு : ஒ. . . இருக்கிறதே. ஏன், உன் ‘கம்பியூட்டர்’ என்ன ஆனது ?

கதிர் : என்னுடைய ‘மௌஸ்’ கீழே விழுந்து உடைந்துவிட்டது; அதனால், எனக்குத் தேவையான புதுக்கவிதைகளை விரைவாக ‘டவுன்லோட்’ செய்ய முடியவில்லை.

அன்பு : புதுக்கவிதைகளா ? நான் அவற்றை என் ‘பைலில்’ வைத்துள்ளேன், பார்க்கிறாயா ?

கதிர் : அப்படியா, காட்டு.

அன்பு : இந்தக் கவிதைகள் போதுமா, இன்னும் வேண்டுமா ?

கதிர் : இப்போதைக்கு இவை போதும். ‘காபி’ பண்ணித் தருகிறாயா ?

அன்பு : ‘சிடி’யிலா ?

கதிர் : இல்லை, அன்பு. ‘பென் டிரைவி’ல்.

அன்பு : சரி, கொடு.

கதிர் : மிக்க நன்றி, அன்பு.

தமிழ்

வ. எண்	கணினிப் பயன்பாட்டுச் சொற்கள்	தமிழ்ச் சொற்கள்	வ. எண்	கணினிப் பயன்பாட்டுச் சொற்கள்	தமிழ்ச் சொற்கள்
1.	கம்பியூட்டர்	கணினி	5.		
2.			6.		
3.			7.		
4.			8.		

வகைப்படுத்துதல்	செயல்பாடு – 9

கீழ்க்காணும் பாடலடிகளில் இடம்பெற்றுள்ள அளபெடைகளைக் கண்டறிந்து வகைப்படுத்தி எழுதுக.

1. 'இலங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்கு'
2. 'எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்'
3. 'உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்'
4. 'அழாஅல் தோழி அழுங்குவர் செலவே'
5. 'உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்'

உயிரளபெடை			ஒற்றளபெடை	
செய்யுளிசை	இன்னிசை	சொல்லிசை	ஒற்று அளபெடுத்தல்	ஆய்தம் அளபெடுத்தல்
	விழைவதூஉம்			

விடுகதைக்கு விடைகாணல்	செயல்பாடு – 10

விடுகதைகளுக்கான விடையை எழுதுக.

1. ஆற்றைக் கடக்கும்; அக்கரைக்குப் போகாது;
   தண்ணீரைக் கலக்காது; தானும் நனையாது. அஃது என்ன?

   ____

2. ஆயிரம்பேர் அணிவகுப்பர்;
   ஆனாலும் தூசி கிளம்பாது. அவர் யாவர்?

   ____

3. கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டுவீடு;
ஓட்டுவீட்டைப் பிரித்தால் வெள்ளை மாளிகை;
வெள்ளை மாளிகை உள்ளே குளம். அஃது என்ன?

____

4. முன்னும் பின்னும் போவான்; ஆனால், ஒற்றைக் காலில் நிற்பான் அவன் யார்?

____

படைப்பாற்றல்	செயல்பாடு – 11

சிறுகதையொன்றின் தொடக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதனைக்கொண்டு, உங்கள் கற்பனைக்கேற்பக் கதையைத் தொடர்ந்து எழுதுக. கதைக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக.

பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்த கயல்விழி, தன் தந்தையைப் பார்த்ததும் ஆவலுடன் பேசத் தொடங்கினாள்.

'அப்பா, எங்கள் பள்ளியில் இன்று நடைபெற்ற பேச்சுப்போட்டியில் ....

கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

1. வினாக்களுக்கு உரிய விடையைத் தேர்ந்தெடுக்க. 2 × 1 = 2

அ. திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மருள் ஒருவர் _______________ .

1. இளம்பூரணர் 2. நச்சர்
3. பேராசிரியர் 4. ந. மு. வேங்கடசாமி

ஆ. தென்திராவிட மொழிகளுள் ஒன்று _______________ .

1. தெலுங்கு 2. மால்தோ
3. தமிழ் 4. உருது

2. கோடிட்ட இடத்தை நிரப்புக. 3 × 1 = 3

அ. மிகப் பழைமையான தமிழ் இலக்கண நூல் _________ .

ஆ. குலோத்துங்கச் சோழனின் அவைப்புலவர் _________ .

இ. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை _________ .

3. பாடலடிகளில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக. 5 × 1 = 5

உலகம் யாவையும் தாமுல வாக்கலும்
நிலைபெ ருத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரன் நாங்களே.

தமிழ்

சிறுபஞ்சமூலம்

கண்வனப்புக் கண்ணோட்டம், கால்வனப்புச் செல்லாமை,
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல், – பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல், கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டான்நன் றென்றல் வனப்பு. *

– காரியாசான்

பொருள் : கண்ணுக்கு அழகு இரக்கம் கொள்ளல்; காலுக்கு அழகு பிறரிடம் இரந்து செல்லாமை; ஆராய்ச்சிக்கு அழகு தமது முடிவைத் துணிந்துரைத்தல்; இசைக்கு அழகு அதனைக் கேட்போர் நன்றெனப் புகழ்தல்; அரசனுக்கு அழகு, குடிமக்களை வருத்தாமல் காப்பவன் என்று, பிறர் அவனைப் புகழ்ந்து உரைத்தல்.

சொற்பொருள் : கண்ணோட்டம் – இரக்கம் கொள்ளுதல்; எண்வனப்பு – ஆராய்ச்சிக்கு அழகு; வனப்பு – அழகு; கிளர்வேந்தன் – புகழுக்கு உரிய அரசன்; வாட்டான் – வருத்த மாட்டான்.

இலக்கணக்குறிப்பு : கண்ணோட்டம், செல்லாமை, உரைத்தல், என்றல் – தொழிற்பெயர்கள்; கேட்டார், வாட்டான் – வினையாலணையும் பெயர்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : கேட்டார் = கேள் (ட்) + ட் + ஆர். கேள் – பகுதி; ள் – ட் ஆனது விகாரம்; ட் – இறந்தகால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.
அணி : சொற்பொருள் பின்வருநிலையணி.

ஆசிரியர் குறிப்பு : காரியாசான், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர் எனச் சிறப்புப்பாயிரம் கூறுகிறது. இவர், சமண சமயத்தைச் சார்ந்தவர். இவரும் கணிமேதாவியாரும் ஒருசாலை மாணாக்கராவர். பெரும்பான்மை பொது அறக்கருத்துகளும் சிறுபான்மை சமண அறக்கருத்துகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

நூற்குறிப்பு : சிறுபஞ்சமூலம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் காரியாசான். இந்நூலில், கடவுள் வாழ்த்துடன் தொண்ணூற்றேழு வெண்பாக்கள் உள்ளன. கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து மூலிகையின் வேர்களும் உடல்நோயைத் தீர்ப்பன. அதுபோல, இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள ஐந்து கருத்தும் மக்கள் மனநோயைப் போக்குவன. ஆகையால், இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தைக்கொண்டு நிரப்புக.

   1. கண்ணுக்கு அழகு க ___ ணோட்டம். (ன்/ண்)
   2. எ ___ வனப்பு இத்துணையாம் எ ___ றுரைத்தல். (ன்/ண்)

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

   1. பண்ணுக்கு அழகு ___________ நன்றென்றல்.
   2. பிறரிடம் இரந்து செல்லாமை _______________ அழகு.

3. விடைக்கேற்ற வினா அமைக்க.

   1. காலுக்கு அழகு பிறரிடம் இரந்து செல்லாமை.
   2. சிறுபஞ்சமூலத்தை இயற்றியவர் காரியாசான்.

ஆ) குறுவினாக்கள்

1. சிறுபஞ்சமூலம் – குறிப்பு எழுதுக.
2. காரியாசான் – சிறுகுறிப்பு எழுதுக.

இ) சிறுவினா

சிறுபஞ்சமூலம் கூறும் வனப்புகளைத் தொகுத்தெழுதுக.

அறிந்துகொள்க.

பின்வருநிலையணி

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ பொருளோ பின்னர்ப் பலவிடத்தும்வரின் அது பின்வருநிலையணி ஆகும். இது, சொல்பின்வருநிலையணி, பொருள்பின்வருநிலையணி, சொற்பொருள் பின்வருநிலையணி, உவமைப் பின்வருநிலையணி என நால்வகைப்படும்.

சொற்பொருள் பின்வருநிலையணி

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் அதன் பொருளும் பின்னர்ப் பலவிடத்தும்வரின் அது, சொற்பொருள் பின்வருநிலையணியாம்.

'கண்வனப்புக் கண்ணோட்டம். . .' என்னும் சிறுபஞ்சமூலப் பாடலில் சொற்பொருள் பின்வருநிலையணி பயின்று வந்துள்ளது. இப்பாடலில் 'வனப்பு' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து 'அழகு' என்னும் பொருளைத் தருகின்றது.

பாஞ்சாலி சபதம்

– பாரதியார்

முன்கதைச் சுருக்கம்

இந்திர மாநகரை ஆண்டுவந்த பாண்டவர், மண்டபம் ஒன்றனைக் கட்டி, அதில் வேள்வி நடத்தினர். அவ்வேள்வியில் கலந்துகொண்ட பேரரசர்களும் சிற்றரசர்களும் அன்பளிப்புகள் வழங்கியதனைக் கண்டு பொறாமைகொண்டான் அத்தினாபுர மன்னன் துரியோதனன். மேலும் துரியோதனன், பாஞ்சாலியின் நகைப்புக்கும் ஆளானதனால், பாண்டவர் வாழ்வை எப்படியாவது அழிக்கவேண்டும் என எண்ணினான். அதற்காகத் துரியோதனன், தன் மாமன் சகுனியின் உதவியை நாடினான். சகுனி, "நாமும் ஒரு மண்டபம் அமைத்து, அதனைக் காண்பதற்குப் பாண்டவரை அழைப்போம்; தருமனைச் சூதாடச் செய்து, நாம் நினைத்ததனை முடிப்போம்" என்றான். இத்திட்டத்துக்குத் துரியோதனனின் தந்தை திருதராட்டிரன் முதலில் ஒப்புக்கொள்ளவில்லை; பின்னர், விதியின் வலிமையை எண்ணி ஒப்புக்கொண்டான். திட்டத்தின்படி, திருதராட்டிரன் வினைஞர்களை அழைத்து அழகிய மண்டபம் ஒன்றனை அமைக்கச் செய்தான். அம்மண்டபத்தைக் காண, பாண்டவரை அழைத்து வருமாறு தம்பி விதுரனைத் தூதுவிட்டான். விதுரனைத் தூதுவிடல், தூது சென்ற விதுரன் பாண்டவரின் நாட்டுவளங் கண்டு மகிழ்தல், பாண்டவர் விதுரனை எதிர்கொண்டு வரவேற்றல் ஆகிய நிகழ்வுகள் இப்பாடப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

விதுரனைத் தூதுவிடல்

1. தம்பி விதுரனை மன்னன் அழைத்தான்
 தக்க பரிசுகள் கொண்டினி தேகி
எம்பியின் மக்க ளிருந்தர சாளும்
 இந்திர மாநகர் சார்ந்தவர் தம்பால்
"கொம்பினை யொத்த மடப்பிடி யோடும்
 கூடியிங் கெய்தி விருந்து களிக்க
நம்பி அழைத்தனன் கௌரவர் கோமான்
 நல்லதோர் நுந்தை" யெனவுரை செய்வாய்.

பொருள் : மன்னன் திருதராட்டிரன் தன்தம்பி விதுரனை அரண்மனைக்கு அழைத்தான். பாண்டுவின் மக்கள் ஆட்சிசெய்யும் இந்திர மாநகருக்குத் தக்க பரிசுகளுடன் சென்று, பாஞ்சாலியோடு பாண்டவரைத் தாம் விருந்துக்கு அழைத்த செய்தியை அவர்களிடம்கூறி, அழைத்து வருமாறு பணித்தான்.

சொற்பொருள்: எம்பி – என் தம்பி; மடப்பிடி–பாஞ்சாலி; களிக்க – மகிழ; கோமான் – அரசன் (திருதராட்டிரன்); நுந்தை – நும் தந்தை.

இலக்கணக்குறிப்பு: மாநகர் – உரிச்சொற்றொடர்; சார்ந்தவர் – வினையாலணையும் பெயர்; நுந்தை – நும் தந்தை என்பதன் மரூஉ.

2. அண்ணனிடம் விடைபெற்று விதுரன் சென்றான்
அடவிமலை யாறெல்லாம் கடந்து போகித்
திண்ணமுறு தடந்தோளும் உளமுங் கொண்டு
திருமலியப் பாண்டவர்தாம் அரசு செய்யும்
வண்ணமுயர் மணிநகரின் மருங்கு செல்வான்
வழியிடையே நாட்டினுறு வளங்கள் நோக்கி
எண்ணமுறல் ஆகித்தன் இதயத் துள்ளே
இனையபல மொழிகூறி யிரங்கு வானால். *

பொருள் : தன் தமையனாகிய திருதராட்டிரனிடம் விதுரன் விடைபெற்றான்; காடு, மலை, ஆறு ஆகியவற்றையெல்லாம் கடந்து, வலிமைமிக்க தோளும் மனவுறுதியும் கொண்ட பாண்டவர்கள் ஆட்சிபுரியும் வளமிக்க அழகிய நகரை நோக்கிச் சென்றான். செல்லும் வழியெல்லாம் நாட்டின் மிகுந்த வளங்களைக் கண்டு, தன் எண்ணத்தில் இருத்தி, உள்ளம் நெகிழ்ந்து, அந்நாட்டின் எதிர்காலம் கருதி இரக்கப்பட்டான்.

சொற்பொருள் : அடவி – காடு; தடந்தோள் – வலியதோள்; மணிநகர் – அழகிய நகரம்; மருங்கு – பக்கம்.

இலக்கணக்குறிப்பு : அடவிமலையாறு – உம்மைத்தொகை; கடந்து – வினையெச்சம்; தடந்தோள் – உரிச்சொற்றொடர்.

பகுபத உறுப்பிலக்கணம் : கடந்து = கட + த் (ந்) + த் + உ. கட – பகுதி; த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி. செல்வான் = செல் + வ் + ஆன். செல் – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

3. நீலமுடி தரித்தபல மலைசேர் நாடு
நீரமுத மெனப்பாய்ந்து நிரம்பு நாடு
கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழுங்
குளிர்காவுஞ் சோலைகளுங் குலவு நாடு
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்
பாலடையும் நறுநெய்யும் தேனும் உண்டு
பண்ணவர்போல் மக்களெலாம் பயிலு நாடு.

பொருள் : நீலநிற மேகங்கள் தவழ்கின்ற பல மலைகளைக் கொண்ட நாடு; அம்மலைகளிலிருந்து வருகின்ற அருவி நீரானது அமுதமாகப் பாய்ந்து வளஞ் செய்கின்ற நாடு. அழகு மிக்க பயன்தரு மரங்கள் நிறைந்த குளிர்ந்த காடுகளும், பூக்கள் நிறைந்த

சோலைகளும் கலந்திருக்கின்ற நாடு. உலகில் வாழ்கின்ற மக்களைப் பசியின்றிக் காப்பதற்கு ஏற்ற நன்செய், புன்செய்ப் பயிர்கள் செழித்து வளம்சேர்க்கின்ற நாடு. பாலாடை, நறுமண நெய், தேன் ஆகியவற்றை உண்டு தேவர்கள்போல் மக்கள் மகிழ்ந்திருக்கின்ற நாடு.

சொற்பொருள் : கோலமுறு – அழகுமிக்க; செறிந்து – அடர்ந்து; கா – காடு; குலவு – விளங்கும்; ஞாலம் – உலகம்; பண்ணவர் – தேவர்.

இலக்கணக்குறிப்பு : பாலடையும் நறுநெய்யும் தேனும் – எண்ணும்மை. நீலமுடி, நன்செய், புன்செய் – பண்புத்தொகைகள்; பாய்ந்து, செறிந்து – வினையெச்சங்கள்; ஞாலமெலாம், மக்களெலாம் – எல்லாம் என்பதன் தொகுத்தல் விகாரம்; காத்தல் – தொழிற்பெயர்.

4. பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கு நாடு
பெண்களெல்லாம் அரம்பையர்போல் ஒளிரு நாடு
வீரமொடு மெய்ஞ்ஞானந் தவங்கள் கல்வி
வேள்வியெனு மிவையெல்லாம் விளங்கு நாடு
சோரமுதற் புன்மையெதுந் தோன்றா நாடு
தொல்லுலகின் முடிமணிபோல் தோன்று நாடு
பாரதர்தந் நாட்டிலே நாச மெய்தப்
பாவியேன் துணைபுரியும் பான்மை யென்னே!

பொருள் : சிறப்புமிக்க அறச்செயல்களாலும் பெருமைமிகு தொழில் வளத்தாலும் சிறப்புற்ற நாடு; பெண்கள், தேவமகளிர்போல் ஒளிர்கின்ற நாடு; வீரம், மெய்யறிவு, தவம், கல்வி, வேள்வி ஆகிய இவையனைத்தும் நிறைந்த நாடு; நெறி பிறழ்ந்த செயல்கள் இந்நாட்டில் இல்லாத காரணத்தால் பழைமையான இவ்வுலக மக்களுக்கு மணிமுடிபோல் தோன்றுகின்ற நாடு; இத்தகைய பாண்டவர் நாடு அழியும் பாவச்செயலுக்குத் தானும் துணைபுரிய நேர்ந்ததனை எண்ணி விதுரன் வருந்தினான்.

சொற்பொருள் : அரம்பையர் – தேவமகளிர்; ஞானம் – அறிவு ; புன்மை – நெறி பிறழ்ந்தசெயல்கள்

இலக்கணக்குறிப்பு : தொல்லுலகு – பண்புத்தொகை.

5. விதுரன் வருஞ்செய்தி தாஞ்செவி யுற்றே
வீறுடை ஐவர் உளமகிழ் பூத்துச்
சதுரங்கச் சேனை யுடன்பல பரிசும்
தாளமும் மேளமும் தாம்கொண்டு சென்றே
எதிர்கொண் டழைத்து மணிமுடி தாழ்த்தி
ஏந்தல் விதுரன் பதமலர் போற்றி
மதுர மொழியிற் குசலங்கள் பேசி
மன்ன னொடுந்திரு மாளிகை சேர்ந்தார்.

பொருள் : விதுரன் வருகின்ற செய்தியைக் கேட்ட வலிமை மிக்க பாண்டவர் ஐவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர்; நால்வகைப் படைகளுடன் பல பரிசுகளும் கொண்டு

மேளதாளத்துடன் விதுரனை எதிர்கொண்டு அழைத்து மணிமுடி தாழ்த்திச் சிறப்புக்குரிய அவர்தம் திருவடி மலர்களை வணங்கினர்; இனிய மொழியில் நலம் கேட்டனர். மன்னர்குலத் தோன்றலான விதுரனை அழைத்துக்கொண்டு தம் அரண்மனைக்குச் சென்றனர்.

சொற்பொருள் : வீறு – வலிமை; சதுரங்கச்சேனை – நால்வகைப் படை; மதுரமொழி – இனிய மொழி; குசலங்கள் பேசி – நலன் கேட்டு.

இலக்கணக் குறிப்பு : தாளமும் மேளமும் – எண்ணும்மை; பதமலர் – உருவகம்.

ஆசிரியர் குறிப்பு

சுப்பிரமணிய பாரதியார், தற்போதைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் **11.12.1882**அன்று பிறந்தார். இவர்தம் பெற்றோர் சின்னசாமி – இலக்குமி அம்மையார் ஆவர். இவரின் துணைவியார் செல்லம்மாள்.

சிறந்த படைப்பாளரான பாரதியார் குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய நூல்களைப் படைத்தளித்தார். நாடு, மொழி, இறை, பெண்மை முதலிய பாடுபொருள்களில் எண்ணற்ற பாடல் இயற்றினார். ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை இலக்கியங்களையும் எழுதினார்.

இவர் **11. 09. 1921**அன்று மறைந்தார்.

நூற்குறிப்பு

இப்பாடப்பகுதி, பாரதியாரின் முப்பெரும் படைப்புகளுள் ஒன்றாகிய பாஞ்சாலி சபதம் என்னும் காப்பியத்தின் சூழ்ச்சிச்சருக்கத்தில் இடம்பெற்றுள்ளது. அனை–வரும் அறிந்த இதிகாசக் கதையை எளிய சொற்கள், எளிய நடை, எளிய சந்தம் ஆகியவற்றுடன் கூடிய பெண்ணுரிமைக் காப்பியமாகத் தமிழில் பாரதி வடித்துத் தந்ததே பாஞ்சாலி சபதம். இது, வியாசரின் பாரதத்தைத் தழுவி எழுதப் பெற்றது. பாஞ்சாலி சபதம் இரு பாகத்தைக் கொண்டது. இது சூழ்ச்சிச்சருக்கம், சூதாட்டச்சருக்கம், அடிமைச்சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச்சருக்கம் என ஐந்து சருக்கத்தையும் நானூற்றுப் பன்னிரண்டு பாடலையும் கொண்ட குறுங்காப்பியம்.

சிறப்பு

பாரதியார் பாட்டுக்கொரு புலவன், நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா, தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி, தேசியக்கவி, மாக்கவி என்றெல்லாம் புகழப்பெற்றார்; சுதேசமித்திரன், இந்தியா முதலிய இதழ்களின் ஆசிரியராக இருந்தார்; இந்திய விடுதலைக்குப் பாடுபட்டார்.

தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவதில்லை. – பாரதிதாசன்

தமிழ்

தமிழ்

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தைக்கொண்டு நிரப்புக.

   1. தட ___ தோளும் உளமு ___ கொண்டு (ங்/ந்)
   2. பே ___ றமும் பெருந்தொழிலும் பி ___ ங்கு நாடு (ற/ர)
   3. வீ ___ டை ஐவ ___ ளமகிழ் பூத்து (ரு/று)

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

   1. நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா எனப் பாராட்டப் பெற்றவர் ___________ ஆவார்.
   2. துரியோதனனின் தந்தை ___________ ஆவார்.

3. சொல்லைப் பொருளோடு பொருத்துக.

வனப்பு	–	இனிமை
பிடி	–	காடு
அடவி	–	அழகு
மருங்கு	–	பெண் யானை
வீறு	–	பக்கம்
மதுரம்	–	வலிமை

4. இடஞ்சுட்டி விளக்குக.

   1. பாரதர்தந் நாட்டிலே நாச மெய்தப்
      பாவியேன் துணைபுரியும் பான்மை யென்னே!
   2. மதுர மொழியிற் குசலங்கள் பேசி
      மன்ன னொடுந்திரு மாளிகை சேர்ந்தார்.

ஆ) குறுவினாக்கள்

1. பாஞ்சாலி சபதம் – குறிப்பு எழுதுக.
2. விதுரனை யாரிடம் யார் தூது அனுப்பினார்?
3. விதுரன் எதற்காகத் தூது சென்றான்?
4. விதுரன் எவற்றையெல்லாம் கடந்து தூது சென்றான்?
5. விதுரன் எதனை நினைத்து வருந்தினான்?

இ) சிறுவினாக்கள்

1. மன்னன், விதுரனிடம் யாது கூறித் தூதனுப்பினான்?
2. விதுரன் வழியில் கண்ட காட்சிகளைப்பற்றி எழுதுக.
3. விதுரனைப் பாண்டவர் எவ்வாறு வரவேற்றனர்?

ஈ) நெடுவினா

விதுரன் தூது சென்றதனைத் தொகுத்தெழுதுக.

இக்காலக் கவிதைகள்

இருபதாம் நூற்றாண்டில் அறிவியலும் இலக்கியமும் விரைவாக வளர்ந்தன. காலம் பல கண்ட தமிழ்மொழியும் புத்தம் புதிய இலக்கியவகைகளை ஏற்றுத் துறைதோறும் துறைதோறும் நன்கு வளர்ந்து தழைத்துச் செழித்தது. தமிழ்மொழியில் செய்யுள், உரைநடை என்னும் இரு வடிவிலும் புதுவகை இலக்கியங்கள் மலர்ந்துள்ளன.

கவிதைப் பொருள்

இருபதாம் நூற்றாண்டின் உரைநடைவளத்தைக் கருத்திற்கொண்டு நோக்கும்போது இக்காலத்தை உரைநடைக் காலம் எனலாம். எனினும், கவிதை வடிவமும் கவினுற வளர்ந்து வந்தது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகனார், நாமக்கல் இராமலிங்கனார் எனக் கவிஞர் பலர் தோன்றி, நாடு, மொழி, இனம், சமுதாயம், கலை எனப் பலவற்றைப் பாடினர்.

மரபுக்கவிதை

பாரதியின் கவிதைகள் இருபதாம் நூற்றாண்டில் அரும்பிய மறுமலர்ச்சிக்கு வித்தாக அமைந்தன. மன்னர்களை மட்டுமே மகிழ்வித்து வந்த கவிதை மரபை மாற்றி, எளிய மக்களை நோக்கிக் கவிதைக் கருவியைத் திருப்பி அமைத்த பெருமை பாரதியைச் சாரும். மக்கள் மேம்பாட்டை அடியொற்றியே அவர்தம் கவிதைகள் அமைந்தன. இந்திய ஒருமைப்பாட்டின் உயர்வினை விளக்கும் அவர்தம் கவிதை அடிகள் வருமாறு:

முப்பது கோடி முகமுடையாள் உயிர்
　　மொய்ம்புற ஒன்றுடையாள் – இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
　　சிந்தனை ஒன்றுடையாள்.

தமிழ் வளர்ச்சிக்கு வழிசொல்லும் மற்றொரு கவிதை:

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
　　தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
　　தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.

தமிழ்

தமிழ், தமிழர், தமிழுணர்வு, சமுதாய மறுமலர்ச்சி, பெண்விடுதலை, திராவிட இயக்கச் சிந்தனை, பொதுவுடைமை முதலியனவற்றைப் பாரதிதாசன் கவிதைகள் வெளிப்படுத்தின.

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே

எனத் தமிழர் எழுச்சிபெற விழையும் பாரதிதாசன்,

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான
இடம்நோக்கி நடக்கின்ற திந்தவையம்
இல்லானும் அங்கில்லை பிறர்நலத்தை
எனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே

எனப் பொதுவுடைமையை விரும்பி வரவேற்கிறார்.

கவிமணியின் கவிதைகள் கற்போரைக் களிப்பில் ஆழ்த்துவன; உணர்ச்சிகொள்ள வைப்பன. ‘கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழின் சொல்லை மணியாகத் தொடுத்தவனும் நீதானோ’ எனத் தாலாட்டுப் பாடிய இவர்,

மங்கை யராகப் பிறப்பதற்கே – நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா

எனப் பாடிப் பெண்ணின் பெருமையைப் பேசுகிறார்.

சாலைகளில் பலதொழில்கள் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்

எனத் தொழிலும் தமிழும் வளம்பெறுதல் வேண்டுமென விரும்புகிறார்.

விடுதலை இயக்கக் கவிஞர்களுள் ஒருவர் நாமக்கல் கவிஞர். இவர்தம் கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள் மிளிர்கின்றன. இவர், தமிழரின் சிறப்பையும் தமிழ்மொழியின் இனிமையையும் சேர்த்துப் பாடினார்.

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்.

சமுதாயத்தின்மீது அக்கறையுள்ள அவர், பின்வருமாறு பாடியுள்ளார்.

பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்
பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்.

பாரதியார்

பாரதிதாசன்

சுரதா

நாமக்கல் இராமலிங்கனார்

முடியரசன்

கல்யாணசுந்தரம்

கண்ணதாசன்

ந. பிச்சமூர்த்தி

தமிழ்ஒளி

மீரா

வாழ்க்கை சிறக்க ஒவ்வொருவரும் ஒரு தொழிலையாவது கற்றுக்கொள்வது நல்லது என வலியுறுத்தும் நாமக்கல்லாரின் கவிதை வருமாறு :

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்.

புலவர் குழந்தை, முடியரசன் முதலியோர் கவிதைகளில் பகுத்தறிவு நோக்கும் முற்போக்குச் சிந்தனையும் தமிழுணர்வும் இலங்கக் காணலாம்.

ஆங்கிலமோ பிறமொழியோ பயின்றுவிட்டால்
அன்னைமொழி பேசுதற்கு நாணுகின்ற
தீங்குடைய மனப்போக்கர் வாழும்நாட்டில்
தென்படுமோ மொழியுணர்ச்சி?

இவ் அடிகள் முடியரசனின் தணியாத தண்டமிழ்க் காதலை வலியுறுத்தும்.

சுரதாவின் கவிதைகளில் புதிய உவமைகளைக் காணலாம். அதனால், அவர் உவமைக் கவிஞர் என்னும் சிறப்பைப் பெற்றார்.

வரலாற்றுச் செய்திகளும் இலக்கண விளக்கங்களும் இவர்தம் பாடல்களில் இடையிடையே கலந்து வருகின்றன; அவை எளிமையும் இனிமையும் ஒன்றுகலந்து பொருட்செறிவையும் புத்துணர்ச்சியையும் உண்டாக்குகின்றன.

முல்லைக்கோர் காடு போலும்
முத்துக்கோர் கடலே போலும்
சொல்லுக்கோர் கீரன் போலும்
தூதுக்கோர் தென்றல் போலும்
கல்விக்கோர் கம்பன் போலும்
கவிதைக்கோர் பரணர் போலும்
வில்லுக்கோர் ஓரி போலும்
விளங்கினார்; வென்றார்; நின்றார்.

இவ்வாறு சுரதா, மறைமலையடிகளாரை உவமைகளால் பாராட்டியுள்ளார். பாரதிதாசனைத் தொடர்ந்து, இயற்கையின் அழகை எழிலுறப் படம்பிடித்துக் காட்டுவதில் வாணிதாசன் சிறந்து விளங்குகின்றார்.

சுத்தானந்த பாரதியார், பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், கவிஞர் கண்ணதாசன், தமிழ்ஒளி என எண்ணற்றோர் மரபுக் கவிதைகள் புனைந்து தமிழன்னைக்கு மேலும் வளமும் வனப்பும் சேர்த்துள்ளனர்.

தமிழ்

புதுக்கவிதை

மனிதகுல வளர்ச்சிக்கு ஏற்றவாறு சிந்தனை மாற்றங்களும் சமூக மாற்றங்களும் நிகழ்தல் இயல்பு. இச்சிந்தனை மாற்றத்தின் விளைவே புதுக்கவிதையின் தோற்றம். அமெரிக்கக்கவிஞர் வால்ட்விட்மனின் சாயலில் பாரதியார் வசன கவிதை எழுதினார். பாரதிதாசனின் உரைநடைகள் அனைத்தும் கவிதைநடை கொண்டவை.

யாப்பு நெறிகளை மீறவேண்டும் என இவ்விரு கவிஞரும் ஒருபோதும் எண்ணியதில்லை. யாப்பினை ஒரு தடையாகவும் இவர்கள் நினைத்ததில்லை. ஆனால், மேலை நாட்டு இலக்கியத் தொடர்பும், சமுதாயச் சூழ்நிலையும் தமிழில் புதியதொரு வடிவம் தோன்றக் காரணமாயின.

புதிய ஆங்கிலக் கவிதைகளைப் படித்த தமிழர்தம் சிந்தனையில் புதுக்கவிதைகள் மலர்ந்து மணம் பரப்பின. மரபுக்கவிதைகள் பாடிவந்த பலரையும் இந்தப் புதுக்கவிதை வகை ஈர்த்தது.

ந. பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப.இராசகோபாலன், க.நா.சுப்பிரமணியன் முதலியோர் தொடக்கத்தில் மணிக்கொடி என்னும் இதழில் புதுக்கவிதை எழுதினர்.

பின்னர் எஸ்.வைத்தீஸ்வரன், தருமு சிவராமு, மணி, சி.சு.செல்லப்பா முதலியோர் எழுத்து என்னும் இதழில் புதுக்கவிதைகளைப் படைத்தனர்.

இதற்கடுத்த நிலையில் நா.காமராசன், மீரா (மீ. இராசேந்திரன்), சிற்பி பாலசுப்பிரமணியன், வாலி, இன்குலாப், மு.மேத்தா, வைரமுத்து, அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன் முதலிய கவிஞரும், புதுக்கவிதை பாடுவதில் ஈடுபட்டுப் பெருவெற்றி பெற்றனர். கோவை வானம்பாடிக் குழுவினர் புதுக்கவிதையைப் பரவலாக்கப் பாடுபட்டனர்.

புவியரசு, கங்கைகொண்டான், சிற்பி, தமிழ்நாடன், அக்கினிப்புத்திரன், சக்திக்கனல், இரவீந்திரன், ஞானி, பா. செயப்பிரகாசம், பிரபஞ்சன், பாலா, கோ.ராஜாராம் என வளரும் பெரும்பட்டியலைக் கொண்டது வானம்பாடி இயக்கம். இவர்களின் வருகைக்குப் பின்னர், சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் ஓர் இலக்கிய வகையாகப் புதுக்கவிதை சிறப்புற்றது. இவர்களின் வழிநின்று, இன்று எண்ணற்றோர் புதுக்கவிதைகளைப் படைத்து வருகின்றனர். புதுக்கவிதை வளர்ச்சியில் வல்லிக்கண்ணன் பங்கு போற்றத்தக்கது.

ஏழையின் குடிசையில்
அடுப்பும் விளக்கும் தவிர
எல்லாமே எரிகின்றன.

இக்கவிதை புதுக்கவிதையின் எளிய வடிவத்தைக் காட்டுகிறது.

தமிழிலக்கிய உலகில் மரபுக்கவிதையின் பெரும்பகுதியான இடத்தை இன்று புதுக்கவிதை பற்றிக்கொண்டிருக்கிறது. இன்றைய கவிஞர்கள் மேனாட்டாரைப் பின்பற்றிப் புதுப்புது வடிவங்களில் கவிதைகளை எழுதிவருகிறார்கள்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.
   1. காந்தியக் கவிஞர் எனப் போற்றப்படுபவர் ____________.
   2. உவமைக்கவிஞர் ____________ ஆவார்.
   3. புதுக்கவிதை வளர்ச்சியில் ____________ பங்கு போற்றத்தக்கது.
2. வேற்றுமை உருபைச் சேர்த்தெழுதுக.
   1. வானம்பாடி இயக்கம் புதுக்கவிதை வளர்ச்சி _____ த்துணைபுரிந்தது. (ஐ/ஆல்/கு)
   2. மணிக்கொடி என்னும் இதழ் _____ புதுக்கவிதைகளைப் படைத்தனர். (ஐ/இல்/கு)
3. விடைக்கேற்ற வினா அமைக்க.
   1. பாரதிதாசன் மூடநம்பிக்கைகளைச் சாடினார்.
   2. இருபதாம் நூற்றாண்டை உரைநடைக்காலம் என்று வழங்குகின்றோம்.
4. சந்திப்பிழை நீக்கி எழுதுக.
   1. எளிய மக்களை நோக்கி கவிதை கருவியை திருப்பி அமைத்த பெருமை பாரதியை சாரும்.
   2. பாரதிதாசனை தொடர்ந்து வாணிதாசன் இயற்கை அழகை படம்பிடித்து காட்டுகிறார்.

ஆ) குறுவினாக்கள்

1. இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சிபற்றி எழுதுக.
2. உரைநடைக் காலம் எது? ஏன்?
3. கவிமணியின் கவியின்பத்துக்குச் சான்று தருக.
4. சுரதா "உவமைக்கவிஞர்" எனப் பாராட்டப்படுவதேன்?

இ) சிறுவினாக்கள்

1. புதுக்கவிதையை வளர்த்த இதழ்கள் யாவை?
2. சமுதாய மேம்பாட்டுக்கு நாமக்கல்லார் கூறும் அறிவுரை யாது?
3. பாரதிதாசனின் கவிதைப் போக்கினைப்பற்றி எழுதுக.

ஈ) நெடுவினாக்கள்

1. இக்கால மரபுக்கவிஞர் எவரேனும் நால்வரின் கவித்திறத்தை விளக்குக.
2. புதுக்கவிதை தோன்றி வளர்ந்தமுறைபற்றி எழுதுக.

உச்சிமலையிலே ஊறும் அருவிகள் ஒரே வழியில் கலக்குது ஒற்றுமை யில்லா மனிதகுலம் உயர்வு தாழ்வு வளர்க்குது. – பட்டுக்கோட்டைக்கல்யாணசுந்தரம்	நீங்களும் புதுக்கவிதை எழுதலாமே! ____________________ ____________________ ____________________ ____________________

தமிழ்

கண்ணதாசன் கவியின்பம்

உலகுக்கு உயிர்ப்பாற்றலை வழங்கும் ஞாயிறு ஒருபோதும் மறைவதில்லை. அதனைப் போன்றே இலக்கிய வளம்கொழிக்கும் மொழிகளிலும், உயிர்த்துடிப்புள்ள கவிஞர்கள் இடையறாது தோன்றுகிறார்கள். அவர்கள், அம்மொழிகளின் விழிகளுக்கு ஒளியூட்டி வருகிறார்கள். அவர்கள் வாழும் காலச் சூழலுக்கேற்பத் தத்தம் கவிதைகளைப் படைத்துக் காலத்தைவென்று நிலைத்து நிற்கின்றார்கள். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களின் வரிசையில் தனக்கென்று தனி முத்திரையைப் பதித்தவர் கவியரசு கண்ணதாசன். எளிய சொற்களைக் கொண்டு உள்ளத்தை மகிழ்விக்கும் பாடல்களை இயற்றிய பெருமை கண்ணதாசனுக்கு உண்டு.

தமிழுணர்வு

செந்தமிழ்ச் சொல்லெடுத்து
இசை தொடுப்பேன் – வண்ணச்
சந்தத்திலே கவிதைச் சரம்தொடுப்பேன்

எனத் தமிழ்க்கவிதை எழுதத் தொடங்கித் தமிழ்த்தாயின்மீது கொண்ட பற்றினால்,

கதிர்வெடித்துப் பிழம்புவிழக்
கடல்கொதித்துச் சூடேற்ற
முதுமைமிகு நிலப்பரப்பில்
முதற்பரப்பு தோன்றிவிட
நதிவருமுன் மணல்வருமுன்
நலம்வளர்த்த தமிழணங்கே!

என நெக்குருகித் தமிழ்த்தாயின் பழைமையைப் பறைசாற்றுகிறார்.

வாழ்வியல் சிந்தனை

வாழ்க்கையும் வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகளுமே கவிதைக்குரிய பொருள்களாம். இன்பமும் துன்பமும் நிறைந்தவைதாம் வாழ்க்கை; இரண்டனையும் ஏற்கும் மனவுறுதி பெறுவதே அமைதியான வாழ்வுக்கு வழி.

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எதுவென் றாலும்
வாடி நின்றால் ஓடுவ தில்லை
எதையும் தாங்கும் இதயம் இருந்தால்
இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்.

இப்பாடலிலுள்ள நம்பிக்கை நமக்கு உரம், அறிவுக்கு வழித்தடம் என்று அழுத்தமாகப் பதிவு செய்கிறார்.

பசுமைமாறா நினைவு

பள்ளி, கல்லூரிக் கல்வியை முடித்துச் செல்லும் காலத்தில், மாணவர்களுக்காக நடத்தப்பெறும் விடைபெறு விழாவில் கலந்துகொள்வோர் அனைவரையும் நெகிழவைக்கும் பாடலைக் கண்ணதாசன் இயற்றியுள்ளார்.

பசுமை நிறைந்த நினைவுகளே!
பாடித் திரிந்த பறவைகளே!
பழகிக் களித்த தோழர்களே!
பறந்து செல்கின்றோம் – நாம்
பறந்து செல்கின்றோம்
... ...
எந்த ஊரில் எந்த நாட்டில் என்று காண்போமோ?

குழந்தை

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி மழலை மொழிபேசும் குழந்தையே ஒரு கவிதை. அக்குழந்தையை உவமிக்கும் கண்ணதாசனின் அழகான பாடலைப் பாடி மகிழலாம்.

முத்தான முத்தல்லவோ மிதந்து வந்த முத்தல்லவோ
கட்டான மலரல்லவோ கடவுள்தந்த பொருளல்லவோ
சின்னஞ்சிறு சிறகுகொண்ட சிங்காரச் சிட்டல்லவோ
செம்மாதுளை பிளந்து சிரித்துவரும் சிரிப்பல்லவோ
மாவடு கண்ணல்லவோ மைனாவின் மொழியல்லவோ

பொதுவுடைமை

சுரண்டல், வறுமை ஆகியன நீங்கவும், சமத்துவம் ஓங்கவும் பொதுமை உணர்வே ஏற்றது என்பதனைக் கண்ணதாசன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்

எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் – இங்கு
இல்லாமை இல்லாத நிலைவேண்டும்
வல்லான் பொருள்குவிக்கும் தனியுடைமை – நீங்கி
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை.

கவிதைகளில் சொல்லப்படும் கருத்துகளைக் காட்டிலும், அக்கருத்துகளை வெளிப்படுத்த கவிஞன் கையாளும் முறைகளும் இன்றியமையாதன. கவிதை நடை என்பது, கவிதையின் பொருளிலும் அதனை வெளிப்படுத்தும் மொழியிலும் அமைந்துள்ளது.

ஓசைநயம்

உழவர் பெருமக்களின் இல்லத்தே எழுகின்ற பல்வேறு ஓசைகள் இயைபுத்தொடையும் இசைநயமும் ஒத்து ஒலிக்கின்றன.

காளை மணியோசை; களத்துமணி நெல்லோசை
வாழை இலையோசை; வஞ்சியர்கை வளையோசை
தாழை மடலோசை; தாயர்தயிர் மத்தோசை
கோழிக் குரலோசை; குழவியர்வாய்த் தேனோசை.

ஓசை என்னும் சொல்லைப் பலமுறை பயன்படுத்திப் பொருள்நயமும் ஓசை இனிமையும் பொருந்துமாறு கவிஞர் பாடியுள்ளார்.

சொல்லாட்சி

கவிதைக்கு மூலப்பொருள் சொற்கள். இனிய தமிழ்ச்சொற்களாகிய மணிகள், கவிஞர்களால் கையாளப்படும்பொழுது அவை பட்டை தீட்டப்பெற்று ஒளிவீசுகின்றன. இத்தகைய சொல்லாட்சிகளைக் கண்ணதாசனின் கவிதைகளில் காணலாம்.

உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால்
உலகம் உன்னிடம் மயங்கும் – நிலை
உயரும்போது பணிவு கொண்டால்
உயிர்கள் உன்னை வணங்கும்.

கண்ணதாசன் – படைப்புகளும் சிறப்புகளும்

முத்தையா என்ற இயற்பெயர் கொண்ட கண்ணதாசன், சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 24.06.1927 அன்று பிறந்தார்.

பெற்றோர் சாத்தப்பன் – விசாலாட்சி ஆவர். கண்ணதாசன் கவிதைகள் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அவர்தம் திரைப்படப் பாடல்கள் நூல் வடிவம்பெற்றுள்ளன.

ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, கல்லக்குடி மாகாவியம், இயேசுகாவியம் முதலியன அவர் படைத்த நெடுங்கவிதை நூல்கள்.

இராசதண்டனை என்பது, கம்பர் – அம்பிகாபதி வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, அவர் படைத்த இனிய நாடகம்.

ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி, வேலங்குடித் திருவிழா முதலிய பல புதினங்களையும் கண்ணதாசன் படைத்திருக்கிறார். அவர் எழுதிய இருபதுக்கும் மேற்பட்ட புதினங்களில் சேரமான் காதலி சிறந்த வரலாற்றுப் புதினமாகும். அதற்குச் சாகித்திய அகாதமியின் பரிசு கிடைத்துள்ளது.

கண்ணதாசன் தென்றல், முல்லை, கண்ணதாசன், தமிழ் மலர் முதலிய இதழ்கள் தொடங்கி, அவற்றுக்கு ஆசிரியராக இருந்து சிறந்த இதழ்ப்பணி ஆற்றியுள்ளார்.

கவிதையிலும் உரைநடையிலும் சொற்பொழிவிலும் திரைப்படத் துறையிலும் தமக்கென ஒரு புதிய வழியினை வகுத்துக்கொண்டு தலைநிமிர்ந்து நின்றவர் கண்ணதாசன். அவர், தம் கவிதைகளால் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

> நான் நிரந்தரமானவன் அழிவதில்லை
> எந்தநிலையிலும் எனக்கு மரணமில்லை.
>
> – கண்ணதாசன்

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. கண்ணதாசன் தமிழுணர்வை எங்ஙனம் வெளிப்படுத்துகிறார் ?
2. கண்ணதாசனின் வாழ்வியல் சிந்தனையை விளக்குக.

கேட்டு மகிழ்க.

கவிஞர் கண்ணதாசனின் சொல்லாட்சிச் சிறப்பை வெளிப்படுத்தும் தேன், காய் என்னும் இயைபுச் சொற்கள் அமைந்த பாடல்களைக் கேட்டு மகிழ்க.

நடுவண் அரசின் நிறுவனமான சாகித்திய அகாதமி ஆண்டுதோறும் இந்திய மொழிகளில் உள்ள சிறந்த இலக்கியங்களைத் தெரிவுசெய்து விருது வழங்கிவருகிறது.

உனக்குத் தெரிந்த இதழ்களின் பெயர்களை எழுதுக.

1. ______________________ 5. ______________________
2. ______________________ 6. ______________________
3. ______________________ 7. ______________________
4. ______________________ 8. ______________________

சொல்

(பகாப்பதம், பகுபதம்)

ஓர் எழுத்தானது தனித்தேனும், ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்தேனும் ஒரு பொருளை உணர்த்துமானால், அது சொல் எனப்படும்.

பதம், மொழி, கிளவி என்பன சொல் என்பதன் வேறு பெயர்கள். பதம் என்பது பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படும்.

பகாப்பதம்

பிரித்தால் பொருள் தராத சொல் பகாப்பதம் எனப்படும். பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றின் அடிப்படையில் பகாப்பதம் நாலுவகைப்படும்.

1. பெயர்ப் பகாப்பதம் – மரம், நாய், நீர்
2. வினைப் பகாப்பதம் – உண், காண், எடு
3. இடைப் பகாப்பதம் – தில், மன், பிற
4. உரிப் பகாப்பதம் – சால, நனி, கடி, உறு

(இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பகாப்பதங்களாகவே இருக்கும்.)

பகுபதம்

பகுதி, விகுதி, இடைநிலை எனப் பிரிக்கப்படும் பதம் பகுபதம் எனப்படும். (பகுபதம் – பிரிக்கவியலும் பதம்).

பகுபதம் பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இருவகைப்படும்.

பெயர்ப்பகுபதம் : பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறன் அடியாகத் தோன்றுவது பெயர்ப்பகுபதம்.

(எ.கா.)

1. பொன்னன் = பொன் + ன் + அன் (ன் – இரட்டித்தது)
   பொன் என்னும் பொருட்பெயர் அடியாகப் பிறந்தது.
2. ஊரன் = ஊர் + அன்
   ஊர் என்னும் இடப்பெயர் அடியாகப் பிறந்தது.
3. ஆதிரையான் = ஆதிரை + ய் + ஆன் (ய் – உடம்படுமெய்)
   ஆதிரை என்னும் காலப்பெயர் அடியாகப் பிறந்தது.
4. கண்ணன் = கண் + ண் + அன் (ண் – இரட்டித்தது)
   கண் என்னும் சினைப்பெயர் அடியாகப் பிறந்தது.

5\. கரியன் = கருமை + அன்

கருமை என்னும் பண்புப்பெயர் அடியாகப் பிறந்தது.

6\. நடிகன் = நடி + க் +அன் (க் – பெயர் இடைநிலை)

நடித்தல் என்னும் தொழிற்பெயர் அடியாகப் பிறந்தது.

வினைப்பகுபதம் : பகுதி, விகுதி, இடைநிலை முதலியனவாகப் பகுக்கப்படும் வினைமுற்று, வினைப்பகுபதம் எனப்படும்.

செய்தான் = செய் + த் + ஆன்

செய்தான் என்னும் வினைமுற்றில் செய் என்னும் பகுதி தொழிலையும், த் என்னும் இடைநிலை இறந்தகாலத்தையும், ஆன் என்னும் விகுதி ஆண்பாலையும் குறிக்கின்றன.

பகுபத உறுப்புகள்

பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்னும் ஆறு உறுப்புகளும் பகுபத உறுப்புகள் ஆகும்.

1\. பகுதி : பகுபதத்தில் முதலில் நின்று பொருள் தரும் முதனிலையைப் பகுதி என்பர். பகுதி பெரும்பாலும் ஏவல் வினையாக வரும்.

படித்தான்	–	படி என்பது பகுதி
ஓடினான்	–	ஓடு என்பது பகுதி
வந்தான்	–	வா என்பது பகுதி

2\. விகுதி : பகுபதத்தில் இறுதியில் நிற்பது விகுதி எனப்படும். இது திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும்.

நடந்தான்	–	ஆன்	–	ஆண்பால் விகுதி
நடந்தாள்	–	ஆள்	–	பெண்பால் விகுதி
நடந்தனர்	–	அர்	–	பலர்பால் விகுதி
நடந்தது	–	து	–	ஒன்றன்பால் விகுதி
நடந்தன	–	அ	–	பலவின்பால் விகுதி

3\. இடைநிலை : பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வருவது இடைநிலை எனப்படும். இடைநிலை காலம் காட்டுவதனால் காலங்காட்டும் இடைநிலை எனவும் கூறுவர்.

அ) நிகழ்கால இடைநிலைகள்

கிறு, கின்று, ஆநின்று என்பன நிகழ்கால இடைநிலைகள்.

உண்கிறான்	–	கிறு	=	உண் + கிறு + ஆன்
உண்கின்றான்	–	கின்று	=	உண் + கின்று + ஆன்
உண்ணாநின்றான்	–	ஆநின்று	=	உண் + ஆநின்று + ஆன்

தமிழ்

ஆ) இறந்தகால இடைநிலைகள்

த், ட், ற், இன் என்பன இறந்தகால இடைநிலைகள்.

பார்த்தான்	–	த்	=	பார் + த் + த் + ஆன்
உண்டான்	–	ட்	=	உண் + ட் + ஆன்
வென்றான்	–	ற்	=	வெல் (ன்) + ற் + ஆன்
பாடினான்	–	இன்	=	பாடு + இன் + ஆன்

இ) எதிர்கால இடைநிலைகள்

ப், வ் என்பன எதிர்கால இடைநிலைகள்.

உண்பான்	–	ப்	=	உண் + ப் + ஆன்
வருவான்	–	வ்	=	வா (வரு) + வ் + ஆன்

ஈ) எதிர்மறை இடைநிலைகள்

இல், அல், ஆ முதலியன எதிர்மறை இடைநிலைகள்.

உண்டிலன்	–	இல்	=	உண் + ட் + இல் + அன்
காணலன்	–	அல்	=	காண் + அல் + அன்
பாரான்	–	ஆ	=	பார் + ஆ + ஆன்

4. சந்தி

பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வந்து சந்திக்க வைப்பது சந்தி.

இது, சிலவிடங்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலும் வரும்.

பார்க்கிறான்	=	பார் + க் + கிறு + ஆன்
படித்தான்	=	படி + த் + த் + ஆன்

5. சாரியை

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வருவது சாரியை எனப்படும். இஃது இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.

உண்டனன்	=	உண் + ட் + அன் + அன்

அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம் முதலியன சாரியைகள்.

6. விகாரம்

பகுதி, இடைநிலை, விகுதி போன்றவை சேரும்போது இடையில் ஏற்படும் மாறுபாடு விகாரம் எனப்படும்.

வந்தான் என்னும் சொல்லில் உள்ள வா என்னும் பகுதி வ எனக் குறைந்து விகாரம் ஆயிற்று.

பயிற்சி

1. பின்வரும் சொற்களின் பகுதியை எடுத்தெழுதுக.

அ) கண்டான் ஆ) கேட்டான் இ) வந்தான் ஈ) எழுதினான்

2. தொடர்பில்லாத சொல்லை வட்டமிடுக.

அ) பார்த்தான், சொன்னான், பெற்றான், நடப்பான்.

ஆ) பாடுகிறாள், நடித்தார், நடிக்கின்றார், சிரிக்கின்றாள்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. கண்ணன் என்பது ____________ பகுபதம் ஆகும்.
   அ) பொருட்பெயர் ஆ) பண்புப்பெயர் இ) சினைப்பெயர்
2. இடைச்சொற்கள் ____________ பதம் ஆகும்.
   அ) பகு ஆ) பகா இ) விளி
3. மதுரையான் ____________ பெயர்ப்பகுபதம் ஆகும்.
   அ) பொருள் ஆ) சினை இ) இடம்
4. பகுபதத்தில் குறைந்தளவு இருக்கவேண்டிய உறுப்புகள் ____________ .
   அ) பகுதி, சந்தி ஆ) இடைநிலை, சாரியை இ) பகுதி, விகுதி
5. ஏவல் வினையாக அமைவது ____________ ஆகும்.
   அ) பெயர்ப்பகுபதம் ஆ) வினைப்பகுபதம் இ) எதுவுமில்லை
6. 'இல்' என்னும் எதிர்மறை இடைநிலை அமைந்துள்ள வினைச்சொல்____________
   அ) கேளான் ஆ) வாரான் இ) கண்டிலன்
7. செய்தான் – இச்சொல்லில் அமைந்துள்ள இடைநிலை____________ .
   அ) இன் ஆ) த் இ) ட்

2. பொருத்துக.

அ)	பொருட்பெயர்ப் பகுபதம்	–	சென்னையான்
	இடப்பெயர்ப் பகுபதம்	–	மூக்கன்
	காலப்பெயர்ப் பகுபதம்	–	பொன்னன்
	சினைப்பெயர்ப் பகுபதம்	–	சித்திரையான்

தமிழ்

ஆகுபெயர்

எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்

இந்தியா மிகப்பெரிய நாடு.

மட்டைப்பந்தில் இந்தியா வென்றது.

இவ்விரு தொடர்களிலும் அமைந்துள்ள இந்தியா என்னும் சொல்லை உற்றுநோக்குங்கள். முதல் தொடரில் உள்ள இந்தியா இடத்தைக் குறிக்கின்றது. இரண்டாம் தொடரில் உள்ள இந்தியா, இந்திய வீரர்களைக் குறிக்கின்றது. இவ்வாறு ஒரு பொருளின் பெயர், தனக்குரிய பொருளைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

ஆகுபெயர் வகைகள்

ஆகுபெயர் பதினாறு வகைப்படும். அவற்றுள் பொருளாகுபெயர் முதலான ஆறு ஆகுபெயரை எட்டாம் வகுப்பில் கற்றிருக்கிறீர்கள். பிற ஆகுபெயர்களை இங்குக் கற்கவிருக்கிறீர்கள். அளவைக் குறிக்கும் பெயர்களை அளவைப் பெயர்கள் என்பர். எண்ணல் அளவை, எடுத்தல் அளவை, முகத்தல் அளவை, நீட்டல் அளவை என அளவைப்பெயர்கள் நால்வகைப்படும்.

1. எண்ணல் அளவை ஆகுபெயர் : ஒன்று பெற்றால் ஒளி மயம்.

இத்தொடரில் ஒன்று என்னும் எண்ணுப்பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்குப் பெயராகி வந்தது. இஃது எண்ணல் அளவை ஆகுபெயர்.

2. எடுத்தல் அளவை ஆகுபெயர் : ஐந்து கிலோ என்ன விலை ?

இத்தொடரில் கிலோ என்னும் எடுத்தல் அளவைப் பெயர், அவ்வளவைக் குறிக்காமல், அவ்வளவுடைய பொருளுக்கு (அரிசி, பருப்பு....) ஆகிவந்தது. எனவே, இஃது எடுத்தல் அளவை ஆகுபெயர்.

3. முகத்தல் அளவை ஆகுபெயர் : நாலுலிட்டர் தேவை.

இத்தொடரில் லிட்டர் என்னும் முகத்தல் அளவைப்பெயர், அவ்வளவைக் குறிக்கவில்லை. அவ்வளவுடைய நெய், எண்ணெய், பால் முதலியவற்றுள் ஒன்றுக்கு ஆகிவந்தது. எனவே, இது முகத்தல் அளவை ஆகுபெயர்.

4. நீட்டல் அளவை ஆகுபெயர் : மூன்று மீட்டர் கொடு.

இத்தொடரில், மூன்று மீட்டர் என்பது, அவ்வளவுடைய அளவுகோலைக் குறிக்காது, அதனால் நீட்டி அளக்கப்பெறும் துணிக்கு ஆகி வந்தது. எனவே, இது நீட்டல் அளவை ஆகுபெயர்.

குறிப்பு : “ஒன்றுகொடு, நாலுகிலோ தா, இரண்டு லிட்டர் தேவை, ஐந்து முழம் வேண்டும்”

என்பனபோல வரும் அளவுத்தொடர்கள் ஆகுபெயராம். ‘ஒரு மாம்பழம் கொடு, இரண்டு கிலோ நெய் வேண்டும்’ என்பன ஆகுபெயராகா.

பொருள்முதல் ஆறோடு அளவை சொல்தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே. – நன்னூல், 290

பயிற்சி : கீழ்க்காணும் தொடர்களிலுள்ள ஆகுபெயர்களை வட்டமிடுக.

அ) இரண்டு மீட்டர் போதுமா?

ஆ) ஐந்து லிட்டர் என்ன விலை?

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

‘நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி’ – இத்தொடர் ____________ ஆகும்.

அ) முகத்தலளவை ஆகுபெயர் இ) நீட்டலளவை ஆகுபெயர்

ஆ) எண்ணலளவை ஆகுபெயர்

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

‘மூன்று மீட்டர் தா’ என்பது ____________ ஆகுபெயராகும்.

3. பொருத்துக.

1. முகத்தல் அளவை ஆகுபெயர் – தலைக்கு ஒரு பழம் கொடு.
2. எடுத்தல் அளவை ஆகுபெயர் – இரண்டு லிட்டர் தா.
3. எண்ணல் அளவை ஆகுபெயர் – ஆறு முழம் கொடு.
4. நீட்டல் அளவை ஆகுபெயர் – பத்துக் கிலோ கொடு.

ஆ) குறுவினாக்கள்

1. ஆகுபெயர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
2. அளவைப் பெயர்கள் யாவை?
3. நீட்டலளவை ஆகுபெயருக்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
4. முகத்தல் அளவை ஆகுபெயர் என்றால் என்ன?

பொருள்கோள்

ஆற்றுநீர்ப்பொருள்கோள், மொழிமாற்றுப்பொருள்கோள், நிரல்நிறைப்பொருள்கோள்

ஒரு செய்யுளில் உள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொள்ளும் முறையைப் பொருள்கோள் (பொருள் கொள்ளும் முறை) என வழங்குவர்.

பொருள்கோள் எண்வகைப்படும்.

1. ஆற்றுநீர்ப்பொருள்கோள்
2. மொழிமாற்றுப்பொருள்கோள்
3. நிரல்நிறைப்பொருள்கோள்
4. விற்பூட்டுப்பொருள்கோள்
5. தாப்பிசைப்பொருள்கோள்
6. அளைமறிபாப்புப்பொருள்கோள்
7. கொண்டுகூட்டுப்பொருள்கோள்
8. அடிமறிமாற்றுப்பொருள்கோள்

1. ஆற்றுநீர்ப்பொருள்கோள்

இடையறாது செல்லும் ஆற்றுநீரைப்போலப் பாடலின் சொற்கள் முன்பின் மாறாது நேரே சென்று பொருள்கொள்வது ஆற்றுநீர்ப்பொருள்கோளாகும்.

(எ.கா.) பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். – குறள், 6

பொறிவாயில் ஐந்தவித்தான் – மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாகக்கொண்ட ஐவகை ஆசைகளையும்விட்ட இறைவனது; பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் – மெய்யான ஒழுக்க நெறியில் நின்றவர்; நீடு வாழ்வார் – வீட்டுலகில் என்றும் இன்புற்று வாழ்வர். இக்குறட்பாவில் பொறிவாயில் எனத் தொடங்கி, நீடுவாழ்வார் என்பது வரையிலுள்ள சொற்கள் முன்பின்னாக மாற்றம் பெறாமல் தொடர்ச்சியாக அமைந்து பொருள்கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. ஆதலின் இப்பாடல், ஆற்றுநீர்ப்பொருள்கோள் ஆயிற்று.

2. மொழிமாற்றுப்பொருள்கோள்

ஓரடியுள் உள்ள சொற்களை, அவைதரும் பொருளுக்கு ஏற்ப மாற்றிக் கூறுதல் மொழிமாற்றுப்பொருள்கோள் என வழங்கப்படும்.

(எ.கா.) சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

இப்பாடலை அப்படியே படித்தால் பொருள் தெளிவு இருக்காது. இதனைச் சுரை மிதப்ப, அம்மி ஆழ, யானைக்கு நிலை, முயற்கு (முயல்) நீத்து என அந்தந்த அடியிலுள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிப் பொருள்கொள்ளுதல் வேண்டும்.

3. நிரல்நிறைப்பொருள்கோள்

செய்யுளில் இருக்கின்ற சொற்களை முறைமாற்றாமல், வரிசையாக அமைத்துப் பொருள்கொள்வது நிரல்நிறைப்பொருள்கோள் ஆகும்.

(எ.கா.) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. – குறள், 45

இக்குறட்பாவில் அன்புக்குப் பண்பும், அறத்துக்குப் பயனும் நிரல்நிறையாக வந்து அமைந்துள்ளதனால், இப்பாடல் நிரல்நிறைப்பொருள்கோள் ஆயிற்று.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பொருள்கோள் ____________ வகைப்படும்.
2. பாடலின் சொற்கள் முறைமாற்றாமல், வரிசையாக அமைத்துப் பொருள்கொள்வது ____________ .
3. 'சுரையாழ அம்மி மிதப்ப' என்னும் செய்யுள் அடியில் ____________ பயின்று வந்துள்ளது.

ஆ) குறுவினாக்கள்

1. பொருள்கோள் என்றால் என்ன ? அஃது எத்தனை வகைப்படும் ?
2. ஆற்றுநீர்ப்பொருள்கோளுக்குச் சான்றுதந்து விளக்குக.
3. மொழிமாற்றுப்பொருள்கோளுக்குச் சான்றுதந்து விளக்குக.
4. நிரல்நிறைப்பொருள்கோளுக்குச் சான்று தருக.

வகுப்பறைத்திறன்கள்

படைப்பாற்றல்

இயற்கை – இத்தலைப்பில் பாடல் ஒன்று எழுதுக.

____

____

____

____

பேசுதல் திறன்

எனக்குப் பிடித்த கவிஞர் – என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளி பேசுக.

தமிழ்

நயம் பாராட்டுதல்

பாடலைப் படித்து அதன் நயம் பாராட்டுக.

இருட்பகை இரவி இருளெனத் தம்மையும்
கருதிக் காய்வனோ என்றயிர்த்து இருசிறைக்
கையான் மார்பிற் புடைத்துக் கலங்கி
மெய்யாத் தம்பெயர் வியம்பி வாயசம்
பதறியெத் திசையிலும் சிதறியோ டுதலும்

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

பொருள் நயம்

இருளுக்குப் பகைவன் கதிரவன். அவன் தம்மையும் இருளென எண்ணிக் காய்ந்துவிடுவானோ எனக் காகங்கள் ஐயமுற்றுச் சிறகுகளைப் படபடவெனத் தம் மார்பில் படுமாறு அடித்துக்கொண்டு கா கா எனக் கரைந்தபடி திசையெங்கும் பறந்தோடின. (வாயசம் – காகம்; இரவி – சூரியன்; சிறை – இறக்கை)

அணி நயம்

காலைவேளையில் காகங்கள் இரைதேடப் பறந்துசெல்வது இயல்பான நிகழ்வு. கதிரவன் இருளுக்குப் பகைவன்; ஆதலால், தாமும் கரிய நிறத்துடன் இருப்பதனால் இருள் என எண்ணித் தம்மையும் காய்ந்துவிடுவானோ என ஐயமுற்றுப் பறந்தன எனக் கவிஞர், தம் கற்பனையை அதன்மேல் ஏற்றிக் கூறுகிறார். மேலும், காகங்கள் சிறகடிக்கும் இயல்பான செயலையும் மார்பில் அடித்துக்கொள்வதாகக் கூறுவதும் கவிஞரின் கற்பனையே. இவ்வாறு, இப்பாடலில் தற்குறிப்பேற்ற அணி சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது.

தொடை நயம் : மோனைத்தொடை

இருட்பகை இரவி இருளென
கருதிக் காய்வனோ, கையான்... கலங்கி

இவ்வடிகளில் சீர்களின் முதல் எழுத்து ஒன்றிச் சீர்மோனைத்தொடை அமைந்துள்ளது. அடிஎதுகைத்தொடை: இருட்–கருதி என இரண்டாமெழுத்து ஒன்றி அடிஎதுகையாகவும் பதறி–சிதறி எனச் சீரெதுகையாகவும் எதுகைத்தொடை அமைந்துள்ளது.

பயிற்சி : பாடலைப் படித்து அதன் நயம் பாராட்டுக.

வாரிக் களத்தடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும்
போரில் சிறந்து பொலிவாகும்–சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை யாம்.

– காளமேகப் புலவர்

மொழித்திறன் பயிற்சி

அ) வேர்ச்சொற்களை வினைமுற்றாக்குக.

1. நான் நாளை சந்தைக்குப் ____ (போ)
2. மாணவர்கள் பள்ளியில் கல்வி ____ (கல்)
3. யானை சினங்கொண்டு ____ (பிளிறு)
4. தேசிங்குராசா பாராசாரிக் குதிரையை ____ (அடக்கு)
5. இந்தியஅணி நேற்றைய கால்பந்துப்போட்டியில் வெற்றி ____ (பெறு)

ஆ) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைச் சொற்றொடருக்கேற்ப மாற்றுக.

1. அவர் ________ வந்தும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை. (விரைவு)
2. மாணவர்களுக்குப் பரிசளிக்குமாறு ________ க்கேட்டுக்கொள்கிறேன். (தலைவர்)
3. குழந்தைகள் ________ மரியாதை தருதல் வேண்டும். (பெற்றோர்)
4. அடுப்பு நன்றாக ________ விறகு காய்ந்திருத்தல் வேண்டும். (எரி)
5. எதிலும் ________ க்கடைப்பிடித்தல் வேண்டும். (எளிமை)

இ) பெயரெச்சத்தை வினைமுற்றாக மாற்றி எழுதுக.

(எ.கா.) வனப்பு மிக்க சோலை. சோலை வனப்பு மிக்கது.

1. துள்ளி ஓடிய புள்ளிமான். ________
2. மிகவும் இனித்த பழம். ________
3. பாடம் படித்த வைகறைச்செல்வி. ________
4. நீதி தவறாத மன்னன். ________
5. நேற்றுப் பெய்த மழை. ________

ஈ) வினைமுற்றைப் பெயரெச்சமாக மாற்றுக.

(எ.கா.) நேற்று மதியழகன் வந்தான். நேற்று வந்த மதியழகன்.

1. எழிலன் படம் வரைந்தான். ________
2. அப்பா சினம் கொண்டார். ________
3. எழில் பாம்பைக் கண்டாள். ________
4. குதிரை விரைவாக ஓடியது. ________
5. குரங்குகள் தாவிக் குதித்தன. ________

உ) மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக.

1. கிழக்கு திசைக்குப் பெயர் உதிக்கின்ற ஞாயிறு. ________
2. பிறப்பிடம் துன்பத்துக்கும் சோம்பலே தீமைக்கும். ________
3. பொன்செய்யும் மருந்து மனமே என்ற போதும். ________

தமிழ்

தமிழெண்களை அறிவோம்

51	௫௧	61	௬௧	71	௭௧	81	௮௧	91	௯௧
52	௫௨	62	௬௨	72	௭௨	82	௮௨	92	௯௨
53	௫௩	63	௬௩	73	௭௩	83	௮௩	93	௯௩
54	௫௪	64	௬௪	74	௭௪	84	௮௪	94	௯௪
55	௫௫	65	௬௫	75	௭௫	85	௮௫	95	௯௫
56	௫௬	66	௬௬	76	௭௬	86	௮௬	96	௯௬
57	௫௭	67	௬௭	77	௭௭	87	௮௭	97	௯௭
58	௫௮	68	௬௮	78	௭௮	88	௮௮	98	௯௮
59	௫௯	69	௬௯	79	௭௯	89	௮௯	99	௯௯
60	௬௦	70	௭௦	80	௮௦	90	௯௦	100	௧௦௦

பயிற்சி

51		61		71		81		91	
52		62		72		82		92	
53		63		73		83		93	
54		64		74		84		94	
55		65		75		85		95	
56		66		76		86		96	
57		67		77		87		97	
58		68		78		88		98	
59		69		79		89		99	
60		70		80		90		100	

விடுபட்ட தமிழெண்களை நிரப்புக.

1. ௫௧, _____, ௫௩, _____, ௫௫, _____, ௫௭, _____, _____, _____.
2. ௯௧, ௯௨, _____, _____, _____, ௯௬, _____, _____, ௯௯, _____.

கட்டுரைப் பயிற்சி: காலத்தை வெல்லும் கணினி

கடிதம் எழுதுதல் பயிற்சி : மாதிரிக் கடிதம்

தெரு மின்விளக்குப் பழுது நீக்கவேண்டி மின்வாரியச் செயற்பொறியாளருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக.

அனுப்புநர்

இராச. தமிழ்ச்செல்வன்,
செயலர்,
கபிலர் நகர் மக்கள் மன்றம்,
கபிலர் நகர்,
மதுரை – 625 002.

பெறுநர்

செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மின்வாரியம்,
மதுரை – 625 002.

மதிப்புக்குரியீர்,

பொருள் : கபிலர் நகர்ப் பகுதியில் மின்விளக்குப் பழுது நீக்க வேண்டுதல் – சார்பாக.

-----*-----

கபிலர் நகர்ப் பகுதியில் கடந்த இரு மாதங்களாகத் தெருவிளக்குகள் எரியவில்லை. இரவு நேரத்தில் இப்பகுதி இருள்சூழ்ந்து காணப்படுகிறது. அதனைப் பயன்படுத்திச் சமூகத்துக்கு எதிரான குற்றங்கள் அவ்வப்போது நடைபெறுகின்றன. அதனால், இப்பகுதி மக்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர். எனவே, தெரு மின்விளக்குகளைப் பழுதுநீக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை, தங்கள் உண்மையுள்ள,

14. 04. 2013. இராச. தமிழ்ச்செல்வன்

ஊர்மக்கள் கையொப்பம்

1.

2.

3.

உறைமேல் முகவரி:

பெறுநர்

செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மின்வாரியம்,
மதுரை 625 002.

குறிப்பு : (கடிதம் எழுதும்போது எழுதுவோர் முகவரி, நாள், இடம், விளித்தல் முறை, கடிதப்பொருள் (அ) செய்தி, கையொப்பம், பெறுநர் முகவரி இவற்றைத் தவிராமல் எழுதுதல் வேண்டும்.)

பயிற்சி

1. குடிநீர்வசதி வேண்டிக் குடிநீர்வாரியச் செயற்பொறியாளருக்கு
2. சாலைவசதி வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு
3. நூலகம் அமைத்துத்தர மாவட்ட ஆட்சியருக்கு
4. சுற்றுச்சூழலைக் கெடுக்கும் தொழிற்சாலை வேண்டாவென மாவட்ட ஆட்சியருக்கு

பண்பு

பெற்றோரை மதித்தலும் உதவுதலும்

முகிலனும்எழிலனும்படித்துக்கொண்டிருந்தனர். தாயார்குழலிசமைத்துக்கொண்டிருந்தார். அப்போது அழைப்புமணி ஒலித்தது.

"முகிலா! யார் வந்திருக்கிறார், பார்", என்றார் குழலி. "போம்மா, நான் படித்துக் கொண்டிருக்கிறேன்; என்னால் முடியாது" எனக் கூறிவிட்டுப் படிப்பதனைத் தொடர்ந்தான். இஃது அவனுக்குப் புதிதன்று.

அம்மாவோ அப்பாவோ எந்த வேலையைச் செய்யச் சொன்னாலும் அவனுடைய உடனடி பதில் என்னால் முடியாது என்பதுதான். அதற்காக ஏதோ ஒரு காரணம் சொல்லி, அவ்வேலையைத் தட்டிக்கழிப்பான்; ஏதாவது சொன்னால் எதிர்த்துப் பேசுவான்.

ஆனால், எழிலன் பெற்றோர்க்குத் தேவையான உதவிகள் செய்வான். முகிலனின் இயல்பை அறிந்த எழிலன் எழுந்துசென்று கதவைத் திறந்தான். அலுவலகத்திலிருந்து, அப்பா வந்திருந்தார். "அம்மா! அப்பா வந்துவிட்டார்" என உரக்கக் கூறிவிட்டு அறைக்குள் சென்றான்.

1. முகிலனின் பழக்கம் முறையானதுதானா? காரணம் கூறுக.
2. பெற்றோரை எதிர்த்துப் பேசும் பழக்கம் உள்ளவன் முகிலன் – இவனைப்பற்றி நும் கருத்தை எழுதுக.
3. நீ, உன் பெற்றோரிடம் எவ்விதம் நடந்துகொள்கிறாய்?
4. உன் பெற்றோருக்கு நீ செய்யும் உதவிகள் எவை?
5. எழிலன் படித்துக்கொண்டிருப்பதனை விட்டுவிட்டுக் கதவைத் திறந்தது முறைதானா?

வாழ்க்கைத்திறன்

முடிவெடுத்தல் திறன்

ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் வெற்றிச்செல்வன் விளையாட்டிலும் சிறந்து விளங்கினான். அவனுக்குத் தேர்வு நெருங்கிக்கொண்டிருக்கிறது.

ஒருநாள் உடற்கல்வி ஆசிரியர் அவனை அழைத்து, “மகிழ்ச்சியான செய்தி வெற்றிச்செல்வா! அடுத்தவாரம் பள்ளி மாணவர்களுக்கு இடையே புதுதில்லியில் தேசிய அளவிலான கைப்பந்துப் போட்டி நடைபெறவுள்ளது.

தமிழகத்தின் சார்பாக நம் பள்ளியிலிருந்து நீ தேர்வுசெய்யப்பட்டிருக்கிறாய். அதற்கு நீ புதுதில்லிக்குச் செல்லவேண்டும். உன் பெற்றோரிடம் கூறிவிடு” என்றார்.

அவன் பெற்றோர், “அதெல்லாம் ஒன்றும் வேண்டா; படிப்பதுதான் முக்கியம். ஏதோ பள்ளியில் விளையாடுகிறாய், போனால் போகட்டும் என்றிருந்தால், தில்லிக்குப் போகிறானாம். அவ்வளவு தொலைவு உன்னைத் தனியாக அனுப்பமுடியாது. எங்களாலும் துணைக்கு வரவியலாது எனத் திட்டவட்டமாகக் கூறிவிட்டனர்.

ஆசிரியர் இவ்வாய்ப்புக் கிடைத்தற்கரியது என்கிறார்.

பெற்றோர் வேண்டவே வேண்டா என்கின்றனர்.

வெற்றிச்செல்வனின் எதிர்காலம் சிறக்க, நீங்கள் நண்பர்களுடன் கலந்துரையாடி நல்லதொரு முடிவெடுங்கள்.

மதிப்புக்கல்வி

காலந்தவிராமை

அமெரிக்காவின் குடியரசுத்தலைவராக இருந்த வாஷிங்டன் எப்போதும் காலம் கருதிச் செயல்படுவார்.

நேரத்தை வீணாக்குவது அவருக்குப் பிடிக்காது.

எந்த ஒரு விழாவாக இருந்தாலும், குறித்த நேரத்துக்கு முன்பே சென்று விடுவார்.

வழக்கம்போல ஒருநாள் நாடாளுமன்றத்துக்கு வந்தார். ஆனால், அவருடைய தனிச்செயலாளர் இன்னும் வரவில்லை.

சில நிமிடங்களுக்குப் பிறகு பரபரப்புடன் வந்த செயலாளர், “ஐயா என்னை மன்னிக்க வேண்டும். என்னுடைய கடிகாரம் மெதுவாக ஓடுவதனால், வருவதற்குச் சிறிது நேரமாகி விட்டது” என்றார்.

வாஷிங்டன் தம்செயலாளரைப் பார்த்து, “ஒன்று உங்கள் கடிகாரத்தை மாற்றிவிடுங்கள் அல்லது நான் உங்களை மாற்ற வேண்டியிருக்கும்,” என்றார்.

மொழியாக்கம் செய்க.

Asoka was one of the best kings in the world's history. He hated war. His reign was a reign of peace. He became a Buddhist and sent out missionaries all over India. His aim was to get 'Darma' into the hearts of all his people.

இணையான தமிழ்ப்பழமொழியை அறிக.

1. Crying child will get milk.
   அழுத பிள்ளை பால் குடிக்கும்.
2. Make hay while the sun shines.
   காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
3. The childhood shows the man.
   விளையும் பயிர் முளையிலேயே தெரியும்.
4. All is well that ends well.
   முதற்கோணல் முற்றிலும் கோணல்.
5. A Good marksman may miss.
   ஆனைக்கும் அடி சறுக்கும்.

தமிழ்

அறிந்துகொள்க.

முதலான, முதலிய, ஆகிய – இச்சொற்களின் பயன்பாடு

ஒரு தொகுப்பில் உள்ளவற்றைச் சுட்டும்போது முதன்மையானதனை மட்டும் சுட்டி, அதனோடு தொடர்புடைய பிறவற்றைச் சுட்டாதபோது 'முதலான' (அது தொடங்கி) என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

ஒரு தொகுப்பில் உள்ளவற்றில் அனைத்தையும் சுட்டாது, அதனோடு தொடர்புடைய சிலவற்றையோ பலவற்றையோ மட்டும் சுட்டும்போது 'முதலிய' என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

ஒரு தொகுப்பில் உள்ளவற்றில் அதனோடு தொடர்புடைய அனைத்தையும் முழுமையாகச் சுட்டும்போது 'ஆகிய' என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(எ.கா.)

1. நாம் ஒழுக்கத்தில் சிறந்து விளங்க திருக்குறள் முதலான அறநூல்களைக் கற்றல் வேண்டும்.
2. நாம் பண்பாட்டில் சிறந்து விளங்க நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலிய எட்டுத்தொகை நூல்களைக் கற்றல் வேண்டும்.
3. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழைப் போற்றி வளர்த்தல் வேண்டும்.

வளரறி செயல்பாடுகள்

கேட்டல் திறன்	செயல்பாடு – 1

கீழுள்ள உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு வினாக்களுக்கு விடையளிக்க.

பதினான்கு வயது சிறுவன், ஏரிக்கரையில் உள்ள வேப்பமரத்தின் நிழலில் உட்கார்ந்து, நீரில் மீன்குஞ்சு துள்ளிக்குதித்து நீந்திச் செல்வதனையும், அது நீருக்குள் தலைகீழாகச் சென்று மறைவதனையும் காண்கிறான். இக்காட்சியைக் கண்டு உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளைச் சிறுவன் கவிதையாக எழுதுகிறான்.

"ஓடிப்போ ஓடிப்போ கெண்டைச் குஞ்சே – கரை
ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே
தூண்டில் காரன் வரும் நேரமாச்சு – ரொம்பத்
துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குஞ்சே".

இதுவே அச்சிறுவனின் முதற்கவிதை. அச்சிறுவன்தான் இன்றைய தலைமுறையின் 'மக்கள் கவிஞர்' எனப் போற்றப்படும் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் ஆவார்.

பாவேந்தர் பாரதிதாசனிடம் முறையாகப் பாடம் கேட்ட இவர், பாடல் இயற்றும் ஆற்றலைப் படிப்படியாக வளர்த்துக் கொண்டார். 1954ஆம் ஆண்டில் 'படித்த பெண்' என்னும் திரைப்படத்துக்கு முதன்முறையாகப் பாடல் எழுதினார்.

இவர் பாடிய,

"தேனாறு பாயுது செங்கதிரும் சாயுது
ஆனாலும் மக்கள் வயிறு காயுது"

என்னும் பாடல் வரிகளைக் கேட்ட தோழர் ஜீவானந்தம், 'நீ மீண்டும் தோன்றிய பாரதியடா' எனக் கல்யாணசுந்தரத்தைப் பாராட்டினார்.

வினாக்கள் :

1. கல்யாணசுந்தரம் எந்த வயதில் தன் முதற்கவிதையை இயற்றினார்?
2. கல்யாணசுந்தரத்துக்கு வழங்கப்படும் அடைமொழி என்ன?
3. கல்யாணசுந்தரம் யாரிடம் பாடம் கேட்டார்?
4. கல்யாணசுந்தரத்தைத் தோழர் ஜீவானந்தம் எவ்வாறு பாராட்டினார்?
5. கல்யாணசுந்தரத்தின் சொந்த ஊர் எது?

பேசுதல் திறன்	செயல்பாடு – 2

கவிஞர் கண்ணதாசனுடன் நேர்காணல் நிகழ்த்துவது போன்ற உரையாடல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதனை வகுப்பில் பேசுக.

மாணவர்: ஐயா. . . வணக்கம். தங்களை நேரில் கண்டு உரையாடுவதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

கண்ணதாசன்: வணக்கம், தம்பி. எனக்கும் உங்களைப் போன்ற மாணவர்களுடன் பேசுவது என்றால் மகிழ்ச்சிதான். அப்படிப் பேசும்போது எனக்கும் என் பள்ளிக்காலம் நினைவுக்கு வந்துவிடுகிறது.

தமிழ்

மாணவர்: அப்படியா!. . . தங்கள் பள்ளி வாழ்க்கையைப்பற்றிக் கூறுங்கள்.

கண்ணதாசன்: எங்கள் ஊரின் ஒரு சந்திலே ஏட்டுப்பள்ளிக்கூடம் ஒன்று இருந்தது. நாலுவயதில் அப்பள்ளியில்தான் என் தொடக்கக்கல்வி தொடங்கியது. அடுத்து, ஆங்கிலப் பள்ளிக்கூடம் ஒன்றில் படித்தேன். அங்குப் பள்ளிக் கட்டணம் மூன்று ரூபாய். அந்தப்பணத்தைக் கட்டமுடியாமல் பலமுறை வெளியேஅனுப்பப்பட்டேன்; இருப்பினும், ஏழாம்வகுப்புவரை அப்பள்ளியில் படித்தேன்.

மாணவர்: பிறகு. . .

கண்ணதாசன்: பிறகு, அமராவதிப் புதூர் குருகுலத்தில் உள்ள ஓர் உண்டி உறைவிடப்பள்ளியில், ஏழாம் வகுப்புவரை படித்த என்னை, ஐந்தாம் வகுப்பில்தான் சேர்த்துக் கொண்டார்கள். அப்பள்ளியில் என் படிப்புத் தொடர்ந்தது.

மாணவர்: ஐயா!. . . தங்களுக்குப் பாடல் எழுதும் ஆர்வம் எப்போது தோன்றியது என்பதுபற்றிக் கூறுங்கள்.

கண்ணதாசன்: எழுதுவதற்கு முன்னால், வானொலி கேட்பதிலும் நூல்களைப் படிப்பதிலும்தான் எனக்கு ஆர்வம் மிகுதி. வானொலியில் பாடல்களைக் கேட்டுக்கேட்டே, அவற்றைப் பாடவும் நான் கற்றுக்கொண்டேன்; இராகங்களையும் தெரிந்துகொண்டேன்.

மாணவர்: தங்களுக்கு நூல்களைப் படிக்கும் ஆர்வம் மிகுதி எனக் கூறினீர்களே, அதனைப்பற்றி.....

கண்ணதாசன்: ஆமாம், தம்பி! பத்துப் பன்னிரண்டு வயதில் நாவல் படிப்பதில் எனக்குக் கொள்ளை ஆசை. சரத்பாபுவின் கதைகளையும் பங்கிம்பாபுவின் கதைகளையும் விரும்பிப் படிப்பேன்.

மாணவர்: எந்த வயதில் பாடல் எழுதினீர்கள்?

கண்ணதாசன்: பன்னிரண்டு வயதிலேயே எனக்குள் எழுதும் ஆற்றல் இருப்பதனை உணர்ந்தேன்.

மாணவர்: தாங்கள் அந்த வயதில் எழுதிய பாடலும் எழுதிய இடமும் நினைவில் உள்ளதா?

கண்ணதாசன்: எங்கள் ஊர் ஊருணிக்கரையில் உட்கார்ந்துதான் பாடல் எழுதுவேன்.

“வீணா கானம் விடியுமுன் கேட்டது
கர்ணா மிர்தம் காதுக்கு இனிமை
தூக்கம் கலைந்தது துள்ளி எழுந்தேன்
படுக்கையில் இருந்தே பருகினேன் அமுதம்”

இந்த நாலுவரிதான் நினைவில் உள்ளது, தம்பி.

மாணவர்: தமிழ்க்கவிதை உலகில் மாபெரும் மன்னர் நீங்கள்! தங்களைப்போல் எங்களுக்கும் பாடல் எழுத ஆவல். வழிகாட்டுவீர்களா?

கண்ணதாசன்: தம்பி. . . இன்று நம்மிடையே நூல்களைப் படிக்கும் பழக்கம் குறைந்துகொண்டே வருகிறது. நேரத்தை வீணாக்காமல் உங்களால் முடிந்தவரை நல்ல நல்ல நூல்களைப் படியுங்கள். வெற்றி பெறுவதற்கான முதற்படி அதுதான்; அடுத்து, உங்களைச் சுற்றி நிகழ்வதனையும் உற்றுநோக்குங்கள்; பிறர் படும்

துன்பமும் துயரமும் உங்களுக்குநேர்ந்ததாக உணருங்கள்; எழுதுங்கள். உங்கள் பெயர் தமிழிலக்கிய வரலாற்றில் இடம்பெறும்.

மாணவர்: எனக்கென நேரம் ஒதுக்கி மனம் திறந்து பேசினீர்கள். மிக்க நன்றி, ஐயா!

கண்ணதாசன்: மிக்க மகிழ்ச்சி.

படித்தல் திறன் – வாய்விட்டுப் படித்தல்	செயல்பாடு – 3

இவ்வுலகம் இனியது; இதிலுள்ள வான் இனிமையுடைத்து;
காற்றும் இனிது. தீ இனிது. நிலம் இனிது.

ஞாயிறு நன்று. திங்களும் நன்று. வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.
மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.

கடல் இனிது. மலை இனிது. காடு நன்று. ஆறுகள் இனியன.
உலோகமும் மரமும் செடியும் கொடியும் மலரும் காயும் கனியும் இனியன.

மனிதர் மிகவும் இனியர். ஆண் நன்று. பெண் இனிது. குழந்தை இன்பம்.
இளமை இனிது. முதுமை நன்று. உயிர் நன்று.

உடல் நன்று. புலன்கள் மிகவும் இனியன. உயிர் சுவையுடையது.
மனம் தேன். அறிவு தேன். உணர்வு அமுதம். உணர்வே அமுதம். உணர்வு தெய்வம்.

மனம் தெய்வம். சித்தம் தெய்வம். உயிர் தெய்வம்.
காடு, மலை, அருவி, ஆறு, கடல், நிலம், நீர், காற்று, தீ, வான், ஞாயிறு, திங்கள்,
வானத்துச் சுடர்கள் – எல்லாம் தெய்வங்கள்.

– பாரதியார், வசனகவிதை

அகர வரிசைப்படுத்துதல்	செயல்பாடு – 4

கீழ்க்காணும் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

தெப்பம், பைந்தமிழ், திருவிழா, புதுமனை, தையல், பொதுவுடைமை, போராட்டம், தூய்மை, பாராட்டு, துணிவு.

த – ________ , ________ , ________ , ________ , ________

ப – ________ , ________ , ________ , ________ , ________

சொல்வதனை எழுதுதல்	செயல்பாடு – 5

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

உலகுக்கு உயிர்ப்பாற்றலை வழங்கும் ஞாயிறு ஒருபோதும் மறைவதில்லை. அதனைப் போன்றே இலக்கிய வளம்கொழிக்கும் மொழிகளிலும், உயிர்த்துடிப்புள்ள கவிஞர்கள் இடையறாது தோன்றுகிறார்கள். அவர்கள், அம்மொழிகளின் விழிகளுக்கு ஒளியூட்டி வருகிறார்கள். அவர்கள் வாழும் காலச் சூழலுக்கேற்பத் தத்தம் கவிதைகளைப் படைத்துக் காலத்தைவென்று நிலைத்து நிற்கின்றார்கள்.

தமிழ்

தேர்ந்தெடுத்து எழுதுதல்	செயல்பாடு – 6

பாடலுக்குரிய தலைப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(வருத்தம், எழுத்துகள், கடிகாரம், மாசு)

அ. பலருக்கு ஓய்வு நேரம் காட்டுகிறது தான் ஓய்வெடுக்காமல்.	இ. கழிவு தின்னும் மீன்கள் செத்து மிதந்தன கடலில் கழிவுநீர்.
ஆ. காகிதத் தொட்டிலில் தூங்கும் குழந்தைகள்.	ஈ. பூ. . . . . . மலர மலர வாடிப் போனது பூக்காரி முகம்.

மொழித்திறன் பயிற்சி	செயல்பாடு – 7

கீழ்க்காணும் உரைப்பத்தியில் கோடிட்ட இடங்களில் உரிய கூட்டப்பெயர்களை எழுதி நிரப்புக.

(எ.கா.) மரங்கள் அடர்ந்த சோலையில் மயில் அகவ குயில் கூவியது.

பள்ளி விடுமுறையில் தன் அத்தை வீட்டுக்கு வந்த எழிலி, வயல்வெளியைச் சுற்றிப் பார்க்கச் சென்றாள். அங்கு ஆட்டு __________ கண்டாள். வயலின் ஒருபுறத்தில் நெல் __________ காணப்பட்டது. அதனைப் பார்த்துக்கொண்டே சென்ற எழிலி அருகில் இருந்த, தென்னந் __________ க்குள் நுழைந்தாள். மரத்தில் தேங்காய் __________ யாகத் தொங்குவதனைக் கண்டாள். வானில் பறவைக் __________ பறந்து செல்வதனைக் கண்ட எழிலி மிகவும் மகிழ்ந்தாள். அங்கு மரநிழலில் உட்கார்ந்திருந்த ஒரு சிறுமி மலர்களையெல்லாம் கோத்து __________ யாக்குவதனைக் கண்டாள்.

(தோப்பு, கூட்டம், மாலை, மந்தை, குவியல், குலைகுலை)

கண்டறிதல்	செயல்பாடு – 8

கட்டங்களில் மறைந்துள்ள இக்காலக்கவிஞர்களின் பெயர்களை வட்டமிடுக.

பா	அ	ப்	து	ல்	ர	கு	மா	ன்
ர	னி	ஞா	ப்	லா	கு	ன்	இ	பு
தி	ர	பா	க	பா	டா	கா	ம்	மு
தா	ர	சு	ப்	ண்	ரி	மீ	ரா	டி
ச	ம	ணி	கொ	ம்	ண	ஆ	ஜா	ய
ன்	ட்	கை	மு	மே	த்	தா	ரா	ர
டு	ங்	து	த்	மு	ர	வை	ச	ச
க	லி	வா	த	மி	ழ	ன்	ப	ன்

பிழை நீக்கி எழுதுதல்	செயல்பாடு – 9

கீழ்க்காணும் தொடரில் வண்ண எழுத்துகளிலுள்ள சொற்கள் பிழையாக உள்ளன. அதனைத் திருத்தி எழுதுக.

(எ.கா.) அனைவரும் சிறப்பு வகுப்புக்குத் தவறாமல் வருகை புரிதல் வேண்டும்.

திருத்தம் : அனைவரும் சிறப்பு வகுப்புக்குத் தவிராமல் வருகை புரிதல் வேண்டும்.

1. மு. வரதராசனார் தாய்மொழிமீது மிகுந்த அக்கரை கொண்டவர்.
2. களைப்புத் தீர இங்குச் சிறிது நேரம் இளைப்பாரிச் செல்வோமா ?
3. இந்த வினாவுக்கு உரிய விடையை நினைவுகூற முடியுமா ?
4. கல்விக்கு எள்ளை இல்லை.
5. குமணவள்ளல், புலவர் பெருஞ்சித்திரனாரின் வறியநிலையைக் கண்டு மனம் இறங்கினார்.

அறிந்து கொள்வோம்	செயல்பாடு – 10

நாலு வேதம் ஆம் நவைஇல் ஆர்கலி
வேலி அன்னவன் மலையின்மேல் உளான்
சூலிதன் அருள் துறையின் முற்றினான்
வாலி என்று உளான் வரம்பில் ஆற்றலான்.

– கம்பர், கம்பராமாயணம்.

மேற்கண்ட பாடலில் இடம்பெற்றுள்ள நாலு வேதம் என்னும் சொல்லில் உள்ள நாலு என்பது நான்கு என்னும் எண்ணுப்பெயரின் விகாரமாகும். இவைமட்டுமன்றி நாலுமுகத்தான், நாலு திசை, நாலு புரவி, நாலு வாசல், நாலு கலை, நாலு நாள், நாலுபேரை, நாலு தெரு, நாலு வகுப்பு எனத் திருமூலர், இளங்கோவடிகள், கம்பர், ஔவையார், பட்டினத்தார், பாரதியார், பாரதிதாசன் முதலியோர் பாடல்களில் நாலு என்னும் சொல்லே எடுத்தாளப்பட்டுள்ளதனைக் காணலாம். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதிய கால்டுவெல், நான்கு என்பதன் அடிப்படையே நாலு எனக் குறித்துள்ளார்.

பயிற்சி

அ) கீழ்க்காணும் சொற்றொடர்களில் நாலு என்னும் சொல் அடைமொழியாக வரும்படி எழுதுக.

(எ.கா.) கடைக்குச் சென்ற வளர்மதி, நாலுகிலோ அரிசி வேண்டுமெனக் கேட்டாள்.

1. திருமங்கையாழ்வார் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என ________ கவியிலும் சிறந்து விளங்கினார்.
2. நான்கு மறை என்பதனைக் கம்பர் ________ வேதம் எனக் குறிப்பிடுகின்றார்.
3. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என ________ திசை உள்ளன.
4. வேலைக்குச் செல்வதற்கு விரும்பாத மகனைப் பார்த்து, அவன் தாய் ________ காசு உழைத்துப் பெற்றால்தான் அனைவரும் உன்னை மதிப்பர் எனக் கூறினாள்.
5. யானை ________ கால் விலங்குகளுள் ஒன்று.

ஆ) பாடநூலுள் நாலு என்னும் சொல் எங்கெங்கு இடம்பெற்றுள்ளது எனக் கண்டறிந்து எழுதுக.

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________

கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

அ) பொருந்தாத இணையைக் கண்டறிக. 1 × 1 = 1

1. சிறுபஞ்சமூலம் – காரியாசான்
2. ஞானரதம் – பாரதியார்
3. எழுத்து – சி. சு. செல்லப்பா
4. குயில்பாட்டு – கண்ணதாசன்

ஆ) பொருத்துக. 5 × 1 = 5

1. "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
   இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே" – கவிமணி
2. "சபைகளிலே தமிழெழுந்து முழங்கவேண்டும்" – நாமக்கல் கவிஞர்
3. "பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்" – பாரதியார்
4. "எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்" – பாரதிதாசன்
5. "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
   தமிழ்மொழியிற் பெயர்த்தல்வேண்டும்" – கண்ணதாசன்

இ) தொடர்களில் உள்ள ஆகுபெயர்களின் வகைகளைக் கண்டறிக. 4 × 1 = 4

1. ஐந்துக்கும் பத்துக்கும் வேலை செய்ய ஆள் இல்லை.
2. உண்பது நாழி; உடுப்பவை இரண்டு.
3. எட்டு முழம் வாங்கி வா.
4. கிலோ என்ன விலை ?

ஒய்வும் பயனும்!

ஒய்வாக இருக்கையில் தம்பி – நீ
ஓவியம் வரைந்து பழகு!
தூய்மையோ டமைதி சேரும்! – நன்கு
தோன்றிடும் உள்ள அழகு!

பாக்களும் இயற்றிப் பழகு – நல்ல
பாடலைப் பாடி மகிழ்வாய்!
தாக்குறும் துன்பம் யாவும் – இசைத்
தமிழினில் மாய்ந்து போகும்!

* அறிவியல் ஆய்வு செய்வாய் – நீ
அன்றாடச் செய்தி படிப்பாய்!
செறிவுறும் உன்றன் அறிவு – உளச்
செழுமையும் வலிவும் பெறுவாய்!

மருத்துவ நூல்கள் கற்பாய் – உடன்
மனநூலும் தேர்ந்து கற்பாய்!
திருத்தமெய்ந் நூல்கள் அறிவாய் – வருந்
தீமையும் பொய்யும் களைவாய்! *

– பெருஞ்சித்திரனார்

பொருள்

மாணவர்களே! ஓய்வாக இருக்கும் நேரத்தில் ஓவியம் வரையக் கற்றுக்கொண்டால் தூய எண்ணங்களும் அமைதியும் சேர்ந்து உள்ளத்தின் அழகு வெளிப்பட, அது காரணமாக அமையும்.

தமிழில் பாடல்கள் எழுதவும் பாடவும் பழகிக்கொள்ளுங்கள்; இசைத்தமிழின் இனிமையால் வாழ்வின் துன்பங்கள் தொலைந்துபோகும்.

அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்ளுங்கள்; அன்றாட நிகழ்வுகளைச் செய்தித்தாள் வாயிலாக அறிந்துகொள்ளுங்கள்; உலகநிகழ்வுகளை அறிவதன்மூலம் அறிவுத்திறன் மேம்படும்; உள்ளம் வளமும் வலிமையும் பெற்றுச் சிறக்கும்; மருத்துவ நூல்களையும் மனநல நூல்களையும் படித்துத் தெரிந்துகொள்ளுங்கள்; அவை உடலையும், உள்ளத்தையும் பாதுகாக்கத் துணைபுரியும்.

நீங்கள் வாழ்க்கைக்கு உதவும் தத்துவ நூல்களைக் கற்றால், அதன்வழித் தீமையையும் பொய்ம்மையையும் விடுத்து நல்வாழ்வு வாழலாம்.

எனவே, ஏட்டுக்கல்வியுடன் கலையறிவும் தொழிற்கல்வியும் அறிவியற் சிந்தனையும் இருந்தால், நீங்கள் வாழ்வில் வெற்றிபெறலாம்; ஆதலால், ஓய்வுநேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிட்டு வாழ்வில் வளம்பெறுங்கள்.

ஆசிரியர் குறிப்பு : பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை.மாணிக்கம். இவரது ஊர் சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம். இவர்தம் பெற்றோர் துரைசாமி, குஞ்சம்மாள் ஆவர். 10.03.1933அன்று பிறந்த இவர், 11.06.1995ஆம் நாள் மறைந்தார்.

கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்கள்மூலம் உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்க இவர் பாடுபட்டார்.

நூற்குறிப்பு : இப்பாடல், பள்ளிப்பறவைகள் என்னும் குழந்தைப்பாடல் தொகுப்பின் இரண்டாம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்நூலிலுள்ள பாடல்கள் பலவும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்களில் வெளிவந்தவை. இந்நூல் குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழிமாலை என முப்பிரிவாக அமைந்துள்ளது.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இசையால் ______________ மறைந்து போகும்.
2. உலக நிகழ்வுகளை அறிந்தால் ______________ மேம்படும்.
3. ஏட்டுக் கல்வியறிவுடன் ______________ கல்வியறிவும் தேவை.
4. பள்ளிப்பறவைகள் என்னும் நூல் ______________ பிரிவாக அமைந்துள்ளது.

ஆ) குறுவினாக்கள்

1. பெருஞ்சித்திரனார் குறிப்பு எழுதுக.
2. உள்ளத்தின் அழகு எப்போது வெளிப்படும் ?
3. கற்பனைத்திறன் வளர என்ன செய்யவேண்டும் ?
4. அறிவுத்திறன் மேம்படும் வழி யாது ?
5. எப்போது நல்வாழ்வு வாழலாம் எனப் பெருஞ்சித்திரனார் கூறுகிறார் ?

இ) சிறுவினாக்கள்

1. ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்கும் வழிகளாகப் பெருஞ்சித்திரனார் கூறுவன யாவை ?
2. வாழ்வில் வெற்றிபெறுவதற்கான வழிகள் யாவை ?

ஈ) நெடுவினா

ஓய்வும் பயனும் பற்றிப் பெருஞ்சித்திரனாரின் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

அறிந்துகொள்க.

எண்ணுப் பெயர்களுக்குரிய எண்ணடைகள்

எண்ணுப் பெயர்கள்	எண்ணடைகள்	எடுத்துக்காட்டு	பயிற்சி
ஒன்று	ஒரு, ஓர்	ஒருவர், ஒரு மரம், ஓர் உயிர்	ஒன்று + எழுத்து =
இரண்டு	இரு, ஈர்	இருவர், இருவகை, ஈரெழுத்து	இரண்டு + ஆண்டு =
மூன்று	மூ, மு	மூவர், முத்தமிழ்	மூன்று + கனி =
நான்கு	நால், நாலு	நால்வர், நாலுநாள்	நான்கு + வரி =
ஐந்து	ஐ	ஐவர், ஐம்பெருங்காப்பியம்	ஐந்து + வகை =
ஆறு	அறு	அறுவர், அறுபடை	ஆறு + கால் =
ஏழு	எழு, ஏழ்	எழுவர், ஏழிசை	ஏழு + ஏழு =
எட்டு	எண்	எண்மர், எண்டிசை	எட்டு + பேராயம் =
பத்து	பதின், பன்	பதின்மர், பன்னிருவர்	பத்து + ஐந்து =

தமிழ்

தமிழ்

திருவிளையாடற் புராணம்

– பரஞ்சோதி முனிவர்

திருவாலவாய்க் காண்டம்

(தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம்)

முன்கதைச் சுருக்கம்

எந்நாட்டவர்க்கும் பொதுவாக இருப்பதனால், தென்னாட்டில் தன்னுடைய அருள் விளையாடலை நிகழ்த்தியவர் தென்னாடுடைய சிவபெருமான். தமிழ்ப்புலவர்கள் இறைவனுக்கும் தமிழுக்கும் உள்ள பிணைப்பை உறுதிப்படுத்தவே திருவிளையாடல் புராணம் முதலிய புராணங்களை இயற்றியதாகக் கொள்ளலாம்.

புலவர், தம்புலமைத் திறத்தை அறிய இறைவனை வேண்டிச் சங்கப்பலகையைப் பெற்றனர். சங்கப்புலவர் நாற்பத்தெண்மரின் கருத்துப்போரைத் தீர்க்க இறைவனே தலைமைப்புலவராய் எழுந்தருளினார். அவரையும் சேர்த்துச் சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர் ஆயினர். இச்சமயத்தில் வங்கிய சேகரபாண்டியனின் மகன் வங்கிய சூடாமணிபாண்டியன் மதுரையின் அரசாட்சிப் பொறுப்பை ஏற்றான். அவன், இறைவனுக்குச் சண்பகமாலை சாத்தி வழிபடக்கருதிச் சண்பக நந்தவனத்தை ஏற்படுத்தினான்.

இதனால், சூடாமணி பாண்டியனுக்குச் சண்பகப் பாண்டியன் என்னும் பெயர் வழங்கலாயிற்று. அவன் ஒரு சமயம், தன் காதல் மனைவியுடன் சண்பகவனத்துக்குச் சென்றான். அவ்வேளையில் மெல்லெனப் புகுந்த இளந்தென்றல் புதுமணத்தை வீசியது. அப்படியொரு மணத்தை இதுவரை நுகர்ந்திராத பாண்டியனின் மனத்தில் ஓர் ஐயம் எழுந்தது. அது தீர்ந்ததா என்பதனை விளக்குவதே நம் பாடப்பகுதியாகும்.

இறைவனிடம் தருமி வேண்டல்

1. ஐய யாவையும் அறிதி யேகொலாம்
வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்(து)
உய்ய வோர்கவி யுரைத்தெ னக்கருள்
செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினான்.

பொருள் : இறைவனிடம் தருமி, ‘எல்லாவற்றையும் அறிந்த இறைவனே! நீங்கள், பாண்டியன் ஐயத்தை நீக்கும் கருத்தைக் கவியாகப் பாடியளித்து யான் பிழைக்க அருள்புரிய வேண்டும்‘ எனப் பணிந்து வேண்டினான்.

சொற்பொருள் : வையை நாடவன் – பாண்டியன்; உய்ய – பிழைக்க; இரந்து செப்பினான் – பணிந்து வேண்டினான்.

இலக்கணக்குறிப்பு: உரைத்து, இரந்து – வினையெச்சங்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : இரந்து = இர + த் (ந்) + த் + உ. இர – பகுதி; த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

இறைவன் தருமிக்குப் பாடல் அருளல்

2. தென்ன வன்குல தெய்வம் ஆகிய
மன்னர் 'கொங்குதேர் வாழ்க்கை'யின்தமிழ்
சொன்ன லம்பெறச் சொல்லி நல்கினார்
இன்னல் தீர்ந்தவன் இறைஞ்சி வாங்கினான்.

பொருள் : பாண்டியர் குலத் தெய்வமாகிய சொக்கநாதர் கொங்குதேர் வாழ்க்கை எனத் தொடங்கும் பாடலைச் சொல்லினிமை தோன்ற இயற்றித் தருமிக்கு வழங்கினார். தருமி, தன்மனத்துயர் நீங்கி, அதனைப் பணிவுடன் பெற்றுச் சென்றான்.

சொற்பொருள் : தென்னவன் குலதெய்வம் – சொக்கநாதன் (அ) சுந்தரபாண்டியன்; இன்னல் – துன்பம்; நல்கினார் – அளித்தார்; இறைஞ்சி – பணிந்து.

இலக்கணக்குறிப்பு : சொல்லி, இறைஞ்சி – வினையெச்சங்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : நல்கினார் = நல்கு + இன் + ஆர். நல்கு – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பாண்டியன் களிகூர்தல்

3. அளக்கில் கேள்வியார் அரசன் முன்புபோய்
விளக்கி அக்கவி விளம்பி னார்கடன்
உளக்க ருத்துநேர் ஒத்த லால்சிரந்
துளக்கி மீனவன் மகிழ்ச்சி தூங்கினான்.

பொருள் : அளவில்லாத நூலறிவுடைய சங்கப் புலவர்கள் பாண்டியனிடம் சென்று, அப்பாடலின் பொருளை விளக்கினார்கள். மீன்கொடியை உடைய பாண்டியனின் கருத்துக்கேற்றவாறு அவ்விளக்கம் பொருந்தி வந்தமையால், அவன் மனமகிழ்ந்தான்.

சொற்பொருள் : அளக்கில் கேள்வியார் – அளவற்ற நூலறிவினர்; சிரம் துளக்கி – தலையசைத்து; மீனவன்– மீன்கொடியை உடைய பாண்டியன்.

இலக்கணக்குறிப்பு: விளக்கி, சிறந்து – வினையெச்சங்கள்; மகிழ்ச்சி – தொழிற்பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம் : விளக்கி = விளக்கு + இ. விளக்கு – பகுதி; இ – வினையெச்ச விகுதி; தூங்கினான் = தூங்கு+இன்+ஆன். தூங்கு – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

தமிழ்

நக்கீரன் தருமியை விலக்குதல்

4. வேந்தன் ஏவலால் விபுதர் தம்மொடும்
போந்து மீண்டவைப் புறம்பு தூங்கிய
ஆய்ந்த பொற்கிழி அறுக்கும் நம்பியை
நேர்ந்து கீரனில் லெனவி லக்கினான். *

பொருள் : பாண்டியனின் ஏவலால், புலவரோடும் திரும்பிச்சென்று, கழகத்தின் வெளியில் தொங்கிய சிறந்த பொன் முடிப்பை அறுத்தெடுக்கும் தருமியைக் கீரன் எதிர்ப்பட்டு 'நில்' எனத் தடுத்தான்.

சொற்பொருள் : விபுதர் – புலவர்; தூங்கிய – தொங்கிய ; பொற்கிழி – பொன்முடிப்பு; நம்பி – தருமி; புறம்பு – வெளியில்.

இலக்கணக் குறிப்பு : ஆய்ந்த பொற்கிழி – பெயரெச்சம்.

தருமி இறைவனிடம் முறையிடுதல்

5. செய்யுள் கொண்டுபோய்த் திருமுன் வைத்துளப்
பையுள் கொண்டஅப் பனவன் என்னைநீ
மையுண் கண்டஇவ் வழுவு பாடலைக்
கையுள் நல்கினாய் கதியி லேற்கெனா.

பொருள் : தருமி, இறைவன் அளித்த பாடலை அவன் திருமுன் வைத்து, 'நீலநிறக் கழுத்தை உடைய இறைவனே! குற்றமுள்ள பாடலை நீ எனக்கு அளித்தது ஏன் ?' என மனவருத்தத்துடன் கேட்டான்.

சொற்பொருள் : பையுள் – வருத்தம்; பனவன் – அந்தணன்; கண்டம் – கழுத்து; வழுவு பாடல் – குற்றமுள்ள பாடல்.

இறையனாரும் நக்கீரரும்

6. ஆரவை குறுகி நேர்நின் றங்கிருந் தவரை நோக்கி
யாரைநம் கவிக்குக் குற்றம் இயம்பினார் என்னா முன்னம்
கீரனஞ் சாது நானே கிளத்தினேன் என்றான் நின்ற
சீரணி புலவன் குற்றம் யாதெனத் தேராக் கீரன்.

பொருள் : புலவர்கள் நிறைந்த அவையில் நுழைந்த இறைவன், அவையினரை நோக்கி, "என் பாடலில் குற்றம் கூறியவர் யார்"? எனக் கேட்டார். அவ்வாறு அவர் கேட்டு முடிப்பதற்குள், "நானே குற்றம் கூறினேன்" எனப் புகழ்வாய்ந்த நக்கீரன், அஞ்சாது எழுந்து கூறினான். குற்றம் யாதென இறைவன் கேட்டார்.

சொற்பொருள்: ஆர்அவை – (புலவர்கள்) நிறைந்த அவை; கிளத்தினேன் – சொன்னேன்; சீரணி – புகழ் வாய்ந்த.

இலக்கணக்குறிப்பு : நோக்கி – வினையெச்சம்; கிளத்தினேன் – தன்மை ஒருமை வினைமுற்று; தேராக் கீரன் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

7. சொற்குற்றம் இன்று வேறு பொருட்குற்றம் என்றான் தூய
பொற்குற்ற வேணி அண்ணல் பொருட்குற்றம் என்னை? என்றான்
தற்குற்றம் வருவது ஓரான் புனைமலர்ச் சார்பால் அன்றி
அற்குற்ற குழற்கு நாற்றம் இல்லையே என்றான் ஐயன்.

பொருள் : பாடலில், "சொல் குற்றம் இல்லை; பொருள் குற்றம் உள்ளது' என்றான் நக்கீரன். பொன்னிறத்தன்ன சடையை உடைய இறைவன், "பொருள் குற்றம் என்ன?" எனக் கேட்டார். அதற்கு, "மலர்கள் முதலியவற்றால் மணம் சாருமேயன்றி, இருளையொத்த கூந்தலுக்கு இயற்கையில் மணம் இல்லை" என்றான், நக்கீரன்.

சொற்பொருள் : வேணி – செஞ்சடை; ஓரான் – உணரான்; அற்குற்ற (அல்கு+உற்ற) – இருளையொத்த; நாற்றம் – நறுமணம்; குழல் – கூந்தல்; அல்கு – இரவு.

இலக்கணக்குறிப்பு : புனைமலர் – வினைத்தொகை.

8. பரவிநீ வழிபட்டு ஏத்தும் பரஞ்சுடர் திருக்கா ளத்தி
அரவுநீர்ச் சடையார் பாகத்து அமர்ந்தஞா னப்பூங் கோதை
இரவினீர்ங் குழலும் அற்றோ எனஅஃதும் அற்றே என்னா
வெருவிலான் சலமே முற்றச் சாதித்தான் விளைவு நோக்கான்.

பொருள் : நக்கீரனை நோக்கி, 'நீ வழிபடும் பரஞ்சோதியாகிய இறைவன், திருக்காளத்தியில் கோவில் கொண்டவன்; பாம்பையும் கங்கையையும் அணிந்த சடையை உடையவன். அவனது இடப்பாகத்தில் எழுந்தருளிய உமையம்மையின் குளிர்ந்த கருங்கூந்தலுக்கும் இதே தன்மை தானோ?' என இறைவன் வினவினார். அதற்கு நக்கீரன், எதிர்வருவதனை எண்ணிச் சிறிதும் அஞ்சாமல், 'அக்கூந்தலும் அத்தன்மையுடையதே' எனப் பதிலிறுத்தான்.

சொற்பொருள் : ஏத்தும் – வணங்கும்; அரவுநீர்ச் சடையார் – சிவபெருமான்; ஞானப்பூங்கோதை – உமையம்மை; வெருவிலான் – அச்சமற்ற நக்கீரன்; சலம் – மன உறுதி.

தமிழ்

நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே

9. கற்றைவார் சடையான் நெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவான் இன்னும் அஞ்சான் உம்பரார் பதிபோல் ஆகம்
முற்றுநீர் கண்ணா னாலும் மொழிந்தநும் பாடல் குற்றம்
குற்றமே யென்றான் தன்பால் ஆகிய குற்றம் தேரான்.

பொருள் : அடர்ந்த நீண்ட சடையை உடைய இறைவன், நெற்றிக்கண்ணைச் சிறிதளவு காட்ட, அதனால் துன்புற்றபோதும் அஞ்சாதவனாய், ‘இந்திரன்போல் உடல் முழுவதும் கண்களை உடையவராயினும், உமது பாடல் குற்றமுடையதே’ என்று கூறினான், நக்கீரன்.

சொற்பொருள் : கற்றைவார் சடையான் – சிவபெருமான்; உம்பரார் பதி – தேவர்தலைவன் (இந்திரன்).

இலக்கணக்குறிப்பு : பற்றுவான், அஞ்சான் – வினையாலணையும் பெயர்கள்; குற்றம் – தொழிற்பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம் : பற்றுவான் = பற்று + வ் + ஆன். பற்று – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; தேரான் =தேர் + ஆ + ஆன். தேர் – பகுதி; ஆ – எதிர்மறை இடைநிலை (மறைந்தது); ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

நெற்றிக்கண் வெப்பத்தால் நக்கீரன் வருந்தலும் இறைவன் மறைதலும்

10. தேய்ந்த நாண்மதிக் கண்ணியால் நுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையில் பொறாதுபொற் பங்கயத் தடத்துள்
ஆய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தனன் அவனைக்
காய்ந்த நாவலன் இம்மெனத் திருவுருக் கரந்தான். *

பொருள் : பிறை நிலவைத் தலையில் சூடியவன் இறைவன். அவனது, நெற்றிக்கண்ணில் இருந்து வந்த தீப்பொறியின் வெப்பம் தாளாது நக்கீரன் பொற்றாமரைக் குளத்தில் மூழ்கினான். புலவர் வடிவில் வந்த சோமசுந்தரக் கடவுள் விரைந்து தனது திருவுருவத்தை மறைத்து அருளினார்.

சொற்பொருள் : நுதல்விழி – நெற்றிக்கண்; பொற்பங்கயத்தடம் – பொற்றாமரைக் குளம்; நாவலன் – புலவர்; கரந்தான் – மறைந்தான்.

இலக்கணக்குறிப்பு : தேய்ந்த, பாய்ந்த, ஆய்ந்த, காய்ந்த – பெயரெச்சங்கள்; விழுந்து – வினையெச்சம்; செந்தீ, வெம்மை – பண்புத்தொகைகள்.

பகுபத உறுப்பிலக்கணம் : தேய்ந்த = தேய் + த் (ந்) + த் + அ. தேய் – பகுதி; த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

ஆசிரியர் குறிப்பு : பரஞ்சோதி முனிவர் நாகை மாவட்டத்திலுள்ள திருமறைக்காடு (வேதாரண்யம்) என்னும் ஊரில் பிறந்தவர். தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றவர். இவரின் தந்தையார் மீனாட்சிசுந்தர தேசிகர் ஆவார்.

பரஞ்சோதி முனிவர் துறவியாகிச் சிவாலயந்தோறும் சென்று இறைவனை வழிபட்டு வந்தார். அவ்வாறு மதுரை நகரை அடைந்து மீனாட்சிஅம்மனையும் சோமசுந்தரக் கடவுளையும் வணங்கியவர், அந்நகரிலேயே சிலகாலம் தங்கியிருந்தார்.

அந்நகரத்தார் அவரைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, திருவிளையாடற் புராணத்தை இயற்றினார். அந்நூலைச் சிவபெருமான் திருக்கோவிலின் எதிரே உள்ள அறுகால் பீடத்தில் இருந்து வடமொழி, தென்மொழிப்புலவர் யாவரும் போற்ற அரங்கேற்றினார்.

இவர் திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

நூற்குறிப்பு : திருவிளையாடற் புராணம், மதுரைக்காண்டம் (பதினெட்டுப்படலம்), கூடற்காண்டம் (முப்பதுபடலம்), திருவாலவாய்க்காண்டம் (பதினாறுபடலம்) என்னும் முப்பெருங்காண்டத்தையும் படலம் என்னும் அறுபத்து நான்கு உட்பிரிவையும் உடையது. இந்நூலில், விருத்தப்பாக்கள் மூவாயிரத்து முந்நூற்று அறுபத்து மூன்று உள்ளன.

இந்நூல், இறைவனின் அறுபத்து நான்கு திருவிளையாடலை விளக்கி எழுந்த நூல்களுள் விரிவானதும் சிறப்பானதும் ஆகும். தொடைநயமும் பத்திச்சுவையும் மிக்க இந்நூலுக்கு ந.மு. வேங்கடசாமி உரையெழுதியுள்ளார்.

இறைவன் தருமிக்கு அருளிய பாடல்

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீஅறியும் பூவே.

– குறுந்தொகை, 2

தமிழ்

தமிழ்

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. திருவிளையாடற் புராணத்தை இயற்றியவர் __________.
2. திருவிளையாடற்புராணத்தில் காண்டங்கள் __________ உள்ளன.
3. இறைவனிடம் பாடலைப்பெற்றுச் சென்றவன் __________.
4. பொற்கிழி பெறச்சென்ற தருமியைத் தடுத்தவன் __________.
5. உடல் முழுவதும் கண்களையுடையவன் __________.

2. பொருத்துக.

மதுரைக்காண்டம்	–	பதினாறு படலம்
கூடல்காண்டம்	–	பதினெட்டுப் படலம்
திருவாலவாய்க்காண்டம்	–	முப்பது படலம்

ஆ) குறுவினாக்கள்

1. தருமி, இறைவனிடம் வேண்டியதும் இறைவன் தருமிக்கு வழங்கியதும் யாது?
2. தருமியின் பாடலைக்கேட்ட பாண்டியனின் மனநிலையைக் கூறுக.
3. தருமி, பொற்கிழி பெறச்சென்றபோது நிகழ்ந்தது யாது ?
4. இறைவனிடம் தருமி வருத்தத்துடன் வினவியது யாது ?
5. அரசவைக்கு வந்த இறைவன் வினவியது யாது ?

இ) சிறுவினாக்கள்

1. திருவிளையாடற் புராணம் – குறிப்பு எழுதுக.
2. பரஞ்சோதி முனிவர் – குறிப்பு எழுதுக.
3. இறைவனுக்கும் நக்கீரனுக்கும் இடையே நடந்த உரையாடலை விவரிக்க.

ஈ) நெடுவினா

தருமிக்குப் பொற்கிழி அளித்த படலக் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

கடற்பயணம்

தமிழ்நாட்டு வாணிக வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்தது. பழங்காலந்தொட்டே தமிழர் உள்நாட்டு, அயல்நாட்டு வாணிகத்தில் சிறப்புற்றிருந்தனர். உள்நாட்டு வாணிகத்தைவிட அயல்நாட்டு வாணிகத்திலேயே வருவாய் மிகுதி. அயல்நாட்டு வாணிகத்திலும் தரைவழியாகச் செய்யும் வாணிகத்தைவிட, நீர் வழியாகச் செய்யும் வாணிகம் பெரும் பொருளைத் தரும். எனவே, அந்நாளில் கடல் வாணிகம் மிகவும் சிறந்திருந்தது.

தமிழரின் கடற்பயணம்

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்னும் ஔவைமொழியும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் கணியன் பூங்குன்றன் மொழியும், தமிழர்களின் உலகளாவிய சிந்தனைக்கும் பன்னாட்டுத் தொடர்புக்கும் சான்றுகளாம்.

பழங்காலத்தில், தமிழர் பிற நாடுகளுக்குக் கடற்பயணம் மேற்கொண்ட செய்தி முந்நீர் வழக்கம் எனத் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டுள்ளது. பழந்தமிழர் பொருளீட்டுதலைத் தம் கடமையாகக் கருதினர். இதனைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பொருள்வயிற் பிரிவு விளக்குகிறது. இப்பிரிவு காலில் (தரைவழிப்பிரிதல்) பிரிவு, கலத்தில் (நீர்வழிப் பிரிதல்) பிரிவு என இருவகைப்படும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் மேற்கே கிரீசு, உரோம், எகிப்துமுதல் கிழக்கே சீனம்வரையிலும் கடல்வழி வாணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். எகிப்து, பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா, சீனம் ஆகிய நாடுகள் தமிழரின் பொருள்களை விரும்பிப் பெற்றன. ஏலமும் இலவங்கமும் இஞ்சியும் மிளகும் மேற்காசிய நாடுகளில் நல்ல விலைக்கு விற்கப்பட்டன. தமிழ்நாட்டில், பிற நாட்டார் உள்ளத்தைக் கவரும் பல பொருள்கள் மிகுதியாகக் கிடைத்தன. அவற்றுள், முத்தும் பவளமும் ஆரமும் அகிலும் வெண்துகிலும் சங்கும் குறிப்பிடத்தக்கன. பழந்தமிழர், கிரேக்கரையும் உரோமானியரையும் யவனர் என அழைத்தனர்.

கப்பல்

பழங்காலத்திலேயே தமிழகத்தில் பலவகையான கப்பல்கள் கட்டப்பட்டன. ஒவ்வொரு பெரிய கப்பலும் மதில்சூழ்ந்த கோட்டைபோலத் தோன்றுமாம். அஃதாவது, நான்கு பக்கமும் நீர் நிரம்பிய கழனிகள். அதன் நடுவில் தனியாக மதிலோடு கூடிய மருதநில அரசனது கோட்டை. அக்கோட்டையின் தோற்றமானது, நடுக்கடலில் செல்லும் கப்பலுக்கு உவமையாகப் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.

கடலும் மரக்கலங்களும்

ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி என்பவை கடலைக் குறிக்கும் தமிழ்ச்சொற்கள். இவ்வாறே மரக்கலத்துக்கும் தமிழ்மொழியில் பெயர்கள் பல வழங்குகின்றன. அவை: கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, பஃறி, ஓடம் என்பன. ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு வகையான கலத்தைக் குறிக்கும். இச்சொற்களைக் கொண்டே பண்டைத் தமிழர்களின் கடற்பயணம் பற்றித் தெளிவாக அறியலாம். உப்பங்கழிகளில் செலுத்துதற்குரிய சிறிய படகுகளும் கடலில் செலுத்துதற்குரிய பெரிய நாவாய்களும் அன்று இருந்தன. கடலில் செல்லும் பெரிய கலம் நாவாய் எனப்படும். புகார் நகரத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்கள், அலைகளால் அலைப்புண்டு கட்டுத்தறியில் கட்டப்பட்ட யானை அசைவதுபோல் அசைந்தன. அவற்றின் உச்சியில் கொடிகள் அசைந்து ஆடின எனப் பட்டினப்பாலை கூறுகின்றது.

கடல் கடந்த தமிழ்

தமிழ்	கிரேக்கம்
அரிசி	ஒரைஸா
கருவூர்	கரோரா
காவிரி	கபிரில்
குமரி	கொமாரி
தொண்டி	திண்டிஸ்
மதுரை	மதோரா
முசிறி	முசிரில்

பெரிய நாவாய்கள் காற்றின் துணைகொண்டே இயங்கின. அவை பாய்மரக் கப்பல்கள் எனப்பட்டன. இதற்குக் காற்றானது, எவ்வெப்போது எவ்வெத்திசை நோக்கி வீசும் என்பதனைத் தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர் என்பதனைப் புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.

துறைமுகங்கள்

தமிழகத்தில் நடைபெற்றுவந்த வாணிகத்தின் பயனாகப் பல துறைமுகங்கள் கடற்கரைப் பட்டினங்களாகச் சிறந்து விளங்கின. அவற்றுள் காவிரிப்பூம்பட்டினம், முசிறி, கொற்கை ஆகியவை குறிப்பிடத்தக்கன.

முசிறி, சேர மன்னர்க்குரிய துறைமுகம். அங்குச் சுள்ளி என்னும் பெரிய ஆற்றில் யவனர்களின் மரக்கலங்கள், ஆற்றுத்துறைகள் கலங்கிப் போகும்படி வந்து நின்றன. அக்கலங்களுக்கு உரிய யவனர்கள், பொன்னைச் சுமந்து வந்து, அதற்கு ஈடாக மிளகை ஏற்றிச் சென்றார்கள். இச்செய்தியை, அகநானூறு தெரிவிக்கிறது.

பாண்டிய நாட்டு வளத்தைப் பெருக்கியது கொற்கைத் துறைமுகம். இத்துறைமுகத்தில் முத்துக்குளித்தல் மிகச் சிறப்பாக நடந்ததனை வெனிசு நாட்டறிஞர் மார்க்கோபோலோ குறித்துள்ளார். இங்குச் சங்க காலத்தும் முத்துக்குளித்தல் நடந்தது. ஏற்றுமதிப் பொருள்களில் முத்தே முதலிடம் பெற்றது. மதுரைக்காஞ்சியும் சிறுபாணாற்றுப்படையும் கொற்கை முத்தைச் சிறப்பிக்கின்றன. விளைந்து முதிர்ந்த விழுமுத்து என மதுரைக்காஞ்சி கூறும்.

கடற்கரையை அடுத்து இருக்கும் ஊர்களைப் பட்டினம், பாக்கம் என்றழைப்பர்.

அவ்வூர்களில் பெரும்பாலும் வணிகர்களே வாழ்ந்து வந்தார்கள். சோழநாட்டின் துறைமுகமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் (பூம்புகார்), சுங்கச்சாலையும் கலங்கரை விளக்கமும் இருந்தன.

இங்குக் கப்பலிலிருந்து நிலத்தில் இறக்கப்படுவனவும், நிலத்திலிருந்து கப்பலில் ஏற்றப்படுவனவுமாகிய அளவில்லாத பண்டங்கள் முன்றிலில் மலைபோலக் குவிந்து கிடந்தன.

காவிரிப்பூம்பட்டினத்து மாடங்களில் உள்ள மகளிர் கைகளைக் கூப்பி, வெறியாடும் மகளிரொடு பொருந்தி வேய்ங்குழல் முதலியவற்றை வாசிக்க, நகர் விழாக்கோலம் பூண்டது. தெய்வத்துக்கென எடுத்த கொடிகளும், விலைப்பண்டங்களை அறிவித்தற்குக் கட்டிய கொடிகளும், ஆசிரியர்கள் வாது செய்யக் கருதி வைத்த கொடிகளும், கப்பலின் கூம்பிலுள்ள கொடிகளும் அங்குக் கலந்து காணப்பட்டன.

கடல்வழியே வந்த குதிரைகளும், தரை வழியே வந்த மிளகுப் பொதிகளும், இமயத்திலுண்டான மணிகளும் பொன்னும், குடகு மலையிற் பிறந்த சந்தனமும் அகிலும், கொற்கைத்துறையிற் பிறந்த முத்தும், கீழ்க்கடலில் உண்டான பவளமும், கங்கையில் உண்டான பொருள்களும், காவிரியில் உண்டான வளங்களும், ஈழ நாட்டிலிருந்து வந்த உணவுப் பொருள்களும், பிற நாட்டுப் பொருள்களும், பிற அரிய பொருள்களும் வந்து சேர, வளம் மிகுந்த பரந்த இடத்தையுடைய தெருக்களாக விளங்கின.

ஏற்றுமதி இறக்குமதி

பழந்தமிழகத்தின் வாணிகப்பொருள்களைப் பற்றிய குறிப்புகள் பட்டினப்பாலையிலும் மதுரைக்காஞ்சியிலும் காணப்படுகின்றன. இங்கிருந்து ஏற்றுமதியான பொருள்களுள் இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி முதலியன குறிப்பிடத்தக்கவை.

தமிழகப் பொருள்கள் சீனத்தில் விற்கப்பட்டன. சீனத்துப் பட்டும் சருக்கரையும் தமிழகத்துக்கு இறக்குமதி ஆயின. கரும்பு, அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவிலிருந்து கொண்டுவந்து பயிரிடப்பட்டது.

கடற்பயணம்பற்றிய கல்வியறிவு இந்நாளில் மக்களை எட்டியுள்ளது. கடல்சார் பல்கலைக்கழகத்தின் வாயிலாகப் பட்டம், பட்டயக்கல்வி கற்பிக்கப்பெற்று வருகின்றன. இத்துறையில் பயில்வோருக்குப் பயிற்சியும் பணிவாய்ப்பும் நிரம்ப உள்ளன. எனவே,

மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம் என்னும் பாரதியின் கனவு இன்று நனவாகி உள்ளது.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ) கடல் பயணத்தை முந்நீர் வழக்கமெனக் குறிப்பிடும் நூல் ______.

ஆ) கடலில் செல்லும் பெரிய கலம் ______ எனப்பட்டது.

இ) காவிரிப்பூம்பட்டினத்தில் சுங்கச்சாலையும் ______ இருந்தன.

2. பொருத்துக.

நாடு		துறைமுகம்
சேர நாடு	–	காவிரிப்பூம்பட்டினம்
சோழ நாடு	–	கொற்கை
பாண்டிய நாடு	–	முசிறி

ஆ) குறுவினாக்கள்

1. கடற்பயணம் மேற்கொள்ளக் காரணங்கள் யாவை ?
2. யவனர் என்போர் யாவர் ?
3. பொருள்வயிற் பிரிவு பற்றி எழுதுக.
4. கலத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை ?

இ) சிறுவினாக்கள்

1. தமிழகத்தில் நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள்பற்றி எழுதுக.
2. கப்பலின் தோற்றத்தைப் புறநானூறு எவ்வாறு உவமிக்கிறது ?
3. அக்காலத்தில் பூம்புகார் எவ்வாறு விளங்கியது ?

ஈ) நெடுவினா

தமிழகத்தின் பழங்காலத் துறைமுகங்கள் பற்றியும் அங்கு நடைபெற்ற வாணிகம் பற்றியும் விளக்குக.

உ) மரபுத்தொடர்களைச் சொற்றொடர்களில் அமைக்க.

1. கைவந்த கலை : ______________________.
2. அத்தி பூத்தாற்போல : ______________________.
3. உள்ளங்கை நெல்லிக்கனி : ______________________.

ஊ) சொற்றொடர் வகையை அறிந்து எழுதுக.

தமிழ்

1. நாவாய்களை வங்கம் என்றும் கூறுவர். – ____________.
2. கிரேக்கரையும் உரோமானியரையும் தமிழர் எவ்வாறு அழைத்தனர்?
   – ____________.

ஏ) இருபொருள் எழுதுக.

1. திரை ____________, ____________.
2. கலிங்கம் ____________, ____________.
3. கலை ____________, ____________.
4. கவி ____________, ____________.

செயல்திட்டம் : களப்பயணம் மேற்கொள்க. (துறைமுகம்)

> அறிந்துகொள்க.
> நீங்கள் வாழும் நிலப்பகுதி எவ்வகைத் திணை என அறிந்துகொள்க.
> திணையும் – நிலமும்

குறிஞ்சி – மலையும் மலைசார்ந்த இடமும்

முல்லை – காடும் காடுசார்ந்த இடமும்

மருதம் – வயலும் வயல்சார்ந்த இடமும்

நெய்தல் – கடலும் கடல்சார்ந்த இடமும்

பாலை –மணலும் மணல்சார்ந்த இடமும்
(வறண்ட நிலப்பகுதி)

கெலன் கெல்லர்

கெலன் கெல்லர், அமெரிக்காவின் புகழ்பெற்ற எழுத்தாளராகவும் அரசியல் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினார். அவரைக் காணவந்த ஒருவர், அவரிடம், "உங்களுக்கு மிகவும் விருப்பமான ஒன்றனைப் பெற விரும்பினால், அஃது என்னவாக இருக்க வேண்டுமெனக் கேட்பீர்கள்" என்று கேட்டார்.

"இந்த உலகத்தில் அமைதி மலரவேண்டும் எனக் கேட்பேன்"– என்றார் கெலன்.

"பார்க்கும் திறனும் கேட்கும் திறனும் பேசும் திறனும் வேண்டும்" எனக் கேட்பார் என நினைத்தவருக்குப் பெருத்த ஏமாற்றம்.

ஆம், கெலன் கெல்லரின் கண்கள் பாரா; காதுகள் கேளா; வாய் பேசாது. பத்தொன்பது மாதக்குழந்தையாக இருந்தபோது ஏற்பட்ட கொடிய நோயானது, அவருடைய மூன்று புலனையும் பறித்துக்கொண்டது. கெலன், தன் உணர்வுகளை வெளிப்படுத்த இயலாத இருண்ட உலகில் வாழ வேண்டியதாயிற்று. ஆறு வயதானபோது அலெக்சாண்டர் கிரகாம்பெல் உதவியால் பெர்கின்ஸ் பள்ளியில் சேர்ந்தார். அங்குப் பணிபுரிந்த அன்னிசல்லிவான் என்பவர் கெலனுக்கு ஆசிரியராக வாய்த்தார்.

மூன்று புலனற்றவர் என்பது தெரிந்தும், ஆசிரியர் அன்னி, தன்னம்பிக்கையுடன் அவருக்குக் கற்பிக்கத் தொடங்கினார். அவர், முதலில் பொருள்களின் பெயரை ஒவ்வோர் எழுத்தாகக் கெலனின் உள்ளங்கையில் தம் விரல்களால் எழுதிக் கற்பித்தார்; கெலனும் அன்னியின் குரல்வளையின்மீது கைவைத்து ஒலி அதிர்வுகளின்மூலம் எழுத்துகளையும் சொற்களையும் அறிந்துகொண்டார். அதன்பின், பாஸ்டனில் உள்ள ஹோரஸ்மான் காதுகேளாதோருக்கான பள்ளியிலும், நியூயார்க்கில் உள்ள ரைட் ஹூமாசன் பள்ளியிலும் முறைப்படி பயின்றார்.

பெர்கின்ஸ் பள்ளி : பார்வையற்றோருக்கான பள்ளி அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் அமைந்துள்ளது.

கெலன், பிரெய்லி முறையில் எழுதவும் படிக்கவும் கற்றார். அவர், தனக்கெனத் தனியாக உருவாக்கப்பட்ட தட்டச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தினார். ஆசிரியை அன்னி அளித்த பயிற்சியின் பயனாக, கேம்பிரிட்ஜ் ரெட் கிளிஃப் கல்லூரி நுழைவுத் தேர்வில் வெற்றிபெற்று, இளங்கலைப்பட்ட வகுப்பில் சேர்ந்தார்; பட்டமும் பெற்றார். இத்தகைய மாற்றுத்திறனாளர்களுள் முதன்முதலில் பட்டம் பெற்றவர் இவரே. இவர் பல நூல்களை எழுதினார்; போர்களை எதிர்த்து உலக நாடுகள் பலவற்றுக்கும் சுற்றுப்பயணம் செய்தார்.

ஆசிரியர் அன்னிசல்லிவனுடன் கெலன்

கெலன், தனது வாழ்நாளைக் கண்ணிழந்தோர் மற்றும் காதுகேளாதோர்க்காகச் செலவிட்டார். அதற்காக, அல்லும் பகலும் அயராது உழைத்தார். அவர்களுக்கென உலகமெங்கும் பள்ளிகள் திறக்கச்செய்யும் பொருட்டு மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியுடன் உலக நாடுகள் பலவற்றுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். 'கெலன் கெல்லர் நிதி' என ஒன்றனைத் தொடங்கி, அந்நிதியில் சேர்ந்த தொகையான ரூபாய் ஒன்றரைக் கோடியை அப்பள்ளிகளுக்கு வழங்கினார். பார்வையற்றோருக்கெனத் தேசிய நூலகம் ஒன்றனை உருவாக்கி, உலகம் முழுவதிலும் இருந்து நூல்கள் வந்து குவிய ஏற்பாடு செய்தார். தன்னைப்போல அவர்களும் மீட்சி பெறவேண்டும் என்னும் எண்ணத்துடன் தன் எண்பத்தெட்டு வயதுவரை அயராது உழைத்தார்.



அலெக்சாண்டர் கிரகாம் பெல்லுடன் கெலன்

"வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை; ஒன்றுபோனால் இன்னொன்று வரும். அந்த நம்பிக்கையிருந்தால் வாழ்க்கை வெறுமை ஆகாது" – இவ்வாறு கூறிய கெலன், அந்நம்பிக்கையை மெய்ப்பிப்பதுபோல், "நீங்கள் கண்பார்வை அற்றவராகவும், காது கேளாதவராகவும் இருந்தும்கூட எப்படி உங்களால் சாதிக்க முடிந்தது?" எனக் கெலனிடம் விக்டோரியா மகாராணி, கேட்டபொழுது, 'அதற்குக் காரணம் என்னுடைய ஆசிரியரே' எனக் கெலன் கூறினார். "என் மூன்று புலன்களை இழந்ததனால்தான், எனக்கு அவர் ஆசிரியராகக் கிடைத்தார்." எனப் பதிலளித்தார். ஆசிரியர் அன்னி இல்லாவிட்டால் கெலனை இவ்வுலகில் யாருக்கும் தெரிந்திலது.

பாலி தாம்சனுடன் கெலன்

ஆசிரியர் அன்னி 1930ஆம் ஆண்டு இறந்துவிடத் தனது மொழிபெயர்ப்பாளர் பாலி தாம்சன் என்பாரின் உதவியுடன் வாழ்ந்து வரலானார்; ஜப்பான் முதலான நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். கெலன், வாஷிங்டன் நகரின் புகழ்பெற்ற பெண்மணியாகத் திகழ்ந்தார்.

தமிழ்

கெலன் கெல்லர், ‘‘மனிதர்கள் எல்லாவற்றையும் எளிதாக எடுத்துக்கொள்கிறார்கள்; அவர்கள் எதனையுமே முதன்மையாகக் கருதுவதில்லை. எதனையாவது இழந்த பிறகுதான் அதன் அருமையை உணர்கிறார்கள். மனிதர்கள் பார்த்தல், பேசுதல், தொடுதல், முகர்தல், கேட்டல் ஆகிய ஐம்புல உணர்வை இயற்கையாகவே பெற்றிருக்கிறார்கள். இந்த உணர்வுகளின் மதிப்பைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் பலருக்கு இல்லை, அன்றாட வாழ்க்கைக்கு இவையெல்லாம் தேவையென்பதனை அவர்கள் மறந்துவிடுகிறார்கள்,’’ என்பார்.

ஒருநாள் இரவு கெலன் கெல்லர், கடவுளின் அருளால் மூன்று நாள் மட்டுமே தமக்குப் பார்வை கிட்டியதாகக் கனவு கண்டார். அதற்கே அவர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். முதல் நாள், கண்ணொளி கிடைத்ததும் முதன்முதலில் பார்த்தது, அவரின் கல்விக்கண் திறந்து வைத்த ஆசிரியரின் முகத்தையே. அவரைச் சந்தித்ததற்குப் பின், பொறுமை, அன்பு, இரக்கம், துணிவு, தன்னம்பிக்கை ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாகத் தமது ஆசிரியர் திகழ்வதனை உணர்ந்தார். ஆசிரியரைப் பார்த்ததற்குப் பின் அவர், தமது உயிர்த்தோழிகளைச் சந்தித்தார். அவர்களின் கள்ளங்கபடமற்ற அழகான முகங்களைக் கண்டார்.

வீட்டுக்கு வந்து, வீட்டிலுள்ள சின்னஞ்சிறு பொருள்களையெல்லாம் ஒன்றுவிடாமல் பார்த்தார். அவற்றுள், சில வண்ணப் பொருள்களையும் சுவரில் மாட்டப்பட்டிருந்த அழகிய ஓவியங்களையும் அலமாரியில் அடுக்கி வைக்கப் பெற்றிருந்த புத்தகங்களையும் கண்கொட்டாமல் பார்த்தார். அன்றைய மாலைப்பொழுதில் வெளியில் நடந்து செல்லும்போது மரங்களின் அழகையும் இயற்கையின் அழகையும் கண்டுகளித்தார். வீட்டுக்கு வரும்வழியில் பக்கத்து வீட்டுக்காரரின் பண்ணையில் மக்கள் சிலரையும் குதிரைகளையும் கண்டார். மாலைப்பொழுதில் கதிரவன் மறையும் காட்சியைக் கண்டு மகிழ்ந்தார். வீட்டிலுள்ள மின்விளக்குகள் அவரைக் கவர்ந்தன. அவை அவருக்கு மகிழ்ச்சியைத் தந்தன. பகலில் கண்ட பல்வேறு காட்சிகளில் மனம் ஈடுபாடு கொண்டிருந்ததனால், அன்றிரவு அவருக்கு ஆழ்ந்த உறக்கம் வரவில்லை.

இரண்டாவது நாள், கெலன் கெல்லர் கதிரவன் தோன்றுவதனைக் கண்டார். அன்று நியூயார்க்கிலுள்ள அருங்காட்சியகத்தைக் கண்டு, இயற்கை வரலாற்றைத் தெரிந்து கொண்டார். அருங்காட்சியகம் அவருக்கு உலக மரபியல் வளர்ச்சியை அறிந்துகொள்ளப் பேருதவியாக அமைந்ததனை எண்ணி மகிழ்ந்தார். அடுத்துப் பெருநகரப் பொருட்காட்சிச் சாலைக்குச் சென்றார். அங்கு இடம்பெற்றிருந்த புகழ்பெற்ற கலைஞர்கள், லியனார் டோ டாவின்சி முதலானோர் ஓவியங்களையும் கலைப்பொருள்களையும் கண்டுமகிழ்ந்தார். பிறகு, கெலன், செகப்பிரியருடைய நாடகமொன்றனைப் பார்த்தார். அந்நாடகம் அவரைப் பெரிதும் கவர்ந்தது. நடிகர்கள் வசனம் பேசிய முறை, உச்சரிப்பு, முகவெளிப்பாடு ஆகியவை அவர் மனத்தைவிட்டு அகலவில்லை. அன்றிரவு அவர் அமைதியாக உறங்கினார்.

மூன்றாவது நாள், நகரின் கிழக்குப் பக்கத்திலுள்ள ஆற்றுப்பாலத்தை உற்று நோக்கினார். ஆற்றில் படகுகளையும் அதில் செல்லும் மனிதர்களையும் கண்டார். பின்பு, நியூயார்க்கில் உள்ள வானளாவிய இரட்டைக் கோபுரக் கட்டடத்தைக் கண்டுகளித்தார். அவர், மக்களின் முகத்தில் வெளிப்படும் மகிழ்ச்சியையும் துன்பத்தையும் பார்த்துப்

புரிந்துகொண்டார். ஐந்தாவது நிழற்சாலையிலுள்ள கடைத்தெருக்களை எல்லாம் பார்த்தார். சிறிய சுற்றுலா மேற்கொண்டார்; பூஞ்சோலைகளையும் குடிசைகளையும் தொழிற்சாலைகளையும் கண்டார். இக்காட்சி அவருக்கு ஒருபுறம் மகிழ்ச்சியையும் மறுபுறம் துன்பத்தையும் அளித்தது. கெலன் சொன்னார்: “எனது கண்கள் துக்கத்தையும் மகிழ்ச்சியையும் முதன்முதலாகக் கண்டன.” அன்றைய முடிவில் ஒரு நகைச்சுவை நாடகத்தைக் கண்டார். ஏனெனில், கண் பார்வை மறைவதற்கு முன்பு, மகிழ்ச்சியான ஒன்றனை மட்டுமே கண்கள் காண வேண்டுமென விரும்பினார். ‘நம் உணர்வுகளுக்கு நாம் மதிப்பளித்தல் வேண்டும். கடவுள் நமக்குக் கொடுத்த மிகப்பெரிய அன்பளிப்பு, பார்வை. அதனை இன்னும் சற்றுநேரத்தில் இழக்கப் போகிறோம்’ என்ற உணர்வோடு கற்பனை செய்து பார்த்தால், அதன் அருமையை நம்மால் உணரமுடியும். மூன்று நாளிலும் தாம் உணர்ந்தவற்றை நமக்குப் பாடமாக உணர்த்தினார். “மூன்றுநாள் பார்வை கிடைத்ததற்கே முழுப் பயனையும் என் கண்கள் கண்டன. அப்படியானால், வாழ்நாள் முழுவதும் பார்வையுள்ளவர்கள் எவ்வளவு சாதனைகள் செய்யமுடியும் என்பதனை எண்ணிப் பாருங்கள்” என்பதனை உணர்த்தினார்.

1880 சூன் 27இல் அமெரிக்காவிலுள்ள அலபாமா மாகாணத்தில் துஸ்கும்பியாவில் பிறந்து, சாதனையாளராகத் திகழ்ந்த கெலன், 1968ஆம் ஆண்டு சூன் முதல்நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது உடல் வாஷிங்டனில் அன்னி, பாலி ஆகியோரது உடல்களுக்கு அருகே நல்லடக்கம் செய்யப்பட்டது.

சிறு துன்பமோ தடையோ இழப்போ ஏற்பட்டாலே மனமுடைந்து மூலையில் முடங்கிப் போகும் நமக்குக் கெலன் கெல்லரின் வாழ்க்கை வரலாறு தன்னம்பிக்கையைத் தரும் என்பதில் ஐயமில்லை. உடல்நலத்தோடு இருப்பவர்களே செய்யவியலாத அரிய சாதனைகளைப் புலன்களை இழந்த கெலன் செய்தார். அதனால் அவர், உலகின் எட்டாவது அதிசயம் எனப் பாராட்டப் பெறுகிறார்.

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி. – குறள், 618

பிரெய்லி

பார்வையற்றோருக்கான எழுத்துமுறையை உருவாக்கியவர்.



பார்வையற்றோருக்கான எழுத்துமுறை

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. கெலன் கெல்லர் எவ்வாறு கல்வி கற்றார்?
2. கெலன் கெல்லர், தம் கனவில் கண்ட முதல் நாள் காட்சிகள் யாவை?

யாப்பு : செய்யுள் உறுப்புகள் (எழுத்து, அசை, சீர்)

செய்யுள் உறுப்புகள்

யாப்பு – யாக்கப்படுவது – கட்டப்படுவது. யாப்பு என்பது செய்யுள்.

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறும் செய்யுளின் உறுப்புகளாகும்.

1. எழுத்து

செய்யுளில் குறில், நெடில், மெய், ஆய்தம் என்னும் எழுத்துகள் முதன்மையாகக் கருதப்படும். குறிலில், உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் அடங்கும். நெடிலில் உயிர்நெடிலும், உயிர்மெய் நெடிலும் அடங்கும். மெய் ‘ஒற்று’ எனவும் சொல்லப்படும், செய்யுளில் ஆய்தம் மெய்யாகக் கருதப்படும்.

நாணல் – இச்சொல்லில், நா – நெடில், ண – குறில், ல் – ஒற்றெழுத்து.

2. அசை

எழுத்தானது தனியாகவோ பல சேர்ந்தோ ஓசையுடன் அசைந்து (பிரிந்து) நிற்பது அசை எனப்படும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

நேரசை : குறில் தனித்தும் குறில் ஒற்றடுத்தும், நெடில் தனித்தும் நெடில் ஒற்றடுத்தும் வருவது நேரசை எனப்படும்.

(எ.கா.)	குறில் தனித்து வரல்	– க
	குறில் ஒற்றுடன் வரல்	– கல்
	நெடில் தனித்து வரல்	– கா
	நெடில் ஒற்றுடன் வரல்	– கால்

நிரையசை: குறில் இணைந்தும் குறில் இணைந்து ஒற்றும்; குறில் நெடில் இணைந்தும் குறில் நெடில் இணைந்து ஒற்றும் வருவது நிரையசை.

(எ.கா.)	குறில் இணைந்து வரல்	– பட
	குறில் இணைந்து ஒற்றுடன் வரல்	– படம்
	குறில் நெடில் இணைந்து வரல்	– படா
	குறில்நெடில் இணைந்து ஒற்றுடன் வரல்	– படாம்

3. சீர்

அசைகள் தனித்தும் இணைந்தும் கூடி, அடிக்கு உறுப்பாக அமைவது சீர் எனப்படும் அஃது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நால்வகைப்படும்.

ஓரசைச்சீர் : வெண்பாவின் ஈற்றில் நேரசை, நிரையசையுள் ஏதேனும் ஒன்று தனித்து நின்று சீராய் அமையும். அவற்றை ஓரசைச்சீர் என்பர். அவை நாள் (நேர்), மலர் (நிரை), காசு (நேர்பு), பிறப்பு (நிரைபு) என நால்வகை வாய்பாடுகளுள் ஒன்றனைப் பெறும்.

(எ.கா.) 1. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

என் – நேர் (நாள்)

2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

படும் – நிரை (மலர்)

3. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

நாடு – நேர்பு (காசு)

4. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

உலகு – நிரைபு (பிறப்பு)

ஈரசைச்சீர் : நான்கு

ஈரசை சேர்ந்து ஒரு சீர் ஆவது ஈரசைச்சீர். நேரில் முடிவது இரண்டும், நிரையில் முடிவது இரண்டுமாக ஈரசைச்சீர் நான்கு ஆகும்.

சீர்		வாய்பாடு	
நேர் நேர்	=	தேமா	மாச்சீர் – 2 (தேமா, புளிமா என
நிரை நேர்	=	புளிமா	மாவில் முடிவதனால் மாச்சீர்.)
நிரை நிரை	=	கருவிளம்	விளச்சீர் – 2 (கருவிளம்,
நேர் நிரை	=	கூவிளம்	கூவிளம் என விளத்தில்
			முடிவதனால் விளச்சீர்)

(ஈரசைச்சீர் நான்கும் ஆசிரியப்பாவுக்கு உரியவை.)

இவை இயற்சீர் எனவும், ஆசிரிய உரிச்சீர் எனவும் வழங்கப்படும்.

மூவசைச்சீர் : எட்டு

மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீர் ஆவது மூவசைச்சீர். நேரசையில் முடிவது நான்கும் நிரை அசையில் முடிவது நான்குமாக மூவசைச் சீர் எட்டு ஆகும்.

காய்ச்சீர்கள் – நான்கு

நேர் நேர் நேர் – தேமாங்காய்

நிரை நேர் நேர் – புளிமாங்காய் காய்ச்சீர்கள் – நான்கு

நிரை நிரை நேர் – கருவிளங்காய்

நேர் நிரை நேர் – கூவிளங்காய்

இவை வெண்பாவுக்கு உரியதனால், வெண்பா உரிச்சீர் எனவும் கூறுவர்.

கனிச்சீர்கள் – நான்கு

நேர் நேர் நிரை – தேமாங்கனி

நிரை நேர் நிரை – புளிமாங்கனி கனிச்சீர்கள் – நான்கு

நிரை நிரை நிரை – கருவிளங்கனி

நேர் நிரை நிரை – கூவிளங்கனி

இவை வஞ்சிப்பாவுக்கு உரியதனால், வஞ்சியுரிச்சீர் எனவும் கூறுவர்.

நாலசைச்சீர் : பதினாறு

மூவசைச்சீர் எட்டுடன் நேரசை, நிரையசைகளைத் தனித்தனியாகச் சேர்த்தால் நாலசைச்சீர் பதினாறு கிடைக்கும். இதனைப் பொதுச்சீர் எனக் கூறுவர்.

பயிற்சி

1. பின்வரும் பெயர்களை அசை பிரித்துக் காட்டுக.

அ) தில்லை ஆ) வளவன் இ) இளங்கோ ஈ) தொல்காப்பியர்

2. விடுபட்ட இடங்களை நிரப்புக.

1. அன்/ புநாண்	ஒப்/புர/வு	கண்/ணோட்/டம்
நேர் ______	நேர்______நேர்	நேர் நேர் நேர்
கூவிளம்	______	______
2. ஆற்/றுவார்	ஆற்/றல்	பணி/தல்
நேர் நிரை	______	நிரை நேர்
______	தேமா	______

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. மெய்யும் ஆய்தமும் யாப்பில் ______ எனக் குறிக்கப்படும்.

அ) சுட்டெழுத்து ஆ) வினா எழுத்து இ) ஒற்றெழுத்து

2. காய்ச்சீர் ________ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு

3. ஆசிரியப்பாவுக்கு உரிய சீர்கள் ________ ஆகும்.

அ) காய்ச்சீர் ஆ) மாச்சீர் இ) கனிச்சீர்

4. வெண்பாவில் 'உயர்வு' என்னும் ஈற்றுச்சீரில் வரும் ஓரசையின் வாய்பாடு ________.

அ) நாள் ஆ) மலர் இ) பிறப்பு

ஆ) குறுவினாக்கள்

1. யாப்புக்குரிய எழுத்துகள் எவையெனக் கணக்கிடப்படுகின்றன ?
2. அசை என்றால் என்ன ? அவை யாவை ?
3. ஈரசைச் சீர்களுக்குரிய வாய்பாடுகள் யாவை ?
4. காய்ச்சீர் வாய்பாடுகள் யாவை ?

அறிந்துகொள்வோம்.

வெண்பாவில் இயற்சீரும் வெண்சீரும் மட்டுமே வரும்.

இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும்.

வேற்றுத் தளைகள் வாரா.

ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்.

(எ.கா.) அலகிடல்: கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

வ.எண்	சீர்	அசை	வாய்பாடு
1	கட/னென்/ப	நிரை நேர் நேர்	புளிமாங்காய்
2	நல்/லவை	நேர் நிரை	கூவிளம்
3	எல்/லாம்	நேர் நேர்	தேமா
4	கட/னறிந்/து	நிரை நிரை நேர்	கருவிளங்காய்
5	சான்/றாண்/மை	நேர் நேர் நேர்	தேமாங்காய்
6	மேற்/கொள்	நேர் நேர்	தேமா
7	பவர்க்/கு	நிரை நேர்	(நிரைபு) பிறப்பு

இக்குறட்பாவில் ஈற்றுச்சீர் பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

பயிற்சி : கீழ்க்காணும் குறட்பாவுக்கு அலகிட்டு வாய்பாடு எழுதுக.

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

தமிழ்

அணி

இல்பொருள் உவமையணி, வேற்றுப்பொருள் வைப்பணி

"அவள் நடந்து வந்தாள்."

"அவள் அன்னம்போல நடந்து வந்தாள்."

இவ்விரு தொடரைப் படித்துப் பாருங்கள். முதல் தொடர் இயல்பாக உள்ளது. அடுத்த தொடர் படிப்பதற்கு இனிமை தருகிறது.

பெண்ணொருத்தி, தன் இயல்பான அழகை ஆடை, அணிகலன்கள் அணிந்து, ஒப்பனைசெய்து கொள்வதுபோலப் புலவர், தம் கற்பனை ஆற்றலாலும் மொழிப்புலமையாலும் சொல்லிலும் பொருளிலும் அழகு சேர்த்துப் பாடல்கள் இயற்றுவர்.

இத்தகைய பாடல்களில் காணப்படும் அழகே அணி எனப்படும். இதனால், சொல்லப் புகும் கருத்து எளிதில் புரியும்; படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் இனிமை சேர்க்கும்.

அணிகள் சிலவற்றை இங்குக் காணலாம்.

1. இல்பொருள் உவமையணி

உலகில் இல்லாத பொருளை ஒன்றனுக்கு உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமையணி எனப்படும்.

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. – குறள், 78

இக்குறட்பாவைப் படித்துப் பாருங்கள். உள்ளத்தில் அன்பில்லாத ஒருவர் குடும்ப வாழ்க்கை நடத்துவது என்பது, பாலை நிலத்தில், பட்டமரம் தளிர்விட்டு வளர்வது போன்றது. திருவள்ளுவர், இக்குறட்பாவில் அன்பில்லாதவன் வாழ்க்கை, பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்விட்டு வளர்வதற்கு ஒப்பானது என இல்லாத பொருளை உவமித்துக் கூறுகிறார்.

புலவன், உலகில் இயல்பாக இல்லாத பொருளை இவ்வாறு உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமையணி ஆகும்.

2. வேற்றுப்பொருள் வைப்பணி

புலவர், தாம் கருதிய பொருளை நிலைநாட்ட, உலகம் அறிந்த வேறொரு பொருளைச் சான்றுகாட்டிக் கூறும்போது, பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும், சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் விளக்குவதனை வேற்றுப்பொருள் வைப்பணி என்பர்.

உரைமுடிவு காணான் இளையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

இப்பாடலில், கரிகாலன் இளமையில் நரைமுடித்து வந்து, வழக்கில் நீதி வழங்கினான் என்பது சிறப்புச் செய்தி. வழிவழியாக நீதி தவிராமல் ஆட்சி புரிந்துவரும் சோழர் குலத்தில்

தோன்றியமையால், இயல்பாகவே கரிகாலனும் சிறந்த நீதி வழங்கினான் என்பது பொதுப் பொருள். எனவே, சிறப்புப் பொருளால் பொதுப் பொருள் விளக்கப்பட்டுள்ளதனால் இப்பாடலில் வேற்றுப்பொருள் வைப்பணி அமைந்துள்ளது.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. உலகில் இல்லாத பொருளை உவமித்துக் கூறுவது ________.
2. கருதிய பொருளை நிலைநாட்ட சிறப்புப் பொருளைப் பொதுப்பொருளாலும் பொதுப்பொருளைச் சிறப்புப் பொருளாலும் கூறி விளக்குவது ________.

ஆ) குறுவினாக்கள்

1. வேற்றுப்பொருள் வைப்பணியைச் சான்றுடன் விளக்குக.
2. இல்பொருள் உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

வகுப்பறைத்திறன்கள்

எழுதுதல் திறன் : படம் பார்த்துப் பாடல் எழுதுக.

________ ________

________ ________

________ ________

________ ________

________ ________

குழுக் கலந்துரையாடல்

பாரதியார் – பாரதிதாசன் – கண்ணதாசன் கவிதைகளில் சமூக மாற்றம் குறித்துக் கலந்துரையாடுக.

தமிழ்

தமிழ்

மொழித்திறன் பயிற்சி

தொகைச்சொற்களை விரித்தெழுதுதல்.

(எ.கா.) ஐந்திணை என்னும் சொல் குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல் திணை, பாலைத்திணை ஆகியவற்றைக் குறிக்கும்.

1. முக்கனி – மாங்கனி, பலாக்கனி, வாழைக்கனி.
2. நாற்படை – தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை.
3. ஐந்திலக்கணம் – எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம்.
4. அறுசுவை – இனிப்புச்சுவை, கசப்புச்சுவை, புளிப்புச்சுவை, உவர்ப்புச்சுவை, கார்ப்புச்சுவை, துவர்ப்புச்சுவை.

பயிற்சி : தொகைச்சொற்களை விரித்தெழுதுக.

இருதிணை ________ , ________.

முப்பால் ________ , ________, ________.

நாற்றிசை ________ , ________, ________ , ________.

ஐம்பால் ________ , ________, ________ , ________ , ________.

எண்ணுப் பெயர்களைத் தமிழெண்களுடன் பொருத்துக.

எண்ணுப் பெயர்		தமிழெண்
எண்பத்திரண்டு	–	உ௫
தொண்ணூற்றொன்பது	–	௩0
இருபத்தைந்து	–	௯௯
பதினைந்து	–	அஉ
முப்பது	–	க௫

செயல்திட்டம்

1. இப்பாடப்பகுதியிலுள்ள பெயர்ச்சொற்களைத் தொகுக்க.
2. தொகுத்த பெயர்ச்சொற்களிலுள்ள தொழிற்பெயர்களை வட்டமிடுக.

கட்டுரைப் பயிற்சி

மாற்றுத்திறனாளர் மறுவாழ்வு.

கையெழுத்து இதழ் தயாரித்தல் (மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பக் குழுக்களாகப் பிரித்துக் கையெழுத்து இதழ் உருவாக்கச் செய்தல்)		
விடுதலைத் திருநாள் சிறப்பிதழ்		
அனைவருக்குமான விடுதலை! உலகத்தை உயர்த்தும் நன்றாய்!		
சிறப்புச் செய்தி விடுதலை நாள்	கவிதை போரிடும் உலகத்தை வேரொடும் சாய்ப்போம்.	நேர்காணல் விடுதலைக்கு உழைத்தோர்
நாடகம் விடுதலைப்போர்	துணுக்குகள் விழிப்புணர்வு ஊட்டும் நகைச்சுவைத் துணுக்குகள்	கட்டுரை விடுதலைத் திருநாள் போட்டியில் வெற்றிபெற்ற கட்டுரை
சிறுகதை (ஒருபக்க அளவு) சிறுவர் கல்வி	உரையாடல் காந்தி இன்று இருந்தால்... இருவர்/மூவர் உரையாடல்	
இத்திங்களுக்கான தமிழ் மன்ற நிகழ்ச்சிகள்		

வாழ்க்கைத்திறன்

பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்

தொடர்வண்டியில் பயணம் செய்யும்போது பார்வையற்றோர் பாட்டுப்பாடிச் செல்வதனைக் கேட்டிருப்பீர்கள். முன்னே செல்பவரைப் பின்பற்றி மற்றையோர் தொடர்வதனையும் கண்டிருப்பீர்கள். வழியறிந்த மாற்றுத்திறனாளி வழியறியா மற்றொரு மாற்றுத்திறனாளிக்கு உதவும்போது, பார்வையுள்ளோர் யாராவது அவர்களுக்கு உதவியதனைப் பார்த்திருக்கிறீர்களா ? இயலாதோருக்கும் இல்லாதோருக்கும் மனிதநேயத்தோடு உதவுவோர் சிறந்த மனிதராவர்.

1. மாற்றுத்திறனாளிகளுக்கு எவ்வெவ் வகையில் உதவலாம் ?
2. நீங்கள் பழகிய இடத்தில் கண்ணைக் கட்டிக்கொண்டு ஒரு பொருளை எடுக்க முயற்சி செய்க.
3. உங்கள் பட்டறிவை நண்பர்களுடன் கலந்துரையாடுக.

தமிழ்

மதிப்புக்கல்வி

உயிர் இரக்கம்

ஸ்டீன்மெட்ஸ் என்னும் புகழ்பெற்ற அறிவியல் அறிஞரின் வீட்டுக்கு, அவருடைய நண்பர் சென்றிருந்தார். அன்றைக்குக் கடும்குளிர் நிலவியது. அறிவியல் அறிஞர், தம் உடலை நன்றாகக் கம்பளியால் போர்த்தியிருந்தார். எனினும், குளிர் தாங்காமல் நடுங்கிக்கொண்டே ஏதோ ஒரு சோதனையில் முழுமூச்சாய் ஈடுபட்டிருந்தார். அருகிலேயே கணப்புப்புரை (சூட்டடுப்பு) இருந்தும், அவர் அதனை எரிய விடவில்லை.

நண்பர் அவரிடம், "ஏன் கணப்பை எரியவிடாமல் இப்படிக் குளிரில் நடுங்குகிறீர்கள்?" எனக் கேட்டார். அதற்கு, அந்த அறிவியல் அறிஞர் எழுந்து சென்று, அருகில் இருந்த கணப்பைச் சுட்டிக் காட்டினார். அங்குச் சுண்டெலியொன்று தன்னுடைய குட்டிகளுடன் இருந்தது.

"இந்தக் கடுமையான குளிரில் நாமே நடுங்கும்போது பாவம் இவை என்ன செய்யும்? அதனால்தான், அவற்றை விரட்ட எனக்கு மனம் வரவில்லை." என்றார்.

இந்தச் சூழலில் நீயாக இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்? நினைத்துப் பார்.

மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்.

– வள்ளலார்

மொழியாக்கம் செய்க.

Mother Teresa, born in Yugoslavia became a nun at the age of 18. She came to India and started her career as a teacher. She established the "Home for dying and destitute" in Kolkata. "Service to the uncared is the service to God" is the principle of Mother Teresa. The highest honour of 'Nobel Prize' for peace was awarded for her selfless work.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. In a fiddler's house all are dancers.

   கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்.
2. No man can flay a stone.

   கல்லிலே நார் உரிக்க முடியுமா ?
3. Difficulties give way to diligence.

   கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.
4. Command your man and do it yourself.

   வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன்.
5. Charity is a double blessing.

   தருமம் தலை காக்கும்.

வளரறி செயல்பாடுகள்	
கேட்டல் திறன்	செயல்பாடு – 1

கீழுள்ள உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு வினாக்களுக்கு விடையளிக்க.

செய்யுள், உரைநடை, பேச்சு ஆகியன இயல்தமிழ் ஆகும். இசையோடு பாடுவதற்கென்றே எழுதப்பட்ட தமிழ்ப்பாடல்கள் இசைத்தமிழ் எனப்படும். இசையை இசைத்தமிழ் என்று மயங்குகின்றனர் சிலர்.

இசை வேறு; இசைத்தமிழ் வேறு.

இசைக் கலைஞர்கள் குழல், யாழ் போன்ற கருவிகளில் வாசிப்பது இசை. ஓதுவார் பாடும் தேவாரப்பாடல் இசைத்தமிழ். நாட்டியம் ஆடும்போது பாடுவதற்கென்றே இயற்றப்பட்ட பாடல்களே நாடகத்தமிழ் எனப்படும்.

நாடகம் என்பது இக்காலத்து நாடகம், திரைப்படங்களில் பேசப்படும் உரையாடல் என்று சிலர் கருதுகின்றார்கள். நாடகத்தமிழ்ப் பாடல்கள் நாட்டியத்துக்குரிய மெய்ப்பாடுகளுக்கு இடம்தரும் வகையில் அமைந்திருக்கும்.

வினாக்கள்

1. தமிழின் முப்பிரிவுகள் யாவை ?
2. இயல்தமிழ் என எதனைக் கூறுகிறோம் ?
3. இசை என்பது எது ?
4. நாடகத்தமிழ் எத்தன்மையது ?
5. தேவாரப்பாடல்கள் எவ்வகைத் தமிழைச் சாரும் ?

பேசுதல் திறன்	செயல்பாடு – 2

உரையாடலை முழுமையாக எழுதி வகுப்பில் பேசுக.

இறைவனுக்கும் நக்கீரனுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல்

இடம்: புலவர்கள் நிறைந்த பாண்டியன் அவை

இறைவன்: என் பாடலில் குற்றம் கூறியவர் யார் ?

நக்கீரன்: ஏன், நான்தான் !

இறைவன்: என் பாடலில் என்ன குற்றம் கண்டீர் ? சொல்லிலா, பொருளிலா ?

நக்கீரன்: ________________________________

இறைவன்: ________________________________

தமிழ்

படித்தல் திறன் – வாய்விட்டுப் படித்தல்	செயல்பாடு – 3

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் பொருளுணர்ந்து படிக்க.

இளமை நலம் போற்றுதல் என்பது பொதுவாக மாந்தர்க்கு இயல்பான குணம். சிலருக்கு வயதைக் கேட்டாலே சினம் பிறக்கும். உடலில் தலையில் வயதாகிவிட்டதற்கு உரிய அடையாளங்கள் தென்பட்டாலும் வயதாகிவிட்டது என்று யாராவது கூறினாலும் அவர்களுக்குப் பொல்லாத கோபம் வருகிறது. இதனால், என்ன புரிகிறது! இளமையைப் போற்ற அனைவரும் விரும்புகின்றனர் என்பதே! ஆனால், இளமை என்பது உடலில் மட்டும் இருந்தால் போதாது. சிலர் ஆண்டில் இளையோராக இருக்கின்றனர். ஆனால், உணர்விலும் ஊக்கத்திலும் படுகிழமாகிச் செயலற்று ஏங்கித்திரிகின்றனர். இஃதெப்படி இளமையாகும்?

உடலில் இளமை; உணர்வில் இளமை; ஊக்கத்தில் இளமை காட்டவேண்டும். இளமையைப் போற்றுதல் வாழ்க்கைக்குச் சிறப்பைத் தரும். அதனாலன்றோ, இளமையையும் அழகையும் போற்றும்வகையில் நம் ஆன்றோர்கள் உடற்பயிற்சி முறைகளைக் கண்டார்கள். உடலுக்குப் போதிய பயிற்சி கொடுத்து எஃகுபோல் ஆக்கி இளமை நலம் பேணுக! துன்பங்களை வாழ்க்கையைக் கடக்கும் படிகளாக நினைத்து, எய்த்துக்களைத்துப் போகாமல், வெற்றியில் நம்பிக்கை வைத்து, உணர்வில் இளமை காத்து, வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்க! இன்றைய தோல்வி நாளைய வெற்றிக்கு அடிக்கல் என்னும் நம்பிக்கையுடன், இளமை நலமிக்க ஊக்கத்துடன் வாழ்க்கைப் பயணத்தை அமைத்துக்கொள்க.

– குன்றக்குடி அடிகளார், ஆலயங்கள் சமுதாய மையங்கள்

அகர வரிசைப்படுத்துதல்	செயல்பாடு – 4

கீழ்க்காணும் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

நிகழ்த்துக்கலை, மீமிசை, வையம், முந்நீர், மனத்துயர், நோக்கம், வீடுபேறு, நற்செயல், மேடுபள்ளம், வாழ்க்கை, நூற்பயன், மொழிபெயர்ப்பு, வேப்பிலை, நெற்றிக்கண், வெகுளாமை

ந – ______ , ______ , ______ , ______ , ______ .

ம – ______ , ______ , ______ , ______ , ______ .

வ – ______ , ______ , ______ , ______ , ______ .

சொல்வதனை எழுதுதல்	செயல்பாடு – 5

தமிழ்நாட்டு வாணிக வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்தது. பழங்காலந்தொட்டே தமிழர் உள்நாட்டு, அயல்நாட்டு வாணிகத்தில் சிறப்புற்றிருந்தனர். உள்நாட்டு வாணிகத்தைவிட அயல்நாட்டு வாணிகத்திலேயே வருவாய் மிகுதி. அயல்நாட்டு வாணிகத்திலும் தரைவழியாகச் செய்யும் வாணிகத்தைவிட, நீர் வழியாகச் செய்யும் வாணிகம் பெரும் பொருளைத் தரும். எனவே, அந்நாளில் கடல் வாணிகம் மிகவும் சிறந்திருந்தது.

குறுக்கெழுத்துச்சொல் விளையாட்டு	செயல்பாடு – 6

விடைக் குறிப்புகளைக்கொண்டு, கட்டங்களை நிரப்புக.

1						4	6
	2						
5		3					
	7		8		9		

இடமிருந்து வலம்

1. ‘திரைகடலோடியும் திரவியம் தேடு’ எனக் கூறிய தமிழ் மூதாட்டி __________ .
2. பழந்தமிழரின் கடற்பயணத்தைத் தொல்காப்பியம் __________ வழக்கம் எனக் குறிப்பிடுகின்றது.
3. சேர மன்னர்க்குரிய துறைமுகம் __________ .

மேலிருந்து கீழ்

4. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ எனக் கூறியவர் கணியன் __________ .
5. கடலில் செல்லும் பெரிய கலம் __________ எனப்பட்டது.
6. வெனிசு நாட்டைச் சேர்ந்த பயணி __________ .
7. பாண்டிய நாட்டின் வளம் பெருக்கிய துறைமுகம் __________ .
8. சீனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுள் ஒன்று __________ .
9. பௌவம் என்பதும் __________ என்பதும் ஒரு பொருள் தரும் சொற்கள்.

தமிழ்

அலகிடுதல்	செயல்பாடு – 7

தமிழ்த்திங்களின் பெயர்களை எழுதி அலகிட்டு வாய்பாடு எழுதுக.

வ.எண்	தமிழ்த் திங்களின் பெயர்கள்	அசை	வாய்பாடு
க	சித்திரை	நேர் நிரை	கூவிளம்
உ			
ங			
ச			
ரு			
சா			
எ			
அ			
கூ			
க0			
கக			
கஉ			

வழுஉச் சொற்களைத் திருத்துதல்	செயல்பாடு – 8

சொற்குவியலில் உள்ள திருந்திய சொற்களைப் பயன்படுத்தி உவமைத் தொடர்களில் உள்ள வழுஉச் சொற்களைத் திருத்துக.

(போர்த்திய, விழிக்கிறது, காற்றில், எண்ணெய், வெயில், பெய்த)

1.	ஆடிக் காத்தில் உதிரும் சருகுபோல	
2.	ஆந்தை முழிக்கிறதுபோல	
3.	உரிய காலத்தில் பெஞ்ச மழைபோல	
4.	எள்ளுக்குள் எண்ணைபோல	
5.	பசுத்தோல் போத்திய புலிபோல	
6.	வெய்யிலில் பட்ட புழுப்போல	

இடைச்சொல் அறிதல்	செயல்பாடு – 9

தொடரில் உள்ள வண்ண எழுத்துச் சொற்களுடன் ‘ஆவது’ என்னும் இடைச்சொல்லைச் சேர்த்துப் புதிய தொடரை உருவாக்குக.

1	திருக்குறளைப் படி.	திருக்குறளையாவது படி.
2	உயிரைக் கொடுத்து நாட்டைக் காப்போம்.	
3	நீ அல்லது உன் தம்பி போட்டியில் கலந்து கொள்ளுதல் வேண்டும்.	
4	தமிழன்பன் சொல்வது ‘மொழி நமது கண்கள்’.	
5	பாரதியின் தொழில் நாட்டுக்கு உழைத்தல்.	
6	யாழினிக்குப் பேச்சுப்போட்டியில் இரண்டாம் இடம் கிடைத்தது.	

சொல்லுருவாக்கம்	செயல்பாடு – 10

கீழ்க்காணும் சொற்களிலிருந்து பல சொற்களை உருவாக்குக.

முத்துக்குளித்தல் – முத்து, குளி, குளித்தல், முதல், துளி, குத்து, தத்து, குத்தல், முதுகு, தளி, முக்கு

பல்கலைக்கழகம் –

கலங்கரைவிளக்கம் –

குதிரையேற்றம் –

கவியரங்கம் –

விடுகதைக்கான விடை காணல்	செயல்பாடு – 11

விடுகதைகளுக்கான விடையை எழுதுக.

1. வானத்துக்கும் பூமிக்கும் ஆயிரம் கம்பிகள். அஃது என்ன? ________
2. உயிரில்லாத நீதிபதி ஒழுங்காய் நீதி கூறுகிறார். அவர் யார்? ________
3. செடியில் விளையாத பஞ்சு; தறியில் நூற்காத நூல்; கையில் தொடாத துணி. அஃது என்ன? ________
4. இரவும் பகலும் ஓய்வில்லை; அவன் படுத்தால் எழுப்ப ஆளில்லை. அவன் யார்? ________
5. உருவம் இல்லாத மனிதன் உலகமெல்லாம் சுற்றுகிறான். அவன் யார்? ________

நிகழ்ச்சிநிரல் எழுதுதல்	செயல்பாடு – 12

உன் பள்ளியில் நடைபெறவுள்ள விடுதலைத்திருநாள் நிகழ்ச்சிக்கான நிகழ்ச்சிநிரல் எழுதுக.

விடுதலைத் திருநாள் விழா

இடம் : ______________________

நாள் : ______________________

காலம் : ______________________

நிகழ்ச்சிநிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து : ______________________

கொடியேற்றம் : ______________________

கொடிப்பாடல் : ______________________

வரவேற்புரை : ______________________

தலைமையுரை : ______________________

சிறப்புரை : ______________________

கலை நிகழ்ச்சிகள் : ______________________

பரிசு வழங்கல் : ______________________

நன்றியுரை : ______________________

நாட்டுப்பண் : ______________________

வாழ்க்கைத்திறன்	செயல்பாடு – 13

என்னால் முடியாதது யாரால் முடியும்?



வாழ்வில் வெற்றிபெறத் துடிப்பவர் தோல்வியைப் பொருட்படுத்தமாட்டார்.

உன்னால் முடியாது என எவரும் இவரிடம் கூறிவிடமுடியாது.

என்னால் மற்றவர்களைப்போல் செயல்படமுடியும் என மெய்ப்பித்துக்காட்டினார், இருப்பத்தேழு வயதேயான ஜெசிக்கா காக்ஸ். இவர் செய்த அருஞ்செயல் என்ன?

பிறவியிலேயே இரு கையும் இல்லாத இவர், தன்னிரு காலால் வானூர்தியை ஓட்டிய முதல் பெண்மணி என்னும் பெருமைக்குரியவர்.

தன்னம்பிக்கை, விடாமுயற்சி, துணிச்சல் ஆகியன இவரைச் சிறப்பாகச் செயலாற்றத் தூண்டின. ஆம், மனமிருந்தால் வழியுண்டு. இவரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் கருத்துகளைக் குழுவில் கலந்துரையாடுக.

கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

1. அடிக்கோடிட்ட சொல்லுக்கு ஏற்புடைய பொருளை எழுதுக. 4 × 1 = 4

அ. உள்நாட்டு வாணிகத்தைவிட அயல்நாட்டு வாணிகத்திலேயே <u>வருவாய்</u> மிகுதி.

1. செலவு 2. ஏற்றுமதி 3. இறக்குமதி 4. வரவு

ஆ. திரைகடலோடியும் <u>திரவியம்</u> தேடு.

1. செல்வம் 2. வாசனைப்பொருள் 3. கப்பல் 4. வாணிகம்

இ. யாதும் ஊரே யாவரும் <u>கேளிர்</u> என்பது கணியன் பூங்குன்றனாரின் வாக்கு.

1. நண்பர் 2. உறவினர் 3. கேள் 4. பகைவர்

ஈ. பழந்தமிழரின் கடமைகளுள் ஒன்று <u>பொருளீட்டுதல்</u>.

1. பொருள் பெறுதல் 3. பொருள் பெருக்குதல்

2. பொருள் கொடுத்தல் 4. பொருள் அழித்தல்

3. ஓரிரு வரிகளில் விடையளிக்க. 6 × 1 = 6

அ. பொருள்வயிற் பிரிவு எத்தனை வகைப்படும். அவை யாவை?

ஆ. கடலைக் குறிக்கும் பல்வேறு சொற்களுள் ஐந்தனை எழுதுக.

இ. பாண்டிய நாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டு அறிஞர் யார்?

ஈ. சீனத்திலிருந்து தமிழகத்துக்கு இறக்குமதியான பொருள்கள் யாவை?

உ. சோழ நாட்டின் துறைமுகம் எது?

ஊ. பாண்டிய நாட்டின் வளம்பெருக்கிய துறைமுகம் எது?

“என்னால் முடியும், நானே செய்தேன்”

(‘I can, I did’)

மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

வ.எண்	நாள்	பாட எண்	பாடத்தலைப்பு	செயல்பாடு	குறிப்புரை

தமிழ்நாடு அரசு

ஒன்பதாம் வகுப்பு

இரண்டாம் பருவம்

தொகுதி 1

தமிழ்

ENGLISH

விற்பனைக்கு அன்று

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு இலவசப்பாடநூல்
வழங்கும் திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2013
(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006

நூல் அச்சாக்கம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006

இந்நூல் 80 ஜி எஸ் எம் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது

விலை : ரூ.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

பாடநூல் வலைதளம்

www.textbooksonline.tn.nic.in

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல், பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

THE NATIONAL INTEGRATION PLEDGE

"I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation."

"I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means."

A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vandemataram!

Signature

பொருளடக்கம்

தமிழ் (1 – 98)

இயல்		பக்க எண்
1.	திருக்குறள்	2
	இன்பம்	6
	பெருந்தலைவர் காமராசர்	8
	மு. வரதராசனாரின் கடிதம் (தம்பிக்கு)	13
	பெயர்ச்சொல் : தொழில், பண்பு	16
	வழாநிலை, வழு, வழுவமைதி	20
2.	முத்தொள்ளாயிரம்	36
	கலிங்கத்துப்பரணி	39
	உலகளாவிய தமிழர்	42
	திரு. வி. கலியாணசுந்தரனாரின் தமிழ்ப்பணி	46
	ஆகுபெயர் : சொல்லாகுபெயர், தானியாகுபெயர்	49
	பொருள்கோள் : விற்பூட்டுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள்	50
3.	உமர்கய்யாம் பாடல்கள்	63
	மணிமேகலை	66
	உணவே மருந்து	74
	நோய் நீக்கும் மூலிகைகள்	78
	யாப்பு : செய்யுள் உறுப்பு (தளை)	82
	அணி : வேற்றுமையணி	85

மனப்பாடப் பகுதி

இயல்	செய்யுள்	அடிகள்
1.	திருக்குறள் (1, 2, 4, 6, 10)	10
	இன்பம்	4
2.	கலிங்கத்துப் பரணி (2)	4
3.	உமர்கய்யாம் பாடல்கள் (2)	4
	மணிமேகலை (47 – 52 அடிகள்)	6
	மனப்பாட அடிகள் மொத்தம்	28

(பாடநூலுள் * இவ் உடுக் குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதி)

CONTENTS

ENGLISH (99-140)

Unit	Title	Page No.
1.	The One Minute Apology [Prose]	102
*	The Apology [Poem]	115
	The Tears of the Desert [Supplementary]	116
2.	The Marvellous Machine [Prose]	118
	Be Glad your Nose is on your Face [Poem]	131
	Visit to the Dentist [Supplementary]	133

ஒன்பதாம் வகுப்பு

தமிழ்

இரண்டாம் பருவம்

தமிழ்

திருக்குறள்

கேள்வி

(சான்றோர் உரைகளைக் கேட்டல்)

1. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம், அச்செல்வம்
   செல்வத்துள் எல்லாம் தலை. ★

பொருள் : செல்வங்களுள் சிறந்தது கேள்விச் செல்வம். அதுவே செல்வங்கள் அனைத்திலும் முதன்மையானது.

சொற்பொருள் : செவிச்செல்வம் – கேள்விச்செல்வம்; தலை – முதன்மை.

2. செவிக்குணவு இல்லாத போழ்து, சிறிது
   வயிற்றுக்கும் ஈயப் படும். ★

பொருள் : செவிக்குணவாகிய நல்லறிவு கிடைக்காதபொழுதில் வயிற்றுக்கும் சிறிதளவு உணவு அளிக்கப்படும்.

சொற்பொருள் : போழ்து – பொழுது; ஈயப்படும் – அளிக்கப்படும்.

இலக்கணக்குறிப்பு : வயிற்றுக்கும் – இழிவுச்சிறப்பும்மை.

பிரித்தறிதல் : செவிக்குணவு = செவிக்கு + உணவு.

(இவ்விரு குறட்பாவும் கேள்வியின் சிறப்பினைக் கூறுகின்றன.)

3. செவியுணவின் கேள்வி உடையார் அவியுணவின்
   ஆன்றாரோ டொப்பர் நிலத்து.

பொருள்: செவி உணவாகிய கேள்வியினை உடையவர் இவ்வுலகில் வாழ்ந்தாலும், அவர், அவி உணவைக் கொள்ளும் தேவர்களுக்கு ஒப்பாவர்.

சொற்பொருள்: அவி உணவு – தேவர்களுக்கு வேள்வியின்பொழுது கொடுக்கப்படும் உணவு. ஆன்றோர் – கல்வி, கேள்வி, பண்பு ஆகியவற்றில் சிறந்தோர்; ஒப்பர் – ஒப்பாவர்.

இலக்கணக்குறிப்பு: அவியுணவு – இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

(இக்குறள் கேள்வி அறிவுடையவரின் சிறப்பினைக் கூறுகிறது.)

4. கற்றிலன் ஆயினும் கேட்க, அஃதொருவற்(கு)
   ஒற்கத்தின் ஊற்றாந் துணை. ★

பொருள்: ஒருவன் கற்க வாய்ப்பு இல்லாமல் இருந்தாலும் கற்றாரிடம் சென்று கேட்டறிதல்வேண்டும். வாழ்க்கையில் தளர்ச்சியுறும்போது அக்கேள்வியறிவானது, அவனுக்கு ஊன்றுகோல்போலத் துணையாக நிற்கும்.

சொற்பொருள் : ஒற்கம் – தளர்ச்சி.

இலக்கணக்குறிப்பு : ஊற்று – ஊன்று என்பதன் வலித்தல் விகாரம்.

பகுபத உறுப்பிலக்கணம் : கேட்க – கேள் (ட்) + க. கேள் – பகுதி; ள் – ட் ஆனது விகாரம்; க – வியங்கோள் வினைமுற்று விகுதி.

5. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

பொருள் : வழுக்குகின்ற நிலத்தில் ஊன்றுகோல் உதவுவதுபோல, நல்லொழுக்கம் மிக்க பெரியோரின் வாய்ச்சொற்கள் வாழ்க்கைக்கு என்றும் உதவும்.

சொற்பொருள் : ஊற்றுக்கோல் – ஊன்றுகோல்; அற்றே – போன்றதே.

இலக்கணக்குறிப்பு : இழுக்கல், ஒழுக்கம் – தொழிற்பெயர்கள்; ஊற்றுக்கோல் – ஊன்றுகோல் என்பதன் வலித்தல் விகாரம்.

அணி : உவமையணி.

6. எனைத்தானும் நல்லவை கேட்க, அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். ★

பொருள் : எவரும் அறிஞரின் நல்லுரைகளைக் கேட்டல் வேண்டும். அந்நல்லுரை எவ்வளவு சிறிதாயினும் அதனைக் கேட்ட அளவிற்கு நிறைந்த பெருமையை அது தேடித் தரும்.

சொற்பொருள் : எனைத்தானும் – எவ்வளவு சிறிதாயினும்; அனைத்தானும் – கேட்ட அளவிற்கு; ஆன்ற – நிறைந்த.

இலக்கணக்குறிப்பு : ஆன்றபெருமை – பெயரெச்சம்.

7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்(து)
ஈண்டிய கேள்வி யவர்.

பொருள் : நுட்பமாக ஆய்ந்தறிந்த கேள்வி அறிவுடையோர், சொல்பவரின் கருத்தைத் தவறாக உணர்ந்திருந்தாலும் ஒருபொழுதும் தீயசொற்களைக் கூறமாட்டார்.

சொற்பொருள் : பிழைத்துணர்ந்தும் – தவறாக உணர்ந்திருந்தாலும்; பேதைமை – அறியாமையின்பாற்பட்ட தீயசொற்கள்; இழைத்துணர்ந்து – நுட்பமாக ஆராய்ந்து; ஈண்டிய – ஆய்ந்தறிந்த.

பகுபத உறுப்பிலக்கணம் : உணர்ந்து = உணர் + த் (ந்) + த் + உ. உணர் – பகுதி; த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

(இந்நாலு குறட்பாவும் கேட்பதனால் வரும் நன்மைகளைக் கூறுகின்றன.)

தமிழ்

8. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

பொருள்: கேள்வியால் துளைக்கப்படாத செவிகளுக்குக் கேட்கும் தன்மை இருப்பினும் கேளாத செவிகளாகவே கருதப்படும்.

சொற்பொருள்: தகையவே – தன்மையதே; தோட்கப்படாத – துளைக்கப்படாத.

இலக்கணக்குறிப்பு: கேளாத்தகையவே – ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.

9. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது.

பொருள்: நுட்பமாகிய கேள்வியறிவு இல்லாதவர் பணிவான சொற்களைப் பேசுபவரைக் காண்பது அரிது.

சொற்பொருள்: நுணங்கிய – நுட்பமாகிய; வணங்கிய – பணிவான.

10. செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என். ★

பொருள்: கேள்வியின் வாயிலாகச் செவிச்சுவை உணராது, உணவின் வாயிலாக வாய்ச்சுவை மட்டுமே உணரும் மக்கள் இறந்தாலும் என்ன? வாழ்ந்தாலும் என்ன?

சொற்பொருள்: வாயுணர்வின் மாக்கள் – வாய்ச்சுவை மட்டுமே அறிந்தோர்; அவியினும் – இறந்தாலும்.

இலக்கணக்குறிப்பு : அவியினும் வாழினும் – எண்ணும்மை.

பிரித்தறிதல்: சுவையுணரா = சுவை + உணரா; வாயுணர்வு = வாய் + உணர்வு.

(இம்மூன்று குறட்பாவும் கேளாதவழி ஏற்படும் குற்றங்கள்பற்றிக் கூறுகின்றன.)

மாதிரி வினாக்கள்

அ) புறவய வினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. செவிக்குணவாவது ______________.

அ) புகழ் ஆ) கேள்வி இ) மகிழ்ச்சி

2. ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் ______________.

அ) ஊற்றுக்கோல் ஆ) அளவுகோல் இ) துலாக்கோல்

தமிழ்

2. சீர் மோனைச்சொற்களை எடுத்தெழுதுக.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்

3. இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்துக.

அனைத்தானும் ஆன்ற தரும் பெருமை
நல்லவை எனைத்தானும் கேட்க

4. பொருள் எழுதுக.

ஒற்கம், ஆன்ற, நுணங்கிய

ஆ) குறுவினாக்கள்

1. தலையாய செல்வம் எது ?
2. கேள்வியுடையாரின் சிறப்பு யாது ?
3. ஒற்கத்தின் ஊற்றாம் துணை எது ?
4. கேள்வியால் தோட்கப்படாத செவி எத்தன்மையது ?
5. பணிவான சொற்களைப் பேசாதவர் யார் ?

இ) சிறுவினாக்கள்

1. கேள்வியின் சிறப்பாக வள்ளுவர் கூறுவன யாவை ?
2. கேள்விச்செல்வத்தினால் பெறப்படும் நன்மைகள் யாவை ?
3. கேள்விச்செல்வம் பெறாததனால் ஏற்படும் குற்றங்கள் யாவை ?

ஈ) நெடுவினா

செவிச்செல்வம்பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

உடைமைகள் பத்து

திருக்குறளில் பத்து அதிகாரங்கள் உடைமை என்னும் பெயரில் அமைந்துள்ளன.

1. அன்புடைமை
2. அடக்கமுடைமை
3. ஒழுக்கமுடைமை
4. பொறையுடைமை
5. அருளுடைமை
6. அறிவுடைமை
7. ஊக்கமுடைமை
8. ஆள்வினையுடைமை
9. பண்புடைமை
10. நாணுடைமை

குறளும் ஏழு என்னும் எண்ணுப்பெயரும்

திருக்குறளுக்கும் ஏழு என்னும் எண்ணுக்கும் பெரிதும் தொடர்புள்ளது. திருக்குறள் ஏழு சீரால் அமைந்த குறள் வெண்பாக்களைக் கொண்டது. ஏழு என்னும் எண்ணுப்பெயர் எட்டுக் குறட்பாவில் இடம்பெற்றுள்ளது. அதிகாரங்கள், 133. இதன் கூட்டுத்தொகை ஏழு. மொத்தக் குறட்பாக்கள் 1330. இதன் கூட்டுத்தொகையும் ஏழு.

தமிழ்

இன்பம்

பழந்தமிழ் கற்றல் இன்பம்
பலநாடு சுற்றல் இன்பம்
எழுந்திடு புதுமை தன்னை
ஏற்றிடல் வாழ்வுக் கின்பம்
குழந்தையின் தளிர்க்கை பட்ட
கூழினை உண்ப தின்பம்
இழந்ததைப் பெறுதல் இன்பம்
இசைபட வாழ்தல் இன்பம்!

★ கற்றவர் முன்தாம் கற்ற
கல்வியைக் கூறல் இன்பம்
வெற்றியை வாழ்வில் சேர்க்கும்
வினைபல புரிதல் இன்பம்
சிற்றினக் கயவ ரோடு
சேராது வாழ்தல் இன்பம்
பெற்றதை வழங்கி வாழும்
பெருங்குணம் பெறுதல் இன்பம்! ★

– சுரதா

பொருள்

பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்பது மகிழ்ச்சி தரும். பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வது மனத்துக்கு மகிழ்ச்சி தரும். காலந்தோறும் மாறிவரும் தேவையான புதுமைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் பெறுதல் வாழ்வுக்கு மகிழ்ச்சி தரும்.

குழந்தை, தன் பிஞ்சுக்கையால் கூழ்போலப் பிசைந்த உணவை ஒருவன் உண்ணும் போதும், தான் இழந்த பொருளை மீண்டும் அடையும்போதும், பிறர் புகழுமாறு வாழும்போதும் மகிழ்ச்சி ஏற்படும். கற்றோர் அவையில், தான் கற்ற கல்வியை எடுத்துரைப்பதும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான செயல்களில் ஈடுபடுவதும் மகிழ்ச்சி தரும்.

கீழ்க்குணம் உடைய தீயோரின் நட்பை விலக்கி வாழ்தலும், தாம் பெற்ற செல்வத்தைப் பிறருக்கு வழங்கும் சிறந்த குணம்பெறுதலும் வாழ்விற்கு மகிழ்ச்சி தரும்.

சொற்பொருள் : இசைபட – புகழுடன்; கயவர் – கீழ்க்குணமுடையோர்.

இலக்கணக்குறிப்பு : தளிர்க்கை – உவமைத்தொகை; பழந்தமிழ், சிற்றினம், பெருங்குணம் – பண்புத்தொகைகள்; வழங்கி – வினையெச்சம்; கற்றல், பெறுதல், வாழ்தல் – தொழிற்பெயர்கள்.

ஆசிரியர் குறிப்பு : உவமைக் கவிஞர் சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். இவர், திருவாரூர் மாவட்டத்திலுள்ள பழையனூரில் 23.11.1921அன்று பிறந்தார். பெற்றோர் திருவேங்கடம் – செண்பகம் ஆவர்.

பாவேந்தர் பாரதிதாசன்மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைச் சுப்புரத்தினதாசன் என மாற்றிக்கொண்டார். அதன் சுருக்கமே சுரதா என ஆயிற்று.

தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், சுரதாவின் கவிதைகள் முதலிய கவிதை நூல்களை சுரதா இயற்றியுள்ளார்.

தேன்மழை என்னும் கவிதை நூல், தமிழகஅரசின் தமிழ் வளர்ச்சித் துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்றுள்ளது. தமிழக இயலிசை நாடக மன்றத்தின் கலைமாமணிப் பட்டத்தையும், தமிழகஅரசின் பாவேந்தர் விருதையும் இவர் பெற்றுள்ளார்.

நூற்குறிப்பு : தேன்மழை நூலில் இயற்கையெழில் முதலாக ஆராய்ச்சி ஈறாகப் பதினாறு பகுதிகளாகக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள், தேன் துளிகள் என்னும் பகுதியில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. குழந்தையின் தளிர்க்கை பட்ட ________ உண்பது இன்பம்.
2. கற்றவர்முன் தாம் கற்ற ________ இன்பம்.
3. வெற்றியை வாழ்வில் சேர்க்கும் ________ இன்பம்.
4. ________ சேராது வாழ்தல் இன்பம்.

ஆ) குறுவினாக்கள்

1. எதனைக் கற்றல் இன்பம்?
2. வாழ்வுக்கு இன்பம் தருவது, எது?
3. எவ்வாறு வாழ்தல் இன்பம் தரும்?
4. எத்தகு வினைபுரிதல் வேண்டும்?
5. கல்வியைக் கூறல் இன்பம்தரும். எப்போது?
6. பெருங்குணம் எது?

இ) நெடுவினா

இன்பம் தருவனவாக உவமைக்கவிஞர் கூறுவன யாவை?



பெருந்தலைவர் காமராசர்

தன்னலமற்ற தலைவர்; கர்மவீரர்; கல்விக்கண் திறந்த முதல்வர்; ஏழைப்பங்காளர் என்னும் புகழுரைகளுக்கெல்லாம் உரியவர் காமராசர். இவர், விருதுநகரில் குமாரசாமி, சிவகாமி இணையர்க்கு மகனாய் 1903ஆம் ஆண்டு சூலைத் திங்கள் பதினைந்தாம் நாளன்று தோன்றினார்.

இளமைப்பருவம்

நாட்டாண்மைக்காரராக இருந்த காமராசரின் தாத்தா, பல சமயங்களில் பஞ்சாயத்துக் கூட்டங்களுக்குத் தன்பெயரன் காமராசரையும் அழைத்துச் செல்வார். காமராசர், ஓர் ஓரமாக உட்கார்ந்தபடி தாத்தா கூறும் தீர்ப்புகளைக் கவனித்து வருவதனைக் கண்ட பலரும் காமராசரின் பண்பைப் பாராட்டினர். காமராசர், திண்ணைப் பள்ளியில் தமிழ் எழுத்துகளைக் கற்று, அதன்பிறகு ஓர் ஆண்டு தமிழ்ப்பாடம் கற்றார்.

அதன்பின்பு, கல்வியோடு உணவளிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று காமராசர் கல்வி கற்றார். காமராசர், தமது ஏழுவயதில் வந்தேமாதரம் என்று சுவரொட்டியில் எழுதப்பட்டிருப்பதனைக் கண்டார். அந்தச் சொல், அவரது மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அவரது உள்ளத்தில் மெல்லமெல்ல விடுதலைப் போராட்ட உணர்வும் சுடர்விட்டுக் கொண்டிருந்தது. அவருக்குப் பன்னிரண்டு வயதிலேயே பள்ளிக்குச் செல்லவியலா நிலை ஏற்பட்டது.

அரசியலில் ஈடுபாடு

காமராசர், பள்ளி செல்ல இயலாதபோதும் நாள்தோறும் செய்தித்தாள்களைப் படித்தும், அரசியல் கூட்டங்களில் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டும், தம்முடைய அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டார்; மெய்கண்டான் புத்தகச்சாலை என்னும் நூல்நிலையத்திற்குச் சென்று இலெனின், கரிபால்டி, நெப்போலியன் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்துத் திறமையாகப் பேசவும் வாதம் புரியவும் தொடங்கினார்.

அவர், இளமையில் தேசிய இயக்கமான காங்கிரசில் சேர்ந்து, அதன் தொண்டராகத் தம் அரசியல் வாழ்வினைத் தொடங்கினார்; கட்சிக் கூட்டங்களை நடத்தினார்; ஊர்வலங்களில் கலந்துகொண்டார்; கொடி பிடித்தார்; சைமன் குழு எதிர்ப்பு, உப்புச் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு முதலிய போராட்டங்களில் கலந்துகொண்டார்; சிறை சென்றார். பதினோராண்டுகள் சிறையில் கழித்தார். அவரது தன்னலமற்ற உழைப்பைக்கண்ட தலைவர் சத்தியமூர்த்தி, காமராசரைக் கட்சியின் செயலாளராக நியமித்தார். சத்தியமூர்த்தியைக் காமராசர், தம் அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டார். இவர், 1937இல் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவர்களை உருவாக்குபவர்

1939ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கட்சியின் தலைவராகக் காமராசர் தேர்ந்தெடுக்கப் பட்டார். பன்னீராண்டுகள் அப்பதவியில் இருந்தார்; செல்வாக்குமிக்க தலைவராகத் திகழ்ந்தார்.

1945இல் பிரகாசம், 1947இல் ஓமந்தூர் இராமசாமி மற்றும் 1949இல் குமாரசாமி ஆகியோர் முதலமைச்சராகப் பதவியேற்பதற்குக் காமராசர் காரணமாக இருந்தார். நேருவின் மறைவுக்குப்பின் லால் பகதூர் சாஸ்திரியையும், லால் பகதூர் சாஸ்திரியின் மறைவுக்குப்பின் இந்திரா காந்தியையும் நாட்டின் முதன்மையமைச்சராக ஆக்கியதில் இவர் பெரும்பங்காற்றினார். அதனால், தலைவர்களை உருவாக்குபவர் என இவர் அழைக்கப்பட்டார்.

முதலமைச்சர் காமராசர்

1954இல் இராஜாஜி முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியதும், காமராசர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1963இல் தாமாகப் பதவி விலகும்வரை அப்பதவியில் திறம்படச் செயல்பட்டார். அவரது அமைச்சரவை சிறியதாக இருந்தபோதிலும் செயல்திறன் மிக்கதாக விளங்கியது. அதனால், மக்கள் நலன்பயக்கும் நல்ல பல திட்டங்களை அவரால் செயல்படுத்த முடிந்தது. காமராசர் ஆட்சிக் காலத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் தொழிலமைச்சராகவும், சி. சுப்பிரமணியம் கல்வியமைச்சராகவும் இருந்து அவருக்கு உறுதுணையாகப் பணியாற்றினர்.

தொழில் முன்னேற்றம்

காமராசர் முதலமைச்சராக இருந்த காலத்தில் இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அப்போது, தமிழகத்தில் பொருளியல் தொழில்துறைத் திட்டங்கள் பல தொடங்கப்பட்டன; மின் திட்டங்கள் மிகுந்தன; சாலைகள் போடப்பட்டன; கிண்டி, அம்பத்தூர், இராணிப்பேட்டை முதலிய இடங்களில் பெரிய தொழிற்பேட்டைகளும்

மாவட்டந்தோறும் சிறிய தொழிற்பேட்டைகளும் அமைக்கப்பெற்றன; வேளாண்மைக்கெனப் பாசனவசதிகள் செய்யப்பட்டன; அணைகள் கட்டப்பட்டன.

இவர் காலத்தில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றியது; அதனால், தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத சிற்றூர்களே இல்லை என்னும் நிலை உருவானது. இவர், நெசவுத்தொழில் வளர்ச்சிக்காகத் திட்டங்கள் பல தீட்டினார்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலை, உதகை இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை, கிண்டி அறுவைசிகிச்சைக் கருவித் தொழிற்சாலை, சருக்கரை ஆலை, சோடா உப்புத் தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை, பெரம்பூர்த் தொடர்வண்டிப் பெட்டித் தொழிற்சாலை, மேட்டூர்க் காகிதத் தொழிற்சாலை முதலியன இவரது ஆட்சியில் தொடங்கப்பெற்றன.

கல்விப் புரட்சி

காமராசர் காலத்தில் கட்டாயக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது. தெருதோறும் தொடக்கப்பள்ளி, ஊர்தோறும் உயர்நிலைப் பள்ளி என்பதே அவரது நோக்கமாக அமைந்தது. பள்ளி வேலைநாள்களை நூற்றெண்பதிலிருந்து இருநூறாக உயர்த்தினார் காமராசர். தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் இவரால் தொடங்கப்பட்டது. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டுப் பள்ளிகளுக்கான அடிப்படைப்பொருள்களும் கருவிகளும் பெறப்பட்டன.

இவர், ஈராண்டுகளில் நூற்று முப்பத்து மூன்று மாநாடுகள் கூட்டினார். இவ்வாறு கூட்டப்பட்ட மாநாடுகள் மூலம் பல கோடி ரூபாய் மதிப்புள்ள நன்கொடைகள் கிடைத்தன; உயர்நிலைப் பள்ளிவரை இலவசக் கல்வி கொண்டு வரப்பட்டது.

இவரால், ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மேலும், உடற்பயிற்சிக் கல்லூரிகளும் ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் திறக்கப்பட்டன. மருத்துவக் கல்லூரி முதலான தொழிற்கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடனளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

சமூக முன்னேற்றத் திட்டங்கள்

சமுதாய அமைப்பின் அடித்தளத்தில் உள்ளவர்களைக் கைதூக்கிவிட, இவர் முற்போக்கு நடவடிக்கைகள் பல எடுத்தார். தஞ்சாவூர்ப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்திச் சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு அறுபது விழுக்காடு பங்கு கிடைக்க வழிவகை செய்தார்.

நிலச்சீர்திருத்தம் இவரால் கொண்டுவரப்பட்டது; நில உச்சவரம்பு முப்பது ஏக்கர் எனக் குறைக்கப்பட்டது. நிலமுதலாளிகளிடமிருந்து உபரிநிலங்கள் பெறப்பட்டு நிலமில்லாதோருக்கு அவை பிரித்தளிக்கப்பட்டன. மீனவர், கருப்புக்கட்டி காய்ச்சுபவர், கைத்தறியாளர், குயவர் முதலிய சிறுதொழிலாளர் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மக்கள் நலத்திட்டங்களில் ஒய்வூதியம் குறிப்பிடத்தக்கது. நகர்ப்புற வீடுகட்டும் திட்டம், இலவச மருத்துவவசதி முதலியனவும் இவரால் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

காமராசர் திட்டம்

1962ஆம் ஆண்டு சீனப் படையெடுப்புக்குப் பின், காங்கிரசுக் கட்சியின் செல்வாக்குச் சரியத் தொடங்கியது. இடைத்தேர்தல்கள் சிலவற்றில் காங்கிரசுக் கட்சி தோல்வியடைந்தது. எனவே, கட்சியை வலுப்படுத்த மூத்த தலைவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப்பணியில் ஈடுபடவேண்டும் எனக் காமராசர் வலியுறுத்தினார்; முதலில் தாமே முதலமைச்சர் பதவியைவிட்டு விலகிக் கட்சிப்பணிக்குத் திரும்பினார். மொரார்ஜி தேசாய், லால்பகதூர் சாஸ்திரி முதலியோரும் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப் பணிகளில் ஈடுபட்டனர். அத்திட்டத்தைக் காமராசர் திட்டம் என அழைத்தனர்.

அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர்

புவனேசுவர் நகரில் 1963ஆம் ஆண்டில் கூடிய காங்கிரசு மாநாட்டில், காமராசர் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராகப் பதவியேற்றார். அப்பொழுது நாடெங்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கட்சிப்பூசல்களைப் போக்கி, மக்களிடம் நேரடித் தொடர்புகொண்டார்.

இரஷ்யாவிற்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று அந்நாட்டுத் தொழில் முன்னேற்றங்களை நேரில் கண்டார். அவற்றை நம் நாட்டிலும் செயல்படுத்த முனைந்தார். இந்தியப் பிரதமர் நேரு 1964ஆம் ஆண்டில் காலமானார். புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் எழுந்தது. அப்பதவிக்குக் காங்கிரசுக் கட்சியினுள் போட்டி ஏற்படும் சூழ்நிலை தோன்றியது. போட்டி ஏற்பட்டால் கட்சியில் பிளவு ஏற்படலாம் என்னும் அச்சம் நிலவியது.

இவ்வேளையில் காமராசர் நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சி உறுப்பினர்களின் கருத்தைத் தனித்தனியே கேட்டறிந்து, லால்பகதூர் சாஸ்திரியைப் போட்டியின்றிப் பிரதமராகத் தேர்ந்தெடுக்க வழிவகை செய்தார்.

சாஸ்திரி எதிர்பாராதமுறையில் 1966ஆம் ஆண்டு தாஸ்கண்டில் உயிரிழந்தார். மீண்டும் பிரதமரைத் தெரிவுசெய்வதில் சிக்கல் எழுந்தது. இவ்வமயம் காமராசர், நேருவின் மகள் இந்திராகாந்தி, பிரதமர் பதவிக்குப் பொருத்தமானவர் எனக் கருதி, அவருக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கினார். அதனாலேயே இந்திராகாந்தி பிரதமரானார். இவ்வாறு, தம் தலைமையையும் செல்வாக்கையும் பயன்படுத்தி, இருமுறை பிரதமர்களை உருவாக்கினார். இத்தகைய செயல்வீரரான காமராசர், அனைத்துக் கட்சியினராலும் மதிக்கப்பெறும் பெருந்தலைவராக உயர்ந்தார்.

காமராசருக்குச் செய்த சிறப்புகள்

காமராசருக்கு நடுவணரசு, பாரத ரத்னா (இந்திய மாமணி) விருது அளித்தும் நாடாளுமன்றத்தில் இவருக்கு ஆளுயர வெண்கலச்சிலையை நிறுவியும் சிறப்பித்தது.

தமிழக அரசு, இவரின் கல்விப்பணியைச் சிறப்பிக்கும் வகையில் மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் எனப் பெயர் சூட்டியது; கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் கட்டியது; சென்னை மெரீனா கடற்கரைச் சாலையில் சிலையமைத்துச் சிறப்பித்தது.

காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் நினைவு இல்லமாக ஆக்கப்பட்டது.

விருதுநகரிலிருந்த காமராசரின் இல்லமும் அரசுடைமையாக்கி நினைவு இல்லமாக்கப்பட்டது. தேனாம்பேட்டையில் காமராசர் அரங்கம் நிறுவப்பட்டது. தமிழக அரசு, காமராசர் பிறந்த நாளான சூலைப் பதினைந்தாம் நாளை ஆண்டுதோறும் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்துள்ளது. இவரைக் கல்விக் கண் திறந்தவர் எனத் தமிழுலகம் போற்றுகிறது.

மறைவு

காந்தியடிகள்மீது அளவற்ற அன்பு கொண்ட காமராசர், 1975 ஆம் ஆண்டு காந்தியடிகளின் பிறந்தநாளான அக்டோபர் இரண்டாம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் மறைந்தாலும், இன்றைய தலைவர்களுக்கு முன்னோடியாக நின்று பெருந்தலைவர் என்னும் பொருத்தமான புகழுரையால் நிலைத்து வாழ்கிறார்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. காமராசர், தம் பேச்சாற்றலை வளர்த்துக்கொண்ட இடம் __________ புத்தகச்சாலை.
2. காமராசர் ஆட்சிக்காலத்தில் கல்வியமைச்சராக இருந்தவர் __________ .
3. காமராசருக்கு நடுவணரசு ______________________ விருது அளித்துச் சிறப்பித்தது.
4. காமராசர் பிறந்த நாளை ________________ ஆகக் கொண்டாடுகிறோம்.
5. காமராசர் முதலமைச்சராகப் பதவியேற்ற ஆண்டு ____________ .

ஆ) குறுவினாக்கள்

1. காமராசரின் பிறப்பு மற்றும் பெற்றோர் பற்றி எழுதுக.
2. காமராசர் பங்கேற்ற விடுதலைப்போராட்டங்கள் யாவை ?
3. காமராசர், தலைவர்களை உருவாக்குபவர் என அழைக்கப்படக் காரணம் யாது ?
4. காமராசர் செய்த நிலச்சீர்திருத்தம்பற்றி எழுதுக.
5. காமராசர் திட்டம் என்றால் என்ன ?
6. காமராசரின் நினைவாகத் தமிழக அரசு செய்த சிறப்புகள் யாவை ?

இ) சிறுவினாக்கள்

1. காமராசரின் அரசியல் ஈடுபாடுபற்றி எழுதுக.
2. காமராசர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட தொழில் முன்னேற்றம் பற்றி எழுதுக.
3. 'கல்விக்கண் திறந்த முதல்வர்' எனக் காமராசர் போற்றப்படக் காரணம் யாது ?
4. காமராசர், பிரதமர்களை உருவாக்கிய நிகழ்வுகளை விவரிக்க.

ஈ) நெடுவினா

முதலமைச்சராகக் காமராசர் நாட்டுக்குச் செய்த வளர்ச்சிப் பணிகளைத் தொகுத்துரைக்க.

மு.வரதராசனாரின் கடிதம்

தம்பிக்கு

அன்புள்ள எழில்,

ஆக்கவேலைமுறைகள் இன்ன இன்ன என்று வகுத்து அனுப்புமாறு எழுதியிருக்கிறாய், எழுதுவேன். அதற்குள் ஒன்று சொல்ல விரும்புகின்றேன்.

தமிழரிலே தனித்தனியே இவர் இவர் இப்படி உயர்ந்தார் என்று சொல்வது பழைமை. தமிழர்கள் கூடிக்கூடி இன்னது செய்து உயர்ந்தார்கள் என்று சொல்லும் நற்சொல்லே இனி வேண்டும். சேர்ந்து செயல் செய்து உயரும் வல்லமை தமிழருக்கு உண்டு என்பதை இனி உலகுக்கு உணர்த்த வேண்டும். தனியொருவரின் உயர்வு இனத்துக்கு என்ன நன்மை செய்யும்? தமிழ்ச்சமுதாயம் உயர வேண்டுமா? தனி ஒருவன் அதோ ஒரு தொழிற்சாலையைத் திறமையாக நடத்துகிறான் என்று சொல்லும் நிலை போதாது. தமிழர் பலர் கூடி நடத்தும் தொழிற்சாலை அதோ! திறமையாக நடத்தப்படுகிறது என்ற புகழ்நிலை வரவேண்டும்; வளர வேண்டும். அன்றுதான் தமிழர் சமுதாயம் உயர வழிபிறக்கும்.

இன்றுள்ள தமிழகத்தில் தனி மரங்களாகத் தமிழர் உயர்வதையே காண்கிறோம். தோப்பாகக் கூடி உயர்வதைக் காண்கிறோமா? இல்லையே! இது பெருங்குறை. ஒற்றுமை இல்லாமையே இதற்குக் காரணம் என்று உணர்கிறாயா? தமிழர் நான்குபேர் சேர்ந்து ஒரு மனமாய் ஒன்றை நடத்த முடியாது, நடத்தினாலும் அது நெடுங்காலம் நீடிக்காது என்ற பழிச்சொல் உன் செவிக்கு எட்டியிருக்குமே! பிரிக்கும் ஆற்றல் உண்டு. பிணைக்கும் ஆற்றல் இல்லை என்பதற்கு இதைவிடச் சான்று வேண்டுமா?

இனி, ஆக்கவேலைமுறைகள் எவை என எனக்குத் தெரிந்தவற்றை எழுதுகிறேன்.

தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்தவல்லது. தமிழ் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவுமானால் தவிரத் தமிழுக்கு எதிர்காலம் இல்லை

தமிழ்

என நம்பு. ஆட்சிமொழி என்றால் சட்டசபைமுதல் நீதிமன்றம்வரையில் தமிழ் வழங்க வேண்டும். கல்விமொழி என்றால் எவ்வகைக் கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்கவேண்டும். குறைகள் பல இருக்கலாம். குறைகளுக்குத் தயங்காமல் ஆட்சி மொழியாகவும் கல்விமொழியாகவும் ஆக்கவேண்டும் என்று உணர்ந்திடு. இவ்வாறு பேசிக்கொண்டிருந்தால் போதாது. உன்னால் ஆனவரை செய். கடிதம், பணவிடை, விளம்பரப்பலகை, விற்பனைச்சீட்டு முதலிய எல்லாம் தமிழிலேயே எழுதுக. இவற்றைத் தமிழில் எழுதினால் அஞ்சல் ஊழியர், வணிகர்கள், வாங்கும் மக்கள் முதலியவர்களைத் தமிழில் படிக்கச் செய்வதுபோல் ஆகும். இல்லையானால் அவர்கள் தமிழை மறக்கும்படி செய்வதுபோல் ஆகும்.

நீ யாருடனும் தமிழிலேயே பேசு. உலகத்தார் எல்லாம் அவரவர் தாய்மொழியில்தான் பேசுகின்றனர். தமிழ் தெரியாதவர்களிடத்தில் மட்டும் பிறமொழியில் பேசு. திருமணம், வழிபாடு முதலியவற்றைத் தமிழில் நடத்து.

சாதி சமய வேறுபாடுகளை மறக்கக் கற்றுக்கொள். மறக்க முடியாவிட்டால் புறக்கணிக்கக் கற்றுக்கொள். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற செம்மொழியைப் போற்று.

நான்குபேர் சேர்ந்தால் அவர்களிடையே பண்பாலும் செயலாலும் கருத்தாலும் கொள்கையாலும் ஒற்றுமையும் உண்டு வேற்றுமையும் உண்டு. ஒற்றுமையான பகுதிகளை மட்டும் எடுத்துப்பேசு. வேற்றுமைப் பகுதிகள் இங்கு இப்போது வேண்டுவதில்லை என்று விட்டுவிடு. வேற்றுமைப் பகுதிகளை வற்புறுத்திப் பேசினால் பொதுவேலை நடக்காது; நம்பு.

வெளிநாட்டுத் துணியை மறுப்பதுபோலத் தமிழ்நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் நன்மை செய்யாத செய்தித்தாள்களை விலக்கு. நாட்டுக்கும் மொழிக்கும் இடையூறான நிலையங்களைப் போற்றாதே, உன் காசு அவற்றிற்குப் போகாமல் காத்துக்கொள். நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் உடையவர் நடத்தும் உணவுவிடுதி, மருந்துக்கடை, துணிக்கடை முதலியன சிறிது தொலைவில் இருந்தாலும், விலை சிறிது கூடுதலாக இருந்தாலும், வேறு குறையிருந்தாலும், அங்கேயே சென்று வாங்கு. அவசரத்தின் காரணமாகவோ, வேறு காரணத்தாலோ, தவற நேர்ந்தால், தவறு என்று உணர்ந்து வருந்து. கூடியவரையில் தமிழ்நாட்டில் தமிழ்த் தொழிலாளிகளால் செய்யப்பட்ட பொருள்களையே வாங்கு.

உன் மொழியையும் நாட்டையும் போற்றுவதற்காக மற்றவர்களின் மொழியையும் நாட்டையும் தூற்றாதே; பழிக்காதே; வெறுக்காதே; அயலானின் தாயைப்பழித்து வெறுக்காதே. அயலானின் தாயைப் பழித்து வெறுக்காமலே நம் தாயிடம் அன்பு செலுத்த முடியும். அத்தகைய அன்புதான் நிலையானது; நீடிப்பது.

தமிழர்களிடையே உள்ள பகை, பிரிவுகளை மேலும் வளர்க்கும் செயல்களைச் செய்யாதே; அத்தகைய சொற்களைச் சொல்லாதே; அவ்வாறான எண்ணங்களை எண்ணாதே. தமிழரிடையே ஒற்றுமை வளர்க்கும் சிந்தை, சொல், செயல்களையே போற்று. சுவையாக இருந்தாலும் முன்னவையை நாடாதே. சுவையற்றிருந்தாலும் பின்னவையைப் போற்று. கொள்கைகளும் கட்சிகளும் இயக்கங்களும் நாட்டு மக்களின் நன்மைக்காகத் தோன்றியவை. ஆகவே கொள்கைகள், கட்சிகள், இயக்கங்களைவிட நாட்டு மக்களின் நன்மையே பெரிது என்று உணர்.

தமிழ்நாடு உயரவேண்டும் என்றால் இங்குள்ள மலையும், காடும், நிலமும், நீரும் உயர்தல் அல்ல. இங்கு வாழும் யாவரும் ஒன்று என்று கருது. ஆகவே இந்நாட்டில் உள்ள வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், பிச்சை எடுத்தல் முதலிய கொடுமைகள் ஒழியவேண்டும் என்று கருது. ஏழை என்றும் அடிமை என்றும் இல்லை என்று பாரதியார் கண்ட கனவைப் போற்று. வறியவர்களைக் காணும்போதெல்லாம் நினை.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் நல்ல நிலை வரவேண்டும். உலகம் ஒரு குடும்பமாக வாழவேண்டும் என்று ஆர்வம் கொள். அந்த நிலை வந்தால், நாட்டுப்பற்று என்பது வேண்டாததாகிவிடும் என்று அறிந்துகொள். அதுவரையில் நம்நாட்டிற்கு நாம் செய்யவேண்டிய கடமை இருக்கிறது என்பதை மறவாதே.

ஊர்க்கெல்லாம் பொதுக்காவல் சிறந்தமுறையில் ஏற்படும் வரையில் ஒவ்வொருவரும் தம் வீட்டைத் தாழிட்டுக் காத்துக் கொள்ளவேண்டும் அல்லவா? அதுபோல, உலகத்திற்குப் பொதுவான ஒரு சிறந்த ஆட்சிமுறை ஏற்படும்வரையில், நம் நாட்டை நாம் தவறாமல் காத்துக் கொள்ளவேண்டும். அது குறுகிய நோக்கம் அன்று; இன்றியமையாத கடமை என்று உணர்ந்துகொள்.

உன் மானத்தைவிட நாட்டின் மானம் பெரியது என்று உணர். உன் உயர்வைவிட, நாட்டின் உயர்வு இன்றியமையாதது என்று உணர், உன் நலத்தைவிட நாட்டின் நலம் சிறந்தது என்று உணர். நெருக்கடி நேரும்போது உன் நலம், உயர்வு, மானம் ஆகியவற்றை நாட்டுக்காக விட்டுக்கொடு. தலைமை உன்னைத் தேடிக்கொண்டு வந்தால் வரட்டும். நீ அதைத் தேடிக் கொண்டுபோய் அலையாதே. நீ தேட வேண்டுவது தொண்டு. தலைமை தாங்குவதும் ஒருவகைத் தொண்டுதான். தன்னலம் அற்றவர்க்கு அது பொறுப்பும் சிக்கலும் மிகுந்த தொண்டு. அத்தகைய தலைமைப் பொறுப்பு எப்போதாவது உன்னை நாடி வந்தால் ஏற்றுக்கொள். ஆனால், 'தொண்டுக்கு முந்து, தலைமைக்குப் பிந்து' என்பது உன் நெறியாக இருக்கட்டும்.

இந்த நாட்டில் சொன்னபடி செய்ய ஆள் இல்லை. ஆனால், கண்டபடி சொல்ல ஆள் ஏராளம். ஒவ்வொருவரும் ஆணை இடுவதற்கு விரும்புகிறார். 'அடக்கி ஒழுகுவதற்கு யாரும் இல்லை. அதனால்தான் வீழ்ச்சி நேர்ந்தது' என்கிறார் விவேகானந்தர். ஆகையால், பொதுநலத்திற்காகக் கட்டுப்படுதல், கீழ்ப்படிதல், தொண்டு செய்தல் இவற்றைப் பெருமையாகக் கொள். மேலும், நான் விரிவாக எழுதிக் கொண்டிருக்க வேண்டுவதில்லை. உனக்குப் போதிய அறிவும் திறமையும் இருக்கின்றன. அவற்றைத் தக்க வழியில் பயன்படுத்த வேண்டுமே என்பதுதான் என் கவலை. அதனால்தான் இவ்வளவு எழுதினேன்.

உன் அண்ணன்,

வளவன்

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. தாய்மொழி வளர்ச்சிபெற டாக்டர் மு.வ. கூறும் அறிவுரை யாது?
2. டாக்டர் மு.வ. நாட்டுப்பற்று, தலைமைப்பண்பு பற்றி என்ன கூறுகிறார்?

சொல்

பெயர்ச்சொல்

தொழிற்பெயர்

மாதவி ஆடல்கண்டு கோவலன் மகிழ்ந்தான்.

இத்தொடரில் உள்ள பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், தொழிற்பெயர்களை அறிவோம்.

மாதவி, கோவலன் – இவை பெயர்ச்சொற்கள்

கண்டு, மகிழ்ந்தான் – இவை வினைச்சொற்கள்

ஆடல் – என்பது தொழிற் பெயர்.

அறுவகைப் பெயர்ச்சொற்களுள் தொழிற்பெயரும் ஒன்று என்பதனை முன்வகுப்பிலேயே கற்றிருக்கிறீர்கள். ஆடல் – என்பது ஆடுதல் என்னும் தொழிலைக் குறிப்பதனால், அது தொழிற்பெயர் எனப்பட்டது.

ஆடு + அல் = ஆடல். அல் – என்பது தொழிற் பெயர் விகுதி. இவ்வாறு தொழிற்பெயரைக் குறிக்க வரும் விகுதிகள்: தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, ஆல் என்பன.

வினைப்பகுதியோடு மேற்குறித்த விகுதிகளைச் சேர்த்தால் தொழிற்பெயராகும்.

(எ.கா.) பெறுதல்	= பெறு + தல்	கோடல்	= கோடு + அல்
ஆட்டம்	= ஆடு + அம்	கொலை	= கொல் + ஐ
வாழ்க்கை	= வாழ் + கை	பறவை	= பற + வை
போக்கு	= போ + கு	புளிப்பு	= புளி + பு
வரவு	= வர + உ	மறதி	= மற + தி
உணர்ச்சி	= உணர் + சி	புலவி	= புல + வி
செய்யுள்	= செய் + உள்	சாக்காடு	= சா + காடு
கோட்பாடு	= கோள் + பாடு	தோற்றரவு	= தோற்று + அரவு
கேளானை	= கேள் + ஆனை	நடவாமை	= நட+ ஆ + மை
பாய்த்து	= பாய் + து.	தாழால்	= தாழ் + ஆல்

தொழிற்பெயர் வகைகள்

தொழிற்பெயர் இருவகைப்படும்.

1. முதனிலைத் தொழிற்பெயர் 2. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

1. முதனிலைத் தொழிற்பெயர்

தொழிற்பெயர் விகுதிகளே இல்லாமல், பகுதி மட்டும் வந்து, தொழிலை உணர்த்துவதற்கு முதனிலைத் தொழிற்பெயர் எனப் பெயர்.

(எ.கா.) கபிலனுக்கு அடி விழுந்தது.

இத்தொடரில் அடி, என்பது விகுதிபெறாமல், பகுதியாய் நின்று தொழிலை உணர்த்துகிறது.

2. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

தொழிற்பெயரின் முதனிலையாகிய பகுதி திரிந்து வருவது முதனிலை திரிந்த தொழிற்பெயராகும்.

(எ.கா.) அறிவறிந்த மக்கட் பேறு.

அவனுக்கு என்ன கேடு?

இங்குப் 'பெறு', கெடு என்னும் முதனிலைகள் 'பேறு', 'கேடு' எனத் திரிந்து 'பெறுதல்', 'கெடுதல்' என்னும் பொருளை உணர்த்துகின்றன.

வினையாலணையும் பெயர்

முருகன் பரிசு பெற்றான்.

பரிசு பெற்றானைப் பாராட்டினர்.

இவ்விரு தொடரிலும், பெற்றான் என்னும் வினைச்சொல் வந்துள்ளது.

முதல் தொடரிலுள்ள பெற்றான் என்பது, முருகன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக வந்துள்ளது.

இரண்டாவது தொடரில் உள்ள 'பெற்றானை' என்பது முருகனைக் குறிக்கும் பெயராக வந்துள்ளது.

இவ்வாறு வினைமுற்று, வினையைக் குறிக்காமல் வினைசெய்தவரைக் குறிப்பது வினையாலணையும் பெயர் எனப்படும். இது வினைக்குரிய காலம் காட்டும்; பெயர்க்குரிய வேற்றுமை உருபுகளையும் பெற்று வரும்.

பெற்றானை – இறந்தகாலம்
பெறுகின்றானை – நிகழ்காலம்
பெறுவானை – எதிர்காலம்

பெற்றான் + ஐ என, இரண்டாம் வேற்றுமை உருபான ஐ ஏற்று வந்துள்ளமை காண்க.

தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடுகள்

தொழிற்பெயர்	வினையாலணையும் பெயர்
தொழிலுக்குப் பெயராய் வரும்.	தொழில் செய்பவருக்குப் பெயராய் வரும்.
படர்க்கை இடத்தில் வரும்.	மூவிடங்களிலும் வரும்.
காலங்காட்டாது.	முக்காலத்தையும் காட்டும்.

தமிழ்

தமிழ்

பண்புப் பெயர்

பண்பை உணர்த்தும் பெயர் பண்புப் பெயர். அறுவகைப் பெயருள் ஒன்றான பண்புப் பெயர் நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

1. செம்மை, வெண்மை, கருமை – நிறப்பண்பு
2. வட்டம், சதுரம், கூம்பு, செவ்வகம் – வடிவப்பண்பு
3. ஒன்று, அரை, கிலோமீட்டர் – அளவுப்பண்பு
4. காரம், புளிப்பு, இனிப்பு – சுவைப்பண்பு

பண்புப் பெயர் விகுதிகள்

மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், அர், பம், து என்பன பண்புப்பெயர் விகுதிகள்.

(எ.கா.) நன்மை	=	நல் + மை	நன்றி	=	நல் + றி
தொல்லை	=	தொல் + ஐ	நன்று	=	நல் + று
மாட்சி	=	மாண் + சி	நலம்	=	நல் + அம்
மாண்பு	=	மாண் + பு	நன்னர்	=	நல் + அர்
மழவு	=	மழ + உ	திட்பம்	=	திண் + பம்
நன்கு	=	நல் + கு	தீது	=	தீமை + து

பயிற்சி

1. பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

அ) பெறு, சுடு, நடு, கெடு, வீடு.

ஆ) செம்மை, வட்டம், ஒன்று, கருமை, வெம்மை.

இ) ஆடல், அண்ணன், தேடல், போக்கு, பாய்தல்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. தொழிற்பெயரின் பகுதி திரிந்து வரும் பெயர் ________.

அ) விகுதிபெற்ற தொழிற்பெயர் இ) முதனிலைதிரிந்த தொழிற்பெயர்

ஆ) முதனிலைத் தொழிற்பெயர்

2. காட்சி என்னும் தொழிற்பெயர் ________ எனப் பிரியும்.

அ) கா + சி இ) காட் + சி

ஆ) காண் + சி

3. மாட்சி என்பது ________ ஆகும்.

அ) தொழிற்பெயர் இ) பண்புப் பெயர்

ஆ) வினையாலணையும்பெயர்

4. ‘வந்தான்’ என்னும் வினைமுற்று ________ என வினையாலணையும் பெயராய் வரும்.

அ) வருவான் ஆ) வாரான் இ) வந்தவன்

2. பொருத்துக.

தொழிற் பெயர்	–	நன்றி
முதனிலை திரிந்த தொழிற்பெயர்	–	அகழ்வார்
பண்புப் பெயர்	–	சூடு
வினையாலணையும் பெயர்	–	வருதல்

3. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. பகுதி மட்டும் தொழிலைக் குறிப்பது ________ .

அ) முதனிலை திரிந்த தொழிற்பெயர் இ) முதனிலைத் தொழிற்பெயர்

ஆ) பண்புப் பெயர்

2. வரவு என்னும் தொழிற்பெயரின் விகுதி ________ .

அ) வு ஆ) உ இ) எதுவுமில்லை

3. வட்டம் என்பது ________ பெயர் ஆகும்.

அ) அளவுப்பண்பு ஆ) சுவைப்பண்பு இ) வடிவப்பண்பு

ஆ) சிறுவினாக்கள்

1. தொழிற்பெயர் என்பது யாது? எடுத்துக்காட்டுத் தருக.
2. தொழிற்பெயர் விகுதிகளில் நான்கனை எடுத்துக்காட்டுடன் எழுதுக.
3. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
4. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

வழாநிலை, வழு, வழுவமைதி

அ) வழாநிலை

இலக்கண முறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.

செல்வன் படித்தான். இத்தொடரில் செல்வன் என்னும் ஆண்பால் ஒருமைப்பெயர் படித்தான் என்னும் ஆண்பால் ஒருமை வினைமுற்றைக் கொண்டே முடிகிறது. எனவே, இது வழாநிலை எனப்படும். வழாநிலை அறுவகைப்படும்.

1. திணை வழாநிலை : செல்வி பாடினாள், மாடு வந்தது.
2. பால் வழாநிலை : கண்ணன் வந்தான், நாய் ஓடியது.
3. இட வழாநிலை : நான் வந்தேன், நீ வருவாய்.
4. கால வழாநிலை : நாளை வருவேன், நேற்றுப் படித்தேன்.
5. வினா வழாநிலை : தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?
6. விடை வழாநிலை : தமிழ்நாட்டின் தலைநகரம் எது? என்னும் வினாவுக்குச் சென்னை என விடையளித்தல்.

ஆ) வழு

இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும். வழு திணைவழு, பால்வழு, இடவழு, காலவழு, வினா வழு, விடைவழு, மரபுவழு என ஏழுவகைப்படும்.

1. திணைவழு

என் மாமா வந்தது.

மாமா என்னும் உயர்திணைப் பெயர், வந்தது என்னும் அஃறிணை வினைகொண்டு முடிந்தது. அதனால், இது திணைவழு.

2. பால்வழு

கண்ணகி வந்தான்.

கண்ணகி என்னும் பெண்பாற் பெயர், வந்தான் என்னும் ஆண்பால் வினைகொண்டு முடிந்துள்ளது. அதனால், இது பால்வழு.

3. இடவழு

நாங்கள் வந்தார்கள்.

நாங்கள் என்பது தன்மையிடத்துப் பன்மைப் பெயர். அப்பெயர், வந்தார்கள் என்னும் படர்க்கையிடத்துப் பலர்பாலொடு முடிந்துள்ளது. எனவே, இத்தொடர் இடவழு.

4. கால வழு

கரிகாலன் நாளை வந்தான்.

இத்தொடரில் நாளை என்னும் எதிர்காலப் பெயரொடு வந்தான் என இறந்தகால வினை மயங்கி வந்துள்ளது. அதனால், இது காலவழு.

தமிழ்

5. வினாவழு

முட்டையிட்டது சேவலா பெட்டையா?

சேவல் எனப் பொருத்தமில்லாத வினாவைக் கேட்டதனால் வினாவழு.

6. விடைவழு

நாளை பள்ளி திறக்கப்படுமா? என்னும் வினாவுக்கு, என் அத்தைக்கு உடல்நலமில்லை எனக் கூறுவது விடைவழு ஆகும்.

7. மரபு வழு

நாய் கத்தும். இத்தொடர் மரபு வழு. ஏனெனில், நாய் குரைக்கும் என்பதே முறையான ஒலிமரபு.

இ) வழுவமைதி

இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதி ஆகும்.

உவகை (மகிழ்ச்சி), சிறப்பு, உயர்வு, உறுதி, சினம் காரணமாகத் திணைவழுவும் பால்வழுவும் காலவழுவும் வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

சான்று

1. சிற்றூர்களில் சிலர், தாங்கள் வளர்க்கும் விலங்குகளுக்குப் பெயரிட்டு அழைக்கும் பழக்கம் உண்டு. வருகின்ற பசுவைப் பார்த்து, 'என் இலட்சுமி வந்துவிட்டாள்' எனக் கூறுவதனைக் கேட்டிருப்பீர்கள்.

   இவ்வாறு கூறுவது, திணைவழுவாயினும் மகிழ்ச்சியின் காரணமாகத் திணைவழுவமைதியாக ஏற்றுக்கொள்கிறோம்.

2. குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் – இத்தொடர், குடியரசுத் தலைவர் நாளை வருவார் என அமைதல் வேண்டும். அவ்வாறு அமையவில்லையென்றாலும் நாம் பிழையாகக் கருதுவதில்லை.

   ஏனெனில், அவரது வருகையின் உறுதித்தன்மை நோக்கிக் காலவழுவமைதியாக ஏற்றுக்கொள்கிறோம்.

வழு	–	பிழை, தவறு, குற்றம்
வழாநிலை	–	பிழையின்மை, தவறின்மை
வழுவமைதி	–	பிழை – ஆனால், பிழையாகக் கொள்ளாமை.

பயிற்சி : பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

அ) கண்ணன், கயல்விழி, மாணவர்கள், காகம்.

ஆ) மாடு கத்தும், யானை பிளிறும், குயில் கொஞ்சும், மயில் அகவும்.

இ) கூவும், கனைக்கும், கரையும், அகவும், அலறும்.

ஈ) குழந்தை, குட்டி, மனிதன், பார்ப்பு.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. வழு ________ வகைப்படும்.

   அ) இரண்டு ஆ) ஏழு இ) ஒன்பது

2. என் மாமா வந்தது என்பது ________________.

   அ) திணை வழு ஆ) பால் வழு இ) கால வழு

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இலக்கண முறையில்லாவிடினும் இலக்கணமுடையதாக ஏற்றுக்கொள்வது________
2. பசுவைப் பார்த்து, 'என் இலட்சுமி வந்தாள்' என்பது ________ வழுவமைதி ஆகும்.

3. பிழையைத் திருத்தி எழுதுக.

1. தம்பி நேற்று வந்தாள். ________________.
2. எருது வண்டியை இழுத்தன. ________________.
3. மாணவர் தேர்வு எழுதினான். ________________.
4. அவன் மாணவன் அல்ல. ________________.
5. உடைகள் கிழிந்துவிட்டது. ________________.
6. எங்களூரில் புலவர் ஒருவர் வாழ்ந்தனர். ________________.

வகுப்பறைத்திறன்கள்

குழுக் கலந்துரையாடல்

ஓரமாய் வருவேன்
ஒழுங்காய்ப் போவேன்
ஊர்திகள் வந்தால்
ஒதுங்கியே செல்வேன்
இடப்பக்கம் நடப்பேன்
இருபக்கம் பார்ப்பேன்
சடக்கென்று நிற்பேன்
சாலையைக் கடப்பேன்!

1. இப்பாடல் கூறும் கருத்து என்ன?
2. நீங்கள் சாலைவிதிகளைப் பின்பற்றுகிறீர்களா?

சாலைவிதிகளைப் பின்பற்றுவதனால் ஏற்படும் நன்மைகளையும், பின்பற்றாவிடில் ஏற்படும் விளைவுகளையும் குழுவில் கலந்துரையாடுக.

பேசுதல் திறன் : ஐந்து மணித்துளி பேசுக.

1. நான் விரும்பும் அறிவியல் அறிஞர்
2. நான் ஆசிரியரானால்....

எழுதுதல் திறன்

அ) பின்வரும் சொற்றொடர்களைப் பிரித்து எழுதுக.

(எ.கா.) நான் விரைவாகச் சென்றதனால் உரிய நேரத்தில் அங்கு இருக்க முடிந்தது.

நான் விரைவாகச் சென்றேன். அதனால், உரிய நேரத்தில் அங்கு இருக்க முடிந்தது.

பயிற்சி

1. எனக்குத் தூக்கம் வந்துவிட்டதனால் அந்த நாடகத்தை முழுவதும் பார்க்க முடியவில்லை.
2. மணி நேற்று வந்து என்னிடம் புத்தகம் வாங்கிச்சென்றான்.
3. உண்மையை உணர்ந்த முத்து பணத்தை மாறனிடம் கொடுத்தார்.
4. நான் நாளை ஊருக்குப்போகும்போது கண்ணனைச் சந்திப்பேன்.
5. பாம்பு ஓடியதனை நான் பார்த்தேன்.

ஆ) ஒரே சொற்றொடராக்குக.

(எ.கா.) நான் மும்பை சென்றேன். அவனும் மும்பை சென்றான்.

நானும் அவனும் மும்பை சென்றோம்.

பயிற்சி

1. நீ வீட்டுக்குப் போ. புத்தகம் எடுத்து வா.
2. இனியன் பாட்டுப் பாடுவார். அப்போது கண்களை மூடிக் கொள்வார்.
3. யானை வந்தது. அதனைப் பார்த்துக் குழந்தை சிரித்தது.
4. சேரன் போரில் தோற்றான்; அதனால், சிறையில் அடைக்கப்பட்டான்.

மையக்கருத்தறிதல் திறன்

பின்வரும் பத்தியினைப் படித்துணர்ந்து மையக்கருத்தினை ஒரே வரியில் எழுதுக.

வேற்றுமைகளைப் பயன்படுத்திக்கொண்டு குறுகிய வாழ்க்கைக்காக எப்போதும் அமைதியைக் குலைப்பதும், மக்களை ஏய்ப்பதும் போலிகளின் செயல். உண்மையாளர்களுக்குள் கருத்துவேற்றுமை இருப்பினும் போராட்டம் நேராது. மாறாக, ஒற்றுமையும் நாட்டுநலத்திற்கேற்பத் தம் வேற்றுமைகளைப் பயன்படுத்தும் பண்பாடும் இருக்கும்.

மையக்கருத்து : வேற்றுமை வளர்த்துத் தன்னலம் காண்போர் போலிகள்; வேற்றுமை களைந்து ஒற்றுமை காண்போர் உண்மையாளர்கள்.

தமிழ்

பயிற்சி : மையக்கருத்து எழுதுக.

வேற்றுமைகளை அழிவுக்குப் பயன்படுத்தாமல் அவற்றையும் நன்மைக்குப் பயன்படுத்தி முன்னேறுதல் வேண்டும். அவரவர் செயல்களுக்கேற்ப நன்மை தீமைகள் ஏற்படுவதனை அவரவரே அறியுமாறு விட்டுவிடுதல் வேண்டும். அதனை விடுத்துத் தீமைகளை ஒழிப்போம் என வரிந்து கட்டுதலினால் பயன் ஏதும் நேராது. அதனால், மேலும் கலகமே விளையும். தீமைகளை ஒழிக்க பொதுஒழுங்கை அதாவது, சட்டத்தை எல்லா அரசுகளும் வலியுறுத்துகின்றன. அதற்கு அச்சட்டங்களும் பெரிதும் துணைபுரிகின்றன.

மையக்கருத்து ______________________________ .

மொழித்திறன் பயிற்சி

வல்லினம் மிகும் இடங்களும் வல்லினம் மிகா இடங்களும்

இருசொற்களைச் சேர்த்து எழுதும்போது இடையில் சில இடங்களில் வல்லின மெய் எழுத்துகள் (க், ச், த், ப்) மிக்கு வரும். மெய்யெழுத்து மிக்கு வரவேண்டிய இடத்தில் மிகாமலும் மிகாத இடத்தில் மிக்கும் வந்தால் பொருள் மாறுபடும். ஆகவே, வல்லினம் மிகும் இடங்களையும் மிகா இடங்களையும் தெளிவாக அறிதல் வேண்டும்.

வல்லினம் மிகும் இடங்கள்

1. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளை அடுத்தும், எ என்னும் வினாவை அடுத்தும் வரும் வல்லினங்களாகிய க், ச், த், ப் மிகும்.

அ + பையன் = அப்பையன்

இ + செடி = இச்செடி

எ + பணி = எப்பணி

2. அந்த, இந்த, எந்த; அங்கு, இங்கு, எங்கு; அப்படி, இப்படி, எப்படி என்னும் சுட்டு வினாச்சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

அந்த + கோவில் = அந்தக்கோவில்

அங்கு + சென்றான் = அங்குச்சென்றான்

எங்கு + போனான் = எங்குப்போனான்

3. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

நூலை + படி = நூலைப்படி

பாலை + குடி = பாலைக்குடி

4. நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

அவனுக்கு + கொடுத்தான் = அவனுக்குக்கொடுத்தான்

பணிக்கு + சென்றான் = பணிக்குச்சென்றான்.

5. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

தண்ணீர் + குடம் = தண்ணீர்க்குடம்

மரம் + பெட்டி = மரப்பெட்டி

பூட்டு + சாவி = பூட்டுச்சாவி

விழி + புனல் = விழிப்புனல்.

6. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

பச்சை + பட்டு = பச்சைப்பட்டு

பச்சை + கிளி = பச்சைக்கிளி

7. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

சாரை + பாம்பு = சாரைப்பாம்பு

மல்லிகை + பூ = மல்லிகைப்பூ

8. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.

மலர் + கண் = மலர்க்கண்

தாமரை + கை = தாமரைக்கை.

9. ஓரெழுத்து ஒரு மொழியின் பின் வல்லினம் மிகும்.

தீ + சுடர் = தீச்சுடர்

பூ + கூடை = பூக்கூடை

10. ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.

அழியா + புகழ் = அழியாப்புகழ்

ஓடா + குதிரை = ஓடாக்குதிரை

11. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

எட்டு + தொகை = எட்டுத்தொகை

12. ட, ற ஒற்று இரட்டிக்கும் உயிர், நெடில் தொடர்க் குற்றியலுகரங்களின் பின் வல்லினம் மிகும்.

ஆடு + பட்டி = ஆட்டுப்பட்டி

நாடு + பற்று = நாட்டுப்பற்று

13. முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

பொது + தேர்வு = பொதுத்தேர்வு

திரு + குறள் = திருக்குறள்

தமிழ்

14. சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

சால + பேசினான் = சாலப்பேசினான்.

தவ + சிறிது = தவச்சிறிது.

15. ஆய், என, இனி, ஆக முதலிய இடைச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

என + கூறினான் = எனக் கூறினான்.

இனி + காண்போம் = இனிக் காண்போம்.

வல்லினம் மிகா இடங்கள்

1. அது, இது, அவை, இவை என்னும் சுட்டுச் சொற்களின் பின்னும் எது, எவை என்னும் வினாச்சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது.

அது + பறந்தது = அது பறந்தது.

அவை + பறந்தன = அவை பறந்தன.

எது + தங்கம் = எது தங்கம்

எவை + சென்றன = எவை சென்றன.

2. ஆ, ஏ, ஓ என்னும் வினா எழுத்துகளின்பின் வல்லினம் மிகாது.

அவனா + சென்றான் = அவனா சென்றான்.

அவனோ + பேசினான் = அவனோ பேசினான்.

அவனே + சிரித்தான் = அவனே சிரித்தான்.

3. எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது.

மலர் + பூத்தது = மலர் பூத்தது

வண்டு + பறந்தது = வண்டு பறந்தது.

4. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் வல்லினம் மிகாது.

அத்தனை + படங்கள் = அத்தனை படங்கள்

இத்தனை + பறவைகள் = இத்தனை பறவைகள்

எத்தனை + காக்கைகள் = எத்தனை காக்கைகள்

5. வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

ஊறு + காய் = ஊறுகாய்

சுடு + சோறு = சுடுசோறு

6. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.

கபிலபரணர்

இரவுபகல்

7. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.

தமிழ் + கற்றார் = தமிழ் கற்றார்.

கடல் + கடந்தார் = கடல் கடந்தார்.

8. மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் (ஒடு, ஓடு) வல்லினம் மிகாது.

பூவொடு + சேர்ந்த = பூவொடுசேர்ந்த

கபிலரோடு + பரணர் = கபிலரோடுபரணர்

9. எட்டு, பத்து தவிரப் பிற எண்களுக்குப்பின் வல்லினம் மிகாது.

ஒன்று + கொடு = ஒன்றுகொடு

இரண்டு + பேர் = இரண்டுபேர்

10. வியங்கோள் வினைமுற்றுக்குப்பின் வல்லினம் மிகாது.

வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்

வாழிய + பல்லாண்டு = வாழிய பல்லாண்டு

11. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்களில் வல்லினம் மிகாது.

சல + சல = சலசல

பாம்பு + பாம்பு = பாம்புபாம்பு

12. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிறபெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது.

கற்ற + சிறுவன் = கற்ற சிறுவன்

சிறிய + பெண் = சிறிய பெண்

பயிற்சி

தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

1. அந்த பையனை நன்றாக படிக்க செய்தல் வேண்டும்.
2. வந்த பையன் சொன்னச் செய்திகளை பொறுமையாக கேட்டல் வேண்டும்.
3. நேற்று நடந்த சிறப்பான நிகழ்வுகளை கண்டுப் பலரும் வியந்தனர்.
4. கபிலப்பரணர் தமிழ்புலவர்கள்.
5. கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்குபவர் நன்மை தீமைகளை அறிவார்.
6. அந்த சாலை மிக செம்மையாக காணப்படுகிறது.
7. ஒவ்வொருவரும் படித்ததனை கவனமாக குறிப்பேட்டில் எழுதி வைத்தல் வேண்டும்.
8. புத்தக படிப்புத்தேவை. அத்தோடு பட்டறிவைச் சேர்த்து கொள்ளல் வேண்டும்.
9. பார்த்து பார்த்து கேட்டுகேட்டு மகிழ்ந்தேன்.

பொருத்துக.

௯+௪ - ௧௪

௮+௨ - ௧௯

௫+௯ - ௨௨

௨௦+௨ - ௧௩

௧௮+௧ - ௧௦

கட்டுரைப் பயிற்சி

நான் முதலமைச்சரானால்......

பண்பு

தீ நட்பை விலக்குதல்

நண்பகல் உணவு இடைவேளைக்குப் பிறகு காலந்தாழ்த்தி வகுப்பிற்கு வருவதனை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான் குலோத்துங்கன். அதற்காக, ஆசிரியரிடம் பலமுறை தண்டனையும் பெற்றான். ஆனாலும், தன் வழக்கத்தை மாற்றிக்கொள்ளவில்லை. இன்றும் அதே கதைதான்.

விரைந்து வகுப்பில் நுழைந்து, வழக்கமாக மாறன் அருகில் உட்காரும் குமரன் வராததனால், அவ்விடத்தில் உட்கார்ந்தான். குலோத்துங்கனிடம் இருந்து வெண்சுருட்டின் வாடை வருவதனையறிந்து கொண்டான் மாறன். ஆசிரியர் வந்துவிட்டதனால், அவனிடம் அப்போது ஏதும் பேசவில்லை.

மாலையில் வீட்டுக்குச் செல்லும்போது புகைபிடித்தல் தவறு எனவும், அதன் விளைவுகளையும் கூறி, அப்பழக்கத்தை விட்டுவிடுமாறும் கூறினான்.

“எல்லாம் எனக்குத் தெரியும். உன்வேலையைப் பார்த்துக்கிட்டுப் போடா, பெரிய மேதை வந்துட்டான் அறிவுரை சொல்ல”, என அலட்சியமாகக் கூறிச் சினங்கொண்டான்.

இனி, அவனுடன் பழகுவதனை நிறுத்திக்கொள்ளுதல் வேண்டும் எனத் தன் மனத்திற்குள் முடிவெடுத்துக் கொண்டான், மாறன்.

1. மாறன் கூறிய அறிவுரை யாது? அதனைக் குலோத்துங்கன் ஏற்றானா?
2. மாறன் குலோத்துங்கனுடன் பழகக்கூடாது என முடிவெடுத்தது சரியா, தவறா?
3. குலோத்துங்கன் உங்கள் நண்பனாக இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

வாழ்க்கைத்திறன்

மறுத்தல் திறன்

“ஏண்டா, இன்னிக்கிப் பள்ளிக்கூடம் சீக்கிரமா விட்டுட்டாங்க ?” என்று செழியனிடம் கேட்டான், கதிர்வேலன்.

“நம் பள்ளியில் நாளை மருத்துவமுகாம் நடக்க இருக்கிறதாம். அதற்கு ஏதோ ஏற்பாடு செய்யணுமாம்; அதனால சீக்கிரமா விட்டுட்டாங்க. நாமெல்லாம் சேந்துபோயி கிணத்துல குளிச்சிட்டு அப்பறமா வீட்டுக்குப் போலாம், வாடா” என அழைத்தான் செழியன்.

கதிர்வேலனுக்கோ நீச்சல் தெரியாது. அதனால் குளிக்கச் செல்வதா, வேண்டாமா ? பெற்றோருக்குத் தெரியாமல் இதுவரை எதனையும் அவன் செய்ததில்லை. நண்பனின் அழைப்பை மறுத்தால், நட்புக்கெடும். நண்பனுக்கு உடன்பட்டால் பெற்றோர் கடிந்துகொள்வர். நீச்சல் தெரியாமல் கிணற்றில் குளிக்கச் சென்று ஏதாவது நடந்துவிட்டால் என்னவாவது ? நண்பனின் அழைப்பை மனம் நோகாமல் மறுப்பது எவ்வாறு எனக் கதிர்வேலன் சிந்திக்கத் தொடங்கினான்.

கதிர்வேலன் நிலையில் நீங்களிருந்தால் உங்கள் நண்பரின் அழைப்பை மனம் நோகாமல் எவ்வாறு மறுப்பீர்கள் ?

மதிப்புக்கல்வி

பொறுமை

துறவி ஒருவர் தெருவழியே நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்போது திடீரென்று நாலுபேர் ஓடிவந்து அவரைத் தாக்கிவிட்டு ஓடிவிட்டனர்.

அருகிலிருந்த மற்றவர்கள் அவரிடம், அவர்கள் உங்களைத் தாக்கியபோது, நீங்கள் ஏன் தடுக்கவில்லை எனக் கேட்டனர்.

அதற்கு அவர், நான் தடுக்காமல் இருந்ததற்குக் காரணம் உண்டு. ஒன்று, என்னை அடித்ததன் மூலமாக அவர்களின் சினம் தணிந்திருக்கும்; மற்றொன்று, என்னை அடிக்காவிட்டால் வேறு யாரையாவது அடித்திருப்பார்கள். எனவேதான், அவர்கள் சினம் தீரும்வரை என்னைத் தாக்கும்போது தடுக்காமல் இருந்தேன் என்றார், அத்துறவி.

அவர்தாம் மகாவீரர்.

மொழியாக்கம் செய்க.

There is nothing in the world as valuable as time. The man who fails to utilize his time carefully will ever remain poor. The man who uses every minute of his time wisely will gain many advantages.

Every night before going to bed, think over the day's happenings. If you have, make a resolve to be careful in future. Set apart sometime everyday for prayer.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. Take away the fuel, the boiling will cease.

   எரிவதனைப் பிடுங்கினால் கொதிப்பது அடங்கும்.

2. Practice makes perfect.

   சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.

3. The law-maker should not be a law-breaker.

   வேலியே பயிரை மேய்ந்தாற்போல.

4. Misfortune never comes single.

   பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்.

5. Look no gift horse in the mouth.

   தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கலாமா ?

வளரறி செயல்பாடுகள்

கேட்டல் திறன்	செயல்பாடு – 1

பாடலைப் படிக்கக் கேட்டு வினாக்களுக்கு விடையளிக்க.

ஓதலினும் மிகச்சிறந்தது ஒழுக்கம் என்ற
உண்மைதனை மாணவர்கள் உணர வேண்டும்
மேதினியில் சிறப்படைந்த மேலோ ரெல்லாம்
மேன்மையுற்ற காரணம்நல் லொழுக்க மேதான்
வேதனைகள் வந்தாலும் விலகிப் போகும்
வெற்றிகளும் நல்லொழுக்கம் விரவி னோர்க்கே
ஆதலினால் மாணவர்நல் லொழுக்கம் தன்னை
ஆருயிர்போல் கருதியதைக் காக்க வேண்டும்.

வினாக்கள்

1. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகை நயங்களைக் கூறுக.
2. மேதினி – இச்சொல்லின் பொருள் யாது?
3. ஆருயிர் – இலக்கணக்குறிப்பு யாது ?
4. பாடலில் ‘படித்தல்’ என்னும் பொருள் தரும் சொல் எது?
5. பாடலுக்கு ஏற்ற தலைப்பைக் கூறுக.

பேசுதல் திறன்	செயல்பாடு – 2

தமிழ் இலக்கிய மன்ற விழாவின் நிகழ்ச்சிநிரலைப் பார்த்து, விழாவுக்கு வருகை தந்துள்ளோர்க்கு வரவேற்புரை நிகழ்த்துக.

தமிழ் இலக்கிய மன்ற விழா

இடம்: அரசு மகளிர் மேனிலைப் பள்ளி, சோளிங்கர், வேலூர் மாவட்டம்.

நாள்: 30. 09. 2013 காலம்: பிற்பகல் 2.00 மணி

நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து	: மாணவியர்
வரவேற்புரை	: மாணவியர் தலைவி
முன்னிலை	: பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர்
தலைமை	: தலைமையாசிரியர்
சிறப்பு விருந்தினர்	: முதன்மைக் கல்வி அலுவலர்
சிறப்புரை	: ‘படைப்புகள்’ என்னும் தலைப்பில் புலவர் கெ. சம்பத்து
நிகழ்ச்சித் தொகுப்பாளர்	: மாணவியர் தலைவி
இலக்கிய நிகழ்வுகள்	: பேச்சு, பாடல், கதைகூறல், கட்டுரை படித்தல்
சான்றிதழ் வழங்கல்	: திரு. பி. பிச்சாண்டி, தமிழாசிரியர்
நன்றியுரை	: திரு. சி. பார்த்திபன், முதுகலைத் தமிழாசிரியர்
நாட்டுப்பண்	: மாணவியர்

படித்தல் திறன்	செயல்பாடு – 3

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்துக் குழுவில் கலந்துரையாடுக.

கல்வி, கல்வி, கல்வி – இஃது ஒன்றே இப்போது நமக்குத் தேவை. ஐரோப்பாவின் பல நகரங்களுக்கு நான் பயணம் செய்திருக்கிறேன். அங்கே சாதாரண ஏழை எளிய மக்களுக்குக்கூடக் கிடைத்திருக்கும் வாழ்க்கை வசதிகளையும் கல்வியையும் நான் கவனித்திருக்கிறேன். இப்போதெல்லாம் நமது நாட்டு ஏழை எளிய மக்களின் பரிதாப நிலையை நினைத்து நான் கண்ணீர்விட்டு அழுதிருக்கிறேன். இந்த வேறுபாட்டுக்கு காரணம் என்ன? கல்வி என்பதுதான் எனக்குக் கிடைத்த விடை.

எத்தகைய கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைச் சொந்தக்கால்களில் நிற்கும்படி செய்கிறதோ, அதுதான் உண்மையான கல்வி. சமுதாயத்திலுள்ள ஆண் பெண் அனைவருக்கும் உண்மைக் கல்வியை அளிப்பதே நமது கடமை. அந்தக் கல்விமூலமாக அவர்கள் தங்களுக்கு நல்லது எது, கெட்டது எது என்பதனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்; கெட்டதனை விட்டுவிடுவார்கள்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது, அந்த நாட்டுமக்கள் பெற்றிருக்கும் கல்வி, அறிவாற்றல் ஆகியவற்றைப் பொருத்தே அமைகிறது. நாம் மீண்டும் உயர்வடைய வேண்டுமானால், பொதுமக்கள் எல்லாருக்கும் கல்வியைப் பரப்பியாக வேண்டும். பொதுமக்களுக்குக் கல்வியைத் தந்து அவர்களை உயர்த்திவிடுங்கள். இஃது ஒன்றே ஒன்றுதான் நமது சிறப்பைப் பெறுவதற்குரிய ஒரு வழியாகும்.

– விவேகானந்தர், வீர இளைஞருக்கு

அகர வரிசைப்படுத்துதல்	செயல்பாடு – 4

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்திலுள்ள சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுக.

இராமகிருட்டின பரமஅம்சர் அறிவொளியாக விளங்கியவர். அவரின் மறைவுக்குப் பின்னர்த் தூயஅன்னை சாரதா தேவியார் தமது திருமடத்தில் இருந்துகொண்டு, தன்னை நாடி வருபவர்களுக்கு நெறிகாட்டித் தவப்பெருஞ்சுடராய் விளங்கினார். அம்மையாருடைய திருமுகத்தில் கருணைத்தேன் துளிர்க்கும். அவருடைய கைபட்டால் தீவினை தீயும். துன்பங்கள் மாயும். தன்னைத் தேடிவரும் அன்பர்களுக்குத் தாய்போல் அன்பு காட்டினார்.

________, ________, ________, ________, ________, ________ .

சொல்வதனை எழுதுதல்	செயல்பாடு – 5

திருக்குறள் கூறும் உயரிய பண்புகளுள் ஒன்று சான்றாண்மை. அதனை உடையவரே சான்றோர். சான்றாண்மை என்னும் சொல் தமிழ்மொழி ஒன்றுக்கே உரியது. சான்றாண்மைத்தன்மை, தமிழ் மக்களின் கலை.

சான்றாண்மைப் பண்பு, தமிழகத்தின் தனிப்பட்ட உடைமை. சான்றாண்மை என்னும் சொல்லைக்கூடப் பிறமொழிகளில் மொழிபெயர்க்க இயலாது. மொழிபெயர்த்துக் கூறினாலும் அச்சொல்லில் தமிழ்கூறும் பொருள் இராது.

குறிப்புகளை விரித்தெழுதுதல்	செயல்பாடு – 6

கீழுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி உன் நண்பனுக்குக் கடிதம் வரைக.

நண்பனின் ஊரில் குடிநீர்ப் பற்றாக்குறை – மழைநீர் சேமிப்பு – குளம், ஊருணி, ஏரி முதலியன நிலத்தடிநீர் உயர்வதற்கு மூலமாய் இருத்தல் – நீர்நிலைகளைத் தூர் வாரி, கரையமைத்து, மரம் நடுதல் – நீர்நிலைகளுக்குரிய நீர்வரத்து வழிகளைத் தூர் வாருதல் – இச்செயல்களில் நாட்டுநலப்பணித் திட்டப் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்துதல்

அன்புள்ள நண்பனுக்கு,

நான் நலம். உன் நலம் அறிய ஆவலாய் உள்ளேன். உன் கடிதம் கிடைக்கப் பெற்றேன். உங்கள் ஊரில் குடிநீர்ப் பற்றாக்குறையால் மக்கள் . . . .

. . . .

பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் எழுதுதல்	செயல்பாடு – 7

கடிதத்தில் உள்ள அடிக்கோடிட்ட பிறமொழிச் சொற்களையும் அவற்றுக்கான தமிழ்ச்சொற்களையும் எடுத்து எழுதுக.

திருக்குற்றாலம்

10.11.1953

அன்புள்ள கல்கி அவர்களுக்கு,

'நாடகக்காரி' என்னும் நூலை <u>வாசிக்கும்</u> போதெல்லாம் உங்கள் <u>ஆரோக்கியத்தை</u>ப்பற்றியும் <u>பாராகிராப்</u> முடிவில் சிந்திக்க நேரும். எவ்வளவு அழகாய் எளிதாய் இயல்பாய் இழுத்துச் செல்கிறது தமிழ் என்று வியந்துகொண்டே போனேன். கதை எத்தனையோ சிக்கல்களுக்குள்ளே எல்லாம் மடங்கியும் துள்ளியும் போனாலும் தெளிவில் குறைவில்லை. <u>அதிசயம்</u>, <u>ஆனந்தம்</u> எல்லாம் மனசை எளிதில் பற்றிக்கொள்ளுகின்றன. தமிழுக்கு ஓர் இலக்கியம் கிடைத்தது, மிக்க <u>சந்தோஷம்</u>.

அன்புடன்,

டி. கே. சிதம்பரநாதன்

(மகிழ்ச்சி, பேருவகை, வியப்பு, பத்தி, உடல்நலம், படிக்கும்)

பிறமொழிச் சொற்கள்	தமிழ்ச் சொற்கள்
வாசிக்கும்	படிக்கும்

தமிழ்

அறிதல் திறன்	செயல்பாடு – 8

அட்டவணையை நிரப்புக.

வ. எண்	வழு	வழுநிலை வகை	வழாநிலை	வழாநிலை வகை
1	யாழினி பாட்டுப் பாடினான்	பால் வழு	யாழினி பாட்டுப் பாடினாள்	பால் வழாநிலை
2	வீட்டுக்கு அக்கா வந்தது	திணைவழு		திணைவழாநிலை
3	நாங்கள் வந்தோம்			இடவழாநிலை
4	கபிலன் நாளை வந்தான்		கபிலன் நாளை வருவான்	
5	கன்றை ஈன்றது பசுவா ?காளையா ?		கன்றை ஈன்றது பசுவா ?	
6	‘தமிழ்த்தென்றல்’ யார் ? என்னும் வினாவுக்குப் பாரதியார் என விடையளித்தல்.	விடைவழு		
7	மயில் கத்தும்	மரபு வழு		மரபு வழாநிலை

சொல் விளையாட்டு	செயல்பாடு – 9

கீழ்க்காணும் கட்டங்களில் உள்ள தமிழ் எண்களைத் தொடர்ந்து சென்றால் ஔவையாரின் பொன்மொழிகள் கிடைக்கும்.அவற்றைக் கண்டறிந்து எழுதுக.

ம் ௭௩	இ ௭௪	ட் ௭௫	டு ௭௬	ண் ௭௭	ஒ ௭௮	ப் ௭௯	பு ௮௦	ர ௮௧	வு ௮௨
ய ௭௨	ஊ ௪௩	க் ௪௪	க ௪௫	ம ௪௬	து ௪௭	கை ௪௮	வி ௪௯	டே ௫௦	ஒ ௮௩
ஐ ௭௧	ல் ௪௨	து ௨௧	க ௨௨	ர ௨௩	வே ௨௪	ல் ௨௫	ஈ ௨௬	ல் ௫௧	ழு ௮௪
சி ௭௦	பே ௪௧	வ ௨௦	ரு ௭	ம் ௮	பு ௯	ஆ ௧௦	வ ௨௭	எ ௫௨	கு ௮௫
ச் ௬௯	ம் ௪௦	ல் ௧௯	வி ௬	அ ௧	ற ௨	று ௧௧	து ௨௮	ண் ௫௩	ஒ ௮௬
ழ் ௬௮	ள ௩௯	ய ௧௮	ய ௫	செ ௪	ஞ் ௩	வ ௧௨	வி ௨௯	ணெ ௫௪	து ௮௭
க ௬௭	வி ௩௮	இ ௧௭	ம் ௧௬	ன ௧௫	சி ௧௪	து ௧௩	ல ௩௦	ழு ௫௫	வ ௮௮
இ ௬௬	து ௩௭	ய ௩௬	டை ௩௫	உ ௩௪	ல் ௩௩	கே ௩௨	க் ௩௧	த் ௫௬	து ௮௯
து ௬௫	ப ௬௪	ற் ௬௩	ஏ ௬௨	ல் ௬௧	ழே ௬௦	க ௫௯	இ ௫௮	து ௫௭	ஒ ௯௦
ல் ௧௦௦	சே ௯௯	பே ௯௮	ம் ௯௭	ய ௯௬	வி ௯௫	ஔ ௯௪	ல் ௯௩	யே ௯௨	ழி ௯௧

1. ______________________   6. ______________________
2. ______________________   7. ______________________
3. ______________________   8. ______________________
4. ______________________   9. ______________________
5. ______________________   10. ______________________

படைப்பாற்றல்	செயல்பாடு – 10

அழகு என்னும் சொல், இருசொல்லுக்கிடையில் அமையும்படி பாடலொன்று எழுதுக.

(எ.கா.) வயலுக்கு அழகு செழுமை
வாளுக்கு அழகு கூர்மை
நிலத்துக்கு அழகு பொறுமை
நீருக்கு அழகு தண்மை

____

____

____

கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

காலம் : 15மணித்துளி   மதிப்பெண் : 10

1. ஓரிரு வரிகளில் விடையளிக்க.   5 × 1 = 5

1. காமராசர் எங்கு, எப்போது பிறந்தார் ?
2. காமராசர் பயன்படுத்திய நூலகம் எது ?
3. காமராசருக்கு நடுவணரசு வழங்கிய விருது யாது ?
4. காமராசரின் கல்விப்பணியைப் பாராட்டித் தமிழக அரசு செய்த சிறப்பு என்ன ?
5. கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் நாள் எது ?

2. பொருத்துக.   5 × 1 = 5

அ) காமராசர் பிறந்த ஆண்டு – 1954
ஆ) காமராசர் முதலமைச்சராகப் பதவியேற்ற ஆண்டு – 1903
இ) காமராசர் சட்டமன்ற உறுப்பினரான ஆண்டு – 1975
ஈ) காமராசர் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவரான ஆண்டு – 1937
உ) காமராசர் மறைந்த ஆண்டு – 1963

தமிழ்

முத்தொள்ளாயிரம்

சேரன்



பல்யானை மன்னீர் படுதிறை தந்துய்ம்மின்
மல்லல் நெடுமதில் வாங்குவில் பூட்டுமின்
வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்
வில்லெழுதி வாழ்வார் விசும்பு.

பொருள் : பல யானைகளைக் கொண்டுள்ள அரசர்களே! உங்களுக்குக் கிடைக்கும் பொருளைச் சேர மன்னனுக்குத் திறையாக அளித்துப் பிழைத்துக் கொள்ளுங்கள். உங்களின் வளமிக்க நெடிய மதில்கள்மீது வில் சின்னத்தைப் பொறித்து வையுங்கள். ஏனெனில், வாடாத மாலையணிந்த வானவர்களும் சேரனின் வில் வடிவத்தை எழுதி வைத்தே வானுலகில் வாழ்கின்றார்கள்.

சொற்பொருள் : உய்ம்மின் – பிழைத்துக்கொள்ளுங்கள்; மல்லல் – வளமை; வள் – நெருக்கம்; விசும்பு – வானம்.

இலக்கணக்குறிப்பு : மல்லல் நெடுமதில்– உரிச்சொற்றொடர்; நெடுமதில் – பண்புத்தொகை; வாங்குவில் – வினைத்தொகை.

பிரித்தறிதல் : தந்துய்ம்மின் = தந்து + உய்ம்மின்; வில்லெழுதி = வில் + எழுதி; பூட்டுமின் – பூட்டு + மின்.

அணி : தற்குறிப்பேற்ற அணி.

சோழன்

சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி
ஈர்த்திட் டுயர்துலைதான் ஏறினான் – நேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர மோசென்னி பண்பு.

பொருள் : சோழ மன்னன், தன்னிடம் அடைக்கலமான புறாவினைக் காக்க, தன் தசையை அறுத்துக்கொடுத்தான். அத்தசை ஈடாகாத காரணத்தால், தானே துலாக்கோலில் ஏறினான். இப்படிச் செய்யத் துணிந்தமைக்கு அவனது கொடை வீரமோ மெய்யொழுக்கம் குறையாத படைவீரமோ காரணம் அன்று; அது சோழனின் நற்பண்பு.

சொற்பொருள்: புறவு – புறா; நிறை – எடை ; ஈர்த்து – அறுத்து; துலை – துலாக்கோல் (தராசு); நிறை – ஒழுக்கம்; வன்கண்– வீரத்தன்மை; மேனி – உடல்.

இலக்கணக்குறிப்பு : உயர்துலை – வினைத்தொகை; குறையா வன்கண் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

பாண்டியன்

மருப்பூசி யாக மறங்கனல்வேல் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத் – திருத்தக்க
வையக மெல்லா மெமதென் றெழுதுமே
மொய்யிலைவேல் மாறன் களிறு.

பொருள் : நெருங்கி அமைந்த இலைபோன்ற வடிவிலான வேலை உடையவன் பாண்டிய மன்னன். அம்மன்னனின் யானை, தன் தந்தங்களை எழுத்தாணியாகவும் வீரம் செறிந்த வேற்படையையுடைய பகை மன்னரின் அகன்ற மார்புகளை ஓலைகளாகவும்கொண்டு செல்வம் நிலைத்த உலகமெல்லாம் எம் பாண்டியருக்குரியது என எழுதும்.

சொற்பொருள் : மருப்பு – தந்தம்; ஊசி – எழுத்தாணி; மறம் – வீரம்; கனல் – நெருப்பு; திருத்தக்க – செல்வம் நிலைத்த; வையகம் – உலகம்; மொய்யிலை – நெருங்கியமைந்த இலை; மாறன் – பாண்டிய மன்னன்; களிறு – ஆண் யானை.

இலக்கணக்குறிப்பு : இலைவேல் – உவமைத்தொகை; மருப்பூசி, மார்போலை – உருவகங்கள்; மாறன்களிறு – ஆறாம் வேற்றுமைத்தொகை.

பிரித்தறிதல் : மருப்பூசி – மருப்பு + ஊசி; மார்போலை – மார்பு + ஓலை; எமதென்று – எமது + என்று; மொய்யிலை – மொய் + இலை.

அணி : உருவக அணி.

நூற்குறிப்பு : மூவேந்தர்களைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்ட நூல் முத்தொள்ளாயிரம். ஆயினும், இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் நூல் வாயிலாக நூற்றெட்டு வெண்பாவும், பழைய உரை நூல்களில் மேற்கோள்களாக இருபத்திரண்டு வெண்பாவும் கிடைத்துள்ளன.

மூவேந்தர்களின் ஆட்சிச்சிறப்பு, படைச்சிறப்பு, போர்த்திறன், கொடை முதலிய செய்திகளை இப்பாடல்கள் விளக்குகின்றன. சிறந்த இலக்கிய நயமும் கற்பனை வளமும் நிறைந்த நூலாக முத்தொள்ளாயிரம் திகழ்கிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. சேர மன்னரின் அடையாளச் சின்னம் ________________ .

   அ) வில் ஆ) புலி இ) மீன்

2. சோழ மன்னன் ________________ வினைக் காக்க, தன் தசையை அளித்தான்.

   அ) பசு ஆ) புறா இ) மயில்

3. மார்போலையில் எழுதும் எழுத்தாணி ________________ .

   அ) ஈட்டி ஆ) தூரிகை இ) தந்தம்

2. பொருத்துக.

விசும்பு	–	தந்தம்
துலை	–	நெருப்பு
மருப்பு	–	துலாக்கோல்
கனல்	–	யானை
களிறு	–	வானம்

ஆ) குறுவினாக்கள்

1. மன்னர்கள் பிழைத்துக்கொள்ளும் வழியாக முத்தொள்ளாயிரம் கூறுவது யாது ?
2. சோழன் துலாக்கோலில் ஏறியது ஏன் ?
3. 'படைவீரமோ சென்னி பண்பு' – இவ்வடியில் சென்னி என்பது யாரைக் குறிக்கும் ?
4. யானை எழுத்தாணியாகக் கொண்டது எதனை ?

இ) சிறுவினாக்கள்

1. வானவர்கள் வாழ்வது எவ்விதம் ?
2. சோழனின் நற்பண்பை விளக்குக.
3. யானை, பகைவர் மார்பில் எழுதியது என்ன ?

தமிழ்

கலிங்கத்துப்பரணி

– சயங்கொண்டார்

1. தீயின் வாயினீர் பெறினு முண்பதோர்
சிந்தை கூரவாய் வெந்து லர்ந்துசெந்
நாயின் வாயினீர் தன்னை நீரெனா
நவ்வி நாவினால் நக்கி விக்குமே.

பொருள்: பாலைநிலத்தில் கடும் வெப்பம் நிலவியது. அதனால், மானின் வாய் வெந்து உலர்ந்தது; நெருப்பிலிருந்து நீர் கிடைத்தாலும் குடித்துவிடலாம் என்ற எண்ணம் தோன்றுமளவுக்குத் தாகத்தால் தவித்தது. செந்நாயின் வாயிலிருந்து வடியும் உமிழ்நீரைக்கூடக் குடிக்க முயன்று நக்கி, விக்கி நின்றது. (செந்நாய்க்கு மான் அஞ்சி ஓடும் எனினும், பாலை நில வெம்மை மிகுதியால் தத்தம் இயல்பு மறந்து களைத்திருந்தனவாம்.)

சொற்பொருள்: தீயின்வாய் – நெருப்பில்; சிந்தை – எண்ணம்; கூர – மிக; நவ்வி – மான்.

இலக்கணக்குறிப்பு: வெந்து, உலர்ந்து, எனா, கூர – வினையெச்சங்கள்; செந்நாய் – பண்புத் தொகை.

பகுபத உறுப்பிலக்கணம் : உலர்ந்து – உலர் + த் (ந்) + த் + உ. உலர் – பகுதி; த்– சந்தி, த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

பிரித்தறிதல் : வாயினீர் – வாயின் + நீர்; வெந்துலர்ந்து – வெந்து + உலர்ந்து.

2. காடிதனைக் கடத்தும்எனக் கருமுகிலும்
வெண்மதியும் கடக்க அப்பால்
ஓடிஇளைத்து உடல்வியர்த்த வியர்வன்றோ
உகுபுனலும் பனியும் அம்மா! *

பொருள் : கருமேகமும் வெண்ணிலவும் பாலை நிலத்தை மெல்லக் கடந்து சென்றன. அப்பொழுது வெப்பம் மிகுதியாக இருந்தது. அவ்வெப்பத்தைத் தாங்காமல், அவை விரைந்து ஓடின. ஓடும்பொழுது அவற்றின் உடல் களைத்து வியர்த்துக் கொட்டிய வியர்வை நீரையே, கருமேகம் மழையாகவும், வெண்ணிலவு பனியாகவும் பொழிந்தன.

சொற்பொருள் : முகில் – மேகம்; மதி – நிலவு; உகு – சொரிந்த (பொழிந்த); புனல் – நீர்.

தமிழ்

இலக்கணக்குறிப்பு : கருமுகிலும் வெண்மதியும் – எண்ணும்மை; கருமுகில், வெண்மதி – பண்புத்தொகைகள்; கடக்க, ஓடி, இளைத்து – வினையெச்சங்கள்; வியர்த்த வியர்வன்றோ – பெயரெச்சம்.

பிரித்தறிதல் : காடிதனை – காடு + இதனை; கருமுகில் – கருமை + முகில்; வெண்மதி – வெண்மை + மதி.

ஆசிரியர் குறிப்பு : கலிங்கத்துப்பரணியை இயற்றியவர் சயங்கொண்டார். இவர், திருவாரூர் மாவட்டத்திலுள்ள தீபங்குடி என்னும் ஊரினர்; முதல் குலோத்துங்கச் சோழனின் அரசவைப் புலவராகத் திகழ்ந்தவர்; பரணிக்கோர் சயங்கொண்டார் எனப் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாராட்டியுள்ளார்; இசையாயிரம், உலாமடல் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவரது காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

நூற்குறிப்பு : ஆயிரக்கணக்கான யானைகளைப் போரில் கொன்ற வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியத்திற்குப் பரணி என்பது பெயர். இது, தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. பரணி இலக்கியங்களுள் தமிழில் தோன்றிய முதல் நூல் கலிங்கத்துப்பரணி. கலிங்க மன்னன் அனந்தபன்மன்மீது முதல் குலோத்துங்கச் சோழன் போர்தொடுத்து வெற்றிபெற்றான். அவ்வெற்றியைப் பாராட்டி எழுந்த இந்நூல், தோல்வியுற்ற கலிங்கநாட்டின் பெயரால், அமைந்து உள்ளது. இந்நூலில், ஐந்நூற்றுத் தொண்ணூற்றொன்பது தாழிசைகள் உள்ளன. சயங்கொண்டாரின் சமகாலப் புலவரான ஒட்டக்கூத்தர் இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி எனப் புகழ்ந்துள்ளார்.

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி.

- பன்னிரு பாட்டியல்

பரணி இலக்கியங்கள்		
1. தக்கயாகப் பரணி	3. மோகவதைப் பரணி	5. சீனத்துப் பரணி
2. வங்கத்துப் பரணி	4. பாசவதைப் பரணி	6. திராவிடத்துப் பரணி



எனக்கு மிக விருப்பமான இலக்கியம்
ஒன்று உண்டென்றால்
அது கலிங்கத்துப்பரணியே.”

– பேரறிஞர் அண்ணா

தமிழ்

மாதிரி வினாக்கள்

அ) புறவய வினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. தமிழில் தோன்றிய முதல் பரணி இலக்கியம் ______________ .
   அ) தக்கயாகப் பரணி ஆ) மோகவதைப் பரணி இ) கலிங்கத்துப்பரணி
2. கலிங்கத்துப்பரணியை இயற்றியவர் ______________ .
   அ) ஒட்டக்கூத்தர் ஆ) சயங்கொண்டார் இ) புகழேந்திப் புலவர்
3. நவ்வி – இச்சொல்லின் பொருள் ______________ .
   அ) மான் ஆ) நாய் இ) நரி
4. சிற்றிலக்கியங்கள் ______________ வகைப்படும்.
   அ) 18 ஆ) 108 இ) 96

2. பொருத்துக.

சிந்தை – சொரிதல்
நவ்வி – நீர்
முகில் – மான்
புனல் – மேகம்
உகுதல் – எண்ணம்

ஆ) குறுவினாக்கள்

1. பரணி இலக்கியம் – குறிப்பு எழுதுக.
2. கலிங்கத்துப்பரணியின் பெயர்க்காரணத்தை எழுதுக.
3. மானின் வாய் உலரக் காரணம் யாது ?
4. மேகமும் நிலவும் விரைந்தோடியது ஏன் ?

இ) சிறுவினாக்கள்

1. சயங்கொண்டார் – குறிப்பு எழுதுக.
2. பாலை நிலத்தின் வெம்மையைக் கலிங்கத்துப்பரணி எவ்வாறு வருணித்துள்ளது ?

உலகளாவிய தமிழர்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி எனத் தமிழினத்தின் தொன்மையைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும். உலகில் முதன்முதலில் தோன்றிய மனிதன் தமிழனே என்பது மானிடவியல் ஆராய்ச்சியாளர்களின் கருத்து. குமரிக்கண்டத்தில் தோன்றிய தமிழினம் உலகமெலாம் பரவித் தன்புகழை நிலைநாட்டி வருகிறது.

தமிழினப் பரவல்

உலகில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை பெற்ற நூற்றுத் தொண்ணூற்று இரண்டு நாடுகளும் நாற்பத்து மூன்று ஆட்சிப்புலங்களும் ஆக இருநூற்று முப்பத்தைந்து நாடுகள் உள்ளன. அவற்றில் ஏறத்தாழ நூற்றைம்பத்து நான்கு நாடுகளில் தமிழினம் பரவியுள்ளது.

பத்துத் தமிழர்கள்முதல் ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் தமிழர்கள்வரை அந்நாடுகளில் வாழ்கிறார்கள். அவற்றுள், இருபது நாடுகளில் இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர் வாழ்கின்றனர்.

தமிழர் புலம்பெயரக் காரணங்கள்

வாணிகம், வேலைவாய்ப்பு ஆகிய காரணங்களுக்காகத் தமிழர்கள் அயல் நாடுகளுக்குச் சென்றார்கள். சங்க இலக்கியங்களிலும் இது குறித்த செய்தி காணப்படுகிறது. அதனாலன்றோ ஔவையாரும், திரைகடலோடியும் திரவியம் தேடு என்றார். சாதுவன் வாணிகம் செய்யும்பொருட்டுக் கடல்கடந்து சென்ற குறிப்பு மணிமேகலையில் உள்ளது.

ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் தமிழர் சிலரை அடிமைக் கூலிகளாக்கி, அவர்தம் ஆளுகைக்கு உட்பட்ட நாடுகளுக்கு அழைத்துச் சென்றார்கள். சிலர், நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாகவும் மற்றும் சிலர், அன்னியப் படையெடுப்பின் காரணமாகவும் தமிழகத்தைவிட்டுப் பிழைக்கச் சென்றனர்.

தமிழர் நிலை

தமிழர் புலம்பெயர்ந்து சென்று பல நாடுகளில் வாழ்ந்தாலும், தமது உடலுழைப்பாலும் நேர்மையாலும் அந்நாடுகளை வளம்பெறச் செய்தனர்; தாமும் வளம்பெற்று உயர்ந்துள்ளனர்; தம் உரிமைகளையும் நிலை நாட்டியுள்ளனர்.

பண்பாட்டு நிலை

தமிழர் சிங்கப்பூர், மலேசியா, பினாங்குத் தீவு ஆகிய நாடுகளில் கோவில்கள் கட்டி ஆண்டுதோறும் திருவிழாக்களைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர். பரப்பளவில் சிறியதான ரியூனியன் தீவில் வாழ்பவர்களுள் பெரும்பான்மையோர் தமிழரே.

அவர்கள் பிரெஞ்சுக்காரர்களால் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலிருந்து ஒப்பந்தக் கூலிகளாக அங்குக் குடியமர்த்தப்பட்டார்கள். பிரான்சு நாட்டின் ஒரு பகுதியாகக் கருதப்படும் அத்தீவில் வாழும் தமிழர்கள் பிரெஞ்சுமொழியே பேசுகிறார்கள். அவர்கள், தமிழைப் பேசாதபோதும் தமிழர்தம் பண்பாட்டுக் கூறுகளை மறவாது இன்றளவும் பின்பற்றி வருகிறார்கள். கோவில் திருவிழாக்களில் காவடி எடுப்பதும், தேரிழுப்பதும் அங்கு இன்றும் நடைபெற்று வருகின்றன. அந்நாடுகளில் தமிழ்மொழியைக் கற்கவும் கற்பிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மொழி நிலை

இலங்கையில் வாழும் தமிழருள் தொண்ணூற்றைந்து விழுக்காட்டினர் தொடக்கப் பள்ளிமுதல் பல்கலைக்கழகம்வரை தமிழிலேயே கல்வி பயில்கின்றனர். சிங்கப்பூர், மொரிசியசு, மலேசியா, பிஜித்தீவுகள், தென் அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது.

அமெரிக்க நாட்டுப் பேராசிரியர்கள் வி. எஸ். இராஜன், ஜார்ஜ் எல். ஹார்ட், கௌசல்யா ஹார்ட், சிம். லிண்ட் ஹோம், இந்திரா, நார்மன், ஹால் சிப்மேன், டபிள்யூ. குளோத்தி, ஜேம்ஸ் பிராங்கா, மறைந்த பேராசிரியர் ஏ.கே. இராமானுஜம் முதலியோர் தமிழுக்கு ஆற்றிய அரும்பணிகள் போற்றத்தக்கன.

பல நாடுகளுக்கும் வாழச் சென்ற தமிழர்கள், தம் வருவாயை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல், தமிழை வளர்க்கும் செயல்களில் ஈடுபட்டு வருவது அவர்தம் மொழிப்பற்றைக் காட்டுகிறது. இருபத்து நான்கு மணிநேரமும் ஊடகங்களில் (வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம்) தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்கவும் காணவும் ஆங்காங்கே வாழும் தமிழர்கள் அந்தந்த நாட்டு அரசுகளிடம் அனுமதி பெற்றுள்ளார்கள். இந்த ஊடகங்கள் தமிழர்களை இணைக்கும் பாலங்களாகத் திகழ்கின்றன. அவை மொழியை மறவாமல் காக்கவும் மேம்படச் செய்யவும் பேருதவி புரிகின்றன.

தமிழ்

தமிழ் ஆட்சிமொழி

இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் ஆட்சிமொழியாகத் தமிழ் திகழ்கிறது. தமிழைப் பாடமொழியாகப் பயிலவும், தமிழியல் ஆய்வுகளை மேற்கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நாடுகளில் இசை, நாட்டியம், நாடகம் முதலியனவற்றைக் கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அச்சு, ஒலி, ஒளி ஊடகங்களை உலகெங்கும் தமிழர் நடத்தி வருகின்றனர்.

தமிழர்கள் அடைந்த உயர்வு

தமிழர், தம் நாட்டைவிட்டுச் சென்றபோதும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் உயர்நோக்கோடு வாழ்ந்து வருகின்றனர். அங்கும் தமது திறமையை நிலைநாட்டி, உயர்பதவிகள் பலவற்றில் பணியாற்றி வருகின்றனர். அவர்கள், தொழில் துறையிலும் கல்வித் துறையிலும் கணினித் துறையிலும் காலூன்றிச் சிறப்புடன் பணியாற்றி வருகின்றார்கள். அடிமைகளாகவும் கூலிகளாகவும் சென்றநிலை மாறி, இன்று கல்வித்திறனையும் அறிவாற்றலையும் ஆளுமைத் திறனையும் வெளிப்படுத்தும் வகையில் உயர்பதவிகளில் பணியாற்றும் நிலைக்குத் தமிழர் உயர்ந்துள்ளனர். தாம் உயர்ந்தது மட்டுமல்லாமல், தம் தாய்நாட்டுக்குப் பெருமையும் வளமும் சேர்த்து வருகின்றனர்.

ஆட்சி நிலை

தமிழர் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகள் பலவற்றில் உள்ளாட்சித் தேர்தல்களில் வெற்றிபெற்று ஆட்சிப் பொறுப்புகளையும் வகித்து வருகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் எனப் பல பதவிகளிலும் சிறப்புறத் தொண்டாற்றி வருகின்றனர்.

இந்தியாவில் மட்டுமல்லாமல் சிங்கப்பூர், மொரிசியசு ஆகிய நாடுகளில் குடியரசுத் தலைவர்களாகவும் தமிழர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது தமிழினத்துக்குப் பெருமை சேர்க்கிறது.

தாயகத்துடன் உறவுநிலை

தமிழர்கள், பல்வேறு காரணங்களுக்காகப் புலம்பெயர்ந்து அயல்நாடுகளில் வாழ்ந்து வந்தாலும், தம் தாயகத்தை மறவாமல் இருக்கிறார்கள். தாயகத்திலுள்ள வளங்களைத் தாம் வாழும் இடங்களுக்குக் கொண்டு செல்கிறார்கள்.

உணவுப்பொருள்கள், உடைகள், திருவிழாக்களுக்கான பொருள்கள், இசைக்கருவிகள், தமிழ் நூல்கள், இதழ்கள், கோவில் சிலைகளெனப் பண்பாட்டுக்குத் தேவையானவற்றைத் தாயகத்திலிருந்து தருவித்துக் கொள்கிறார்கள்.

அத்துடன் பண்பாட்டு நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகளுக்குத் தாயகத்திலிருந்து கலைஞர்களை வருவித்து மகிழ்கிறார்கள். இவ்வாறு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தாயகத்திற்கு வருகைதந்து தம் பண்பாட்டை மேம்படுத்திக் கொள்கிறார்கள்.

தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு என்பதற்கிணங்க, உலகெங்கும் வாழும் தமிழர்கள் தங்களது பண்பாட்டு அடையாளங்களை மறவா–மலும் மாற்றிக் கொள்ளாமலும் வாழ்கின்றார்கள். மேலும் அவர்கள், தமிழுக்கும் தமிழினத்துக்கும் தமிழகத்துக்கும் பெருமை சேர்த்து வருகிறார்கள்.

கணியன் பூங்குன்றனாரின் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் வாக்கை மெய்ப்பிக்கும் வண்ணம் இன்றும் தமிழர் உலகெங்கும் வாழ்ந்து வருகின்றனர்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஐக்கிய நாடுகளின் உறுப்புரிமை பெற்ற நாடுகளின் எண்ணிக்கை__________ .
2. சாதுவன் கடல் வாணிகம் மேற்கொண்டான் என்னும் குறிப்பு __________ நூலில் காணப்படுகிறது.
3. ‘திரைகடலோடியும் திரவியம் தேடு’ எனக் கூறியவர் __________ .
4. தமிழர்கள் ஒப்பந்தக் கூலிகளாக __________ தீவில் குடியமர்த்தப்பட்டார்கள்.
5. திருவிழாக்களில்__________ எடுப்பதும்__________ இழுப்பதும் இன்றும் நடைபெறுகிறது.

ஆ குறுவினாக்கள்

1. தமிழினம் உலகில் எங்கெல்லாம் பரவியுள்ளது ?
2. தமிழர் புலம்பெயரக் காரணங்கள் யாவை ?
3. புலம்பெயர்ந்த தமிழரின் பண்பாட்டு நிலையை விளக்குக.
4. ஊடகங்கள் மொழி வளர்ச்சிக்கு ஆற்றும் பணிகளை எழுதுக.
5. அயல்நாட்டு ஆட்சிநிலையில் தமிழர்தம் பங்கினை எழுதுக.

இ) சிறுவினாக்கள்

1. இன்றைய நிலையில் தமிழர் புலம்பெயர்வதற்கான காரணங்கள் யாவை ?
2. புலம்பெயர்ந்த தமிழர் தாயகத்துடன் கொண்டுள்ள தொடர்பு எத்தகையது ?
3. ரியூனியன் தீவில் வாழும் தமிழர் பற்றி எழுதுக.

ஈ) நெடுவினா

உலகளாவிய தமிழர்தம் மொழி நிலை, பண்பாட்டு நிலையை விவரிக்க.

துணைப்பாடம்

திரு.வி.கலியாணசுந்தரனாரின் தமிழ்ப்பணி

சீரிளமைத் திறம்வாய்ந்த செம்மொழியான தமிழ்மொழியைத் தமிழகத்து மேடைகளில் ஏற்றித் தமிழைத்தென்றலாகத் தவழச்செய்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் திரு.வி.கலியாண சுந்தரனார். அவர், தமது தங்குதடையற்ற மேடைப்பேச்சாலும் இயல்பான மொழிநடையாலும் தமிழைப் பட்டிதொட்டிகள் எல்லாம் பரப்பித் தமிழ்த்தென்றல் எனப் போற்றப்பட்ட பெருந்தகையர்.

பிறப்பும் கல்வியும்

சென்னைக்கு அருகேயுள்ள துள்ளம் என்னும் ஊரில் விருத்தாசலனார் – சின்னம்மையாரின் மகனாக 26.08.1883ஆம் நாள் பிறந்தார். சென்னை இராயப்பேட்டையிலுள்ள வெஸ்லி பள்ளியில் படித்தார். உடல்நலக்குறைவினால் இடைநின்று நான்கு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் அதே பள்ளியில் சேர்ந்தார். எனினும், தவிர்க்கமுடியாத காரணத்தினால் இறுதித்தேர்வினை அவரால் எழுத இயலவில்லை. ஆயினும், கதிரைவேலர் என்பாரிடம் தமிழ் பயின்று தமிழ்ப் பேராசிரியராக உயர்ந்தார். இலக்கியங்களையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் கற்பதில் பேரார்வங்கொண்டார்.

தமிழ்ப்பற்று

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதனை முழு மூச்சாகக்கொண்டு, வடமொழிச் சொற்கள் கலவாமல் தூய தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டும் என வற்புறுத்தினார். அதனை நடைமுறையில் பின்பற்றி அவரும் வாழ்ந்து காட்டினார்.

பிறமொழியறிவு

நமது உடல்நலத்தைப் பேணவேண்டும் என்று குறிப்பிட்டால், பிறர் உடல்நலத்தைக் கேடு சூழவேண்டும் என்று பொருள் கொள்ளக்கூடாது. அதுபோலவே, தமிழை

வளர்க்க வேண்டும் என்றால், பிறமொழியை வெறுக்கவேண்டும் என்பது பொருளன்று என்பார். அதற்கேற்பத் தாமும் ஆங்கில மொழியில் ஆழ்ந்தகன்ற புலமை பெற்றிருந்தார். காந்தியடிகள் தமிழகம் வந்தபோதெல்லாம் அவரது மேடைப் பேச்சினை மொழிபெயர்த்தவர் இவரே.

இளைஞர்களுக்கு அறிவுரை

இளைஞர்களுக்குத் தமிழுணர்வூட்டும் நோக்கில், "இளைஞர்களே! உங்கள் தமிழ்த்தாய் நேற்றுப் பிறந்தவள் அல்லள்; இன்று பிறந்தவள் அல்லள். அவள் மிகத் தொன்மையுடையவள்; கலைகளையுடையவள். அவளையா கொல்வது? தாய்க்கொலை புரிவதா தமிழர் வீரம்? வீரத்துக்குரிய தங்கள் இளமுகம் நோக்கிக் கேட்கின்றேன். நேற்றும் இன்றும் பிறந்த நாடுகளையும் கலைகளையும் ஓம்பவும் பெருக்கவும் அவ்வந்நாட்டார் முயன்று வருகின்றனர். நாமோ, பழம்பெருநாட்டை மறைக்கப் பார்க்கின்றோம். தமிழ் இறந்தபின் தமிழ்மண் மட்டுமிருந்தென்ன? மொழி இறந்துபடின் நாடும் இறந்துபடுமன்றோ? உலகிற்கே ஒருபோது நாகரிகத்தை வழங்கிய மாண்பு வாய்ந்த ஒரு பெரும் நாட்டையா மறப்பது? அதனையா மறைப்பது?

"இளைஞர்களே! தமிழுலகின் இழிந்தநிலையை ஒருங்கள்; ஓர்ந்து (எண்ணி) உங்கள் பொறுப்பை உணருங்கள்; தமிழ்த்தாயைப் புதுப்போர்வையில் ஒப்பனை செய்து அரியாசனத்தமர்த்த சூள்கொண்டெழுங்கள், எழுங்கள்; பழந்தமிழ் வீரத்துடன் எழுங்கள்" என்று அறைகூவல் விடுப்பார்.

பேச்சுப்பணி

எழுத்து மட்டுமல்லாமல், தமது பேச்சாலும் தமிழ்வளர்த்த பெருமகனார் இவர். திரு.வி.க நடை என்றே ஒரு தனிநடையை நடைமுறைப்படுத்தும் அளவுக்குப் பேசுவதுபோலவே எழுதுவது; எழுதுவதுபோலவே பேசுவது என்னும் முயற்சியில் இவர் வெற்றி கண்டவர்.

திரு.வி.க., வெல்லுஞ்சொல் இன்மையறிந்து உணர்ச்சிச் சொற்களைக் கோத்துக் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் விரும்பும் வண்ணம் பேசுவதில் வல்லவர். அறிஞர் அண்ணா உள்ளிட்ட அக்கால இளைஞர்களை உணர்ச்சிமிகு பேச்சினால் தம்பால் ஈர்த்து மேடைத்தமிழின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் திரு.வி.க.

எழுத்துப்பணி

உரைநடை எழுதுவது எனது தொழில் என்னும் அளவிற்கு உரைநடைக்கு அவர் மதிப்புக் கொடுத்தார். அவருக்கு வாய்த்த மொழிநடை மலை எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந்துள்ளது என்பார் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார். இதனால், இக்காலத் தமிழ்மொழி நடையாளராக மதிப்பிட்டுக் காணுமளவிற்குச் சீரிய மொழிநடையில் அவரின் மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணைநலம், இமயமலை அல்லது தியானம் முதலிய நூல்கள் அவரது கற்பனைத்திறனையும், சீர்திருத்த ஈடுபாட்டையும் உயர்ந்த நடையையும் வெளிக்காட்டுகின்றன.

உரைநடை நூல்கள்

முருகன் அல்லது அழகு, சைவத்திறவு, சைவத்தின் சமரசம், கடவுட் காட்சியும் தாயுமானவரும், இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், தமிழ்நாடும் நம்மாழ்வாரும், நாயன்மார் வரலாறு, தமிழ்நூல்களில் பௌத்தம், காதலா ? முடியா ? சீர்திருத்தமா ?, என் கடன் பணிசெய்து கிடப்பதே, இந்தியாவும் விடுதலையும், தமிழ்ச்சோலை, உள்ளொளி என்பன இவர் இயற்றிய இன்னபிற உரைநடை நூல்கள்.

செய்யுள் நூல்கள்

முருகன் அருள்வேட்டல், திருமால் அருள்வேட்டல், கிறித்துவின் அருள்வேட்டல், அருகன் அருள்வேட்டல், உரிமை வேட்டல், பொதுமை வேட்டல், பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியமும் ஆகியன இவரது செய்யுள் நூல்கள்.

இதழ்ப்பணி

தேசபக்தன், நவசக்தி என்னும் இதழ்களின் வாயிலாகத் தொழிலாளர் முன்னேற்றம்பெறப் பாடுபட்டவர். அதற்காகத் தமது ஆசிரியர் பணியையும் துறந்தார். தமது வீறுகொண்ட தமிழ்முழக்கத்தால், சிதறிக்கிடந்த தொழிலாளர்களை ஒன்றிணைத்துத் தொழிலாளர் இயக்கம் கண்டார்.

தமிழ் வாழ்வினர்

திரு.வி.க., தம் சிந்தனை, சொல், செயல் நிலையால் சுத்த சன்மார்க்கியாக, சமயப் பொதுமையாளராக விளங்கி அருந்தொண்டாற்றினார். எழுபது வயதாகி உடல்தளர்ந்து படுக்கையில் இருந்தபோதும் வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல் என்னும் நூலை மு. வரதராசனாரின் உதவியுடன் வெளியிட்டார். அவர், வாழ்நாளின் இறுதிவரை தமிழைத் தன் மூச்சாகக் கொண்டு தமிழ்ப்பணி ஆற்றினார்.

மணமுடித்த ஆறே ஆண்டுகளில் அவர்தம் மனைவி கமலாம்பிகை அம்மையாரை இழந்தார். தனிமையில் வாழ்ந்துவந்த அவரிடம் நண்பர் ஒருவர், 'மனைவியை இழந்து தனிமையில் வாழ்வது கடினமாக இல்லையா ?' எனக் கேட்டார். அதற்கு, நான் தனியாக வாழவில்லை; தமிழோடு வாழ்கிறேன் எனக் கூறினார். திரு.வி.க., 1953ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பதினேழாம் நாள் தமது எழுபத்தோராம் வயதில் தமிழ் மூச்சுக்கு விடைதந்தார். அவர் விட்டுச்சென்ற தமிழ்மூச்சை நாமும் சுவாசித்து வாழ்வோம்.

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. திரு.வி.க., இளைஞர்களுக்குக் கூறும் அறிவுரை யாது ?
2. திரு.வி.க.வின் எழுத்துப்பணியை விளக்குக.

ஆகுபெயர்

சொல்லாகுபெயர், தானியாகுபெயர்

ஆகுபெயர் பதினாறு வகைப்படும். அவற்றுள், பொருளாகுபெயர் முதலான ஆறு ஆகுபெயர்களை எட்டாம் வகுப்பில் கற்றிருக்கிறீர்கள். பிற ஆகுபெயர்களுள் நால்வகை அளவை ஆகுபெயர்களை முதற்பருவத்தில் கற்றுக்கொண்ட நீங்கள், இரண்டாம் பருவத்தில் சொல்லாகுபெயரையும் தானியாகுபெயரையும் கற்கவிருக்கிறீர்கள். ஒரு பொருளின் பெயர், தனக்குரிய பொருளைக் குறிக்காமல், தன்னொடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

1. சொல்லாகுபெயர் : வள்ளுவர்சொல் வாழ்க்கைக்கு இனிது. இத்தொடரில் வள்ளுவர்சொல் என்பது, சொல்லைக் குறிக்காது பொருளுக்குப் பெயராகி வந்ததனால், இது சொல்லாகு பெயர்.

2. தானியாகுபெயர் : பாலை இறக்கு. பாலின் பெயர், பாலைக் குறிக்காமல் பாத்திரத்தைக் குறிக்கிறது. ஓர் இடத்தில் உள்ள ஒரு பொருளின் பெயர் (தானி), அது சார்ந்திருக்கும் இடத்திற்குப் (தானத்திற்கு) பெயராகி வருவது தானியாகுபெயர்.

1. இடம், பொருளுக்கு ஆகி வருவது இடவாகுபெயர்.
2. பொருள், இடத்திற்கு ஆகி வருவது தானியாகுபெயர்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. தயிரை இறக்கு. இத்தொடர் ______________ ஆகுபெயர் ஆகும்.
   அ) இடவாகுபெயர் ஆ) தானியாகுபெயர் இ) சொல்லாகுபெயர்
2. பெரியோர் சொல் கேள். இத்தொடர் ______________ ஆகுபெயர் ஆகும்.
   அ) சொல்லாகுபெயர் ஆ) பொருளாகுபெயர் இ) இடவாகுபெயர்
3. கழல் பணிந்தான். இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர் ______________ ஆகும்.
   அ) சொல்லாகுபெயர் ஆ) தானியாகுபெயர் இ) இடவாகுபெயர்
4. நூற்கு உரை செய்தான். இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர் ______________ ஆகும்.
   அ) சொல்லாகுபெயர் ஆ) தானியாகுபெயர் இ) இடவாகுபெயர்

ஆ) குறுவினாக்கள்

1. ஆகுபெயர் எத்தனை வகைப்படும் ?
2. சொல்லாகுபெயர் என்றால் என்ன ? சான்று தருக.
3. தானியாகுபெயர் என்றால் என்ன ?

பொருள்கோள்

பொருள்கோள் எண்வகைப்படும். அவற்றுள், முதல் மூன்று பொருள்கோளையும் முதற் பருவத்திலேயே கற்றிருக்கிறீர்கள். இந்தப் பருவத்தில் விற்பூட்டுப் பொருள்கோளையும் தாப்பிசைப் பொருள்கோளையும் அறிந்துகொள்ளலாம்.

ஒரு செய்யுளிலுள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்ச்சிக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொள்ளும் முறை பொருள்கோள் என்பதனை நினைவு கூர்வோம்.

1. விற்பூட்டுப் பொருள்கோள்

வில்லின் இருமுனைகளையும் இணைத்துக் கட்டுதல்போலச் செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும், இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்படப் பொருத்துவது விற்பூட்டுப் பொருள்கோள். இதனைப் பூட்டுவிற் பொருள்கோள் எனவும் கூறுவர்.

(எ.கா.) நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. – குறள், 336

இக்குறளில், உலகு என்னும் இறுதிச்சொல் முதல்சொல்லான நெருநல் என்பதோடு சேர்த்துப் பொருள் கொள்வதனால் இது விற்பூட்டுப் பொருள்கோள்.

2. தாப்பிசைப் பொருள்கோள்

ஊஞ்சலின் நடுநின்ற கயிறு முன்னும் பின்னும் சென்று வருவதுபோலச் செய்யுளின் நடுவில் அமைந்திருக்கும் சொல், செய்யுளின் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொற்களுடன் பொருந்திப் பொருளைத் தருவது தாப்பிசைப் பொருள்கோள்.

தாம்பு + இசை = தாப்பிசை – ஊஞ்சல் கயிறு அசைதல்போல.(தாம்பு = ஊஞ்சல்கயிறு)

(எ.கா.) இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. – குறள், 310

இப்பாடலில் 'சினத்தை' என்னும் நடுநின்ற சொல்லைச், சினத்தை உடையவர் (இறந்தார்) இறந்தார் அனையர் எனவும், சினத்தைத் துறந்தார் (துறந்தார்) ஞானியர் துணை எனவும் அமைத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும், இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்படப் பொருந்துவது ______________ பொருள்கோளாகும்.
2. செய்யுளின் இடையில் அமைந்திருக்கும் சொல், செய்யுளின் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொல்லுடன் பொருந்திப் பொருளைத் தருவது ______________ பொருள்கோளாகும்.

ஆ) குறுவினாக்கள்

1. விற்பூட்டுப் பொருள்கோள் எவ்வாறு வரும்? சான்று தருக.
2. தாப்பிசைப் பொருள்கோள் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.
3. ‘உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊனுண்ண
   அண்ணாத்தல் செய்யா தளறு’.
   – இக்குறட்பாவில் பயின்றுவரும் பொருள்கோளை விளக்குக.

வகுப்பறைத்திறன்கள்

எழுதுதல் திறன்

அ) உவமை, உருவக மாற்றம்

உவமை என்பது, ஒரு பொருளை அல்லது நிகழ்வை மற்றொரு பொருளோடு அல்லது நிகழ்வோடு ஒப்புமைப்படுத்துவது. உவமை, உவமிக்கும் பொருளைவிட உயர்ந்தது. உவமைத்தொடரில் உவமை முன்னும், பொருள் பின்னுமாக வரும்.

(எ.கா.) மதி போன்ற முகம்: மதி – உவமை; முகம் – (உவமேயம்) பொருள்

கவிஞர், தாம் கருதிய பொருளையும் ஒப்புமைப் பொருளையும் (உவமையையும்) வெவ்வேறு எனக் கூறாமல், இரண்டும் ஒன்றெனக் கூறுவது உருவகம். உருவகத்தொடரில் பொருள் முன்னும், உவமை பின்னுமாக வரும்.

(எ.கா.) முகமதி: முகம் – பொருள்; மதி – உவமை. இங்கு இரண்டும் ஒன்றெனக் கூறப்பெற்றது.

உவமை உருவக மாற்றம்

உவமை	உருவகம்
தாமரைமுகம்	முகத்தாமரை
தேன்மொழி	மொழித்தேன்
பவளவாய்	வாய்ப்பவளம்
முத்துப்பல்	பல்முத்து

பயிற்சி

1. உவமைகளை உருவகங்களாக மாற்றுக.

   கனிஇதழ், மலரடி, காந்தள்விரல், கயல்விழி, மதிமுகம்.

   ____

2. உருவகங்களை உவமைகளாக மாற்றுக.

   தமிழமுது, கண்மலர், முகத்தாமரை

   ____

தமிழ்

தமிழ்

ஆ) அடிச்சொல்லிலிருந்து சொற்களை உருவாக்குதல்

வா	–	அடிச்சொல்	படி	–	அடிச்சொல்
வந்தான்	–	வினைமுற்று	படித்தான்	–	வினைமுற்று
வந்த	–	பெயரெச்சம்	படித்த	–	பெயரெச்சம்
வந்து	–	வினையெச்சம்	படித்து	–	வினையெச்சம்
வருதல்	–	தொழிற்பெயர்	படித்தல்	–	தொழிற்பெயர்

பயிற்சி

நட, பாடு, செய், பார், ஓடு, செல்.

அடிச்சொல்	வினைமுற்று	வினையெச்சம்	பெயரெச்சம்	தொழிற்பெயர்
நட	நடந்தான்	நடந்து	நடந்த	நடத்தல்

படைப்பாற்றல் திறன்

பாடலைக் காட்சிப்படுத்தல் : திருக்குறள் பாடலுக்குக் காட்சி

1. “கான முயலெய்த அம்பினில் யானை
 பிழைத்தவேல் ஏந்தல் இனிது. ”

2. “சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
 உழந்தும் உழவே தலை.”

மொழித்திறன் பயிற்சி

பிழை நீக்கி எழுதுதல்

ஒருவர் பேசும்போதும் எழுதும்போதும் பிழையின்றிப் பேசவும் எழுதவும் வேண்டும். பேச்சில் அல்லது எழுத்தில் பிழையிருப்பின் பொருள் மயக்கம் ஏற்படும். எனவே, சொற்களிலும் தொடர்களிலும் பிழைவராமல் காத்தல் வேண்டும்.

திணை, பால், எண், இடம், காலம், மரபு ஆகியன பிழையாக வாராமல் தொடரை எழுதுதல் வேண்டும்.

எழுவாய் உயர்திணையாக இருந்தால் பயனிலையும் உயர்திணையாக இருத்தல் வேண்டும்.

(எ.கா.) பொன்னன் தொடரோட்டத்தில் கலந்துகொண்டான்.

எழுவாய் அஃறிணையாக இருந்தால் பயனிலையும் அஃறிணையாக இருத்தல் வேண்டும்.

(எ.கா.) பசு புல் மேய்ந்தது.

எழுவாய், ஐம்பால்களுள் எந்தப் பாலில் உள்ளதோ அதற்கேற்பப் பயனிலையைப் பெறல் வேண்டும்.

(எ.கா.) அழகன் பாடினான்.
வள்ளி ஆடினாள்.
புலவர்கள் பாடல்களை இயற்றினார்கள்.
யானை பிளிறியது.
மான்கள் ஓடின.

எழுவாய் – கள் விகுதி பெற்றால் பயனிலையும் கள் விகுதி பெறுதல் வேண்டும். எழுவாய் – அர் விகுதி பெற்றால் பயனிலையும் – அர் விகுதி பெறுதல் வேண்டும்.

(எ.கா.) மாணவர்கள் சிறப்பாகத் தேர்வு எழுதினார்கள்.
மூவர் தேவாரத்தைப் பாடினர்.

எழுவாய் ஒருமையாக இருந்தால் பயனிலையும் ஒருமையாக இருத்தல் வேண்டும்.

எழுவாய் பன்மையாக இருந்தால் பயனிலையும் பன்மையாக இருத்தல் வேண்டும்.

(எ.கா.) என் புத்தகம் இதுவன்று.
என் புத்தகங்கள் இவையல்ல.

தொடரில் காலவழு ஏற்படாமல் காத்தல் வேண்டும்.

(எ.கா.) தலைவர் நாளை மதுரையில் பேசுவார்.
நேற்று மழை பொழிந்தது.

பிழையான சொற்களைத் திருத்துதல் (வழூஉச் சொற்களைத் திருத்துதல்)

பேச்சுவழக்குச் சொற்களை அப்படியே எழுத்தில் கொண்டுவருவது தவறு. அவ்வாறு எழுதுவதனை வழூஉச் சொற்கள் எனக் கூறுவர். அவற்றுக்குரிய எழுத்துவழக்குச் சொற்களை எழுதுவதே முறை.

பயிற்சி : வழூஉச் சொற்களைத் திருத்துக.

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
அடமழை		சுடுதண்ணி	
அரிவாமணை		எண்ணை	
அவரக்காய்		ஒட்டறை	
தவக்களை		கவுறு	
சிலவு		பச்சதண்ணி	
தாவாரம்		நஞ்சை	

தமிழ்

தமிழ்

பிறமொழிச் சொற்களை நீக்கி உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

தமிழ்மொழியில் எழுதும்போது தமிழ்ச்சொற்களையே பயன்படுத்துதல் வேண்டும். நடைமுறையில் உள்ள பிறமொழிச்சொற்களையும் அவற்றுக்கு இணையான தமிழ்ச்சொற்களையும் அறிந்தால் பிறமொழிக் கலப்பின்றி எழுதலாம்.

தமிழ்ச்சொல் அறிவோம்.

பிறமொழிச் சொற்கள்	தமிழ்ச்சொற்கள்	பிறமொழிச் சொற்கள்	தமிழ்ச்சொற்கள்
அங்கத்தினர்		கும்பாபிஷேகம்	
அர்த்தம்		சாவி	
அலங்காரம்		சரித்திரம்	
ஆரம்பம்		சபதம்	
விஞ்ஞானம்		சாதம்	
தீபம்		பௌத்திரி	

உரிய தமிழெண்ணைத் தேர்ந்தெழுதுக.

1. பன்னிரண்டு என்பதன் தமிழெண்

அ) கஉ ஆ) ௪உ இ) உஉ

2. ஏழு என்பதன் தமிழெண்

அ) அ ஆ) ரு இ) எ

3. பதினொன்று என்பதன் தமிழெண்

அ) கக ஆ) க0 இ) க௪

4. இருபத்தெட்டு என்பதன் தமிழெண்

அ) கஅ ஆ) உஅ இ) கஎ

5. இருபது என்பதன் தமிழெண்

அ) க0 ஆ) உ0 இ) ௪0

கட்டுரைப் பயிற்சி : பேரிடர் மேலாண்மை (ஆழிப்பேரலை)

கடிதப் பயிற்சி : களவுபோன பொருளைக் கண்டுபிடித்துத் தரக்கோரி, காவல்துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம் எழுதுக.

சமுதாயப் பணிகளில் பங்கேற்றல்

நங்கை : அப்பா! நான் பள்ளியிலிருந்து வரும்வழியில் அரசுக் கல்லூரியில் குருதிக்கொடை முகாம் நடந்துகொண்டிருப்பதனைப் பார்த்தேன். எதற்காகக் குருதிக்கொடை தரவேண்டும்? அக்குருதியை என்ன செய்வார்கள், அப்பா! அதனைப்பற்றி விரிவாகக் கூறுங்களேன்.

குமரன் : குருதிக்கொடை பலரது உயிரைக் காக்கும்.

நங்கை : கொடையாக அளித்த குருதியை என்ன செய்வார்கள், அப்பா?

குமரன் : குருதி வங்கிகளில் சேமித்துப் பாதுகாப்பாக வைப்பார்கள். விபத்தில் சிக்கிக் குருதி இழந்தோருக்கும், அறுவை சிகிச்சையின்போதும் பொருத்தமான குருதிப் பிரிவைப் பயன்படுத்திக் கொள்வர்.

நங்கை : நானும் குருதியைத் தரலாமா, அப்பா?

குமரன் : இல்லை நங்கை. பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவரும் ஐம்பது வயதுக்குட் பட்டவருமாகிய ஆண், பெண் இருபாலாரும் குருதி தரலாம். ஆனால், அவரது எடை நாற்பத்தைந்து கிலோவிற்கு மேல் இருத்தல் வேண்டும். மஞ்சட்காமாலை, குடற்காய்ச்சல், பால்வினை நோய் இவற்றால் தாக்கப்பட்டவரும், கருவுற்ற பெண்களும் குருதி தருதல் கூடாது. உடல்நலத்துடன் இருப்பவர் மட்டுமே குருதி தரலாம்.

நங்கை : குருதிக்கொடை தந்தால் அவரது குருதி குறைந்துவிடாதா?

குமரன் : ஒருவரது உடலில் இருந்து இருநூற்றறைம்பதுமுதல் முந்நூறு மில்லிலிட்டர் வரை மட்டுமே குருதியை எடுத்துக்கொள்வர். அக்குருதி இருபத்தொரு நாளுக்குள் உடலில் மீண்டும் சுரந்துவிடும். மூன்று மாதத்திற்கு ஒருமுறை குருதிக்கொடை தரலாம். அதனால், குருதி கொடுப்பவருக்கு எந்தத் தீங்கும் நேராது. புரிந்ததா நங்கை?

நங்கை : நன்றாகப் புரிந்தது, அப்பா! நானும் பதினெட்டு அகவைக்குப் பிறகு குருதியைக் கொடுத்துப் பலரின் உயிரைக் காப்பேன்.

1. குருதிக்கொடையினால் ஏற்படும் நன்மைகள் யாவை?
2. யாரெல்லாம் குருதி தரலாம்?
3. யாரெல்லாம் குருதி தருதல் கூடாது?
4. எவ்வளவு குருதியைக் கொடையாகத் தரலாம்?
5. குருதிக்கொடையைப் போன்று வேறு என்னென்ன கொடைகள் உள்ளன?

தமிழ்

வாழ்க்கைத்திறன்

சூழ்நிலையை எதிர்கொள்ளும் திறன்

பேருந்தில் பயணம் செய்துகொண்டிருக்கிறீர்கள். உங்கள் தோள்மீது யாரோ கைவைப்பதாக உணர்கிறீர்கள். திரும்பிப் பார்த்தால் உங்களுக்கு அறிமுகமானவரே. அப்போது உங்கள் செயல்பாடு எப்படி இருக்கும்?

அ) அவர் தொடுவது எனக்குப் பிடிக்கும். அதனால் ஒன்றும் பேசாதிருப்பேன்.

ஆ) அவரை வாய்க்கு வந்தபடி திட்டுவேன்.

இ) அவரிடமிருந்து விலகிச் சென்றுவிடுவேன்.

இதுபோன்ற நிகழ்வு உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டதுண்டா?

பொது இடங்களிலோ நீங்கள் தனியாக இருக்கும்போதோ யாரேனும் இவ்வாறு நடந்து கொண்டால், அவரது எண்ணத்தைச் சில குறிப்புகளால் அறிந்துகொண்டு, அவரிடமிருந்து விலகிச் செல்லுதல் வேண்டும். தனியாக இருக்கும் சூழ்நிலையைத் தவிர்ப்பதே நல்லது.

மதிப்புக்கல்வி

எளிமை

மதுரைக்குத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் ஒருவர். குறித்த நேரத்திற்கு முன்பே தொடர்வண்டி வந்துவிட்டதனால், அவரை வரவேற்க ஒருவரும் அங்கு இல்லை. அவர் யாருக்காகவும் காத்திராமல், தான் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதிக்குச் சென்று அறையின் திறவுகோலைக் கேட்டார். ஆனால் அங்கிருந்தவர்களோ, 'இந்த அறை தொடர்வண்டித்துறை அமைச்சர் ஒருவருக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது, உங்களுக்குத் தரமுடியாது' என்று மறுத்தார்கள்.

"ஐயா, அந்த அமைச்சரே நான்தான்" என்று அவர் கூறிய பிறகும்கூட அவர்கள், அதனை நம்ப மறுத்து, அவரை உள்ளே விடவில்லை. அவரின் எளிமையான தோற்றமே அதற்குக் காரணமாக இருந்தது. அதற்குள் அமைச்சர் மதுரைக்கு வந்துவிட்டார் என்னும் தகவலை அறிந்துகொண்டவர்கள், அவரைப் பார்ப்பதற்காக அந்த இடத்திற்கு வந்தார்கள்; அவரை அறைக்கு உள்ளேவிட இசையாதவர்களைக் கடிந்துகொண்டார்கள்.

அவர் யார் தெரியுமா? அவர்தாம் லால்பகதூர் சாஸ்திரி.

அவர், மிகப்பெரிய பதவியில் இருந்தும் எளிமையாக வாழ்ந்துகாட்டினார்.

1. எளிமையாக இருப்பது உங்களுக்குப் பிடிக்குமா?
2. பகட்டாக உடை, அணிகலன்கள் பிறர் அணிந்து செல்வதனைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
3. எளிமையாக இருப்பதனைப்பற்றி உனது கருத்து என்ன ?

மொழியாக்கம் செய்க.

Your parents love you very much. They give you all that they have. It is to make you healthy, strong and happy. But some of you have no idea how tired they are sometimes. You think that everything is alright with them, for they do not complain. It is your daily duty to make life easy and pleasant for them. This will give you great joy and satisfaction.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. One doth the act, another hath the blow.

   பழி ஓரிடம், பாவம் ஓரிடம்.

2. Every fox must at last pay his skin to the flayer.

   பல நாள் திருடன், ஒரு நாள் அகப்படுவான்.

3. Money makes many things.

   பணம் பத்தும் செய்யும்.

4. The day has eyes, the night has ears.

   பகலில் பக்கம் பார்த்துப் பேசு; இரவில் அதுவும் பேசாதே.

5. What comes from the cradle goes to the grave.

   தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்.

தமிழ்

தமிழ்

வளரறி செயல்பாடுகள்	
கேட்டல் திறன்	செயல்பாடு – 1

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

"ஏதேது, மாணவருக்குப் பாடம் கற்பிக்கும் செயலிலேயே மூழ்கிவிட்டீரோ? இருநாளாக என்னுடன் உரையாடவும் வரவில்லை, வாட்டமுடன் காணப்படுகிறீர்களே, என்ன காரணம்?" எனக் கேட்டார், அந்தத் தலைமையாசிரியர். "ஐயா, தமிழ் கற்கும் மாணவருக்கு முறையான தமிழ்ப்பாட நூல்கள் இல்லையே என்றுதான் வருந்துகின்றேன். எனவே, மாணவர் படிப்பதற்கேற்ற வகையில் பாடநூலை நானே எழுதிட விழைகின்றேன். அதனால்தான், ஆசிரியப்பணியை விடுவதா பாடநூல் எழுதுவதா என இருநாளாகச் சிந்தித்துக் கொண்டிருந்தேன்" என்றார், தமிழாசிரியர்.

"நீங்கள் பாடநூல் எழுதப் போகிறீர்களா, எத்துணை மகிழ்ச்சியான செய்தி! ஆசிரியப் பணியை விட்டுவிடாமலும் பாடநூல் எழுதும் பணியை மேற்கொள்ளவும் உயர்அலுவலரிடம் ஒப்புதல்பெற்றுத் தருகிறேன். நீங்கள் மனம் வருந்தா வேண்டா. பாடநூல் எழுதுவதற்கான பணிகளை உடனடியாக மேற்கொள்ளுங்கள்" என அன்புடன் கட்டளையிட்டார், தலைமையாசிரியர்.

உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்காகப் பாடநூல் எழுதிய அந்தத் தமிழாசிரியர், படிப்படியாக உயர்ந்து கல்லூரி மாணவர்களுக்கான நூல்களையும் எழுதினார். அவர்தான், பாடநூல் ஆசிரியர் பைந்தமிழ் ஆசான் எனப் போற்றப்படும் கா. நமச்சிவாயனார். 1876ஆம் ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டம் (வேலூர் மாவட்டம்), காவேரிப்பாக்கத்தில் பிறந்த அவர், 1937ஆம் ஆண்டு மறைந்தார்.

வினாக்கள்

1. உரைப்பத்தியில் இடம்பெற்றுள்ள பெயர்ச்சொற்களைக் கூறுக.
2. உரைப்பத்தியில் இடம்பெற்றுள்ள வினைமுற்றுகளைக் கூறுக.
3. பைந்தமிழ் – இலக்கணக்குறிப்பு யாது?
4. உரைப்பத்தியில் இடம்பெற்றுள்ள பிறமொழிச்சொல் எது?
5. எத்துணை மகிழ்ச்சியான செய்தி! – இச்சொற்றொடரில் எத்துணை என்பதன் பொருள் யாது?

பேசுதல் திறன்	செயல்பாடு – 2

கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி, 'நான் அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியரானால்' என்னும் தலைப்பில் உரையாற்றுக.

- தமிழ்மொழியின் இனிமை – சிறப்பு – பிறமொழியாளர்கள் அறிந்துகொள்ளும் வாய்ப்பு
- தமிழிலக்கியங்கள் – உலகமொழிகளில் மொழிபெயர்ப்பு.
- உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் – ஒருங்கிணைக்க உலகளாவிய ஊடக அமைப்பு.

- கடல் கடந்து வாழும் தமிழர்களின் பிள்ளைகள் – தமிழ்மொழியைப் பேச படிக்க உதவி.
- தாயகத் தமிழர்களின் புத்தம் புதிய இலக்கியச் செல்வங்கள் – அயலகத் தமிழர்களுக்கு விருந்து.
- பழந்தமிழரின் உயர்ந்த பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் – அயல்நாடுவாழ் தமிழர்கள் பின்பற்ற வழிகாட்டுதல்.

படித்தல் திறன்	செயல்பாடு – 3

நாளிதழ் விளம்பரங்களைப் புரிந்துகொள்ளுதல் (மாதிரி)

கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

செந்தமிழ்ப் பயிற்றாய்வுக்கூடம்

தமிழில் பேசுவதற்குத் தயக்கமா?
தமிழில் எழுத முடியவில்லையே என மனவருத்தமா?
கவலையை விடுங்கள்! எங்களிடம் வாருங்கள்!

செந்தமிழில் இனிய எளிய பயிற்சி

காலை 10.00மணிமுதல் மாலை 5.00மணிவரை

சிறப்புத்தன்மைகள்

- தலைசிறந்த மொழிவல்லுநர்கள்
- கற்பித்தலில் தனித்தன்மை
- குறைந்த கட்டணம்

உடனே சேருங்கள்!

உங்களுக்கு ஏற்புடைய நேரத்தில் பயிற்சிபெறுங்கள்!

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி (மாதிரி)

எண். 45, வள்ளலார் நகர்,
வடலூர்,
கடலூர் மாவட்டம்.

வினாக்கள்

1. இவ்விளம்பரம் எதனைப்பற்றியது?
2. எந்த மொழியைக் கற்றுக்கொள்ளப் பயிற்சி அளிக்கப்படுகிறது?
3. எப்போது பயிற்சி அளிக்கப்படுகிறது?
4. பயிற்சியின் சிறப்புத்தன்மைகள் யாவை?
5. இப்பயிற்சி யாருக்குப் பயன் தரும்?

தமிழ்

எழுதுதல்	
அகர வரிசைப்படுத்துதல்	செயல்பாடு – 4

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்திலுள்ள சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுக.

ஒழுக்கம் உயர்வு தரும் என்னும் பொன்மொழிக்கு இலக்கணமாய் ஒழுக்கத்தால் உயர்ந்த உத்தமர்கள் வரலாற்றில் எத்தனையோ பேர் உள்ளார்கள். ஒழுக்கத்தின் ஒன்றான வாய்மையால் அண்ணல் காந்தியடிகள் உயர்வடைந்தார். ஒழுக்கமுடையார் வாய்ச்சொல், வழுக்குகின்ற நிலத்தில் ஊன்றுகோல் போன்று உதவும்.

சொல்வதனை எழுதுதல்	செயல்பாடு – 5

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

மாலையில் விண்ணிலே எழுந்த முழுமதி எங்கும் வெண்ணிலா விரித்தது. பொய்கையிலமைந்த பூங்குமுதம் முகை நெகிழ்ந்து, தேன் துளித்து மலர்ந்தது. மலையத்தெழுந்த இளங்காற்று மெல்லெனத் தவழ்ந்து நறுமணம் கமழ்ந்தது. இத்தகைய அழகு வாய்ந்த மாலைப்பொழுதில், தென்மலைச் சாரலில் மகிழ்ந்து விளையாடிய முருகனென்னும் குமரன், விண்ணிலே ஊர்ந்த வெண்மதியின் அழகினைக்கண்டு அளவிலா இன்பமுற்றான்.

நிறுத்தக்குறிப் பயன்பாடு	செயல்பாடு – 6

கீழ்க்காணும் உரைப்பத்தியில் ஏற்புடைய நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துக.

சான்றோர்களின் வாழ்வைக் கற்றல் இனிது கேட்டல் அதனினும் இனிது அவர் வாழ்வை மனமாரப் போற்றல் எளிது வாயால் புகழல் அதனினும் எளிது ஆனால் அவர் வாழ்வை அடியொற்றி வைத்து வாழ்வாங்கு வாழ்வதோ அரிது மிக அரிது அரிதாயினும் அத்துறையில் வாழ்வுத்துறையில் வெற்றி காணல் அன்றோ சிறப்பு அச்சிறப்பினை எய்துதற்குரிய செந்நெறி யாது அதனை விளக்குவதே பூங்குன்றனாரின் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் பாட்டு

மரபு வழுக்களைத் திருத்தி எழுதுதல்	செயல்பாடு – 7

உரைப்பத்தியில் உள்ள மரபு வழுக்களைத் திருத்தி எழுதுக.

வீட்டுத் தோப்பில் உள்ள வாழை மரத்தின் ஓலைகளில் அணில் கன்றுகள் இரண்டு துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. அவ்வேளையில் வாழைமரத்தின் கீழுள்ள புல்லைத் தின்பதற்காக ஆடுகள் கூட்டம் கூட்டமாக ஓடி வந்தன. ஆடுகள் வரும் ஓசையைக் கேட்ட அணில்கள் அஞ்சி அருகில் உள்ள தென்னை நாற்றின் மீது தாவின.

வ. எண்	மரபு வழு	திருத்தம்
1		
2		
3		
4		
5		

வினா உருவாக்குதல்	செயல்பாடு – 8

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து ஒரிரு வரியில் விடையளிக்கும் வகையில் வினாக்களை உருவாக்குக.

'பாடு' எனக் கூறியவுடன் பாடுபவர், 'ஆசுகவி'. செவிக்கினிய ஓசைநலம் சிறக்கப் பாடுபவர், 'மதுரகவி'. சொல்லணி அமைத்துச் சுவை வளம் செழிக்கப் பாடுபவர், 'சித்திரகவி'. தொடர்நிலைச் செய்யுளும், தூய காப்பியங்களும் இயற்றுபவர், 'வித்தாரக்கவி'. இந்த நால்வகைக் கவிகளையும் பாடவல்ல பாவலனைப் பாவலரேறு எனத் தமிழறிந்தோர் போற்றுவர். தமிழ் மன்னர் பாராட்டுவர்.

வினாக்கள்

1. 'ஆசுகவி' என்பவர் யார்?
2. ______________________________
3. ______________________________
4. ______________________________
5. ______________________________
6. ______________________________

மரபுத்தொடர்களின் பொருள் அறிதல்	செயல்பாடு – 9

கீழ்க்காணும் உரையாடலில் உள்ள மரபுத்தொடர்கள் உணர்த்தும் பொருளை எழுதுக.

பாரதி: வைகறை . . . தேர்வுக்குரிய பாடங்களையெல்லாம் கரைத்துக் குடித்திருப்பாய் என நினைக்கிறேன்.

வைகறை: என்னை ஆழம் பார்க்கிறாயா? நீ மட்டும் என்ன, அனைத்து வினாக்களுக்கும் விடைகளை விரல் நுனியில் அல்லவா வைத்திருக்கிறாய்?

பாரதி: நன்றாகப் படித்தால்தானே வருங்காலத்தில் சொந்தக் காலில் நிற்க முடியும்.

படைப்பாற்றல்	செயல்பாடு – 10

கீழ்க்காணும் தொடரில் உள்ள சொற்களுடன் ஆ, ஏ, ஓ ஆகியவற்றைச் சேர்த்தும் தொடரில் உள்ள சொற்களை முறைமாற்றியும் புதிய தொடர்களை உருவாக்குக.

'அவன் தான் மனிதன்'

1. அவன் மனிதன் தானா?
2. மனிதன் அவன்தான்.
3. ______________________
4. ______________________
5. ______________________
6. ______________________

தமிழ்

கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

காலம் : 15மணித்துளி மதிப்பெண் : 10

அ) கோடிட்ட இடத்தை நிரப்புக. 5 × 1 = 5

1. மூவேந்தர்களைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக்கொண்ட நூல் ____________ .
2. விசும்பு என்னும் சொல்லின் பொருள்____________ .
3. களிறு என்பது ____________ யானையைக் குறிக்கும்.
4. பரணிக்கோர் சயங்கொண்டார் எனக் கூறியவர் ____________ .
5. கலிங்கத்துப் பரணியில் குலோத்துங்கச் சோழனிடம் தோற்ற கலிங்க மன்ன ____________ .

ஆ) கீழ்க்காணும் பாடலிலுள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக. 5 × 1 = 5

காடிதனைக் கடத்தும் எனக் கறுமுகிளும்
வென் மதியும் கடக்க அப்பாழ்
ஓடி இழைத்து உடல் வியர்த்த வியர்வண்றோ
உகு புணலும் பணியும் அம்மா!

தமிழ்

உமர்கய்யாம் பாடல்கள்

யாரும் சிறியர்; யான்பெரியன்;
எதிலும் சிறந்தது என்னலமாம்;
பாரில் எனக்கீ டில்லைஎனப்
பயனில் மொழிகள் பகர்வதும்ஏன்?
சேரும் உலகப் பொருளையெல்லாம்
தெரிய நோக்கித் தனைநோக்காச்
சீரில் அமைந்த கண்மணியின்
செயலை நோக்கித் தெளிவீரே! 1

பொருள் : நானே பெரியவன், மற்றவர் சிறியவர். என் நலம் கருதுவதே சிறந்தது. எனக்கு நிகர் யாருமே இல்லை எனக் கூறுகின்றவர்களே! உலகப் பொருள்களையெல்லாம் காண்கின்ற கண்மணி, தன்னைக் காண்பதில்லை என்பதனை அறிந்தாவது தெளிவடையுங்கள்.

சொற்பொருள் : பகர்வது – சொல்வது; தெளிவீரே – தெளியுங்கள்.

இலக்கணக்குறிப்பு : நோக்கி – வினையெச்சம்.

★ அன்பு செய்யின் அயலாரும்
அண்டி நெருங்கும் உறவினராம்;
அன்பு நீங்கின் உறவினரும்
அகன்று நிற்கும் அயலவராம்;
துன்ப நோயை நீக்கிடுமேல்
துவ்வா விடமும் அமுதாகும்;
துன்ப நோயை ஆக்கிடுமேல்
தூய அமுதம் விடமாமே! ★ 2

பொருள் : அன்பு செலுத்தினால் அயலாரும் நெருங்கிய உறவினராவர்; அன்பு நீங்கினால் உறவினரும் விலகி அயலாராவர். துன்பத்தை நீக்குமெனின் நஞ்சும் அமுதமாகும். துன்பத்தைத் தருமெனில் அமுதமும் நஞ்சாகும்.

சொற்பொருள் : துவ்வா – நுகராத; அகன்று – விலகி.

இலக்கணக்குறிப்பு : துவ்வா விடம் – ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.

ஆழி சூழும் உலகாளும்
அரச னாக வேண்டுமெனில்
வாழும் வாழ்வில் உன்னையும்நீ
மறந்து வாழ வேண்டுமடா!
ஏழை யாகி எளியவரின்
எளிய னாக வேண்டுமடா!
தோழ னாகி யாவர்க்கும்
தொண்ட னாக வேண்டுமடா! 3

பொருள் : நீ, கடல் சூழ்ந்த இவ்வுலகை ஆளும் அரசனாக விரும்பினால், தன்னலத்தை மறந்திடல் வேண்டும். ஏழையாகவும் எளியவருக்கு எளிமையான வனாகவும், எல்லாருக்கும் தோழனாகவும் தொண்டனாகவும் வாழ்ந்திடல் வேண்டும்.

சொற்பொருள் : ஆழி – கடல்.

ஆசிரியர் குறிப்பு : மணி தேசிக விநாயகனார் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் பிறந்தவர். இவரின் பெற்றோர் சிவதாணு – ஆதிலட்சுமி அம்மையார்.

இவர் உமர்கய்யாம் பாடல்களைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். அப்பாடல்களின் தொகுப்பு 'உமர்கய்யாம் பாடல்கள்' என்பது.

உமர்கய்யாம் பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீகக் கவிஞர். இவரது முழுப் பெயர் கியாதுதீன் அபுல்பாத் உமர்கய்யாம் என்பது.

இவர் கணிதம், வானவியல் ஆகியவற்றில் புலமைமிக்கவர். இவரின் கவிதைகள் மக்கள் அடையும் இன்ப துன்பங்களையும், இறைவனது படைப்பையும் பாடுபொருளாகக் கொண்டவை.

இவர் இயற்றிய பிற நூல்கள் :மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம், குழந்தைச் செல்வம், ஆசிய ஜோதி முதலியன. இவரது காலம் 1876முதல் 1954ஆம் ஆண்டுவரை.

நூற்குறிப்பு : இந்நூல் இம்மை மறுமை பற்றி ரூபாயத் என்னும் பெயரில் உமர்கய்யாம் எழுதிய செய்யுள்களின் மொழிபெயர்ப்பு. இதனையே கவிமணி மொழிபெயர்த்துள்ளார். இந்நூலில், நூற்றுப் பதினைந்து பாடல் உள்ளன. வாழ்க்கைத் தத்துவத்தை இப்பாடல்கள் விளக்குகின்றன. (ரூபாயத் – நான்கடிச் செய்யுள்)

தமிழ்

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அன்புசெய்யின் அயலாரும் அண்டி நெருங்கும் ____________.
2. துன்ப நோயை நீக்கிடுமேல் ____________ அமுதாகும்.
3. ஏழையாகி எளியவரின் ____________ ஆக வேண்டுமடா.

ஆ) சிறுவினாக்கள்

1. மக்கள் எதனையறிந்து தெளிவடையுமாறு கவிமணி கூறுகிறார்?
2. அன்பின் சிறப்பு யாது?
3. 'அமுதம் விடமாகும்' – எப்போது?
4. உலகை ஆள விரும்புபவர் வாழும் வழி யாது?
5. உமர்கய்யாம் பற்றி நீவிர் அறிவன யாவை?
6. கவிமணி பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

மணிமேகலை

– சீத்தலைச் சாத்தனார்

ஆபுத்திரன் நாடு அடைந்த காதை

முன்கதைச் சுருக்கம்

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகள் மணிமேகலை. முற்பிறப்பின் வினைப்பயன் காரணமாக அரசகுமாரனாகிய உதயகுமரன், மணிமேகலையை மணம்புரிய விரும்புகிறான்; மலர்வனத்துக்குச் சென்ற அவளைப் பின்தொடர்கிறான். மணிமேகலை அங்குள்ள பளிக்கறையில் சென்று மறைந்துகொள்கிறாள். அங்கிருந்த அவளை மணிமேகலா தெய்வம், மணிபல்லவத் தீவுக்கு வான்வழியே தூக்கிச் செல்கிறது. அங்குத் தனது பழம்பிறப்பை உணர்கிறாள் மணிமேகலை. மேலும் மணிமேகலா தெய்வம், அவளுக்குப் பசியற்றிருக்கவும் விரும்பும் உருவம் எடுக்கவும் வான்வழிச் செல்லவும் தேவையான மூன்று மந்திரங்களைத் தெரிவித்து மறைகிறது. தீவதிலகையின் உதவியால், அமுதசுரபியைப் பெற்றுப் புகார் நகரை அடைகிறாள் மணிமேகலை. அங்கு, அறவணவடிகளின் அறிவுரைப்படி ஆதிரையிடம் முதன்முதலில் பிச்சையேற்றாள். அதன்மூலம் அமுதசுரபியில் அள்ளஅள்ளக் குறையாத அன்னம் பெருகியது. அதனைக்கொண்டு பசிப்பிணி நீக்கும் அறப்பணியை மேற்கொள்கிறாள். அமுதசுரபி, முற்பிறப்பில் ஆபுத்திரனிடம் இருந்தது என்பதனை அறிந்த மணிமேகலை அவனைக் காணும் பொருட்டு ஆபுத்திரன் நாட்டுக்குச் செல்வது, இங்குப் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

அறவண அடிகள் வருகை

தேவியும் ஆயமும் சித்திரா பதியும்
மாதவி மகளும் மாதவர்க் காண்டலும்
எழுந்தெதிர் சென்றாங்கு இணைவளைக் கையால்
தொழுந்தகை மாதவன் துணையடி வணங்க
அறிவுண் டாகவென் றாங்கவன் கூறலும்

பொருள் : அறவண அடிகளைக் கண்ட அளவில் அரசமாதேவியும் தோழியர் கூட்டமும் சித்திராபதியும் மணிமேகலையும் எழுந்து, அவர் எதிரே சென்றனர். வணங்கும் தகுதியுடைய அறவணரின் இருபாதத்தைத் தம் இருகையாலும் தொட்டு வணங்கினர்; அடிகள் ‘அறிவுண்டாகுக’ என அவர்களை வாழ்த்தினார்.

சொற்பொருள்: ஆயம் – தோழியர் கூட்டம்.

இலக்கணக்குறிப்பு : தேவியும் ஆயமும் – எண்ணும்மை.

பிரித்தறிதல் : எழுந்தெதிர் – எழுந்து + எதிர்; அறிவுண்டாக – அறிவு + உண்டாக.

திருவடி விளக்கல்

இணைவளை நல்லாள் இராசமா தேவி
அருந்தவர்க் கமைந்த ஆசனம் காட்டித்
திருந்தடி விளக்கிச் சிறப்புச் செய்தபின்
யாண்டுபல புக்கநும் மிணையடி வருந்தஎன்
காண்டகு நல்வினை நும்மையீங்கு அழைத்தது 10

பொருள் : வளையல்கள் அணிந்த கைகளையுடைய அரசமாதேவி, தவமுனிவரான அறவண அடிகளை உரிய இருக்கையில் உட்காரச் செய்தாள்; அவரது திருவடிகளைக் கழுவிச் சிறப்புச் செய்தாள். "எனது நல்வினையின் பயன்தான், நான் காணுதற்காகத் தங்கள் இணையடி வருந்துமாறு இத்துணைத் தொலைவு தங்களை நடந்துவரச் செய்தது" என்றாள்.

சொற்பொருள் : ஆசனம் – இருக்கை.

இலக்கணக்குறிப்பு : அருந்தவர், நல்வினை – பண்புத்தொகைகள்.

வரவேற்புரை

நாத்தொலை வில்லை யாயினும் தளர்ந்து
மூத்தவிவ் யாக்கை வாழ்கபல் லாண்டெனத்
தேவி கேளாய் செய்தவ யாக்கையின்
மேவினே னாயினும் வீழ்கதிர் போன்றேன்
பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்றோர்
இறந்தார் என்கை இயல்பே இதுகேள் 16

பொருள் : தங்களது சொல்லில் சோர்வில்லை; எனினும், மூப்பினால் தளர்வுற்று மெலிந்த தங்களது உடல் பன்னெடுநாள் வாழ்வதாகுக என வாழ்த்தினாள், அரசமாதேவி. அறவண அடிகள், "அரசமாதேவியே! இதனைக் கேட்பாயாக. தவம் செய்யும் உடலைக் கொண்டுள்ளேன்; ஆயினும், நாள்தோறும் தோன்றிமறையும் கதிரவனைப் போன்றவன்தான் நானும். உலகில் பிறந்தோர் அனைவரும் மூப்பினாலும் பிணியினாலும் ஒருநாள் இறந்துபோவர் என்பது இயற்கையே" என்றார்.

சொற்பொருள் : நாத்தொலைவில்லை – சொல் சோர்வின்மை; யாக்கை – உடம்பு; பிணிநோய் – நீங்கா நோய்.

இலக்கணக்குறிப்பு : வாழ்க – வியங்கோள் வினைமுற்று; செய்தவம், வீழ்கதிர் – வினைத்தொகைகள்.

பகுபத உறுப்பிலக்கணம் : பிறந்தார் – பிற + த் (ந்) + த் + ஆர்; பிற – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : நாத்தொலைவில்லை – நா + தொலைவு + இல்லை; பிணிநோயுற்றோர்– பிணி + நோய் + உற்றோர்.

தானம் அறிந்தோர்

பேதைமை செய்கை உணர்வே அருவுரு
வாயில் ஊறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றென வகுத்த இயல்பீ ராறும்
பிறந்தோ ரறியின் பெரும்பேறு அறிகுவர்
அறியா ராயின் ஆழ்நரகு அறிகுவர். 22

பொருள் : அறியாமை, இருவினை, அறிவியல் சிந்தனை, அருவஉருவம், ஐம்பொறிகள், புலன்களின் இயல்பு, இன்பதுன்ப நுகர்ச்சி, விருப்பம், புலன்களின் பற்று, பயன்தரு முறையைச் சார்தல், பிறத்தல், வினைப்பயன் ஆகிய பன்னீர் இயல்புகளையும் மக்களாய்ப் பிறந்தோர் அறிவராயின் பெரும்பேறு பெற்றவராவர். அதனை அறியாதவர் துன்பம் நிறைந்த நரகத்தையே அடைவர்.

சொற்பொருள் : பேதைமை – அறியாமை; செய்கை – இருவினை; உணர்வு – அறிவியல் சிந்தனை; அரு – உருவமற்றது; உரு – வடிவம்; வாயில் – ஐம்பொறிகள்; ஊறு – புலன்களின் இயல்பு; நுகர்வு – இன்பதுன்ப நுகர்ச்சி; வேட்கை – விருப்பம்; பவம் – பயன் நோக்கிய செயல்; தோற்றம் – பிறப்பு.

இலக்கணக்குறிப்பு : பெரும்பேறு – பண்புத்தொகை; ஆழ்நரகு – வினைத்தொகை.

பகுபத உறுப்பிலக்கணம் : அறிகுவர் – அறி + கு + வ் + அர். அறி – பகுதி, கு – சாரியை, வ் – எதிர்கால இடைநிலை, அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : இயல்பீராறு – இயல்பு + ஈர் (இரண்டு) + ஆறு.

பேதைமை

பேதைமை யென்பது யாதென வினவின்
ஓதிய இவற்றை உணராது மயங்கி
இயற்படு பொருளால் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கேட்டது தெளிதல். 26

பொருள் : பேதைமை எனப்படுவது அறியாமை. அஃதாவது, முற்கூறிய இயல்புகளை அறியாமல் அறிவு மயங்குதல்; இயற்கையாய்த் தோன்றும் பொருள்களிலும் தாம் கண்டதனை மறந்து, முயலுக்குக் கொம்புண்டு எனப் பிறர் கூறும் பொய்யை மெய்யென நம்புதல் போன்றது.

சொற்பொருள் : பெரும்பேறு – வீடுபேறு; கோடு – கொம்பு.

இலக்கணக்குறிப்பு : தெளிதல் – தொழிற்பெயர்.

தமிழ்

பிறப்பும் வினையும்

உலகம் மூன்றினும் உயிராம் உலகம்
அலகில பல்லுயிர் அறுவகைத் தாகும்
மக்களும் தேவரும் பிரமரும் நரகரும்
தொக்க விலங்கும் பேயும் என்றே
நல்வினை தீவினை என்றிரு வகையாற்
சொல்லப் பட்ட கருவினுள் தோன்றி
வினைப்பயன் விளையுங் காலை உயிர்கட்கு
மனப்பே ரின்பமும் கவலையும் காட்டும். 34

பொருள் : மூவுலகிலும் எண்ணற்ற உயிர்கள் வாழ்கின்றன. அவ்வுயிர்கள் மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்குத்தொகுதி, பேய் என்னும் அறுவகைத்தாகும். அவை தாம் செய்த நல்வினை, தீவினையால் அறுவகைப்பட்ட உயிர்களுள் ஒன்றாகப் பிறக்கின்றன. அவ்வினைப் பயன்கள் உண்டாகும்போது பேரின்பங்களையும் துன்பங்களையும் அவை அடைகின்றன.

சொற்பொருள்: அலகில – அளவற்ற; தொக்க விலங்கு – விலங்குத்தொகுதி.

இலக்கணக்குறிப்பு : பல்லுயிர், நல்வினை, தீவினை, பேரின்பம் – பண்புத்தொகைகள்.

பத்துக் குற்றங்கள்

தீவினை யென்பது யாதென வினவின்
ஆய்தொடி நல்லாய் ஆங்கது கேளாய்
கொலையே களவே காமத் தீவிழைவு
உலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும் 40

பொருள் : ஆராய்ந்தெடுத்த அழகிய வளையல்களை அணிந்த நங்கையே, கேட்பாயாக. தீவினை என்பது என்னவெனில் கொலை, களவு, காமமெனும் கொடிய விருப்பம் ஆகிய உடலில் தோன்றும் மூன்றும்; பொய்பேசுதல், புறங்கூறுதல், கடுஞ்சொல், பயனற்றசொல் எனச் சொல்லில் தோன்றும் நான்குமாம்.

சொற்பொருள் : களவு – திருட்டு; காமத்தீ – காமமெனும் கொடிய விருப்பம்; உலையா உடம்பு – தளராத உடல்; குறளை – புறம்பேசுதல்.

இலக்கணக் குறிப்பு : ஆய்தொடி நல்லாய் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை; காமத்தீ – உருவகம்; கடுஞ்சொல் – பண்புத்தொகை.

பகுபத உறுப்பிலக்கணம் : தோன்றுவர் – தோன்று + வ் + அர். தோன்று – பகுதி, வ் – எதிர்கால இடைநிலை, அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்று
உள்ளந் தன்னின் உருப்பன மூன்றுமெனப்
பத்து வகையால் பயன்தெரி புலவர்
இத்திறம் படரார் படர்குவர் ஆயின்
விலங்கும் பேயும் நரகரும் ஆகிக்
கலங்கிய உள்ளக் கவலையில் தோன்றுவர். 46

பொருள் : பெருவிருப்பம், கடுஞ்சினங்கொள்ளுதல், மாயத்தோற்றம் என உள்ளத்தில் தோன்றும் மூன்றும் ஆகிய பத்துக் குற்றங்களுமாம். இத்தீவினைப்பயனை அறிந்த அறிஞர், இத்தகு நெறியில் செல்லார். தீநெறியில் செல்வோர் விலங்காகவும் பேயாகவும் நரகராகவும் பிறந்து கவலைக்கு உட்படுவர்.

சொற்பொருள் : வெஃகல் – பெருவிருப்பம்; வெகுளல் – கடுஞ்சினம் கொள்ளுதல்; பொல்லாக் காட்சி – மாயத் தோற்றம்.

இலக்கணக்குறிப்பு : பொல்லாக் காட்சி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; பயன் தெரிபுலவர் – வினைத்தொகை.

பகுபத உறுப்பிலக்கணம் : படர்குவர் = படர் + கு + வ் + அர். படர் – பகுதி, கு – சாரியை, வ் – எதிர்கால இடைநிலை, அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

நல்வினைப்பயன்

★ நல்வினை யென்பது யாதென வினவின்
சொல்லிய பத்தின் தொகுதியின் நீங்கிச்
சீலம் தாங்கித் தானம் தலைநின்று
மேலென வகுத்த ஒருமூன்று திறத்துத்
தேவரும் மக்களும் பிரமரு மாகி
மேவிய மகிழ்ச்சி வினைப்பயன் உண்குவர். ★ 52

பொருள் : நல்வினைப் பயன் எதுவெனின், பத்துவகைக் குற்றங்களிலிருந்தும் நீங்கி ஒழுக்கத்தை மேற்கொள்வதும் பிறருக்குக் கொடையளிப்பதும் ஆகும். அத்தகையோர் உயர்வுடைய உயிர்கள் என வகுக்கப்பட்ட தேவர், மக்கள், பிரமர் ஆகிய மூவகையினராகப் பிறந்து, தாம் செய்த நல்வினைப் பயனை நுகர்வர்.

சொற்பொருள் : சீலம் – ஒழுக்கம்; தானம் – கொடை.

பகுபத உறுப்பிலக்கணம் : உண்குவர் – உண் + கு + வ் + அர்; உண் – பகுதி; கு – சாரியை; வ் – எதிர்கால இடைநிலை; அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

நல்லறம் போற்றுக

அரைசன் தேவியொ டாயிழை நல்லீர்
புரைதீர் நல்லறம் போற்றிக் கேண்மின்
மறுபிறப் புணர்ந்த மணிமே கலைநீ
பிறவறங் கேட்ட பின்னாள் வந்துனக்கு
இத்திறம் பலவும் இவற்றின் பகுதியும்
முத்தேர் நகையாய் முன்னுறக் கூறுவல்
என்றவன் எழுதலும் இளங்கொடி எழுந்து 59

பொருள் : அரசமாதேவியுடன் இருக்கும் நங்கையரே! நான் கூறும், குற்றம் நீங்கிய நல்லறத்தைப் போற்றிக் கேளுங்கள்! எனக் கூறிய அறவணஅடிகள், மணிமேகலையை நோக்கி, “முத்துச்சிரிப்பினையுடைய மணிமேகலையே! நீ உனது முற்பிறப்பினை உணர்ந்திருக்கிறாய். மேலும், பிறசமயங்கள் கூறும் அறங்களையும் நீ கேட்டறிந்து கொள். அதன் பின்னர், ஒரு நாள் மீண்டும் வந்து உனக்குப் பல்வேறு அறங்களையும் அவற்றின் பகுதிகளையும் கூறுவேன்” என்றார்.

சொற்பொருள் : புரைதீர் – குற்றம் நீங்கிய; கேண்மின் – கேளுங்கள்; முத்தேர் நகை – முத்துச் சிரிப்பு.

மணிமேகலையின் அறிவிப்பு

நன்றறி மாதவன் நல்லடி வணங்கித்
தேவியும் ஆயமும் சித்திரா பதியும்
மாதவர் நன்மொழி மறவா துய்ம்மின்
இந்நகர் மருங்கின்யா னுறைவேன் ஆயின்
மன்னவன் மகற்கிவள் வருங்கூற்று என்குவர்
ஆபுத் திரனா டடைந்ததற் பின்னாள்
மாசில் மணிபல் லவம்தொழு தேத்தி
வஞ்சியுட் புக்கு மாபத் தினிதனக்கு
எஞ்சா நல்லறம் யாங்கணுஞ் செய்குவல்
எனக்கிடர் உண்டென்று இரங்கல் வேண்டா
மனக்கினி யீர் 70

பொருள்: மணிமேகலை எழுந்து, ‘தேவியர்களும் ஆயமகளிரும் சித்திராபதியுமாகிய நீங்கள் அறவணரின் நல்ல மொழிகளைப் போற்றி நற்கதியடையுங்கள். இந்நகரில் நான் தங்கினால், மன்னவன் மகனுக்கு வந்த கூற்றுவன் என்று என்னைப் பலரும் கூறுவர். ஆகையால், நான் ஆபுத்திரன் நாட்டை அடைந்து, பின்னர் அங்கிருந்து குற்றமற்ற மணிபல்லவத் தீவுக்குச் சென்று பாதபீடிகையை வணங்குவேன். வஞ்சிமாநகருக்குச் சென்று பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குக் குறைவற்ற

நல்லறத்தைச் செய்துகொண்டிருப்பேன். என் மனத்துக்கு இனியவர்களே, எனக்கு இன்னல் உண்டாகுமென்று யாரும் வருந்தவேண்டா' என்று கூறினாள்.

சொற்பொருள் : உய்ம்மின் – போற்றுங்கள், நற்கதியடையுங்கள்; உறைதல் – தங்குதல்; கூற்று – எமன்; மாசில் – குற்றமற்ற; தொழுது – வணங்கி; புக்கு – புகுந்து; இடர் – இன்னல்.

பிரித்தறிதல்: நன்மொழி = நன்மை + மொழி; எனக்கிடர் = எனக்கு + இடர்; தொழுதேத்தி = தொழுது + ஏத்தி; உண்டென்று = உண்டு + என்று; நல்லறம் – நன்மை + அறம்.

இலக்கணக்குறிப்பு: அரைசன் – இடைப்போலி; நல்லறம் – பண்புத்தொகை.

ஆசிரியர் குறிப்பு : கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றியது மணிமேகலை. சாத்தன் என்பது இவரது இயற்பெயர். இவர், திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர்; கூலவாணிகம் (கூலம் – தானியம்) செய்தவர். இக்காரணங்களினால், இவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று வழங்கப்பெற்றார். இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவராவர். தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற்புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார். இவரது காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

நூற்குறிப்பு : மணிமேகலை, ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வெவ்வேறு நூல்களாயினும் ஒரே கதைத் தொடர்புடையன. எனவே, இவை இரட்டைக்காப்பியங்கள் என வழங்கப்பெறுகின்றன.

மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதனால், இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு என்னும் வேறு பெயரும் உண்டு. இந்நூல் சொற்சுவையும் பொருட்சுவையும், இயற்கை வருணனைகளும் நிறைந்தது; பௌத்தமதச் சார்புடையது; முப்பது காதைகளைக் கொண்டது. முப்பது காதைகளுள், இருபத்து நான்காவது காதையான ஆபுத்திரன் நாடு அடைந்த காதை பாடப் பகுதியாக இடம்பெற்றுள்ளது.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக.
   1. மாதவி மக ___ ம் மாதவர்க் காண்ட ___ ம் (லு/ளு/ழு)
   2. வினைப்பயன் வி ___ யும் கா ___ (லை/ளை/ழை)
   3. கொ ___ யே களவே காமத்தீ வி ___ வே (லை/ளை/ழை)
   4. கலங்கிய உ ___ ளக் கவலையி ___ தோன்றுவர். (ல்/ள்/ழ்)
2. கோடிட்ட இடத்தை நிரப்புக.
   1. 'அருந்தவர்க்கமைந்த ஆசனம்......' –இவ்வடியில் 'அருந்தவர்' எனக்குறிப்பிடப்படுபவர் __________.

தமிழ்

2. சொல்லில் ஏற்படும் குற்றங்கள் ________.

3. மனத்தில் தோன்றும் குற்றங்கள் ________.

4. மறுபிறப்பு உணர்ந்தவளாகக் குறிப்பிடப்படுபவள் ________.

3. பொருத்துக.

ஆயம்	–	பெருவிருப்பம்
வெகுளல்	–	குற்றம் நீங்கிய
புரைதீர்	–	புறங்கூறல்
குறளை	–	சினத்தல்
வெஃகல்	–	தோழியர் கூட்டம்

ஆ) குறுவினாக்கள்

1. அறவண அடிகளைக் கண்டதும் அவையினர் என்ன செய்தனர்?
2. உலகவாழ்வு நிலையில்லாதது என்பதனை அறவண அடிகள் எவ்விதம் விளக்கினார்?
3. பேதைமை எனப்படுவது யாது?
4. உயிர்களின் பிறப்புக்கான காரணமாக மணிமேகலை கூறுவது யாது?
5. சொல்லில் தோன்றும் குற்றங்கள் யாவை?
6. நல்வினைப் பயனை அடைபவர் யார்?
7. பெரும்பேறு யாருக்குக் கிட்டும்?

இ) சிறுவினாக்கள்

1. மணிமேகலை – நூற்குறிப்பு எழுதுக.
2. சீத்தலைச்சாத்தனார் – குறிப்பு எழுதுக.
3. பத்துவகைக் குற்றங்கள் யாவை?
4. பிறப்புக்கும் வினைப்பயனுக்கும் உள்ள தொடர்பு யாது?

ஈ) நெடுவினாக்கள்

1. தீவினை என்பது யாது?
2. நல்வினை, தீவினையின் பயனாக மணிமேகலை கூறுவன யாவை?

உணவே மருந்து

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவு. மக்கள் உண்ணும் உணவும் உணவுப் பழக்கவழக்கங்களுமே அவர்களின் உடல் நலத்தைத் தீர்மானிக்கின்றன. தமிழர் மருத்துவத்தில் உணவு என்பது அனைத்து நோய்களையும் தீர்க்கக்கூடிய சஞ்சீவி மருந்தாகக் கருதப்படுகிறது. இயற்கை உணவுமுறையினையும் இயற்கையோடு இயைந்த பழக்கவழக்கங்களையும் கடைப்பிடிப்பதன்மூலம் உடல்நலத்தையும் உளநலத்தையும் பாதுகாக்கமுடியும் என மருத்துவர் பரிந்துரைக்கின்றனர்.

இன்று சமையல் முறைகள் நாட்டுக்கு நாடு, மாநிலத்துக்கு மாநிலம், மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடுகின்றன. உணவகங்கள் பெருகியுள்ளன. சத்துக்காக அன்றிச் சுவைக்காக உண்ணும் நடைமுறை மிகுந்திருக்கிறது. அட்டைப்பெட்டிகளிலும் தாள் பைகளிலும் பதப்படுத்தி அடைத்த ஆயத்த உணவுவகைகள், விரைவு உணவுகள், வழக்கத்துக்கு வந்துள்ளன. நாகரிக வளர்ச்சி, பண்பாட்டுப் பரவல், இனக்கலப்பு, புதுமையெனச் சுவைகூட்டும் ஆவலில் நோயைப் பெருக்கிக்கொண்டிருக்கிறோம். உணவே மருந்து என்னும் நிலைமாறி, மருந்தே உணவு என்னும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

உணவின் இன்றியமையாமை

உண்டி முதற்றே உலகு என்பது நாமறிந்தது. உணவு, உடலுக்கு வலிமையைத் தருவது; வளர்ச்சியளிப்பது; வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பதுடன் கொள்கைகள், பழக்கவழக்கங்கள், நாகரிகம், சமூக அமைப்பு, வாழ்க்கைத் தரம் முதலியவற்றிலும் மாறுபாடுகளை உண்டாக்கவல்லது. அஃது உடலையும் உயிரையும் வளர்க்கும் அமுதமாகும். பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்பது உலகறிந்த உண்மை. எனவேதான், பசியின் கொடுமையைப் பசிப்பிணி என்னும் பாவி என்றது மணிமேகலைக் காப்பியம். இப்பிணிக்கு மருந்து உணவே. ஆதலால்தான், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே எனப் புறநானூறும் மணிமேகலையும் கூறுகின்றன.

உணவே மருந்து

உயிர், உடலோடுகூடிய நிலையில் எப்போதும் புறச்சூழலோடு போராடி வருகிறது. அதில் வெற்றியடைவதே உடல்நலமாகும்; தோல்வி அடைந்தால் நோயில் முடியும். அந்நோயைத் தீர்த்து இன்பமளிப்பதே மருந்து.

திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரத்தில் உணவே மருந்தாகும் தன்மையைத் திருவள்ளுவர் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். உண்ட உணவு, செரித்தபின்னரே மீண்டும் உண்ணவேண்டுமெனத் தமிழ் மருத்துவம் கூறுகிறது. முன் உண்டது செரித்தது கண்டு உண்பார்க்கு மருந்துண்ணும் தேவை ஏற்படாது.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். – குறள், 942

என்பது வள்ளுவர் வாக்கு. எனவே, உடல்நலத்துக்குப் பொருந்திய உணவு எது? பொருந்தா உணவு எது? என ஆராய்ந்து, தெளிந்து உணவு முறையை வகுத்துக்கொண்டால், உடலுக்கு ஊறுசெய்யும் நோய்கள் நம்மை அணுகா.

தமிழகத்து உணவு, தொன்றுதொட்டு மருத்துவமுறையில் சமைக்கப்படுகிறது. வெப்ப நாடான நமது நாட்டுச் சமையலுக்குப் புழுங்கலரிசியே ஏற்றது. அன்றாடச் சமையலில் கூட்டுவனவற்றுள் மஞ்சள், நெஞ்சிலுள்ள சளியை நீக்கும். கொத்துமல்லி, பித்தத்தைப் போக்கும். சீரகம், வயிற்றுச் சூட்டைத்தணிக்கும். மிளகு, தொண்டைக் கட்டைத் தொலைக்கும். பூண்டு, வளியகற்றி வயிற்றுப்பொருமலை நீக்கிப் பசியை மிகுவிக்கும். வெங்காயம் குளிர்ச்சி உண்டாக்கிக் குருதியைத் தூய்மைப்படுத்தும்.

பெருங்காயம், வளியை வெளியேற்றும். இஞ்சி, பித்தத்தை ஒடுக்கிக் காய்ச்சலைக் கண்டிக்கும். தேங்காய், நீர்க்கோவையை நீக்கும். கறிவேப்பிலை, மணமூட்டி உணவு விருப்பை உண்டாக்கும். நல்லெண்ணெய் கண் குளிர்ச்சியும் அறிவுத்தெளிவும் உண்டாக்கும். சீரகம் பூண்டு கலந்த மிளகு நீர், சூட்டைத் தணித்துச் செரிமான ஆற்றலை மிகுவிக்கும். உடலுக்கு வலுவூட்டவும் கழிவு அகலவும் கீரை நல்லது. உடலுக்குக் குளிர்ச்சி ஏற்படவும் பித்தம் போக்கவும் எலுமிச்சை ஊறுகாயை மோர்ச்சோற்றுடன் உண்ணலாம்.

தவிர்க்க வேண்டியன

நோய்க்கு முதல் காரணம், உப்பு. இதனைக் குறைவாகச் சேர்த்தல் நன்று. உப்பு நிறைந்த பொருள்களான ஊறுகாய், அப்பளம், வடாம், கருவாடு, முந்திரிப்பருப்பு, வறுத்த உருளைச் சீவல், வாழைக்காய்ச் சீவல், புளித்தமோர் முதலியனவற்றை முழுவதுமாகத் தவிர்த்தல் வேண்டும்.

கொழுப்பு நிறைந்த இறைச்சிகள், முட்டையின் மஞ்சள் கரு, தயிர், நெய், வெண்ணெய், பாலாடை, பனிக்கூழ், இனிப்புக்கட்டி ஆகியவற்றை நீக்குதல் வேண்டும். காரமும் புளிப்பும் மிக்க உணவுகள் கூடா. எண்ணெயில் வறுத்த, பொரித்த உணவுகளை ஒதுக்குதல் நன்று. நொறுக்குத் தீனி வயிற்றுக்குக் கேடு என்பது பழமொழி. நொறுக்குத் தீனி கூடவே கூடாது. இடையிடையே எதனையாவது தின்பதும் கொறிப்பதும் உடலுக்கு நல்லது இல்லை.

உண்ணும் முறை

எளிதில் செரிக்கக் கூடிய பழம், காய், பருப்பு, அரிசி, கோதுமை, பால் இவற்றையே குடல் ஏற்றுக்கொள்கிறது. நாச்சுவை கருதி உண்ணாமல், உடல்நலங்கருதி உண்ணுதலே நல்லது. உணவை விரைவாக விழுங்குதல் கூடாது; நன்றாக மென்று விழுங்குதல் வேண்டும். அப்போதுதான் வாயிலுள்ள உமிழ்நீர் வேண்டிய அளவு சுரந்து உணவுடன் கலக்கும். உமிழ்நீர் கலக்காத உணவு உள்ளே சென்றாலும், அது செரிக்காது; குடலும் தன் செரிமான ஆற்றலை இழந்துவிடும். உணவின் சத்துகள் வீணாகாமல் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். காய்கறிகளை முக்கால் வேக்காட்டில் வேகவைத்து உண்ணுதல் வேண்டும். வேகவைத்த காய்கறி நீரில் மிகுதியான சத்துகள் இருப்பதனால், அதனை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

நொறுங்கத் தின்றால் நூறு வயது

தண்ணீரும் மருந்தே

நீரின்றமையாது உலகு என்பது வள்ளுவம். இயற்கை உணவுப்பொருள்களில் நீரில்லாத உணவுப்பொருள்களே இல்லை. எல்லாவகையான உணவுப் பொருள்களும் விளைவதற்குக் காரணமாக அமைவது நீர். உண்ட உணவு குருதியுடன் கலப்பதற்கும் குருதி தூய்மை பெறுவதற்கும் உடலிலுள்ள கழிவுப்பொருள்கள் வெளியேறுவதற்கும் நீர் இன்றியமையாதது. எனவே, நீரைத் தேவையான (நாளொன்றுக்குக் குறைந்தது மூன்று லிட்டர்) அளவுக்குக் குடித்தல் உடலுக்கு நல்லது. உணவு உண்ணும்போது இடையில் நீர் குடித்தல் கூடாது.

சமச்சீர் உணவு

ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே, அளவறிந்து உண்ண வேண்டியது ஒவ்வொருவரின் கடமை. சோறும் காய்கறியும் அரைவயிறு; பால், மோர், நீர் கால்வயிறு; கால்வயிறு வெற்றிடமாக இருத்தல் வேண்டும். வயிறு புடைக்க உண்ணுதல் நோய்க்கு இடமளிக்கும். எனவேதான், ஔவையார் மீதூண் விரும்பேல் என்றார். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது பழமொழி.

வயது ஏறும்போது கொழுப்புச்சத்துள்ள உணவின் அளவைச் சிறிது சிறிதாகக் குறைத்துக்கொண்டே வருதல் வேண்டும். உணவைக் கட்டுப்படுத்துவதோடு எளிய உடற்பயிற்சிகளையும் செய்தல் வேண்டும். நடைப்பயிற்சியே எளிய உடற்பயிற்சி. ‘நாள்தோறும் தவிராமல் நடந்தால் நோய் நம்மைவிட்டு நடக்கும்; ஓடினால் நோய் நம்மைவிட்டு ஓடும்; எப்போதும் படுத்துக் கிடந்தால் நோய் நம்மீது படுத்துக்கொள்ளும்.

காலை மாலை உலாவி நிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத்தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே. – கவிமணி

தமிழ்

உடல்நலனை விரும்புவோர் முறையான உணவுப் பழக்கத்தை மேற்கொண்டால், நெடுநாள் நலமாக வாழலாம். உண்பதற்காக வாழாமல், வாழ்வதற்காக உண்டால் மருந்தென்பதே உடலுக்குத் தேவை இல்லை. திருமூலரும் உடலைக் காத்தலின் தேவையை வலியுறுத்தியுள்ளார். நாடு நலம்பெற நல்லுடல் பெற்ற மக்கள் தேவை. நல்லுடல் பெற நல்லுணவுமுறையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே. – திருமூலர்

அறுசுவையின் பயன்கள்

இனிப்பு	–	வளம்	கார்ப்பு	–	உணர்வு
துவர்ப்பு	–	ஆற்றல்	உவர்ப்பு	–	தெளிவு
கைப்பு	–	மென்மை	புளிப்பு	–	இனிமை

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது ____________________ .
2. பசிப்பிணிக்கு உணவே ____________________ .
3. நோய்க்கு முதற்காரணம் ____________________ .
4. மீதூண் விரும்பேல் எனக் கூறியவர் ____________________ .

ஆ) குறுவினாக்கள்

1. ‘மருந்தே உணவு’ என்னும் நிலை ஏன் ஏற்பட்டுள்ளது ?
2. உணவு, உடலை வளர்க்கும் ஆதாரம் . ஏன் ?
3. உடல்நலமாவது யாது ?
4. உடற்பயிற்சியின் நன்மைகள் யாவை ?

இ) சிறுவினாக்கள்

1. திருக்குறள், உணவு மருந்தாகும் தன்மையை எவ்விதம் விளக்குகிறது ?
2. தவிர்க்கவேண்டிய உணவுப்பொருள்கள் யாவை ?
3. தண்ணீரும் மருந்தே – விளக்குக.

ஈ) நெடுவினாக்கள்

1. மருந்தாகும் உணவுப்பொருள்கள் பற்றி எழுதுக.
2. உணவு உண்ணும் முறையை விளக்குக.



நோய் நீக்கும் மூலிகைகள்

(தாமரையும் பொற்கொடியும் கடைத்தெருவுக்குச் செல்கின்றனர். திரும்பும் வழியில்...)

தாமரை : அம்மா, அதோ பாருங்கள். மூலிகைக்கண்காட்சி நடந்துகொண்டிருக்கிறது. நாமும் போய்ப் பார்க்கலாமா ?

பொற்கொடி : சரி வா, தாமரை! அங்கே என்ன இருக்கிறதெனப் பார்த்து வரலாம்.

(இருவரும் உள்ளே செல்கின்றனர். அங்கு மூலிகைகளின் மகத்துவத்தைப் பற்றி மருத்துவர் மக்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்.)

பொற்கொடி : ஐயா, வணக்கம்! நாங்கள் நகர்ப்பகுதியிலிருந்து வருகிறோம். இங்குள்ள மூலிகைகள்பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது, கொஞ்சம் விளக்கமுடியுமா ?

மருத்துவர் : தெளிவாகவே சொல்கிறேன்.

மூலிகை என்றாலே பலரும் கிடைத்தற்கரிய ஏதோ ஒரு பொருள் என எண்ணுகின்றனர். ஆனால், இவை நமக்கு மிக அருகிலேயே எளிதில் கிடைப்பன; மருத்துவப் பயன் மிக்கன. இதனை அனைவரும் அறிய வேண்டும் என்னும் நோக்கிலேயே இதுபோன்ற கண்காட்சிகளை நடத்தி வருகிறோம். இம்மூலிகைகள் எல்லாவித நோய்களையும் நீக்கும் தன்மையுடையன என்பதுடன் பின்விளைவுகளை ஏற்படுத்துவதில்லை என்பதும் இவற்றின் சிறப்பாகும்.

பொற்கொடி : இங்குள்ள மூலிகைகள் எந்த நோயை நீக்கப் பயன்படுகின்றன என்பதனைத் தெளிவாகக் கூறுங்கள், ஐயா.

மருத்துவர் : நல்லது. இந்தச் செடியைப் பாருங்கள்.

தாமரை : இது துளசிச்செடிதானே!

மருத்துவர் : சரியாகச் சொன்னாய். இது துளசிதான். வீடு, தோட்டம், நந்தவனங்களில் எளிதில் காணக்கிடைக்கும் துளசிச்செடியின் இலைகளை நீரிலிட்டுக் கொதிக்க வைத்து ஆவிபிடித்தால் மார்புச்சளி, நீர்க்கோவை, தலைவலி நீங்கும். இதன் இலைகளை எலுமிச்சம்பழச் சாற்றுடன் அரைத்துப்போடப் படை நீங்கும்; விதைகளைப் பொடி செய்து ஒன்று அல்லது இரண்டு கிராம் அளவு உண்டால் உடற்சூடு, நீரெரிச்சல் ஆகியன அடங்கும்.

பொற்கொடி : இஃது என்ன செடி, ஐயா?

மருத்துவர் : இது கீழ்க்காய்நெல்லி. இதனைக் கீழாநெல்லி, கீழ்வாய்நெல்லி எனவும் குறிப்பிடுவர். மஞ்சட்காமாலைக்கு எளிய மருந்தாக இன்றும் பயன்பட்டு வருகிறது.

தாமரை : இதனை எவ்வாறு உட்கொள்ளுதல் வேண்டும்?

மருத்துவர் : காய்களுடன் கூடிய முழுக் கீழாநெல்லிச்செடியைத் தூயநீரில் கழுவி அரைத்து விழுதாக்கிக் கொள்ளல் வேண்டும். ஐம்பது கிராம் அளவுள்ள விழுதை இருநூறு மில்லி லிட்டர் எருமைத்தயிருடன் கலந்து, காலை ஆறு மணியளவில்வெறும்வயிற்றில் உட்கொள்ளல் வேண்டும். இவ்வாறு மூன்று நாள் தவிராமல் உட்கொண்டால் மஞ்சட்காமாலை நோய் தீரும். மருந்துண்ணும் நாளில் மோரும், மோர்ச்சோறும் உட்கொள்வது நல்லது. கீழாநெல்லி இலைகளைக் கற்கண்டுடன் சேர்த்து அரைத்து மூன்றுகிராம் அளவு காலை மாலை இருவேளை நாலுநாள் தொடர்ந்து உட்கொள்ள சிறுநீர்த் தொடர்பான நோய்கள் நீங்கும்.

(தாமரை, ஓர் இலையைத் தொட அதிலிருந்த முள், அவள் கையைக் குத்தியது.)

தாமரை : ஆ! முள் குத்திவிட்டது, இந்த முட்செடியும் மூலிகையா, ஐயா?

மருத்துவர் : இது செடியில்லை. ஒருவகைக் கொடி. தூதுவளை என்பது இதன் பெயர். தோட்டங்களிலும், வேலியோரங்களிலும் இயல்பாக வளரும் இக்கொடியிலும் இலைகளிலும் கொக்கிபோன்ற சிறுமுள்கள் உண்டு. இது தூதுளை, சிங்கவல்லி என வேறுபெயர்களிலும் வழங்கப்படும். இதன் இலைகளை நல்லெண்ணெயில் சமைத்து உணவோடு சேர்த்து இருபத்தொரு நாள் உண்டு வந்தால், சுவாசகாசம் அகலும்; இளைப்பு இருமல் போகும். ஞானப்பச்சிலை என வள்ளலார் போற்றும் இவ்விலை குரல்வளத்தை மேம்படுத்தும்; வாழ்நாளை நீட்டிக்கும்.

தாமரை : ஐயா, இது குப்பைமேனிதானே!

மருத்துவர் : ஆமாம். உனக்கு எப்படி இதன் பெயர் தெரியும்?

தாமரை : எங்கள் பாட்டி ஊருக்கு நான் சென்றபோது என்னைப் பூச்சிக் கடித்ததனால், கை, கால்களில் தடிப்பு ஏற்பட்டது. அப்போது பாட்டி இந்தச் செடியின் இலைகளை அரைத்துப் பூசினார்கள். அதனால்தான், இதன்பெயர் எனக்குத் தெரிந்தது.

மருத்துவர் : (சிரித்தவாறு) இதனைத்தான் பாட்டி வைத்தியம் என்பார்கள். குப்பைமேனி,

நச்சுக்கடிகளுக்கு நல்ல மருந்தாக விளங்கும் மூலிகைச் செடியாகும். இதன் இலைகளைக் காயவைத்துப் பொடியாக்கிப் பூசினால், படுக்கைப் புண் குணமாகும். குழந்தைகளின் வயதுக்கேற்ற அளவில் உண்ணக் கொடுத்தால் மலப்புழுக்கள் வெளியேறும்; வயிறு தூய்மையாகும்; பசியைத் தூண்டும்; இலைகளுடன் மஞ்சள், உப்புச் சேர்த்து அரைத்துப் பூசினால் சொறி, சிரங்கு நீங்கும். மேனி துலங்க குப்பைமேனி என்பது பழமொழி.

பொற்கொடி : கற்றாழையும் மூலிகையா ?

மருத்துவர் : வறண்டநிலத் தாவரமான கற்றாழையில் பலவகையுண்டு. அவற்றுள் சோற்றுக்கற்றாழையே மருந்தாகப் பயன்படுகிறது. இதன் தோலை நீக்கிச் சோற்றுப்பகுதியைக் குறைந்தது பத்து முறையேனும் கழுவுதல் வேண்டும். அப்போதுதான் அதன் கசப்புத்தன்மையும் வழுவழுப்பும் நீங்கும். நூறு கிராம் அளவு கற்றாழையின் சோற்றுப் பகுதியை எடுத்து நூறு மில்லி நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சித் தலைக்குத் தேய்த்துவர முடி வளரும்; அதனால், இரவில் நல்ல உறக்கம் வரும். மஞ்சள் சேர்த்துக் காயம்பட்ட இடத்தில் பூசினால் காயம் குணமாகும். இதனைப் பசும்பாலுடன் சேர்த்துச் சாப்பிட்டால் மூலச்சூடு குறையும். கற்றாழைக்குக் குமரி என்னும் வேறுபெயரும் உண்டு. பெண்களின் கருப்பை சார்ந்த நோய்களை நீக்குவதனால் குமரி கண்ட நோய்க்குக் குமரி கொடு என்னும் வழக்கு ஏற்பட்டது.

தாமரை : அம்மா! இதோ பாருங்கள், முருங்கைக்கீரை, கறிவேப்பிலை.

பொற்கொடி : முருங்கை நிறைந்த சத்துள்ளது என்பது நமக்குத் தெரியும். அஃது எப்படி மருந்தாகும், எந்த நோயை நீக்கும் ? கறிவேப்பிலையும் மூலிகையா, வியப்பாக உள்ளதே !

மருத்துவர் : இதுதான் மக்களின் அறியாமை என்பது. எளிதாகக் கிடைப்பதனாலும், வீட்டில் வளர்வதனாலும் முருங்கையை மூலிகை என யாரும் எண்ணுவதில்லை. அஃது உணவுப்பொருள் மட்டுமன்று; நல்ல மருந்துப் பொருளும்கூட.

முருங்கைப்பட்டையை அரைத்துத் தடவினால் முறிந்த எலும்பு விரைவில் கூடும்; வீக்கத்தைக் குறைக்கும். முருங்கைக்கீரை கண்பார்வையை ஒழுங்குபடுத்தும்; உடலை வலுவாக்கும், இரும்புச்சத்து நிறைந்துள்ளதனால் கூந்தலை வளரச் செய்வதில் இதற்குப் பெரும் பங்குண்டு.

கறிவேப்பிலையும் மூலிகையே. மணத்திற்காக மட்டும் உணவில் சேர்க்கப்படும் இலையாக இதனைக் கருதுதல் கூடாது. ஒரு மண்சட்டியில் முந்நூறு மில்லி அளவு பசுவின்பாலை ஊற்றி வேடு கட்டுதல் வேண்டும். அதன்மீது கறிவேப்பிலையின் காம்பு நீக்கிய கொழுந்து இலைகளைப் போட்டுச் சிறுதீயில் அவித்தல் வேண்டும். அதனை விடக்கடி ஏற்பட்ட இடத்தில் வைத்துக் கட்டினால் மூன்று நாளில் குணமாகும். காலை, மாலை என இருவேளையும் ஐந்து கிராம் கறிவேப்பிலையைக் கழுவிச் சிறிதுசிறிதாக வாயிலிட்டு மென்று விழுங்கினால், சீதபேதி

இருநாளில் குணமாகும். உணவில் சேரும் சிறுநச்சுத்தன்மையை முறிக்கும்தன்மை கறிவேப்பிலைக்கு உண்டு. (வேடு கட்டுதல்– சட்டியின் வாயை மெல்லிய துணியால் மூடிக் கட்டுதல்.)

(பொற்கொடியின் கையில் இருந்த பையைப் பார்த்து)

அடடே! நீங்கள் கரிசலாங்கண்ணிக் கீரையை வாங்கியிருக்கிறீர்களா? நல்லது.

பொற்கொடி : ஏன் ஐயா, அவ்வாறு கூறுகிறீர்கள்?

மருத்துவர் : கரிசலாங்கண்ணியின் மருத்துவப்பயன் மிகப்பெரிது. இரத்தசோகை, செரிமானக்கோளாறு, மஞ்சட்காமாலை முதலிய நோய்களுக்குக் கரிசலாங்கண்ணி நல்ல மருந்தாகப் பயன்படுகிறது. அது, கண்பார்வையைத் தெளிவாக்கும்; நரையைப் போக்கும். கரிசலாங்கண்ணிக்கு வழங்கப்படும் வேறுபெயர்கள் : கரிசாலை, கையாந்தகரை, பிருங்கராசம், தேகராசம்.

பொற்கொடி : இவை தவிர மருந்துகளாகப் பயன்படும் மூலிகைத்தாவரங்கள் பற்றிக் கூறுங்கள், ஐயா.

மருத்துவர் : மணித்தக்காளிக் கீரை வாய்ப்புண், குடற்புண்ணைக் குணமாக்கும். முசுமுசுக்கைக் கொடியின் வேரைப் பசுவின்பாலில் ஊறவைத்து, உலர்த்திப் பொடியாக்கிப் பசும்பால், மிளகுப்பொடி, சருக்கரையுடன் உண்டு வந்தால் இருமல் நீங்கும். அகத்திக்கீரை, பல் சார்ந்த நோய்களைக் குணமாக்கும். வல்லாரை நினைவாற்றல் பெருக உதவும். வேப்பங் கொழுந்தைக் காலையில் உண்டு வந்தால், மார்புச்சளி நீங்கும் வேப்பிலையை அரைத்துத்தடவினால் அம்மையால் வந்த வெப்புநோய் அகலும்.

பொற்கொடி : ஐயா, இதுவரை பயனற்றது என எண்ணி வந்த தாவரங்களின் மருத்துவக்குணங்களை நாங்கள் அறிந்துகொண்டோம். அவற்றை வாழ்வில் பயன்படுத்தி நலம்பெறுவோம். எங்களுக்குத் தெள்ளத் தெளிவாக விளக்கியதற்கு மிக்க நன்றி, ஐயா.

தாமரை : நன்றி, ஐயா! சென்று வருகிறோம்.

மருத்துவர் : மெத்த மகிழ்ச்சி, சென்று வாருங்கள்.

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. நோய் நீக்கும் மூலிகைகள் ஐந்தனைக் கூறி, அவற்றின் மருத்துவப்பயன்களை எழுதுக.
2. கீரைகள் மூலிகைகளே என்பதனை விளக்குக.

செயல் திட்டம் : உன் இருப்பிடத்துக்கு அருகிலுள்ள சித்த மருத்துவமனைக்குச் சென்று மூலிகைகள் குறித்தும் அவை அகற்றும் நோய்கள் குறித்தும் அறிந்து தொகுக்க.

யாப்பு : செய்யுள் உறுப்பு (தளை)

செய்யுள் உறுப்புகளுள் எழுத்து, அசை, சீர் ஆகியவற்றை முதற்பருவத்தில் கற்றுக் கொண்ட நீங்கள் இந்தப் பருவத்தில் தளை என்பதனைப்பற்றிக் கற்கவிருக்கிறீர்கள்.

தளை

நின்றசீரின் ஈற்றசையும் வரும்சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் வருவது தளை எனப்படும். (தளை – கட்டுதல்)

ஒன்றி வருதலாவது : நேர் முன் நேரும், நிரை முன் நிரையும் வருதல்

ஒன்றாமல் வருதலாவது : நேர் முன் நிரையும், நிரை முன் நேரும் வருதல்.

(எ.கா.) கண்/ணா மன்/னா
நேர் நேர் நேர் நேர் – நேர் அசைகள் ஒன்றி வந்தன.
உயர் /வற உயர்/நலம்
நிரை நிரை நிரை நிரை – நிரை அசைகள் ஒன்றி வந்தன.

அக/ர முத/ல
நிரை நேர் நிரை நேர் – ஒன்றாமல் வந்தன.
மலர்/மிசை ஏ/கினான்
நிரை நிரை நேர் நிரை – ஒன்றாமல் வந்தன.

தளை எழு வகைப்படும். அவை:

1. நேரொன்றாசிரியத்தளை
2. நிரையொன்றாசிரியத்தளை
3. இயற்சீர் வெண்டளை
4. வெண்சீர் வெண்டளை
5. கலித்தளை
6. ஒன்றிய வஞ்சித்தளை
7. ஒன்றாத வஞ்சித்தளை

1. நேரொன்றாசிரியத்தளை

மாமுன் நேர் வருவது நேரொன்றாசிரியத்தளை.

(எ.கா.) பா / ரி பா / ரி
நேர் நேர் நேர் நேர் மாமுன் நேர்
தேமா தேமா

2. நிரையொன்றாசிரியத்தளை

விளம்முன் நிரை வருவது நிரையொன்றாசிரியத்தளை.

(எ.கா.) பலர் / புகழ்	கபி / லர்	
நிரை நிரை	நிரை நேர்	விளமுன் நிரை
கருவிளம்	புளிமா	

3. இயற்சீர் வெண்டளை

மாமுன் நிரையும், விள முன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளை.

(எ.கா.) அக/ர	முத/ல	
நிரைநேர்	நிரைநேர்	மாமுன் நிரை
புளிமா	புளிமா	
நில/வரை	நீள்/புகழ்	
நிரை நிரை	நேர் நிரை	விளமுன் நேர்
கருவிளம்	கூவிளம்	

4. வெண்சீர் வெண்டளை

காய்முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை.

(எ.கா.) யா/தா/னும்	நா/டா/மால்	
நேர் நேர் நேர்	நேர் நேர் நேர்	காய்முன் நேர்
தேமாங்காய்	தேமாங்காய்	

வெண்பாவுக்கு உரிய தளைகள் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையுமே. வெண்பாவில் இவ்விரு தளைகள் தவிரப் பிற தளைகள் வாரா.

5. கலித்தளை

காய்முன் நிரை வருவது கலித்தளை.

(எ.கா.) தா/மரைப்/பூ	குளத்/தினி/லே....	
நேர் நிரை நேர்	நிரை நிரை நேர்	காய்முன் நிரை
கூவிளங்காய்	கருவிளங்காய்	

6. ஒன்றிய வஞ்சித்தளை

கனிமுன் நிரை வருவது ஒன்றிய வஞ்சித்தளை.

(எ.கா.) செந்/தா/மரைக்	குளத்/தினி/லே...	
நேர் நேர் நிரை	நிரை நிரை நேர்	கனிமுன் நிரை
தேமாங்கனி	கருவிளங்கனி	

தமிழ்

7. ஒன்றாத வஞ்சித்தளை

கனிமுன் நேர் வருவது ஒன்றாத வஞ்சித்தளை.

(எ.கா.) வா/னில்/வளர் திங்/களன்/ன ...

நேர் நேர் நிரை நேர் நிரை நேர் கனிமுன் நேர்

தேமாங்கனி கூவிளங்காய்

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தளை ---------வகைப்படும்.
2. மாமுன் நேர் வருவது ------------ தளை ஆகும்.
3. விளம்முன் நிரை வருவது --------- தளை ஆகும்.
4. காய்முன் நேர் வருவது -----------------தளை ஆகும்.
5. கனிமுன் நேர் வருவது-----------------தளை ஆகும்.

ஆ) குறுவினாக்கள்

1. தளை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. வெண்பாவுக்குரிய தளைகள் யாவை?
3. இயற்சீர் வெண்டளை எவ்வாறு அமையும்? சான்று தருக.
4. கலித்தளை எவ்வாறு அமையும்? சான்று தருக.
5. ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை வருவதனைச் சான்றுடன் விளக்குக.

அணி

வேற்றுமையணி

செய்யுளில் இருபொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமையைக் கூறிய பின்னர், அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணியாகும்.

தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. – குறள்,129

தீயினால் சுடுவதும், நாவினால் தீயசொற்களைக்கொண்டு சுடுவதும் என்பது ஒற்றுமை, தீயினால் சுட்டது ஆறும்; நாவினால் சொன்னது ஆறாது என்பது வேற்றுமையாகும். எனவே, இப்பாடலில் வேற்றுமையணி இடம்பெற்றுள்ளது.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

செய்யுளில் இருபொருளுக்கிடையேயுள்ள ஒற்றுமையைக்கூறிப் பின்னர், அவற்றை வேறுபடுத்திக்காட்டுவது ________________ அணியாகும்.

ஆ) குறுவினா

வேற்றுமையணி என்றால் என்ன ? சான்று தந்து விளக்குக.

வகுப்பறைத்திறன்கள்

கலந்துரையாடல் திறன்

பல்வேறு மருத்துவமுறைகள் குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.

படைப்பாற்றல் திறன்

கீழ்க்காணும் பாடலை நிறைவு செய்க.

பாட்டுக்கு அழகு பொருள்
பகலுக்கு அழகு வெளிச்சம்
வீதிக்கு அழகு __________
நீதிக்கு அழகு __________
வீட்டுக்கு அழகு __________
காட்டுக்கு அழகு __________

பின்வரும் பாடலில் மாறியுள்ள வரிகளைப் பொருளுக்கேற்ப வரிசைப்படுத்துக.

வரிசை மாறியுள்ள பாடல்	பொருளுக்கேற்ப வரிசைப்படுத்திய பாடல்
1. சின்ன வாளி எடுத்தான்	______
சின்னத் தம்பி கண்ணன்	______
புதிய மகிழ்வு கொண்டான்	______
செடிக்கு நீரும் விடுத்தான்	______
பூவின் அழகைக் கண்டான்	______
செடியை நோக்கிச் சென்றான்	______
2. வீட்டில் இருக்கக் கூடாதா	______
அங்கும் இங்கும் ஓடுகிறோம்	______
தினமும் பந்து ஆடுகிறோம்	______
வெப்பம் மிகுந்து போனதால்	______
தெப்பக் குளத்தில் நீரில்லை	______
வெயிலே நீயும் சிலநாள்	______

பின்வரும் சொற்களைத் தனித்தனியே பயன்படுத்திச் சொற்றொடரைப் பெரிதாக்குக.

குதிரை ஓடும். (விலங்கு, மிகவும், விரைவாக)

குதிரை ஓடும்.

குதிரை விரைவாக ஓடும்.

குதிரை மிகவும் விரைவாக ஓடும்.

குதிரை மிகவும் விரைவாக ஓடும் விலங்கு.

பயிற்சி : குறிப்புச்சொற்களைத் தனித்தனியே பயன்படுத்திச் சொற்றொடரைப் பெரிதாக்குக.

நான் சென்றேன்.

(காலை, நேற்று, மதுரைக்கு, மீண்டும், சென்னையிலிருந்து, விமானத்தில்)

______

______

______

______

தமிழ்

தமிழெண்களைக் கூட்டுக.

கO + கரு =

உ௬ + ருO =

எஉ + உஅ =

கூO + எ =

கO + சச =

கட்டுரைப் பயிற்சி : மூலிகை மருத்துவம்

கடிதப் பயிற்சி : பாராட்டு மடல் (ஓய்வு பெற்ற ஆசிரியருக்கு).

கையெழுத்து இதழ் : உடல்நலச் சிறப்பிதழ்		
உடல்நலம் போற்றுவோம்! உளநலம் உயர்த்துவோம்!		நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!
உணவும் சத்தும்	துணுக்குகள்	ஓவியம்
உணவுப்பொருள்கள்	பாட்டி மருத்துவம்	முதலுதவி தீ விபத்துக்கால உதவி / நீரில் மூழ்கியவரைக் காப்பாற்றுதல்
கவிதை	சிறுகதை	நாடகம்
குடிநீர்	வரும் முன் காப்போம்!	எய்ட்ஸ் விழிப்புணர்வு
கட்டுரை	பழமொழிகள்	மூலிகைகள்
உலக நல அமைப்பு	உடல் நலம்	வீட்டில் வளர்க்க வேண்டிய மூலிகைகள்
இத்திங்களுக்குரிய தமிழ்மன்ற நிகழ்ச்சிகள்		

பொருள் வைப்புமுறை அறிக

குழந்தை அரும்புவுக்கு அகவை மூன்று; அவள் விளையாடிக் கொண்டிருந்தாள். விளையாட்டுப் பொருள்கள் இருந்த அலமாரியில் பந்தை எடுக்கச் சென்றாள். அருகிலிருந்த மாத்திரை அவள் கண்ணில்பட்டது. ஏதோ தின்பண்டம் என நினைத்து அதனை எடுத்துத் தின்றுவிட்டாள்; சிறிது நேரத்தில் மயங்கி விழுந்தாள். குழந்தையின் கைக்கெட்டுமாறு மாத்திரைகளை வைக்கலாமா ? வேறென்னென்ன பொருள்களைக் குழந்தையின் கைக்கு எட்டுமாறு வைத்தல் கூடாது ?

பாடி மகிழ்க.

பாட்டி மருந்து

வீட்டுக்குள்ளே எல்லாம் இருக்கு
வீதியில் மருந்து கண்டது கிடக்கு!
பாட்டியைக் கேட்டால் தருவாள் நமக்கு
பக்குவ மாக அம்மியில் அரைத்து!
சுக்கு மிளகு சீரகம் இஞ்சி
சுத்தமான திப்பிலி சேர்த்து
கைக்குள் வைத்துக் கசக்கிக் கொடுப்பாள்
கண்போல் நம்மைக் காத்தும் கிடப்பாள்!

வாழ்க்கைத்திறன்

மனவெழுச்சிகளை எதிர்கொள்ளுதல்

அல்லிக்கு வைத்த பொருள் வைத்த இடத்தில் இருத்தல் வேண்டும். வீட்டுக்கு வருவோர் யாராவது சமையலறையிலோ வரவேற்பறையிலோ இருக்கும் பொருள்களை எடுத்தால், எடுத்த இடத்தில் வைத்தல் வேண்டும். இல்லாவிட்டால் சினங்கொண்டு கத்துவாள்.

சிறு வயதிலிருந்தே அவள் அப்படித்தான் என்பது அவள் வீட்டாருக்குத் தெரியும். ஆனால், அவள் வீட்டுக்கு வந்த அண்ணனின் மகள் வீட்டிலிருந்த பொருள்களையெல்லாம் கலைத்துவிட்டதனைக் கண்டு பொங்கி எழுந்தாள்; சினத்தில் குழந்தையை அடித்துவிட்டாள். குழந்தையின் அழுகையைக் கேட்ட அனைவரும் அல்லியின்மீது குறைபட்டுக்கொண்டனர். அவளால், அவளின் இயல்பை மாற்றிக்கொள்ள இயலவில்லை.

1. அல்லி, தன் மன எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் குழந்தையை அடிக்கலாமா ?
2. சினங்கொண்டு உங்களை யாராவது அடித்ததுண்டா ? அப்போது உங்கள் மனநிலை எவ்வாறிருந்தது ?
3. உங்களுக்குச் சினம் வந்து நீங்கள் யாரையாவது அடித்தபிறகு ஏன் அடித்தோம் எனச் சிந்தித்தது உண்டா ?

மதிப்புக்கல்வி

சிக்கனம்

அமெரிக்காவின் புகழ்பெற்ற பணக்காரர்களுள் ஒருவர் அவர். ஒருசமயம் அவரிடம் நன்கொடை பெறுவதற்காகக் கல்லூரி மாணவர்கள் சென்றார்கள். மிகச்சிறிய விளக்கின் ஒளியில் படித்துக் கொண்டிருந்த அவர், விளக்கை அணைத்துவிட்டு அவர்களிடம் பேசத் தொடங்கினார். இவர் என்ன இப்படி ஒரு கஞ்சனாக இருக்கிறாரே! இவர் எங்கே நமக்கு நன்கொடை தரப்போகிறார் என்று மாணவர்கள் நினைத்தார்கள்.

அவர், அவர்கள் வியப்படையும் அளவுக்குக் கல்லூரியில் வகுப்பறை கட்டுவதற்காக மூன்று இலட்ச ரூபாய் கொடுத்து உதவினார். அவரைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருந்த மாணவர்கள், "ஐயா, எங்களுடன் பேசும்போது நீங்கள் விளக்கை அணைக்கக் காரணம் என்ன ?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், படிப்பதற்குத்தான்

விளக்குத் தேவை. உங்களுடன் பேசுவதற்குத் தேவையில்லை. சில காசுகள்தானே என்று அற்பமாக நினைத்தல் கூடாது. சிறு துளிதான் பெருவெள்ளம் ஆகிறது. சிக்கனமாக நான் இருப்பதனைப் பார்த்துவிட்டு, அதனை நீங்கள் கஞ்சத்தனம் என்று நினைத்தல் கூடாது. நான் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதனால்தான், இந்தத் தொகையை உங்களுக்கு நன்கொடையாகத் தரமுடிந்தது; சிக்கனம் என்பது வேறு, கஞ்சத்தனம் என்பது வேறு என்றார்.

1. நீ எவ்வளவு சேமித்து வைத்துள்ளாய்?
2. நீ சேமித்து வைக்காமைக்குக் காரணம் என்ன?
3. சேமிப்பதற்கான வழிமுறைகள் யாவை?

மொழியாக்கம் செய்க.

The people of India speak several languages and have different customs. They eat different food and dress in different ways. But all of them love India because, they are the children of Mother India. Their love for the country makes them a nation. They are the proud sons and daughters of the great mother.

____

____

____

____

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. The wise and the fool have their follows.
   இனம் இனத்தோடு சேரும்.
2. He who has an art has everywhere a part.
   கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
3. Being on the sea, sail being on the land, settled.
   காலத்திற்கேற்ற கோலம் கொள்.
4. No rains no grains.
   மாரியல்லது காரியம் இல்லை.
5. Bad words find bad acceptance.
   நுணலும் தன் வாயாற் கெடும்.

வளரறி செயல்பாடுகள்	
கேட்டல் திறன்	செயல்பாடு – 1

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

மூன்று வயது குழந்தையொன்றை அம்மை நோய் தாக்கியது. நோயின் தாக்கத்தால் அக்குழந்தை கண்ணொளி இழந்தது. குழந்தையின் நிலை கண்ட பெற்றோர் கலங்கினர்; கண்ணீர் பெருக்கினர். குழந்தையின் எதிர்காலத்தை எண்ணி விம்மி விம்மி அழுதனர். ஆண்டுகள் உருண்டோடின.

குழந்தைக்கு ஐந்து வயதாயிற்று. தொடக்கக் கல்வி கற்பிக்க எண்ணினார் குழந்தையின் தந்தை முத்தையா. குழந்தையைத் தன் மடியில் குப்புறப் படுக்கவைத்து, அதன் முதுகில் தமிழ் எழுத்துகளை எழுதிக் கற்பித்தார்.

தமிழின் வரிவடிவங்கள் குழந்தையின் மனத்துள் வரிவடிவங்களாகப் பதிந்தன. தந்தையின் மடியே குழந்தையின் தொடக்கப் பள்ளி ஆனது.

மடியில் கிடத்திக் கல்வி கற்பித்த தந்தை, குழந்தைக்கு எட்டு வயதானபோது தமிழ் இலக்கிய இலக்கணம் கற்பிக்க மாரிமுத்துக்கவிராயரிடம் சேர்ப்பித்தார்.

இலக்கண இலக்கியங்களைக் கவிராயர் குரலில் கேட்டுக் கற்று உள்ளத்திலும் உணர்விலும் தமிழை நிறைத்துக் கொண்ட அக்குழந்தை, வியக்கத்தக்க கவியாற்றலும் தமிழாற்றலும் பெற்றது.

பெற்றதன் விளைவாகத் தம் பதினேழாம் வயதிலேயே பழனிப் பதிகம், குமரகுரு பதிகம், சிவகிரிப் பதிகம், திருச்செந்தில் பதிகம் என நற்றமிழ் இலக்கியங்களைப் படைத்துத் தமிழ் அன்னைக்கு அணிசேர்த்தது.

பழனி என்னும் இயற்பெயர் கொண்ட அக்குழந்தையைத்தான், தமிழுலகம் மாம்பழக்கவிச் சிங்க நாவலர் எனப் பாராட்டிப் போற்றியது.

வினாக்கள்

1. மாம்பழக்கவிச் சிங்க நாவலரின் இயற்பெயர் என்ன?
2. மாம்பழக்கவிச் சிங்க நாவலருக்குத் தொடக்கக் கல்வி கற்பித்தவர் யார்?
3. மாம்பழக்கவிச் சிங்க நாவலருக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தவர் யார்?
4. இலக்கியங்களைப் படைத்தபோது மாம்பழக்கவிச் சிங்க நாவலரின் வயது என்ன?
5. மாம்பழக்கவிச் சிங்க நாவலர் இயற்றிய நூல்களுள் இரண்டனைக் கூறுக.

பேசுதல் திறன் – கலந்துரையாடல்	செயல்பாடு – 2

கீழ்க்காணும் படங்கள் உணர்த்தும் தொடர்வண்டிப் போக்குவரத்து விதிமீறல்களால் ஏற்படும் விளைவுகளைக் குறித்துக் குழுவில் கலந்துரையாடுக.

தொடர்வண்டிப் போக்குவரத்து விதிமீறல்கள்

- நிலையத்துக்குத் தொடர்வண்டி வரும்போது நடைமேடையில் உள்ள மஞ்சள் கோட்டுக்குள் நிற்றல்
- தொடர்வண்டியில் ஏறுவதற்கு நடைமேடையைப் பயன்படுத்தாமை
- இருப்புப் பாதையில் நடந்து செல்லுதல்
- தொடர்வண்டிப் பெட்டியின் நுழைவாயிலில் அமர்ந்து பயணம் செய்தல்
- தொடர்வண்டி வருகையில் ஆளில்லாக் கடவுப் பாதையைக் கடந்து செல்லுதல்

படித்தல் திறன்	செயல்பாடு – 3

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

நல்ல பாம்பு கடித்தால் உடனே வாழைமரம் இருக்குமிடத்துக்கு அரிவாளுடன் ஓடுங்கள். அடியில் ஒரு வெட்டு, நுனியில் ஒரு வெட்டுப் போட்டுத் துண்டத்தை எடுத்துவாருங்கள்.

பட்டையாக உரித்து மண் சட்டியில் அல்லது பீங்கான் கோப்பைகளில் சாறு பிழியுங்கள். காற்படி சாற்றைக் கடிபட்டவனுக்குக் கொடுங்கள்.

நல்ல பாம்புவின் நஞ்சு ஒன்றும் பண்ணாது. ஆள் கட்டாயம் பிழைத்துக் கொள்வான்.

உங்களுக்குச் செய்தி வர நேரமாகிவிட்டாலும், வாழைமரம் கொண்டுவர நேரம் ஆகிவிட்டாலும், கடி பட்டவன் பல் கிட்டிவிடும்.

வாழைப்பட்டைச் சாற்றை இவன் குடிக்கமுடியாது. ஆகவே, பற்றுக் குறடால் பல்லை விலக்கி மருந்தை விடச்செய்யாதீர்கள். இதனைவிட அறியாமை வேறில்லை. பல்லை விலக்கினாலும் தொண்டையை விலக்கமுடியாது.

பாம்பு கடிபட்டவன் பற்கள் கிட்டியிருந்தால், சில வாழைப்பட்டைகளை முதலில் உரித்து, கீழே சரியாக விரித்து, அதன்மேல் அவனைப் படுக்கவைத்து விடுங்கள்; பிறகு சாறு பிழியுங்கள். சாறு பிழியவும் அவன் வாய் திறக்கவும் நேரம் சரியாக இருக்கும். பிறகு சாற்றைக் குடிப்பான்; எழுந்து நடப்பான்.

கி. ஆ. பெ. விசுவநாதம், தமிழ் மருந்துகள்

1. பாம்பு கடிக்குப் பயன்படும் மரம் எது ?
2. பாம்பு கடிக்குக் கொடுக்கப்படும் சாறு எது ?
3. பல் கிட்டுதல் என்றால் என்ன ?
4. பாம்பு கடிபட்டவனுக்குப் பற்கள் கிட்டிவிட்டால், மருந்து உட்கொள்ள முடியுமா ? முடியாதெனில், காரணம் கூறுக.
5. பாம்பு கடிபட்டவனுக்குப் பற்கள் கிட்டியிருந்தால், எவ்வாறு மருந்து கொடுத்தல் வேண்டும் ?

எழுதுதல் திறன்

சொல்வதனை எழுதுதல்	செயல்பாடு – 4

நீராரும் கடலுடுத்த நிலமடந்தை எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை நாம் நன்கறிவோம். ஆனால், அப்பாடலுக்குரிய பொருளை முழுமையாக அறிந்தவர் சிலரே. மனோன்மணியம் என்னும் நாடக நூலில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது. இதனைப் பாடியவர் பெ. சுந்தரனார். பாடலில், கடலால் சூழப்பட்ட உலகம் தாயாகவும், பரதகண்டம் அத்தாயின் திருமுகமாகவும், தக்காணமாகிய தென்னிந்தியா அத்திருமுகத்தில் அழகுற அமைந்துள்ள நெற்றியாகவும், தமிழ்த்திருநாடு அந்நெற்றியில் விளங்கும் பொட்டாகவும், தமிழ்மொழி அப்பொட்டிலிருந்து எழும் புதுமணமாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை நாம் ஒவ்வொரு நாளும் பாடும்போது பொருளுணர்ந்து பாடுவோம்.

அகர வரிசைப்படுத்துதல்	செயல்பாடு – 5

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்திலுள்ள சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுக.

இயற்கையின் எழில்மிக்க காட்சி, சங்கப் புலவர் கபிலரின் பாடலில் அழகு மிக்கதொரு நாட்டிய அரங்கமாகத் திகழ்கின்றது. மூங்கில் துளைகளில் காற்றுப் புகுந்து எழுப்பும் ஓசை குழலோசையாகவும், முழங்கி இரைக்கும் அருவி ஒலி முழவோசையாகவும், மான்களின் சத்தம் பெருவங்கியமாகவும், வண்டுகளின் முரற்சி யாழோசையாகவும் அமைந்து இனியதொரு குழுவிசையாகவும் விளங்குகின்றது. மயில் விறல்பட ஆடும் விறலியாகவும், மந்திகள் காண்போர்களாகவும் அமைந்துவிடுகின்றன.

குற்றாலம் சுற்றுலா

வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டுத் திங்கள் கிழமை காலை 6.00 மணிக்குச் சென்னை வந்தடையும்.

சுற்றுலாவுக்கான கட்டணம்

தனியறை வசதியுடன் (தனி ஒருவருக்கு)	ரூ.3200/–
இருவர் தங்கும் அறை வசதியுடன் (தனி ஒருவருக்கு)	ரூ. 2950/–
சிறுவருக்கான கட்டணம் (4 வயதுமுதல் 10 வயதுவரை)	ரூ. 2700/–

வெள்ளிக்கிழமை	காலை 04.30	சென்னை – புறப்பாடு – இரவுப்பயணம்
சனிக்கிழமை	காலை 10.00	தென்காசி – குற்றாலம் – இரவு தங்குதல்
ஞாயிற்றுக்கிழமை	காலை 06.00	குற்றாலம் – தென்காசி, திருவில்லிபுத்தூர், மதுரை – இரவுப்பயணம்
திங்கள் கிழமை	காலை 06.00	சென்னை வந்தடைதல்

மேலும் விவரங்களுக்கு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

2, வாலாசா சாலை, சென்னை – 600 002.

தொலைபேசி – 91–44–25383333

தொலைநகல் – 91–44–25361385

விளம்பரத்தைப் புரிந்து வினாக்களுக்கு விடையளிக்க.

வினாக்கள்

1. விளம்பரம் எதனைப் பற்றிக் கூறுகிறது ?
2. சுற்றுலாவுக்கான நாள்கள் எத்தனை ?
3. பயணம் எங்கிருந்து, எத்தனை மணிக்குத் தொடங்குகிறது ?
4. நீ உன் தந்தையுடன் சுற்றுலாவுக்குச் செல்ல செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு ?
5. விளம்பரம் செய்துள்ள கழகம் எது ?

விண்ணப்பம் நிரப்புதல்	செயல்பாடு – 7

நூலகத்தில் உறுப்பினராவதற்கான படிவம் கொடுக்கப்பட்டுள்ளது. அப்படிவத்தினை உரிய முறையில் நிரப்புக.

கன்னிமாரா (மாநில மைய) பொது நூலகம், சென்னை – 8
உறுப்பினர் விண்ணப்பப் படிவம்

1	பெயர் : (பெரிய எழுத்துகளில்)	
2	பிறந்த தேதி	
3	தந்தை பெயர்	
4	முகவரி (முகவரிக்கான சான்றுடன்)	
5	பணிபுரிபவர் / மாணவர் (முழு முகவரியுடன்)	
6	நிலையான முகவரி தொலைபேசி/அலைபேசி	

கன்னிமாரா (மாநில – மைய) பொது நூலகத்தில் நூல்கள் இரவல் பெறும் உறுப்பினராகச் சேர விண்ணப்பிக்கும் நான், அந்நூலகத்தின் விதிமுறைகளின்படி நடந்து கொள்வேன். அதற்கான முன்பணம் ரூபாய் நூறு / இருநூறு/ முந்நூறு ரொக்கமாகச் செலுத்துகிறேன்.

கையொப்பம்

உத்திரவாதமளிப்பவர்
(முகவரி மற்றும் முத்திரையுடன்)

7	இமெயில் முகவரி	
8	தந்தை/கணவர் பெயர், தொழில், முகவரி தொலைபேசி/ செல்பேசி	
9	இரண்டு உறவினர்களின் பெயர், தொழில், முகவரி தொலைபேசி/ செல்பேசி	1.
		2.

தமிழ்

10. சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள்

1. குடும்ப அட்டை
2. ஓட்டுநர் உரிமம்
3. பாஸ்போர்ட்
4. தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை

பழமொழிகளை அறிதல்	செயல்பாடு – 8

கீழ்க்காணும் சொற்றொடர்களைப் பொருளறிந்து நிரப்புக.

(பறந்துபோம், உலகு, உயிர் கொடுத்தோரே, கேடு, நூறு வயது, விரும்பேல், நஞ்சு)

1. நொறுக்குத் தீனி வயிற்றுக்குக் __________ .
2. மீதூண் __________ .
3. உண்டி கொடுத்தோர் __________ .
4. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் __________ .
5. பசி வந்திடப் பத்தும் __________ .
6. நொறுங்கத் தின்றால் __________ .
7. உண்டி முதற்றே __________ .

குறுக்கெழுத்துச்சொல் விளையாட்டு	செயல்பாடு – 9

கீழ்க்காணும் குறிப்புகளைக்கொண்டு, உணவாகும் மருந்துகளைக் கண்டறிக. கண்டறிந்தவற்றைக் கட்டங்களில் எழுதுக.

1		2					3
	4					6	
		7					
					5		
8							
						9	
10							

தமிழ்

இடமிருந்து வலம்

2. வயிற்றுச் சூட்டைத் தணிக்கும் ________________ .

4. தொண்டைக்கட்டைத் தொலைக்கும் ________________ .

7. உடலுக்கு வலுவூட்டவும் கழிவு அகலவும் செய்யும் ________________ .

8. மணமூட்டி உணவு விருப்பைத் தரும் ________________ .

10. வளியை வெளியேற்றும் ________________ .

வலமிருந்து இடம்

9. கண்குளிர்ச்சியையும் அறிவுத்தெளிவையும் உண்டாக்கும் ____________ .

மேலிருந்து கீழ்

1. நெஞ்சிலுள்ள சளியை நீக்கும் ________________ .

3. பித்தத்தைப் போக்கும் ________________ .

6. நீர்க்கோவையை நீக்கும் ________________ .

கீழிருந்து மேல்

1. குருதியைத் தூய்மைப்படுத்தும் ________________ .

படைப்பாற்றல் – சொல் உருவாக்கம்	செயல்பாடு – 10

படத்தில் உள்ள எழுத்துகளைச் சேர்த்து மயங்கொலிச் சொற்களை உருவாக்குக.



கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

காலம் : 15மணித்துளி | மதிப்பெண் : 10

1. கோடிட்ட இடத்தை நிரப்புக. 5 × 1 = 5

அ) தளை என்னும் சொல்லுக்கு ______________ எனப் பொருள்.

ஆ) தளை ______________ வகைப்படும்.

இ) காய்முன் நேர் வருவது ______________ தளை.

ஈ) வெண்பாவுக்குரிய தளைகள் ______________ , ______________ .

உ) கனி முன் நேர் வருவது ______________ தளை.

2. அட்டவணையில் உள்ள சொற்களை அசை பிரித்து வாய்பாடு எழுதித் தளையைக் கண்டறிக. 5 × 1 = 5

வ. எண்.	சொற்கள்	அசை	வாய்பாடு	தளை
1	வை/கை ஆ/று	நேர்/நேர் நேர்/நேர்	மா முன் நேர்	நேரொன்றாசிரியத் தளை
2	காவிரிக் கரை			
3	கங்கைக் கரை			
4	நர்மதை ஆறு			
5	தென்பெண்ணை ஆறு			

தமிழ்

"என்னால் முடியும், நானே செய்தேன்"

('I can, I did')

மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

வ.எண்	நாள்	பாட எண்	பாடத்தலைப்பு	செயல்பாடு	குறிப்புரை

தமிழ்நாடு அரசு

ஒன்பதாம் வகுப்பு

மூன்றாம் பருவம்

தொகுதி 1

தமிழ்

ENGLISH

விற்பனைக்கு அன்று

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு
இலவசப்பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2013
(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006

நூல் அச்சாக்கம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006

இந்நூல் 80 ஜி எஸ் எம் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது

விலை : ரூ.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

பாடநூல் வலைதளம்

www.textbooksonline.tn.nic.in

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல், பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

THE NATIONAL INTEGRATION PLEDGE

"I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation."

"I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means."

A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vandemataram!

Signature

பொருளடக்கம்

தமிழ் (1 – 94)

இயல்		பக்க எண்
1.	திருக்குறள்	2
	பெண்மை	6
	தில்லையாடி வள்ளியம்மை	8
	இராணி மங்கம்மாள்	12
	பெயர்ச்சொல் : மூவிடப் பெயர்கள்	16
	புணர்ச்சி	19
2.	இரட்சணிய யாத்திரிகம்	36
	பொங்கல் திருவிழா	41
	நேர்மை	46
	ஆகுபெயர் : கருவியாகு பெயர், காரியவாகு பெயர், கருத்தாவாகு பெயர், உவமையாகு பெயர்	50
	பொருள்கோள் :அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள்	51
3.	புறநானூறு	62
	குறுந்தொகை	64
	உயிர்க்கோளம்	66
	நல்ல உள்ளம்	69
	யாப்பு : செய்யுள் உறுப்புகள் (அடி, தொடை)	73
	அணி : ஏகதேச உருவக அணி, நிரல்நிறை அணி	79

மனப்பாடப் பகுதி

இயல்	செய்யுள்	அடிகள்
1.	திருக்குறள் (3,4,5,7,9)	10
2.	இரட்சணிய யாத்திரிகம் (3)	4
3.	குறுந்தொகை	4
	மனப்பாட அடிகள் மொத்தம்	18

(பாடநூலுள் * இவ் உடுக் குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதி)

ஒன்பதாம் வகுப்பு

தமிழ்

மூன்றாம் பருவம்

திருக்குறள்

சான்றாண்மை

(பண்புகளால் நிறைந்து நிற்றல்)

1. கடன்என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

பொருள் : நல்ல குணங்களால் நிறைந்து வாழும் சான்றோர் நல்லவற்றையெல்லாம் தம் கடமையென மேற்கொண்டு வாழ்வர்.

சொற்பொருள் : கடன் – கடமை.

இலக்கணக்குறிப்பு : என்ப – பலர்பால் வினைமுற்று; மேற்கொள்பவர் – வினையாலணையும் பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம் : அறிந்து – அறி + த் (ந்) + த் + உ. அறி – பகுதி; த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

2. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று.

பொருள் : நற்குணங்களால் சிறந்திருத்தலே சான்றோரின் பெருமை. அதனை விடுத்துப் பிற நலன்கள் எவ்வகையிலும் பெருமை சேர்க்காது.

சொற்பொருள் : சான்றோர் – நல்ல குணங்கள் நிறைந்தவர்.

இலக்கணக்குறிப்பு : உள்ளதூஉம் – இன்னிசையளபெடை; அன்று – குறிப்புவினைமுற்று.

3. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால்(பு) ஊன்றிய தூண். *

பொருள் : அன்புடைமை, நாணம், பிறர்க்கு உதவுதல், உயிர்களிடத்து இரக்கம், உண்மை பேசுதல் ஆகிய ஐந்தும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள்.

சொற்பொருள் : நாண் – நாணம்; ஒப்புரவு – உதவுதல்; கண்ணோட்டம் – உயிர்களிடத்து இரக்கம்; வாய்மை – உண்மை.

இலக்கணக்குறிப்பு : கண்ணோட்டம் – தொழிற்பெயர்.

அணி : ஏகதேச உருவக அணி

4. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. *

பொருள் : தவமென்பது பிற உயிர்களைக் கொல்லாமையே; சால்பு என்பது பிறர் குறைகளைச் சொல்லாமையே.

சொற்பொருள்: சால்பு – சான்றாண்மை.

இலக்கணக்குறிப்பு : கொல்லா நலத்தது, சொல்லா நலத்தது – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

அணி : எடுத்துக்காட்டு உவமை அணி.

(இந்நாலு குறட்பாவும் சான்றாண்மையின் இலக்கணத்தைக் கூறுகின்றன.)

5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. *

பொருள் : ஒரு செயலைச் செய்பவர்க்கு வலிமை தருவது பணிவுடன் நடத்தலே. அதுவே சான்றோர்க்குத் தம் பகைவரைப் பகைமையிலிருந்து மாற்றி நட்பாக்குவதற்கு ஏற்ற கருவி.

சொற்பொருள் : ஆற்றுவார் – செயல் செய்பவர்; ஆற்றல் – வலிமை; மாற்றார் – பகைவர்.

இலக்கணக்குறிப்பு : பணிதல் – தொழிற்பெயர்; ஆற்றுவார், மாற்றார் – வினையாலணையும் பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம் : ஆற்றுவார் – ஆற்று + வ் + ஆர். ஆற்று – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி. பணிதல் – பணி + தல். பணி – பகுதி; தல் – தொழிற்பெயர் விகுதி.

6. சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்.

பொருள் : தம்மைவிட ஆற்றல் குறைந்தவரிடத்து ஏற்பட்ட தோல்வியையும் ஒப்புக் கொள்ளுதல் வேண்டும். அப்பண்பே ஒருவரின் சான்றாண்மையை அளந்தறிவதற்கான உரைகல் ஆகும்.

சொற்பொருள் : துலையல்லார் – ஆற்றலில் குறைந்தவர்; கட்டளை – உரைகல்.

7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. *

பொருள் : தீங்கு இழைத்தவர்க்கும் நன்மையே செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாமற் போனால் சால்பென்னும் தகுதியால் எப்பயனும் இல்லை.

சொற்பொருள் : இன்னா – தீங்கு; இனிய – நன்மை; செய்யாக்கால் – செய்யாவிடத்து.

(இம்மூன்று குறட்பாவும் சால்பின் பயனைக் கூறுகின்றன.)

8. இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

பொருள் : சால்பென்னும் மனஉறுதி உண்டாகப் பெறுமானால் ஒருவனுக்குப் பொருள் இல்லாததனால் ஏற்படும் வறுமை ஒரு குறையாகாது.

சொற்பொருள் : இன்மை – வறுமை; இளிவன்று – இழிவானதன்று; திண்மை – வலிமை.

இலக்கணக்குறிப்பு : இன்மை, திண்மை – பண்புப் பெயர்கள்.

பிரித்தறிதல் : ஒருவற்கு – ஒருவன் + கு; இளிவன்று – இளிவு + அன்று; சால்பென்னும் – சால்பு + என்னும்.

தமிழ்

9. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார். *

பொருள் : சான்றாண்மை என்னும் பண்பிற்குக் கடலென்று புகழப்படுபவர் உலகமே அழியும் ஊழிக்காலம் வந்தாலும் தம் நிலையில் வேறுபடாமல் இருப்பர்.

சொற்பொருள் : ஊழி – உலகம்; ஆழி – கடல்.

(இவ்விரு குறட்பாவும் சான்றாண்மையின் சிறப்பைக் கூறுகின்றன.)

10. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.

பொருள் : சான்றோர்களின் சான்றாண்மைக் குணத்தில் குறைவு ஏற்படுமானால், இவ்வுலகமும் பொறுமை என்னும் தன்பாரத்தைத் தாங்காது.

சொற்பொருள் : இருநிலம் – பெரிய நிலம்; பொறை – சுமை.

இலக்கணக்குறிப்பு : சான்றவர் – வினையாலணையும் பெயர்; இருநிலம் – உரிச்சொற்றொடர்; மன், ஒ – அசைச்சொற்கள்.

(இக்குறள் சான்றாண்மை குறைவதனால் ஏற்படும் இழிவினைக் கூறுகிறது.)

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நற்குணங்களால் சிறந்திருத்தல் ____________ பெருமையாகும்.
2. தவம் என்பது ____________.
3. தோல்வியை ஒப்புக்கொள்வதே சான்றாண்மையை அளந்தறியும் ______ .
4. மாற்றார் என்னும் சொல்லின் பொருள் ____________.
5. தீங்கிழைத்தவர்க்கும் ____________ செய்தல் வேண்டும்.

2. பொருத்துக.

இன்மை	–	வலிமை
திண்மை	–	வறுமை
ஆழி	–	தவம்
நோன்மை	–	கடல்

ஆ) குறுவினாக்கள்

1. சான்றோர் எதனைத் தம் கடமையாகக் கொள்வர்?
2. சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள் யாவை?
3. சான்றாண்மையை அறிய உதவும் உரைகல் எது?
4. வறுமை ஒரு குறையாகாது, எப்போது?

இ) சிறுவினாக்கள்

1. சான்றாண்மையின் இலக்கணம் யாது?
2. சான்றாண்மையின் பயன்களை விளக்குக.
3. சான்றாண்மையின் சிறப்புகளை எழுதுக.

ஈ) நெடுவினா

சான்றாண்மை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

உ) எதுகை, மோனைச்சொற்களை எடுத்தெழுதுக.

1. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
   மாற்றாரை மாற்றும் படை.
2. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
   தாங்காது மன்னோ பொறை.

ஊ) மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

நோன்மை நலத்தது சால்பு சொல்லா
கொல்லா பிறர்தீமை நலத்தது.

தமிழ்

தமிழ்

பெண்மை

அன்பும் ஆர்வமும் அடக்கமும் சேர்ந்தும்
உண்மைத் தன்மையும் உறுதியும் மிகுந்தும்
தன்னல மறுப்பும் சகிப்புத் தன்மையும்
இயல்பாய் அமைந்தும் இன்பசொ ரூபமாய்த்
தாயாய் நின்று தரணியைத் தாங்கும்;
தாரமாய் வந்து தளர்வைப் போக்கும்;
உடன்பிறப் பாகி உறுதுணை புரியும்;
மகளாய்ப் பிறந்து சேவையில் மகிழும்;
அயலார் தமக்கும் அன்பே செய்யும்;
நாணம் கெடாமல் நட்புகொண் டாடும்.

– வெ. இராமலிங்கனார்

பொருள் : இப்பாடலில் தாய், மனைவி, தமக்கை, தங்கை, மகள் எனப் பெண்மைக்குப் பன்முகங்கள் உண்டு என்பதனை நாமக்கல் கவிஞர் எடுத்துக்காட்டியுள்ளார்.

அன்பு, ஆர்வம், அடக்கம் முதலியன பெண்மையின் பண்புகளாகும். உண்மைத்தன்மையும் உள்ள உறுதியும் தன்னலமில்லாது குடும்பநலம் பேணுதலும், யார் எது செய்யினும் பொறுத்துக்கொள்ளும் தன்மையும் அமைந்து, தாய் என்னும் அன்பு வடிவில் இவ்வுலகைத் தாங்குபவள் பெண்ணே.

கணவன் மனம் தளரும்போதெல்லாம் அவனது கவலைக்கு மருந்தாக இருப்பவள் மனைவி. தமக்கையோ தங்கையோ உடன்பிறந்தானுக்கு உறுதுணையாகத் திகழ்கிறாள். மகளாகப் பிறந்து தந்தைக்குப் பணிவிடை செய்து மகிழ்பவளும் பெண்ணே. அயலாரிடத்து அன்பு காட்டியும் தனக்கே உரிய நாணம் கெடாது நட்புக் கொள்வதும் பெண்மையின் சிறந்த பண்புகளாகும்.

சொற்பொருள் : உறுதி – உளஉறுதி; சகிப்புத்தன்மை – பொறுத்துக்கொள்ளுதல்; சொரூபம் – வடிவம்; தரணி – உலகம்; தாரம் – மனையாள்; சேவை – தொண்டு; அயலார் – உறவல்லாதோர்.

இலக்கணக்குறிப்பு : அன்பும் ஆர்வமும் அடக்கமும் – எண்ணும்மை; இன்ப சொரூபம் – உருவகம்.



ஆசிரியர் குறிப்பு : கவிஞர் வெ. இராமலிங்கனார், நாமக்கல் மாவட்டத்திலுள்ள மோகனூரில் பிறந்தவர். இவர்தம் பெற்றோர் வெங்கட்ராமன் – அம்மணி அம்மாள் ஆவர். இவர், கவிதைப் போட்டிகள் பலவற்றில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றார்; தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர். இவருக்கு நடுவணரசு பத்மபூஷண் விருது வழங்கிச் சிறப்பித்தது. இவர், தமிழக மக்களால் காந்தியக் கவிஞர் எனப் பெருமையுடன் வழங்கப்படுகிறார். இவரின் காலம் கி.பி. 1888 முதல் 1972 வரையாகும்.

நூற்குறிப்பு : நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் கவிதைத் தொகுப்பில் தெய்வத் திருமலர், தமிழ்த்தேன் மலர், காந்திமலர், தேசிய மலர், சமுதாய மலர், பெரியோர் புகழ்மலர், திருநாள் மலர், சிறுகாப்பிய மலர், இசைமலர், அறிவுரை மலர், பல்சுவை மலர் ஆகிய தலைப்புகளில் கவிதைகள் அமைந்துள்ளன. இப்பாடல், சமுதாய மலர் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது.

நாமக்கல்லாரின் படைப்புகள்

இசைநாவல்கள்	3	இலக்கியத்திறனாய்வுகள்	7
கட்டுரைகள்	12	கவிதைத்தொகுப்புகள்	10
தன்வரலாறு	3	சிறுகாப்பியங்கள்	5
புதினங்கள்	5	மொழிபெயர்ப்புகள்	4

மாதிரி வினாக்கள்

அ) குறுவினாக்கள்

1. நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் பற்றிக் குறிப்பு எழுதுக.
2. பெண்மையின் பன்முகங்கள் யாவை ?
3. தாயின் இனிய பண்புகள் யாவை ?

ஆ) சிறுவினா

பெண்மையின் குணங்களாக இராமலிங்கனார் கூறுவன யாவை ?

தமிழ்

தில்லையாடி வள்ளியம்மை

ஆங்கிலேயரின் அடக்குமுறைக் கொடுமைக்கு எதிராக உரிமைக்குரல் எழுப்பிப் போராடினோர் பலர். அப்போராட்டத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் ஈடுபட்டார்கள். அவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் தில்லையாடி வள்ளியம்மை ஆவார்.

பெற்றோரும் பிறப்பும்

புதுச்சேரியில் வாழ்ந்த முனுசாமி என்ற நெசவாளி, தில்லையாடி என்னும் ஊரில் பிறந்த மங்களம் என்ற மங்கையை மணந்தார். திருமணத்திற்குப் பின்னர் தில்லையாடியிலேயே அவர்கள் நெசவுத் தொழில் செய்து வாழ்ந்து வந்தார்கள். அந்நாளில், ஆங்கிலேயர் தம் நாட்டுத் துணிகளை இந்தியாவிற்குக் கொண்டு வந்து விற்பனை செய்தனர். இதனால், நம் நாட்டில் உற்பத்தி செய்த துணிகளின் விற்பனை குறைந்தது. நெசவுத்தொழில் பாதிக்கப்பட்டது. அப்பாதிப்புக்கு உட்பட்டவர்களுள் முனுசாமியும் ஒருவர்.

நெசவுத்தொழில் பாதிப்பால் வறுமையில் வாடிய முனுசாமி, தம் மனைவியுடன் வேலைதேடித் தென் ஆப்பிரிக்காவில் குடியேறினார். அங்கு ஜோகன்ஸ்பர்க் என்னும் நகரத்தில் சிறிய அளவில் காய்கறிக் கடை நடத்தினார். இந்நிலையில், **1898**ஆம் ஆண்டு முனுசாமி, மங்களம் இணையருக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தையே வீரமங்கை வள்ளியம்மை ஆவார்.

வள்ளியம்மை தென்னாப்பிரிக்காவில் பிறந்தார். எனினும், இவரின் தாயார் பிறந்த ஊரான தில்லையாடியின் பெயரைக்கொண்டு தில்லையாடி வள்ளியம்மை என்று அழைக்கப்படுகிறார்.

அறப்போர்

தென்னாப்பிரிக்க நாட்டின் திருமணப்பதிவுச் சட்டப்படியும், கிறித்தவ மதச் சட்டப்படியும் நடைபெறாத திருமணம் செல்லாது என்று அந்நாட்டு உச்ச நீதிமன்றம் 1913ஆம் ஆண்டு ஒரு தீர்ப்பை வெளியிட்டது. அத்தீர்ப்பு, அங்குக் குடியேறியிருந்த இந்தியர்கள் அனைவருக்கும் எதிராக அமைந்திருந்தது. இதனால், பாதிக்கப்பட்ட இந்தியர்கள் தமது உரிமையை மீட்க அறப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அப்போராட்டத்தினைக் காந்தியடிகள் தலைமை ஏற்று வழிநடத்தினார். போராட்டத்தின்பொழுது காந்தியடிகள் நிகழ்த்திய வீரம் செறிந்த உரை, சிறுமி வள்ளியம்மையின் மனத்தில் ஆழமாகப் பதிந்தது. காந்தியடிகளின் உரிமை முழக்கத்தினால் கவரப்பட்ட வள்ளியம்மை அறப்போராட்டத்தில் முனைப்புடன் பங்கேற்றார். 1913ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 23ஆம் நாள் வால்க்ஸ்ரஸ்ட் என்னும் இடத்தில் நடைபெற்ற அறப்போரில் வள்ளியம்மை கைது செய்யப்பட்டார். அவருக்குத் தென்னாப்பிரிக்க நீதிமன்றம் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தது.

சிறைவாழ்க்கை

சிறையில் வள்ளியம்மைக்குக் கல்லும் மண்ணும் கலந்த உணவே தரப்பட்டது. இதனால் அவர் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்டார். கடுமையான காய்ச்சலுக்கு ஆட்பட்ட அவருக்குப் போதிய மருத்துவம் அளிக்கப்படவில்லை. சிறைச்சாலையில் நோயுடன் உயிருக்குப் போராடிய நிலையில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

நாட்டுப்பற்று

உடல்நலம் குன்றிய நிலையில் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட வள்ளியம்மை, தமது வீட்டில் படுத்த படுக்கையாக இருந்தார். இதனை அறிந்த காந்தியடிகள் வள்ளியம்மையைக் காண வந்தார்; காய்ச்சல் காரணமாக உடல் மெலிந்து நைந்து கிடந்த வள்ளியம்மையின் நிலைகண்டு கண்கலங்கி நின்றார்.

"சிறைத்தண்டனைக்காக நீ வருந்துகிறாயா ?", என்று வள்ளியம்மையிடம் கேட்டார் காந்தியடிகள். உடல்நிலை தளர்ந்திருந்த அந்நிலையிலும் வள்ளியம்மை, "இல்லை இல்லை மீண்டும் சிறை செல்வதற்குத் தயார்" என்று கூறினார். அத்துடன், இந்தியர்களின் நலனுக்காக எத்தகு இன்னல்களையும் ஏற்பேன். அதற்காக, என் இன்னுயிரையும் தருவேன் என்று கூறினார். வள்ளியம்மையின் பதிலைக் கேட்டுக் காந்தியடிகள் உள்ளம் நெகிழ்ந்தார். கொடிய அடக்குமுறைச் சிறைவாசத்திற்கு ஆளாகி நோயின் கடுமையினால், துன்புற்றநிலையிலும் வள்ளியம்மை தமது உரிமைப் போராட்ட உணர்விலிருந்து சிறிதும் மனம் தளரவில்லை. சிறைச்சூழலால் உடல்நலம் குன்றிய வள்ளியம்மை 1914 பிப்ரவரி இருபத்திரண்டாம் நாளன்று தமது பதினாறாம் அகவையில் மரணம் அடைந்தார்.

காந்தியடிகளின் கருத்து

"என்னுடைய சகோதரியின் மரணத்தைவிடவும் வள்ளியம்மையின் மரணம் எனக்குப் பேரிடியாக இருந்தது" என்று காந்தியடிகள் மனம் வருந்தினார்.

"மாதர்களுக்கு அணிகலன்களாகத் திகழும் துன்பத்தைத் தாங்கும் மனவலிமை, தன்மானம், நல்லொழுக்கம் ஆகியவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். அவருடைய தியாகம் வீண் போகாது. சத்தியத்திற்காக உயிர்நீத்த அவருடைய உருவம் என் கண்முன் நிற்கிறது. நம்பிக்கைதான் அவரது ஆயுதம்" என்று தில்லையாடி வள்ளியம்மை குறித்து, இந்தியன் ஒப்பீனியன் இதழில் காந்தியடிகள் எழுதியுள்ளார். தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள், தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.



தில்லையாடி வள்ளியம்மை நினைவைப் போற்றி
நடுவணரசு, அஞ்சல்தலையும் அஞ்சல் உறையும் வெளியிட்டுள்ளது.

தில்லையாடி – நாகப்பட்டினம் மாவட்டத்தில்
திருக்கடையூருக்குத் தெற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

சென்னை, வண்டலூர் உயிரியல் பூங்காவில் பிறந்த
பெண்புலிக்குட்டிக்குத் தில்லையாடி வள்ளியம்மை நினைவாக
வள்ளி எனப் பெயரிடப் பெற்றுள்ளது.

காந்தியடிகள், தமிழர்மீதும் தமிழ்மொழியின்மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டதற்கு வள்ளியம்மையும் ஒரு காரணம் என்று கூறலாம். காந்தியின் வாழ்க்கைப் பயணத்தில், அவர் மேற்கொண்ட சத்தியாக்கிரக வேள்விப்பணிக்கு

தமிழ்

முதல் களப்பலியாகி, அவரை மகாத்மா என்ற உயர்நிலைநோக்கித் திருப்பிய பெருமை தில்லையாடி வள்ளியம்மைக்கு உண்டு. காந்தியடிகள் தமது தமிழகப் பயணத்தின்போது வாய்ப்புக் கிடைக்கும்பொழுதெல்லாம் வள்ளியம்மையின் தியாகத்தை நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார். திருமணமாகாத இளம்பெண்ணான வள்ளியம்மையின் வாழ்வு இந்திய விடுதலைப் போருக்கு முன்னோடியாக அமைந்தது. அவரது அளப்பரிய தியாகம் போற்றி வணங்கத்தக்கது.

அரசு செய்த சிறப்புகள்

வள்ளியம்மையின் நினைவைப் போற்றும்வகையில் தில்லையாடியில் தமிழ்நாடு அரசு அவரது சிலையை நிறுவியுள்ளது. கோ–ஆப்– டெக்ஸ் என்றழைக்கப்படும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் சென்னையிலுள்ள தனது அறுநூறாவது விற்பனை மையத்திற்குத் தில்லையாடி வள்ளியம்மை மாளிகை எனப் பெயர் சூட்டிப் பெருமைப்படுத்தி உள்ளது. தென்னாப்பிரிக்க நாட்டில் இந்தியரின் நலனுக்காகப் போராடிய வீரத் தமிழ் மங்கை தில்லையாடி வள்ளியம்மையின் உரிமை உணர்வை அனைவரும் போற்றுவோம். நாட்டு நலனில் நாட்டங்கொண்டு தன்னலம் நீக்கிப் பொதுநலம் பேணி வாழ்வோம்.

ஒப்புநோக்குக. : திருப்பூர்க்குமரன், தில்லையாடி வள்ளியம்மை ஆகியோரின் விடுதலைப் போராட்ட முறைகளை ஒப்புநோக்குக.

மாதிரி வினாக்கள்

அ) குறுவினாக்கள்

1. தில்லையாடி வள்ளியம்மை எங்கு, எப்போது பிறந்தார் ?
2. வள்ளியம்மை இளமையிலேயே அறப்போரில் ஈடுபடக் காரணமாக அமைந்தது எது ?
3. காந்தியடிகள், வள்ளியம்மையைச் சந்தித்த நிகழ்வைக் கூறுக.
4. காந்தியடிகள், வள்ளியம்மை குறித்துக் கூறிய கருத்து யாது ?
5. வள்ளியம்மையின் நினைவைப்போற்ற அரசு செய்த சிறப்புகள் யாவை ?

ஆ) சிறுவினாக்கள்

1. வள்ளியம்மை ஈடுபட்ட விடுதலைப்போர் குறித்தும் அதன் விளைவு குறித்தும் எழுதுக.
2. வள்ளியம்மை குறித்துக் காந்தியடிகளின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

இ) நெடுவினா

வள்ளியம்மையின் வீர வாழ்க்கையைத் தொகுத்தெழுதுக.

இராணி மங்கம்மாள்

தமிழ்நாட்டில் நாயக்கர் மரபில் பெண்கள் முடிசூடி ஆட்சி செய்ததாக வரலாறு இல்லை. ஆனால், காப்பாட்சியாளராக ஆட்சி புரிந்து உள்ளனர். அதற்குச் சிறந்த சான்றாகத் திகழ்ந்தவர்தான் இராணி மங்கம்மாள். அரசுரிமைக்கு உரியவர்கள் குழந்தைகளாக இருந்ததனால், அவர்களுக்குப் பதிலாக இவர் காப்பாட்சியாளராக இருந்து ஆண்டார். மதுரையை ஆண்டுவந்த சொக்கநாத நாயக்கரின் மனைவி இராணி மங்கம்மாள். அக்காலத்தில், கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏறுவது வழக்கமாக இருந்தது. இராணி மங்கம்மாளின் கணவர் இறந்தபோது தன்மகன் அரங்க கிருட்டின முத்துவீரப்பன் இளம் வயதினனாக இருந்தான். அவனுக்குத் துணையாக இருக்கவேண்டும் என்னும் கடமையுணர்வினால் இராணி மங்கம்மாள் உடன்கட்டை ஏறவில்லை.

மகனுக்கு அரசும் அறிவுரையும்

மங்கம்மாள், தன் மகன் அரங்க கிருட்டின முத்துவீரப்பனுக்குத் திருமணம் செய்வித்த பின்னர் முடிசூட்டினார்.

"அரசாட்சியை அடக்கத்தோடும் தந்திரத்தோடும் நாம் நோக்கவேண்டும்; முன்கோபமும் அதன் விளைவும் அரசியலில் ஒருபோதும் வெற்றியைத் தராது; பகைவரை எதிர்கொள்ள எப்போதும் ஆயத்த நிலையில் இருப்பதோடு மிகுந்த பொறுமையுடனும் செயல்படவேண்டும்" என்றெல்லாம் மகனுக்கு அறிவுரை கூறினார். எந்த வேளையில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும்

துணிந்து முடிவெடுக்கும் மனவலிமை வேண்டுமென்றும் கூறினார். நாட்டையாளும் பொறுப்புக்கு வந்துவிட்டால், அனைவரையும் தம் குழந்தைகள்போல் எண்ணி, அன்பு செலுத்துதல் வேண்டும் என்றும் அறிவுரை பகன்றார்.

முத்துவீரப்பன் அன்னை காட்டிய வழியில் திறமையாக ஆட்சிபுரிந்தான்; தந்தை சொக்கநாதர் இழந்த பகுதிகளைப் போரிட்டு மீட்டான்; கோவில்களைக் கட்டி அறச்செயல்கள் பல செய்தான்; மக்களின் பசிப்பிணியைப்போக்க ஆங்காங்கே சத்திரங்களும் சாவடிகளும் கட்டினான்; நேர்மையைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை என்னும் உணர்வோடும் நடுவுநிலைமைப் பண்போடும் அமைதியாக ஆட்சி நடத்தி மக்களிடம் நற்பெயர் பெற்றான். ஏழாண்டுக்காலம் ஆட்சி நடத்திய அவன், அம்மைநோய் கண்டு உலக வாழ்வை நீத்தான்.

மங்கம்மாள் ஆட்சிப்பொறுப்பேற்றல்

மகன் முத்துவீரப்பனின் இறப்பு இராணி மங்கம்மாளுக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. மகன் இறந்த சில நாளில் மருமகள் சின்னமுத்தம்மாள் அழகிய ஆண்மகனைப் பெற்றெடுத்தாள். பெயரன் பிறந்தவுடன் இராணி மங்கம்மாள் குலம் தழைக்க, வழிபிறந்தது எனத் தெய்வத்திற்கு நன்றி செலுத்தினாள். ஆனால், சில நாளில் மருமகள் முத்தம்மாளும் காலமானாள். மறைந்துபோன மகன் – மருமகளின் நினைவுகள்அரண்மனை முழுவதும் நிறைந்து அவரைத் துன்பத்தில் மூழ்கச் செய்தன.

இருப்பினும், அரசியல் பட்டறிவும் ஆட்சிப்பொறுப்பும் இராணி மங்கம்மாளின் மனத்தைக் கல்லாக்கியிருந்தன. மகன் முத்துவீரப்பன் இறந்ததனால், கி.பி. 1688ஆம் ஆண்டு பெயரன் விசயரங்கச் சொக்கநாதன் பெயரளவில் அரியணையில் ஏற்றப்பட்டான். பாட்டி மங்கம்மாள் காப்பாட்சியாளராக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார். மங்கம்மாள் துயரங்களைத் தாங்கிக்கொண்டு ஆட்சிக் கடமைகளை அழகுற ஆற்றக்கூடிய வீராங்கனை என மக்கள் போற்றிப் புகழ்ந்தனர்.

திருவிதாங்கூர்ப் போர்

திருவிதாங்கூர் மன்னர் இரவிவர்மா, மதுரை நாயக்க அரசுக்குச் செலுத்த வேண்டிய திறைப்பொருள்களைச் செலுத்தவில்லை; கல்குளம் பகுதியிலிருந்த நாயக்கர் படையைத் தாக்கி அழித்தார். எனவே, தளபதி நரசப்பையன் தலைமையில் மங்கம்மாள் அனுப்பிய படை திருவிதாங்கூர்ப் படையைத் தோற்கடித்துத் திறைப்பொருள் மற்றும் பொன், பீரங்கி முதலிய பொருள்களையும் பெற்றுத் திரும்பியது.

தஞ்சைப் போர்

தஞ்சையை ஆண்ட மராத்தியருக்கும் மதுரை நாயக்கர்களுக்கும் இடையில் நல்லுறவு நிலவவில்லை. ஒருமுறை தஞ்சை ஷாஜி, மதுரை நாயக்கர் ஆட்சிப்பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றிக் கொண்டார். அவற்றை மீட்க, தளபதி நரசப்பையன் தலைமையில் மங்கம்மாள் ஒரு படை அனுப்பினார். அப்படை அப்பகுதிகளை மீட்டுத் தஞ்சையை அச்சுறுத்தியது. தஞ்சை அமைச்சர் பாலாஜி பண்டிதர் படையெடுப்பாளர்களுக்குப் பெரும்பொருள் கொடுத்தனுப்பினார்.

மைசூர்ப் போர்

இராணி மங்கம்மாள் காலத்தில் மைசூர் மன்னன் சிக்கதேவராயன் காவிரியின் குறுக்கே அணைகட்டியபோது, மங்கம்மாள் தஞ்சையுடனான பகையை மறந்து, அந்நாட்டு அரசு உதவியுடன் எதிர்ப்புத் தெரிவித்ததோடு அன்றி, மைசூர்மீது படையெடுக்க தஞ்சை–மதுரைக் கூட்டுப்படை ஒன்றனை உருவாக்கினார். படை தயாரானது. ஆனால், இவ்வேளையில் கருநாடகப் பகுதியில் கடும்மழை பெய்ததனால் சிக்கதேவராயன் கட்டிய அணைகள் உடைந்தன; சிக்கல் முடிவடைந்தது.

சமயக் கொள்கை

மதுரை நாயக்க மன்னர்களைப்போலவே மங்கம்மாள் சமயப்பொறையைக் கடைப்பிடித்தார்; கிறித்தவ மதக்குருமார்களைச் சமயப் பேருரை ஆற்ற அனுமதித்தார். ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தைக் கைக்கொண்டு வாழவிடுவதே தருமம் என்ற கொள்கையை மங்கம்மாள் பின்பற்றினார். சமயத் தொடர்பாகச் சிறை வைக்கப்பட்ட மெல்லோ பாதிரியாரை விடுதலை செய்ததோடு போசேத் என்ற குருவைத் தம் அரசவையில் வரவேற்று விருந்தோம்பினார்.

இசுலாமியர்களுக்கும் மங்கம்மாள் மானியம் அளித்துள்ளார். இசுலாமியர்களின் நல்வாழ்விற்காகவும் பள்ளிவாசல்களின் பாதுகாப்பிற்காகவும் நிலங்களை மானியமாக வழங்கியது குறித்துக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

மங்கம்மாள் அறச்செயல்கள்

மக்கள் நலம்பேணும் நல்ல பல பணிகளை மங்கம்மாள் செய்துள்ளார். அவர், மதுரையில் பெரியதொரு அன்னச்சத்திரத்தைக் கட்டினார்; புதிய சாலைகள் பல அமைத்தார்; கன்னியாகுமரிக்கும் மதுரைக்கும் இடையே அமைந்த நெடுஞ்சாலை, மங்கம்மாள் சாலை என அழைக்கப்படுகிறது. குதிரைகள், பசுக்கள், காளைகள் முதலியன நீர் அருந்துவதற்கு வசதியாகச் சாலையோரங்களில் தண்ணீர்த் தொட்டிகளைத் திறக்க ஆணையிட்டார்.

பொதுமக்களுக்காகக் குடிநீர்க் குளங்கள், ஊருணிகள், கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டச் செய்தார். தொழில் வளர்ச்சி, வாணிகம், மக்கள்தொடர்பு ஆகியவற்றிற்கு வழிவகுத்தார். மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திற்குப் பொன்னும் பொருளும் வழங்கினார்.

ஆனித்திங்களில் ஊஞ்சல் திருவிழா நடைபெற ஏற்பாடு செய்தார். கொள்ளிடத்தில் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் துன்புற்றபோது அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் வழங்குவதற்கு ஆணையிட்டார்.

வெள்ளத்தால் அழிந்த கரையோரத்துச் சிற்றூர்களைச் சீரமைத்தார். மத்தியச் சந்தை, மதுரைக் கல்லூரி உயர்நிலைப்பள்ளிக் கட்டடம், இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவரின் பழைய அலுவலகம் முதலியவற்றை மங்கம்மாள் கட்டியதாகக் கூறுவர்.

மங்கம்மாள் இறையுணர்வும் பெருந்தன்மையும்

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் விழாக்கள் நடைபெறும்பொழுது, இராணி மங்கம்மாள் தமது செங்கோலை அம்மனின் முன்வைத்து வழிபடுவதனை வழக்கமாகக் கொண்டிருந்தார். சித்திரை முழுமதி நாளில் இராணி மங்கம்மாளும் இளவரசரும் தமுக்கம் அரண்மனையில் தங்கி, மீனாட்சி திருமணத்தைக் கண்டுகளித்தனர். ஆற்றில் இறங்கும் கள்ளழகரின் திருவடிகளை அவர்கள் இருவரும் வணங்கி மகிழ்வர்.

ஒருமுறை பழனி முருகனை வணங்க மங்கம்மாள் மலை ஏறிக்கொண்டிருந்தபோது, முருகனை வழிபட்டுத் திரும்பிய இளைஞன் ஒருவன், தன்னை மறந்த நிலையில் இராணியை மோதிவிடுவதுபோல் அருகில் வந்தான். மங்கம்மாளின் மெய்க்காவலர்கள் அவனைத் தண்டிக்க ஆயத்தம் ஆனார்கள். அவ்வேளையில் இராணி மங்கம்மாள் "இளைஞன் வேண்டுமென்றே தவறு செய்யவில்லை; பக்தி உணர்வில் தன்னை மறந்து கீழே இறங்கி வரும்பொழுது, நான் எதிரே வருவதனைக் கவனிக்கத் தவறிவிட்டான். இறைவனுக்கு முன்னால் ஏற்றத்தாழ்வுகள் இல்லை; அனைவரும் ஒன்றே. அவனை அவன் வழியில் போக விடுங்கள்" என்று பெருந்தன்மையோடு கூறினார்.

மங்கம்மாள் திறமையான ஆட்சியாளர்; எதிர்ப்புகளைத் தன் ஆற்றலாலும் அறிவு நுட்பத்தாலும் முறியடித்து வெற்றி நடைபோட்டவர்; துன்பங்கள் நம்மைச் செம்மைப்படுத்தி வளர்ப்பதற்கும், இன்பங்கள் நமக்கு விழிப்பூட்டுவதற்கும் வருவன என்பதனை உணர்ந்தவர்; தென்னாட்டைத் தன்னந்தனியே ஆண்ட பெண்ணரசி என்னும் புகழைப் பெற்றவர்; நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்டவர். மக்கள் நலம் நாடுவோர் பட்டியலில் மங்கம்மாளின் பெயர் மங்காத புகழோடு விளங்கும் என்பதில் ஐயமில்லை.

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. இராணி மங்கம்மாள் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற போர்கள் குறித்து எழுதுக.
2. இராணி மங்கம்மாள் செய்த அறச்செயல்கள் யாவை ?.

தமிழ்

பெயர்ச்சொல் : மூவிடப் பெயர்கள்

வேற்றுமை உருபேற்கும்போது திரியும் பெயர்கள்

வேற்றுமை உருபுகள் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன. இவற்றைக் குறித்து முன்வகுப்பில் தெளிவாகப் படித்திருப்பீர்கள். அவை தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடப் பெயர்களை ஏற்றுவரும்போது எவ்வாறு திரியும் என்பது குறித்துக் காணலாம்.

தன்மைப் பெயர்கள்

நான், யான் என்பவை தன்மை ஒருமைப் பெயர்கள்.

நாம், யாம் என்பவை தன்மைப் பன்மைப் பெயர்கள்.

1. யான் என்னும் தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது என் எனத் திரியும்.

யான்	ஐ	–	என்னை
	ஆல்	–	என்னால்
	கு	–	எனக்கு
	இன்	–	என்னின்
	அது	–	எனது
	கண்	–	என்கண்

2. யாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது எம் எனத் திரியும்.

   எம்மை, எம்மால், எமக்கு, எம்மின், எமது, எங்கண் என வரும்.

3. நாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் நம் எனக் குறுகும்.

   நம்மை, நம்மால், நமக்கு, நம்மின், நமது, நங்கண் எனக் குறுகி வரும்.

4. யாங்கள், நாங்கள் என்னும் தன்மைப் பன்மைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும்போது எங்கள் எனத் திரியும். எங்களை, எங்களால், எங்களுக்கு, எங்களின், எங்களது எனத் திரிந்து வரும்.

முன்னிலைப் பெயர்கள்

நீ என்பது முன்னிலை ஒருமைப் பெயர். நீர், நீவிர், நீயிர், நீங்கள் ஆகியன முன்னிலைப் பன்மைப் பெயர்கள்.

1. நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது நின் எனவும், உன் எனவும் மாறும்.

நீ	ஐ	–	நின்னை, உன்னை
	ஆல்	–	நின்னால், உன்னால்
	கு	–	நினக்கு, உனக்கு
	இன்	–	நின்னின், உன்னின்
	அது	–	நினது, உனது
	கண்	–	நின்கண், உன்கண்

2. நீர் என்னும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது நும், உம் எனத் திரியும்.

   நும்மை, நும்மால், நுமக்கு, நும்மின், நுமது, நும்கண்;

   உம்மை, உம்மால், உமக்கு, உம்மின், உமது, உம்கண்.

3. நீங்கள் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது நுங்கள், உங்கள் என மாறுபடும்.

   நுங்களை, நுங்களால், நுங்களுக்கு, நுங்களின், நுங்களது;

   உங்களை, உங்களால், உங்களுக்கு, உங்களின், உங்களது.

படர்க்கைப் பெயர்கள்

தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும்போது கீழ்க்காணுமாறு திரியும்.

1. தான் என்னும் படர்க்கை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது தன் என மாறும்.

தான்	ஐ	–	தன்னை
	ஆல்	–	தன்னால்
	கு	–	தனக்கு
	இன்	–	தன்னின்
	அது	–	தனது
	கண்	–	தன்கண்

2. தாம் என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் தம் எனத் திரிந்து வேற்றுமை உருபேற்கும்.

தமிழ்

தம்மை, தம்மால், தமக்கு, தம்மின், தமது, தங்கண்.

3. தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர் தங்கள் எனத் திரியும்.

தங்களை, தங்களால், தங்களுக்கு, தங்களின், தங்களது, தங்கண்.

தான்தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்
நீ நீர் என்எம் நின்னும் ஆம்பிற
குவ்வின் அவ்வரும், நான்கு ஆறு இரட்டல் – நன்னூல், 247

பயிற்சி

நீ என்னும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது அடையும் மாற்றத்தை எழுதுக.

நீ + ஐ	= நின்னை	நீ + ஆல்	= ______
நீ + ______	= ______	நீ + ______	= ______
நீ + ______	= ______	நீ + ______	= ______

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. யான் என்னும் தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது ______ எனத் திரியும்.

அ) உன் ஆ) என் இ) நின்

2. தாம் என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது______ எனத் திரியும்.

அ) எம் ஆ) உம் இ) தம்

3. நீர், நீவிர், நீயிர், நீங்கள் ஆகியன ______பெயர்கள்.

அ) முன்னிலை ஒருமை ஆ) முன்னிலைப் பன்மை இ) தன்மைப் பன்மை

2. பொருத்துக.

1. தன்மை ஒருமை – தாங்கள்
2. தன்மைப் பன்மை – தான்
3. முன்னிலை ஒருமை – யான்
4. படர்க்கை ஒருமை – நாம்
5. படர்க்கைப் பன்மை – நீ

தமிழ்

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நாங்கள் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் 'ஐ' என்னும் வேற்றுமை உருபு ஏற்கும்போது ________ எனத் திரியும்.
2. நான், யான் என்பவை ________ பெயர்கள்.
3. நாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது ________ எனக் குறுகும்.

ஆ) குறுவினாக்கள்

1. வேற்றுமை உருபுகள் யாவை ?
2. மூவிடப் பெயர்கள் யாவை ?
3. தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது எவ்வாறு திரியும் ?
4. நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது எவ்வாறு திரியும் ?
5. தாங்கள் என்னும் படர்க்கைப் பெயருடன் வேற்றுமை உருபுகள் சேரும்போது எவ்வாறு திரியும் ?

புணர்ச்சி

நிலைமொழியின் ஈறும் வருமொழியின் முதலும் சேருவது புணர்ச்சி ஆகும்.

வாழை + மரம் = வாழைமரம்.

வாழைமரம் – இதில் 'வாழை', 'மரம்' என்னும் இருசொற்கள் இணைந்து ஒரு சொல்லாவதனை அறிவீர்கள். வாழை என்னும் சொல் நிலைமொழி. அதன் ஈற்றெழுத்து (ழ் + ஐ = ழை) 'ஐ'. அதனை அடுத்து வரும் (ம் + அ = ம) மரம் என்னும்சொல் வருமொழி. அச்சொல்லின் முதல் ம் என்பது. இதில் இருசொற்களும் இயல்பாகப் புணர்கின்றன. அதனால், இதனை இயல்புப் புணர்ச்சி என்பர்.

வாழை + பழம் = வாழைப்பழம்.

வாழை, பழம் ஆகிய சொற்கள் இரண்டும் இணையும்போது, ப் – என்னும் மெய் தோன்றுகின்றது. இதனை விகாரப் புணர்ச்சி என்பர். இவ்விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும்.

(எ.கா.)	தமிழ் + பாடம்	=	தமிழ்ப் பாடம்	–	தோன்றல் புணர்ச்சி	(ப் –தோன்றுதல்)
	கல் + சிலை	=	கற்சிலை	–	திரிதல் புணர்ச்சி	(ல், ற் – ஆதல்)
	மரம் + வேர்	=	மரவேர்	–	கெடுதல் புணர்ச்சி	(ம் – கெடுதல்)

தமிழ்

அ) குற்றியலுகரப் புணர்ச்சி

கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறும் நெடிலடுத்தும் இரண்டு முதலிய பல எழுத்துகளைச் சார்ந்தும் வரும்போது, தன் மாத்திரையளவில் குறைந்து ஒலிக்கும். இதனைக் குற்றியலுகரம் என்பர். குற்றியலுகரம் பற்றியும் அதன் வகைகள் பற்றியும்முன் வகுப்புகளில் படித்திருக்கிறீர்கள். இங்குக் குற்றியலுகரப் புணர்ச்சி குறித்துக் காண்போம்.

1. நிலைமொழியின் ஈற்றெழுத்துக் குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதலெழுத்து உயிராக இருந்தால், நிலைமொழியிலுள்ள குற்றியலுகரம், தான் ஊர்ந்து வந்த வல்லின மெய்யைவிட்டு நீங்கும்.

(எ.கா.) பந்து + ஆட்டம் = பந்த் + உ + ஆட்டம் – உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் என்னும் விதிப்படி உ நீங்கியது. உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி, பந்த் + ஆட்டம் = பந்தாட்டம் என நிலைமொழி இறுதிமெய், வருமொழியின் முதல் எழுத்தாகிய உயிரோடு இணைந்து புணர்ந்தது.

குறிப்பு : நிலைமொழி ஈற்று முற்றுகரமும், வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருப்பின், குற்றியலுகரப் புணர்ச்சியைப்போலப் புணரும்.

(எ.கா.) உயர்வு (வ் + உ) + அடைந்தார் = உயர்வடைந்தார்

2. நிலைமொழியின் ஈறு குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதல் எழுத்து, ய கரமாக இருந்து புணரும்போது, உகரம் இகரமாகத் திரியும். இதனைக் குற்றியலிகரப் புணர்ச்சி என்பர்.

(எ.கா.) குரங்கு + யாது = குரங் (க் + உ) + யாது
= குரங்க் + இ + யாது
= குரங்கியாது.

> உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
> யவ்வரின் இய்யாம் முற்றுமற்றொ ரோவழி – நன்னூல், 164

(உக்குறள் – குறுகிய உகரம்; இய்யாம் – இகரமாகும்.)

3. டகரம் (ட்), ஊர்ந்துவரும் நெடில்தொடர்க் குற்றியலுகரம், றகரம் (ற்) ஊர்ந்து வரும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் வருமொழியோடு இணையும்போது, அவை ஊர்ந்துவரும் ஒற்று இரட்டித்துப் புணரும்.

(எ.கா.) காடு + கோழி = காட் (ட்+உ) + கோழி = காட்டுக்கோழி
ஆறு + பாலம் = ஆற் (ற்+உ) + பாலம் = ஆற்றுப்பாலம்
கிணறு + தவளை = கிணற் (ற்+உ) + தவளை = கிணற்றுத்தவளை

> நெடிலோ டுயிர்த் தொடர்க்குற் றுகரங்களுள்
> டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே. – நன்னூல், 183

4. வல்லினத்தொடர்க் குற்றியலுகரம் தவிர, ஏனைய குற்றியலுகரங்களின்முன் வரும் வல்லினம், அல்வழிப் புணர்ச்சியில் மிகாது.

(எ.கா.) நாகு + கடிது = நாகு கடிது
எஃகு + சிறிது = எஃகு சிறிது
வரகு + தீது = வரகு தீது
குரங்கு + பெரிது = குரங்கு பெரிது
தெள்கு + சிறிது = தெள்கு சிறிது

வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி – நன்னூல், 181

5. வேற்றுமைப் புணர்ச்சியில், இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் முன்னும், ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர் முன்னும், உயிர்த்தொடர் முன்னும் வரும் வல்லினம் மிகாது.

(எ.கா.) தெள்கு + கால் = தெள்குகால் (தெள்கு – பேன்)
எஃகு + சிறுமை = எஃகுசிறுமை
நாகு + தலை = நாகுதலை

இடைத்தொடர் ஆய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை – நன்னூல், 182

6. மெல்லினத்தொடர்க் குற்றியலுகரங்களுள் சில வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கு இனமான வல்லினத்தொடராய் முடியும்.

(எ.கா.) செம்பு + குடம் = செப்புக்குடம்
சுரும்பு + நாண் = சுருப்புநாண்
கரும்பு + வில் = கருப்புவில்
சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம்

மென்றொடர் மொழியுள் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொட ராகா மன்னே. – நன்னூல், 184.

பயிற்சி : விடுபட்ட இடங்களை நிரப்புக.

1. பொன் + வளையல் = ____________
2. வட்டம் + ________ = வட்டப்பலகை
3. குளம் + கரை = ____________
4. குருத்து + ________ = குருத்தோலை
5. உலகு + உயிர்கள் = ____________
6. இரும்பு + ________ = இருப்பாணி

தமிழ்

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வாழை + மரம் = வாழைமரம் என்பது ______________________

அ) இயல்புப் புணர்ச்சி ஆ) விகாரப் புணர்ச்சி இ) உடம்படுமெய்

2. மரம் + வேர் = மரவேர். இது ______________________

அ) தோன்றல் விகாரம் ஆ) திரிதல் விகாரம் இ) கெடுதல் விகாரம்

3. கன்று + ஆ என்பது ______________________ எனப் புணரும்.

அ) கற்றா ஆ) கன்றா இ) கறா

2. பொருத்துக.

இயல்புப் புணர்ச்சி	–	கற்கோட்டை
தோன்றல் விகாரம்	–	மரவேல்
கெடுதல் விகாரம்	–	வாழைப்பழம்
திரிதல் விகாரம்	–	பொன்வளையல்

ஆ) குறுவினாக்கள்

1. புணர்ச்சி என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?
2. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?
3. உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும் – சான்றுதந்து விளக்குக.
4. டகர, றகரக் குற்றியலுகரப் புணர்ச்சிக்குச் சான்று தருக.
5. குற்றியலுகரப் புணர்ச்சியில் வல்லினம் மிகா இடங்கள் இரண்டனுக்குச் சான்று தருக.
6. மென்தொடர்க் குற்றியலுகரம் வன்தொடராய் முடிவதற்குச் சான்று காட்டுக.

வகுப்பறைத்திறன்கள்

புரிதல் திறன்

1. பின்வரும் பத்தியிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

ஒருவேலை இன்று மாளை மலை பெய்யலாம். அப்படியானால், நான் கேட்டதய் நீ வாங்கி வற முடியாது. எனவே, அறுச்சுவை விருந்து இன்ரு நடைபெறுமா, நடைபெறாதா என உருதியாகச் சொல்ல முடியாது.

2. பின்வரும் சொற்றொடர்களை வரிசைப்படுத்திக் கதையாக எழுதுக.

1. வழியில் முயல் ஒன்று தூங்குவதனைப் பார்த்தது.
2. உடனே பெரிய மானை முதலில் பிடிக்க நினைத்தது.
3. முயல் அங்குஇல்லை.
4. எனவே உணவு தேடி அலைந்தது.
5. சிங்கம் ஏமாற்றமடைந்தது.
6. திரும்ப வந்து முயலைப் பார்த்தது.
7. சிங்கம் ஒன்று காட்டில் வாழ்ந்து வந்தது.
8. அதனைத் தின்ன நினைத்தது.
9. ஒருநாள் அதற்கு மிகவும் பசித்தது.
10. அதன் பின்னால் ஓடியது.
11. அப்பொழுது ஒருமான் ஓடுவதனைக் கண்டது.
12. மானைப்பிடிக்க முடியவில்லை.

இக்கதையிலிருந்து நீயறிவது என்ன ?

இக்கதை எந்தப் பழமொழியை நினைவூட்டுகிறது ?

மொழித்திறன் பயிற்சி

செயல்திட்டம்

அ) சொற்களை வகைப்படுத்துதல்

பெயர், வினை, இடை, உரிச்சொற்களைக் கண்டறிந்து வகைப்படுத்தல் வேண்டும்.

மார்கழி, நடந்தான், உம், சால, பாடினான், மயிலம், உறு, என்று, கடி, கொல், அம்ம

பெயர்ச்சொற்கள்	–	மார்கழி, மயிலம்
வினைச்சொற்கள்	–	நடந்தான், பாடினான்
இடைச்சொற்கள்	–	உம், என்று, கொல், அம்ம
உரிச்சொற்கள்	–	சால, உறு, கடி

பயிற்சி : வகைப்படுத்துக.

தாமரை, கால், தவ, எழுதினான், ஆனால், வென்றான், மற்று, சால, பாரி, நடந்தான், எனவே, நனி.

பெயர்ச்சொல்	வினைச்சொல்	இடைச்சொல்	உரிச்சொல்
___________	___________	___________	___________
___________	___________	___________	___________
___________	___________	___________	___________

ஆ) ஒரு பொருள் குறித்த பல சொற்கள்

ஒரு பொருளுக்குப் பல்வேறு சொற்கள் காணப்பெறுதல் மொழியின் வளத்தைக் காட்டும். சொற்கள் பயன்படுத்தும் இடத்திற்கேற்பப் பொருள் தரும். ஒரு பொருள் குறித்த பல சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை சொற்பொருளின் விரிவை மேலும் எடுத்துக் காட்டும். நாம் பயன்படுத்துகையில் மொழிவளம் பெருகும். அவற்றுள் சில:

(எ.கா.) அழகு – பொலிவு, எழில், வனப்பு

இரக்கம் – அருள், பரிவு, கருணை

கிளி – தத்தை, சுகம், கிள்ளை

மலை – வெற்பு, சிலம்பு, பொருப்பு

கதிரவன் – ஆதவன், பகலவன், ஞாயிறு

கீழ்க்காணும் ஒருபொருள் குறித்த பலசொற்களை எழுதுக.

வயல் – ___________, ___________, ___________.

கடல் – ___________, ___________, ___________.

நெருப்பு – ___________, ___________, ___________.

இ) தமிழெண்களுக்கு ஏற்ற அரபு எண்களைப் பொருத்துக.

சO – 89

கக – 37

ፑஎ – 40

அகூ – 25

உரு – 11

ஈ) கட்டுரைப் பயிற்சி

விண்வெளியில் இந்தியச் சாதனைகள்

தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

குசேலபுரி சமஸ்தானத்துக்கு உழவுதான் பிரதானத்தொழில். குபேரபூபதி பட்டத்திற்கு வந்ததும் சமஸ்தானத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும் என எண்ணினார். முக்கியஸ்தர்களுடன் ஆலோசித்து, விஞ்ஞான வசதிகளைப் பயன்படுத்தித் தொழிற்புரட்சி செய்தார். சினிமா தியேட்டர்கள், ஓட்டல்கள், டிபார்ட்மெண்டல் ஸ்டோர்கள் பெருகின. பிளசர் கார்கள், பஸ்கள் ரயில்கள், ஏரோப்பிளேன்கள் எங்கும் நிரம்பின. இதற்கெல்லாம் தேவையான பணத்தைத் தன் கஜானாவிலிருந்து வாரிவாரிக் கொடுத்தார். ஆனால், விவசாயத்தொழிலை அடியோடு மறந்துபோனார். அதன் விளைவு, நாட்டில் உணவுப்பஞ்சம் தலைவிரித்தாடியது. விவசாய இலாகாவைப் பெருக்கவேண்டும், உத்தியோகஸ்தர்களை அப்பாயிண்ட் செய்யுங்கள் என ஆலோசனை கூறினார் ஒருவர்.

தமிழ்ச்சொல் அறிவோம்

சமஸ்தானம்	– அரசு	பிரதானம்	– முதன்மை
முக்கியஸ்தர்	– முதன்மையானவர்	விஞ்ஞானம்	– அறிவியல்
சினிமா தியேட்டர்	– திரையரங்கம்	பஸ்	– பேருந்து
பிளசர் கார்	– மகிழுந்து	ரயில்	– தொடர்வண்டி
ஏரோப்பிளேன்	– வானூர்தி	கஜானா	– கருவூலம்
இலாகா	– துறை	உத்தியோகஸ்தர்	– அலுவலர்
அப்பாயிண்ட்	– பணிஅமர்த்தல்	டிபார்ட்மெண்டல் ஸ்டோர்	– பலபொருள் அங்காடி

வாழ்க்கைத்திறன்

ஒருவரோடு ஒருவர் பழகுந்திறன்

பள்ளியில் ஆண்டுவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடும்பொருட்டு, மாணவர்களுக்குப் போட்டிகள் அறிவிக்கப்பட்டன. விழாவைச் சிறப்பாக நடத்த பொறுப்பான மாணவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களுள் பாரதியும் வளவனும் ஒரே வகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பாரதி, அதே பள்ளியில் படித்து வருபவன்; வளவனோ, நடுநிலைப் பள்ளியிலிருந்து இப்பள்ளியில் சேர்ந்தவன். அதனால், வளவனுக்கு ஆண்டுவிழாவைப்பற்றி அவ்வளவாகத் தெரியவில்லை. கடந்த ஆண்டு நடைபெற்ற ஆண்டுவிழாவில் பாரதி சிறப்பாகச் செயல்பட்டிருந்தான். அதனால், விழா நிகழ்வுகள்பற்றிப் பாரதி, வளவனுக்கு எடுத்துரைத்தான்.

இருவரும் ஆண்டுவிழாவுக்குத் தேவையானவை குறித்துக் கலந்துரையாடித் திட்டமிட்டனர். அந்தக் கலந்துரையாடலில் வளவனின் எண்ணங்களுக்கும் மதிப்பளித்துப் பாரதி ஏற்றுக்கொண்டான். இருவரும் நண்பர்களுடன் செயல்பட்டு ஆண்டுவிழாவைச் சிறப்பாக நடத்தினர்.

உங்கள் பள்ளியில் புதிதாகச் சேர்ந்த மாணவர்களுடன் நீங்கள் எவ்வாறு பழகுகிறீர்கள் ?

உங்கள் வகுப்பில் எல்லா மாணவர்களுடனும் நன்கு பழகுவது யார் ? அந்த மாணவனின் பெயரை எழுதுக.

மதிப்புக்கல்வி

உழைப்பின் அருமை

இரஷ்ய நாட்டில் புகழ்பெற்ற எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவ்வப்போது உழவுத்தொழிலையும் செய்து வந்தார். ஒருமுறை தொடர்வண்டி நிலையத்தில் அவர் நின்றிருந்தபோது, அங்கிருந்த பெண்மணிஒருவர்அவரைக் கையைத்தட்டி அழைத்தார். அவரின் தோற்றம் ஒரு கூலிக்காரர்போல் இருந்ததோ என்னவோ ?

“ஐயா, தொடர்வண்டி புறப்படும் நேரமாகிவிட்டது. என் கணவர் அருகிலுள்ள சிற்றுண்டி விடுதியில் உள்ளார். அவரை, இங்கு அழைத்து வாருங்கள். நீங்கள் செய்கின்ற இந்த உதவிக்குக் கூலி பெற்றுக் கொள்ளுங்கள்” எனக் கூறிய அப்பெண்மணி, அவருடைய கணவரின் தோற்ற அடையாளங்களைக் குறிப்பிட்டார்.

அவரும் ஒப்புக்கொண்டு அப்பெண்மணியின் கணவரை உடனடியாக அழைத்து வந்தார். அவர் செய்த வேலைக்கான கூலியாகச் சிறுதொகையைப் பெற்றுக்கொண்டார்.

சிறிதுநேரங்கழித்த பின்னர்தான் அப்பெண்மணிக்கு, அவர்தாம் இரஷ்ய நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் என்பது தெரிந்தது.

தான்செய்த தவற்றை உணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டார் அப்பெண்மணி. ஆனால் டால்ஸ்டாயோ, “அதனால் என்ன, நீங்கள் சொன்ன வேலையை நான் கூலிக்குத்தான் செய்தேன். அதனால், செய்த வேலைக்காகப் பெற்றுக்கொண்ட கூலியைத் திருப்பித் தரமாட்டேன்” என்றார். புகழ் பெற்றவராயினும் உழைப்பின் அருமையை அவர் அறிந்திருந்தார்.

உழைத்து உண்ணும் உணவே சுவைக்கும். உழைக்காமல் உண்பது பிறர் உழைப்பைச் சுரண்டுவதற்கு ஒப்பாகும். எந்த வயதினராக (இயலாதோர் தவிர) இருப்பினும், உழைத்தே உண்ணுதல் வேண்டும். அப்பொழுதுதான் அந்த வீடும் நாடும் முன்னேறும்.

தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினிய தில். – குறள்: 1065

தமிழ்

மொழியாக்கம் செய்க.

It is bad to talk ill of someone behind his back. Don't think you will not be found. Usually such remarks find their way to the person with your name attached. Experienced people know this and never indulge in back-biting. You should understand your limitations when you argue with someone about a point.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. One flower makes no garland.

   தனிமரம் தோப்பாகாது.

2. Little wealth little care.

   மடியில் கனமில்லையென்றால் வழியில் பயமில்லை.

3. Look before you leap.

   ஆழம் அறியாமல் காலை விடாதே.

4. Something is better than nothing.

   ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சருக்கரை.

5. Though he endeavours all he can.

   புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டாற்போல்.

வளரறி செயல்பாடுகள்

கேட்டல் திறன்	செயல்பாடு – 1

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

உரிமை என்பது பிறர் கொடுப்பதுமன்று; மற்றொருவர் வாங்குவதுமன்று. அஃது எவரிடத்தும் எல்லாவிடத்தும் இயல்பாய் அமைந்து கிடப்பது. உரிமையாவது, உயிர்கட்குக் கடவுளால் அளிக்கப்பட்ட ஒரு பெரும் இயற்கைக்கொடை. உரிமை எல்லார்க்கும் பொதுவானது. வானத்தில் மேகம் தவழ்வது போலவும், கடலில் அலை எழுவது போலவும், பறவை அழகிய சிறகை வீசிப் பறப்பது போலவும் பெண் தனது உள்ளத்தெழும் விருப்பவழி நடக்கும் உரிமையுடையவளாதல் வேண்டும். அவ்வுரிமையைச் சிறைப்படுத்துதல் பெரும்பாவம். பெண், அடிமை வாழ்வு நடத்த நேரிடின் அவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளையும் அடிமையுணர்வுடன் பிறக்கும். பெண்ணுரிமை என்பது ஆணுடன் போர் புரிவதன்று. ஆணுடன் வாழ்ந்து அன்பை வளர்ப்பது பெண்ணின் உரிமைக்கடன்.

திரு.வி.க., பெண்ணுரிமை

வினாக்கள்

1. உரிமை என்பது எத்தன்மைத்து?
2. பெண்ணுரிமையை விளக்க ஆசிரியர் கையாளும் உவமைகள் யாவை?
3. பெரும்பாவம் என ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகிறார்?
4. பெண்ணுக்குரிய கடமை யாது?
5. உரைப்பத்திக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக.

பேசுதல் திறன்	செயல்பாடு – 2

கீழ்க்காணும் திருப்பூர்க் குமரன், தில்லையாடி வள்ளியம்மையுடன் நடத்தும் கற்பனை உரையாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் பேசுக.

திருப்பூர்க் குமரன் : வணக்கம், அம்மையே! தங்களைச் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

தில்லையாடி வள்ளியம்மை : வணக்கம், குமரா! தேசியக்கொடி காத்த பெருமைக்குரியவர் நீரன்றோ! உம்மைச் சந்திப்பதில் எனக்கும் மகிழ்ச்சிதான்.

திருப்பூர்க் குமரன் : இந்தியாவில் பிறந்து வாழ்ந்த தங்கள் பெற்றோர் தென் ஆப்பிரிக்காவில் குடியேறினது ஏன் என அறிந்து கொள்ளலாமா?

தில்லையாடி வள்ளியம்மை : நெசவுத் தொழில் செய்து வந்த என் தந்தைக்குப் போதுமான வருவாய் கிடைக்காததனால், தென் ஆப்பிரிக்காவுக்குக் குடி பெயர்ந்ததாக என் தாய் கூறியிருக்கிறார்.

தமிழ்

திருப்பூர்க் குமரன் : தென் ஆப்பிரிக்காவில் பிறந்த நீங்கள், காந்தியடிகளை எவ்வாறு சந்தித்தீர்கள் ?

தில்லையாடி வள்ளியம்மை : வழக்குரைஞராகக் காந்தியடிகள் அங்குப் பணியாற்றி வந்தார். அப்போது, அந்நாட்டு உச்ச நீதிமன்றம் திருமணம் குறித்த ஒரு தீர்ப்பினை இந்தியர்களுக்கு எதிராக வெளியிட்டது. அங்குக் குடியேறியிருந்த இந்தியர்கள், தங்களின் உரிமையைக்காக்க அறப்போராட்டத்தில் ஈடுபட்டார்கள்அந்தப்போராட்டத்துக்குக் காந்தியடிகள் தலைமையேற்று நடத்தினார். அவர் நிகழ்த்திய வீரம் செறிந்த உரை, என் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது. பெண்கள் திரண்டு, பேரணியாகக் களமிறங்க என் தாயுடன் நானும் கலந்து கொண்டேன்.

திருப்பூர்க் குமரன் : அம்மையே, மிகவும் சிறு வயதிலேயே தாங்கள் போராட்டத்தில் கலந்து கொண்டு, செயற்கரிய வரலாறு படைத்து வீட்டீர்களே!

தில்லையாடி வள்ளியம்மை : ஆம். போராட்டத்தில் ஈடுபடும்போது எனக்குப் பதினைந்து வயதுதான்.

திருப்பூர்க் குமரன் : அம்மையே, உங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகள் எங்களைப் போன்ற இளைஞர்களுக்குச் சிறந்த வழிகாட்டுதலாக அமைந்தது எனில் அது மிகையன்று. தங்களைச் சந்தித்தது நான் பெற்ற பெரும்பேறு என உவந்து விடைபெறுகின்றேன். நன்றி அம்மா.

தில்லையாடி வள்ளியம்மை : தேசியக்கொடிக்காக உங்களுடைய இன்னுயிரை இழந்தீர்களே! அந்தச்செயல் அனைவரும் போற்றுதற்கு உரியதன்றோ! மிகுந்த மகிழ்ச்சி, சென்று வாருங்கள்.

படித்தல் திறன்	செயல்பாடு – 3

கீழ்க்காணும் பாடலை வாய்விட்டுப் படிக்க.

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம்
ஒவ்வொன்றும் உன்முன் னேற்றம்!
கண்டறிவாய்! எழுந்திரு நீ! இளந்தமிழா,
கண்விழிப்பாய்! இறந்தொ ழிந்த
பண்டைநலம் புதுப்புலமை பழம்பெருமை
அனைத்தையும்நீ படைப்பாய்! இந்நாள்
தொண்டுசெய்வாய்! தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் துடித்தெ ழுந்தே!

தமிழ்

உயர்தமிழ்த்தாய் இந்நிலத்தில் அடைகின்ற
வெற்றியெலாம் உன்றன் வெற்றி!
அயராதே! எழுந்திருநீ! இளந்தமிழா,
அறஞ்செய்வாய்! நாமடைந்த
துயரத்தைப் பழிதன்னை வாழ்வினிலோர்
தாழ்மையினைத் துடைப்பாய் இந்நாள்
செயல்செய்வாய் தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் சீறி வந்தே,

உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு வருந்தீமை
உனக்குவரும் தீமை அன்றோ!
பிணிநீக்க எழுந்திருநீ இளந்தமிழா,
வரிப்புலியே பிற்றை நாளுக்
கணிசெய்யும் இலக்கியம் செய்! அறத்தைச்செய்!
விடுதலைகொள் அழகு நாட்டில்!
பணிசெய்வாய்! தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் பழநாட் டானே,

எதுசெய்ய நாட்டுக்கே எனத்துடித்த
சிங்கமே! இன்றே, இன்னே
புதுநாளை உண்டாக்கித் தமிழ்காப்பாய்
புத்துணர்வைக் கொணர்வாய் இங்கே
அதிர்ந்தெழுக! தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் அழகு காப்பாய்
இதுதான்நீ செயத்தக்க எப்பணிக்கும்
முதற்பணியாம் எழுக நன்றே!

பாரதிதாசன், தமிழியக்கம்

சொல்வதனை எழுதுதல்	செயல்பாடு – 4

மொழி என்பது, கருத்தைப் பிறர்க்கு உணர்ச்சியோடு விளக்கக்கூடிய ஆற்றல் உடையதாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் மொழி அழகு பெறுகின்றது.

பழந்தமிழ் இலக்கண நூலாகிய 'தொல்காப்பியத்தில்' இந்நிலை 'சுவை' எனப்படும்; இசைத் தமிழில் 'குரல்' எனப்படும்; நாடகத்தமிழில் 'விறல்' எனப்படும்.

இவ்வுணர்ச்சியோடு கூடிய கருத்தைச் சொல் வாயிலாக வெளியில் இயக்குவது இயற்றமிழ்; இசை வாயிலாக விளக்குவது இசைத்தமிழ்; நடிப்பு வாயிலாக விளக்குவது நாடகத்தமிழ்.

தமிழுக்கு மூன்று தன்மைகளும் பொருந்தியிருப்பதனாலேயே அதன் நுட்பம் அறிந்த தமிழர் 'முத்தமிழ்' என அழைக்கலாயினர்.

நாளிதழ் விளம்பரங்களைப் புரிந்துகொள்ளுதல்	செயல்பாடு – 5

கீழ்க்காணும் விளம்பரத்தைப் புரிந்துகொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.

வினாக்கள்

1. மேற்கண்ட விளம்பரம் எதனைப் பற்றியது ?
2. யாருடைய கவிதைத் தொகுப்பு நூல் வெளியிடப்படுகிறது ?
3. விழா எங்கு நடைபெறுகின்றது ?
4. கவிதை நூலை வெளியிடுபவர் யார் ?
5. உனக்கு யாருடைய கவிதைத் தொகுப்பு நூல் பிடிக்கும் ?

அகர வரிசைப்படுத்துதல்	செயல்பாடு – 6

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்தில் அமைந்த சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுக.

ஆடற்கலை என்பது முத்தமிழில் நாடகக்கலையில் அடங்கும். நடனம், நாட்டியம் என்பதும் ஆடற்கலையைக் குறிப்பனவே. இக்கலை பழங்காலத்தில் 'கூத்துக்கலை' எனப்பட்டது. கட்புலனாம் இன்பத்தைத் தரவல்லது ஆடற்கலை. உடற்சோர்வையும், உள்ளத்துயரையும் போக்கும் வடிகால்கள் ஆடல்பாடல்கள். மக்கள் மனம் நிறைவுற்றபோதெல்லாம் ஆடிக் களித்தனர். ஆடல் நிகழ்வதற்கு அரங்குகள் இருந்தன. மரநிழல்களிலும், கோவில் முற்றத்திலும் ஆடினர். மாடம், மாளிகை, மண்டபங்களில் எல்லாம் மகளிர் சிலம்பார்ப்ப ஆடினர். கைவழிக் கண்களும், கண்வழி மனமும் செல்ல ஆடுதலே ஆடலின் நுட்பமாகும். ஆடற்கலையில் வல்லவராகக் கூத்தரும், விறலியரும் திகழ்ந்தனர்.

வரைபடத்தைப் புரிந்துகொள்ளும் திறன்	செயல்பாடு – 7

நீங்கள் அண்ணாசாலை பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள். ஊருக்குப் புதிதாக வந்த ஒருவர், எழில் மருத்துவமனைக்குச் செல்ல உங்களை வழி கேட்கிறார். கீழ்க்காணும் வரைபடத்தைக்கொண்டு, நீங்கள் புதியவருக்கு வழிகாட்டுவதனை ஐந்து வரிக்குமிகாமல் தொடராக எழுதுக.



சொல்விளையாட்டு	செயல்பாடு – 8

கீழ்க்காணும் கட்டங்களில் மறைந்துள்ள வரலாறு படைத்த பெண்மணிகளின் பெயர்களைக் கண்டுபிடிக்க.

வே	லு	நா	ச்	சி	யா	ர்	டி	ச	டீ	ப	டி
இ	சொ	தி	ட்	ள	மூ	த்	து	ரோ	ன்	ணு	மி
ரா	ந	சா	னி	யா	மி	ர்	சா	ஜி	இ	கூ	சு
ணி	ரா	சி	ன்	ஜா	த	ம	தி	னி	ந்	லு	ட்
ம	ன	ரி	பி	டி	உ	ஷா	சா	தே	தி	க	ல
ங்	ள்	லு	டு	கொ	ளி	லு	ரே	வி	ரா	ஸ்	பு
க	ல்	ப	னா	சா	வ்	லா	தெ	ண	கா	து	ப்
ம்	ற்	யு	ங	ய்	ம	ஆ	னை	ஷ்	ந்	ரி	சு
மா	றோ	லீ	ட்	னா	ஏ	ஈ	ன்	ளு	தி	பா	எஸ்
ள்	மா	ம்	அ	லை	ச	ஞ்	அ	மு	ரு	கா	எம்
மு	த்	து	ல	ட்	சு	மி	ம்	னு	ஐ	ந்	ட
மை	ம்	ய	ளி	ள்	வ	டி	யா	லை	ல்	தி	இ

செயல்திட்டம்	செயல்பாடு – 9

கீழ்க்காணும் பெண் விடுதலைப் போராட்ட வீராங்கனைகளின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளைத் திரட்டித் தொகுப்பேடு உருவாக்குக.

ஜான்சிராணி	அஞ்சலையம்மாள்	அம்புஜத்தம்மாள்
வேலுநாச்சியார்	கஸ்தூரிபா காந்தி	வை. மு. கோதைநாயகி

தமிழ்

தமிழ்

தொகைச்சொற்களை விரித்தெழுதுதல்	செயல்பாடு – 10

கீழ்க்காணும் தொடரில் வண்ண எழுத்தில் அமைந்துள்ள தொகைச்சொற்களை விரித்தெழுதுக.

நானிலம் போற்றும் முத்தமிழே! நால்வர் பாடிய நற்றமிழே! மூவேந்தர் ஆண்ட திருநாட்டில் முச்சங்கம்அமைத்து வளர்த்தனரே! எட்டுத்தொகையும் எழுந்ததுவே! எண்டிசையும் புகழ் பரவியதே! ஐம்பெருங்காப்பியம்படைத்தளித்தே ஐந்திணை மக்களும் மகிழ்ந்தனரே!	

படைப்பாற்றல்	செயல்பாடு – 11

கீழ்க்காணும் படத்தைப் பார்த்து, எட்டடிப் பாடலொன்றனை எழுதுக.

கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

காலம் : 15 மணித்துளி | உயர் மதிப்பெண் : 10

1. கீழ்க்காணும் அட்டவணையை நிரப்புக. 5× 1 = 5

வ.எண்	சொல்	புணர்ச்சியின் வகை
1.	இணையம் + தளம் = இணையத்தளம்	கெடுதல் புணர்ச்சி
2.	திரு + குறள் = திருக்குறள்	
3.	கடல் + கரை = கடற்கரை	
4.	நாடு + பண் = நாட்டுப்பண்	
5.	ஆறு + மணல் = ஆற்றுமணல்	
6.	செம்பு + பட்டயம் = செப்புப்பட்டயம்	

2. கோடிட்ட இடத்தை நிரப்புக. 5× 1 = 5

1. வேற்றுமை ____________ வகைப்படும்.
2. ஏழாம் வேற்றுமைக்குரிய உருபு ____________ .
3. முன்னிலை ஒருமைப் பெயர் ____________ ஆகும்.
4. நாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் ____________ எனக் குறுகும்.
5. தாம் என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் ____________ எனத் திரிந்து வேற்றுமையுருபு ஏற்கும்.

தமிழ்

இரட்சணிய யாத்திரிகம்

– எச்.ஏ. கிருட்டினனார்

இரட்சணிய சரிதப் படலம்

சிலுவைப் பாடு

முன்கதைச் சுருக்கம்

இறை மகனாகிய இயேசுபெருமான் பெத்தலகேமில் மரியன்னைக்கு மகனாகப் பிறந்தார். குழந்தை இயேசுவை, ஏரோது மன்னனின் கொடுமையிலிருந்து காப்பாற்றும் பொருட்டுத், தந்தையாகிய சோசப்பும் தாய் மரியன்னையும் குழந்தையோடு எகிப்துக்குச் சென்றனர்.

ஏரோதுவின் இறப்புக்குப் பின்னர், அவர்கள் இசுரேலுக்குப் பக்கத்திலுள்ள நாசரேத்திற்கு வந்தனர். இயேசு, யூதேய காட்டிலிருந்த புனித யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். அவர் பல்வேறு புதுமைகளைப் புரிந்தார்; மக்களுக்கு ஞானத்தை ஊட்டினார். அவர் பன்னிரு சீடர்களைக் கொண்டிருந்தார். பன்னிரு சீடர்களுக்கும் அறிவுரையும் பத்துக் கட்டளையும் வழங்கினார்.

இயேசுவின் புகழ் மேன்மேலும் பரவியது. பொறாமை கொண்டவர்களின் சூழ்ச்சியில் சிக்கிய யூதாசு என்னும் சீடர் இயேசுவைக் காட்டிக் கொடுத்தார். இயேசு, யூதேய மரபுகளை மீறினார் எனப் பொய்க் குற்றஞ் சாட்டி, பிலாத்து மன்னன் மரணதண்டனை விதித்தான். கொலையாளிகள் இயேசுவின் தோள்களில் சிலுவையினைச் சுமத்தித் துன்புறுத்திக் கல்வாரிமலைக்குக் கொண்டு சேர்த்தனர்.

யூதர்கள் இயேசுநாதரைச் சிலுவையில் அறைதல்

1. ஈண்டினியான் புகல்வதென்ன ? எம்பெருமான் திருமேனி
தீண்டினார்; சிலுவையொடு சேர்த்தினர்; செங்கையிலும்
காண்டகுசே வடியிலும்வெவ் விருப்பாணி கடாவினர்;
நீண்டசிலு வையையெடுத்து நிறுத்தினார் நிலங்கீண்டு.

பொருள்: யூதர்கள், இயேசுநாதரின் இருகைகளிலும் கால்களிலும் கூர்மையான இரும்பாணிகளை வைத்துச் சிலுவையோடு சேர்த்து அறைந்தார்கள்; பின்னர், அச்சிலுவையை நிலத்தைத் தோண்டி நிறுத்தினார்கள்.

சொற்பொருள்: ஈண்டு – இவ்விடம்; புகல்வது – சொல்வது; காண்டகு – காணத்தக்க;

இருப்பாணி – இரும்பு ஆணி; கடாவினார் – அடித்தார்; கீண்டு – தோண்டி.

இலக்கணக்குறிப்பு: செங்கை, சேவடி, வெவ்விருப்பு – பண்புத்தொகைகள்; இருப்பாணி – வலித்தல் விகாரம்.

பகுபத உறுப்பிலக்கணம் : தீண்டினார் – தீண்டு + இன் + ஆர்; தீண்டு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி. கடாவினார் – கடாவு + இன் + ஆர்; கடாவு – பகுதி, இன்– இறந்தகால இடைநிலை, ஆர்– பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல்: ஈண்டினியான் – ஈண்டு + இனி + யான்; காண்டகு – காண் + தகு; சேவடி – செம்மை + அடி; வெவ்விருப்பாணி – வெம்மை + இரும்பு + ஆணி.

குற்றவாளிகளின் நடுவே இயேசுநாதர்

2. மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்தும் இடப்புறத்தும்
செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள் செயலொழியச்
சொற்றமறைத் திருவசனம் துலக்கமுறச் சுருதிமுதல்
குற்றவா ளிகளோடு நடுநின்றார் குருசுமிசை.

பொருள்: யூதர்கள் சினத்தோடு இரு திருடர்களைச் சிலுவையில் ஏற்றியிருந்தார்கள்; அக்குற்றவாளிகளின் நடுவே மறை முதல்வராகிய இயேசுவை நிறுத்தினார்கள்.

சொற்பொருள்: செற்றம் – சினம்; குருசு – சிலுவை; சொற்ற – சொன்ன; துளக்கம் – விளக்கம்; சுருதிமுதல் – மறை முதல்வராகிய இயேசுநாதர்.

பிரித்தறிதல்: மற்றிரண்டு – மற்று + இரண்டு; குருசேற்றி – குருசு + ஏற்றி.

இன்னா செய்தார்க்கு இனியவே செய்தல்

3. தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்!
இன்னதென அறிகில்லார் தாம்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்வள்ளல். *

பொருள்: இயேசுவின் திருவுடலைச் சிலுவையில் அறைந்ததும், அவர் உடல் சொல்லுதற்கரிய பெருந்துன்புற்றது, மனமோ பதைபதைத்தது; இருப்பினும் இயேசு, “என் தந்தையே! இவர்கள், தாங்கள் செய்வது இன்னதென அறியாமல் செய்கிறார்கள்; இவர்தம் பிழையை மன்னித்தருள்வீராக!” என்று வேண்டினார்.

சொற்பொருள்: சதைப்புண்டு – சிதைக்கப்பட்டு; பன்னரிய – சொல்லுதற்கரிய; பலபாடு – பல துன்பம்.

இலக்கணக்குறிப்பு: கனிவாய் – உவமைத்தொகை.

பிரித்தறிதல்: தன்னரிய – தன் + அரிய; தவிப்பெய்தி – தவிப்பு + எய்தி.

உண்மைக் கிறித்தவர்

4. இத்தகைய இரும்பொறையும் மனநலமும் இயைந்தவரே
வித்தகனுக் கடித்தொழும்பர் எனத்தகுமெய்க் கிறிஸ்தவர்மற்
றித்தகைய குணமிலரும் கிறிஸ்தவரென் றிசைபெறுதல்
செத்தவரைத் துஞ்சினவர் எனவுரைக்கும் சீர்மைத்தால்.

பொருள்: தமக்குத் துன்பம் செய்தவரையும் பொறுத்தருளும் பெருங்குணம் உடையவரே ஆண்டவனின் அடியாராவர். அத்தகையோரே உண்மைக் கிறித்தவராவர். இக்குணம் இல்லாதோர் உண்மைக் கிறித்தவர் ஆகார்.

சொற்பொருள்: இரும்பொறை – பெரும்பொறுமை; வித்தகன் – ஆண்டவன்; தொழும்பர் – அடியார்; இசைபெறுதல் – புகழ்பெறுதல்; துஞ்சினவர் – உறங்கியவர்.

பிரித்தறிதல்: இத்தகைய – இ + தகைய; மனநலம் – மனம் + நலம்.

உலக இரட்சகர் இயேசுநாதர்

5. கீண்டிருப்பு முளையுடலைக் கிழித்துருவி வதைப்புண்டு
மாண்டுபடும் போதிவர்க்கு மன்னியுமென் றுரைத்தமொழி
ஈண்டிவரே உலகினுக்கோர் இரட்சகரென் றெடுத்துரைக்கும்;
வேண்டுமோ இனிச்சான்றும் இதைவிடுத்து வேறொன்றே?

பொருள்: இரும்பு ஆணிகளால் உடலைக் கிழித்துச் சிதைத்தபோதும், இச்செயலைச் செய்தோரை மன்னித்தருளும் ஆண்டவரே என வேண்டிய இயேசுவே உலகைக் காக்க வந்த பெருமானாவார். பகைவர்க்கும் அருளிய இவ்வுயிரிரக்கப் பண்பு ஒன்றே இவர் இவ்வுலகைக் காக்க வந்தவர் என்பதற்குப் போதுமான சான்றாகும்.

சொற்பொருள்: கீண்டு –பிளந்து; இருப்புமுளை – ஆணியின் நுனி; வதைப்புண்டு – துன்பமடைந்து; மாண்டுபடும்போது – இறக்கும்நிலையில்; இரட்சகர் – காப்பவர்.

பிரித்தறிதல்: இருப்புமுளை – இரும்பு + முளை; ஈண்டிவரே – ஈண்டு + இவரே; எடுத்துரைக்கும் – எடுத்து + உரைக்கும்.

யூதர்கள் இழிசொற்களைச் சிலுவையில் எழுதுதல்

6. மன்றாடும் அருட்சீவ வசனத்தை வன்மறவோர்
ஒன்றாகப் பொருள்செய்யார் உடைகளைந்து பங்கிட்டார்;
குன்றாத நசரேயன் யூதருக்குக் குலவேந்தன்
என்றாக டியமான எழுத்திட்டார் சிலுவைமிசை.

பொருள்: யூதர்கள் இயேசுவின் அருள்மொழிகளைப் பொருட்படுத்தாமல், “குன்றாத நசரேயன் யூதருக்குக் குலவேந்தன்” என்னும் ஏளன மொழிகளைச் சிலுவையில் எழுதினார்கள்; அதன் பின்னர், அவர்தம் உடைகளைக் களைந்து பங்கிட்டுக்கொண்டார்கள்.

சொற்பொருள்: மன்றாடும் – மிக வேண்டுதல்; ஆகடியம் – ஏளனம்.

இலக்கணக்குறிப்பு: வன்மறவோர் – பண்புத்தொகை.

பிரித்தறிதல்: பங்கிட்டார் – பங்கு + இட்டார்; எழுத்திட்டார் – எழுத்து + இட்டார்; என்றாகடியமான – என்று + ஆகடியம் + ஆன.

ஆசிரியர் குறிப்பு

இரட்சணிய யாத்திரிக நூலாசிரியர் எச்.ஏ. கிருட்டினனார், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கரையிருப்பு என்னும் ஊரில், 1827ஆம் ஆண்டு ஏப்பிரல் இருபத்து மூன்றாம் நாள் பிறந்தார். இவருடைய தந்தை சங்கரநாராயணர் பெரும்புலவராக விளங்கினார். அன்னையார் பெயர் தெய்வநாயகி அம்மாள். இவர்கள் ரெட்டியாபட்டியில் வாழ்ந்தவர்கள். கிருட்டினனார் தந்தையிடம் தமிழிலக்கியங்களையும் மாணிக்கவாசகத்தேவரிடம் இலக்கணங்களையும், பிலவணச் சோதிடரிடம் வடமொழியையும் கற்றார். சாயர்புரம் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணியக்குறள் என்னும் நூல்களையும் இயற்றினார். கிறித்தவக் கம்பர் எனப் புகழப்பெற்ற பெருங்கவிஞர் 1900ஆம் ஆண்டு பிப்ரவரி மூன்றாம் நாள் இயற்கை எய்தினார்.

நூற்குறிப்பு

இரட்சணியயாத்திரிகம் என்பதன் பொருள் (உயிர், தன்னைக் காக்க வேண்டி) இறைவனை நோக்கிச் செல்லும் பயணம் என்பது. ஆன்ம ஈடேற்றத்தை விரும்புபவர் என்பதும் பொருந்தும்.

ஜான் பன்யன் என்னும் புகழ்பெற்ற ஆங்கில நூலாசிரியர் இயற்றிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்னும் நூலைத்தழுவி, ஹென்றி ஆல்பர்ட்டு கிருட்டினனார் வழிநூலாகத் தமிழில் இரட்சணிய யாத்திரிகம் என்னும் பெயரில் இயற்றினார்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. உரிய எழுத்தைக் கொண்டு நிரப்புக.
   1. குன்றாத நச – யன் யூத – க்குக் குலவேந்தன். (ரே, றே, ரு, று)
   2. மற்றிர – டு திருட – யும் வ – ப்புறத்தும் இடப்புறத்தும் (ண், ன், ரை, றை, ல, ள)
2. கோடிட்ட இடத்தை நிரப்புக.
   1. கிறித்தவக் கம்பர் எனப் புகழப்பெறுபவர் ________.
   2. இரட்சணிய யாத்திரிகம் ________ நூலைத் தழுவி இயற்றப்பட்டது.

தமிழ்

3. சொல்லைப் பொருளோடு பொருத்துக.

குருசு	–	ஏளனம்
தொழும்பர்	–	சிலுவை
ஆகடியம்	–	சினம்
செற்றம்	–	அடியார்

4. இடஞ்சுட்டி விளக்குக.

1. குற்றவா ளிகளோடு நடுநின்றார் குருசுமிசை.
2. குன்றாத நசரேயன் யூதருக்குக் குலவேந்தன்

ஆ) குறு வினாக்கள்

1. இரட்சணிய யாத்திரிகம் – பொருள் எழுதுக.
2. எச்.ஏ. கிருட்டினனார் எழுதிய வேறு நூல்கள் யாவை ?

இ) சிறு வினாக்கள்

1. எச்.ஏ. கிருட்டினனார் பற்றிக் குறிப்பெழுதுக.
2. இயேசுநாதரின் அருள்திறனை எழுதுக.

ஈ) நெடு வினா

சிலுவைப்பாடு என்னும் பகுதியிலுள்ள கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

பொங்கல் திருவிழா

(வானொலி உரைச்சித்திரம்)

"தைபொறந்தா வழி பொறக்கும்
தங்கமே தங்கம்....."

அடடா !..

மக்களின் மனங்களில்தாம் எவ்வளவு பெருமிதம்; எவ்வளவு மகிழ்ச்சி!

எங்குப் பார்த்தாலும் வளமை!

பெண்களோடு போட்டிபோட்டுக்கொண்டு 'பளிச்' சென்று தம்மையும் அழகுபடுத்திக் கொண்ட வீடுகள். வீடுகள்தோறும் மங்கல வரவேற்புக் கூறிட அணிவகுக்கும் மாவிலைத் தோரணங்கள்!

இன்று தமிழர் திருநாளாம் பொங்கல் விழா; தைத்திங்கள் நாள்விழா; தமிழினத்தின் தனிவிழா; பண்பாட்டுப் பெருவிழா.

இந்த மகிழ்ச்சி வெள்ளத்துக்குக் காரணம் இதுதானா! ஊரே விழாக்கோலம் பூண்டிருக்கிறது! அனைவர் முகத்திலும் மகிழ்ச்சிப் பொங்கல் பூத்துக் குலுங்குகிறது.

மனிதகுலத்தின் உழைப்பின் மேன்மையைப் பயன்வடிவில் மக்களெல்லாம் ஒன்றுகூடித் துய்த்து இன்புறுகின்ற இணையில்லாத் திருநாள்தான் பொங்கல்! பழைமைகளைப் பக்குவமாய் வழியனுப்பிவிட்டு, வளர்ச்சிக்கு வளமை கூட்டும் புதுவரவுகளுக்கு மலர்ச்சியோடு மக்கள் தம் மனத்தால் வரவேற்பு இசைத்திடும் வண்ணத்திருநாள்தான் பொங்கல்.

உலகின் உயரிய வாழ்வுக்கு அச்சாணியாய், மூல ஒளியாய்த் திகழ்கின்ற எழுகதிரைப் போற்றி வணங்குகின்ற உயிர்ப்புள்ள திருநாள்தான் பொங்கல்.

மக்கள் மனங்களில் நிறைந்திருக்கின்ற அன்புப்பெருக்கம், நன்றிகாட்டல், பொதுமை நாட்டம், இயற்கை போற்றல், சிற்றுயிர் காத்தல், புதுமை வேட்டல், இன்பம் கூட்டல் முதலிய உணர்வுகள் ஒட்டுமொத்தமாகப் பொங்கிப் பெருகிடும் பொன்விழாவே பொங்கல் நன்னாள்! வளமையின் அடையாளமே அறுவடைக்காலம்! நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த உழுது, பண்படுத்தி, ஆடிப்பட்டம் தேடி விதைப்பவர்கள் சிற்றூர்வாழ் பெருமக்கள்! அவர்களின் உழைப்பின் பயனே இத்திருநாள்.

போ(க்)கித் திருநாள்

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.

என்னும் நன்மொழிக்கு விளக்கமாய்ப் போகித்திருநாள் திகழ்கிறது! வீடும் நாடும் தூய்மைப்படுகிற, சுற்றுப்புறச்சூழலைப் போற்றுகின்ற இனிய திருநாளே போகி.

பொங்கல் திருநாள்

பெரும்பொங்கல் என்றழைக்கப்படும் பொங்கல் திருநாளன்று பெரியவர்களும் சிறியவர்களும் விடியற்காலையில் எழுந்து நீராடிப் புத்தாடைகள் அணிவார்கள்.

உலக நடுக்கோட்டிற்கு வடக்கே வாழ்ந்துவரும் மக்களுக்கு வாடையின் வாட்டத்தைப் போக்கித் தென்றலின் இன்பத்தைப் பரிசாகத் தந்திடும் வேனிற்கால விடியலுக்கு இந்நாளே நன்னாள்.

இதோ, பொங்கல் நெருங்கிவிட்டது. பொங்கல்விழாவின் இனிய நாயகனாம் கதிரவனுக்குப் படையலிடப் பொங்கலுடன் வெற்றிலை, பாக்கு, தேங்காய் மற்றும் முக்கனிகளுடன் இஞ்சியும் மஞ்சளும் கரும்பும் ஞாயிற்றுக்கு ஏற்ற அறுகம்புல்லும், பூசணியும் முதன்மையான இடம் பெறுகின்றன.

காயுடை நெல்லொடு கரும்பு அமைத்துக்
கட்டி அரிசி அவல் அமைத்து
வாயுடை மறையவர் மந்திரத்தால்
... ... வணங்குகின்றேன்.

என்று பாடி வணங்கிடும் ஆண்டாளின் மனநிலை கொண்டவர்களாய், ஒவ்வொருவரும் பக்தி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அனைவரும் கூடிப் பொங்கலோ பொங்கல் என முழங்கி நெஞ்சில் நன்றியும் நேயமும் பொங்க விடியல் நாயகனைத் தொழுது வணங்குகின்றனர்.

தமிழ்

மாட்டுப்பொங்கல்

பொங்கலுக்கு அடுத்த நாளான மாட்டுப்பொங்கல் உழவுக்கு உறுதுணையான மாடுகளை நன்றியுணர்வோடு மதித்துப் போற்றிடும் திருநாளாகத் திகழ்கிறது.

பாலைப் பொழிந்து தரும் பாப்பா – அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!
....
வயலில் உழுது வரும் மாடு ....
.... – இதை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!

இது, பாரதி காட்டும் நன்றியுணர்வுக்கான பாடல். இந்நன்றியுணர்வே மாட்டுப்பொங்கலாக மலரக் காண்கிறோம். இந்நாளில் உழவர்கள் தம் பெருஞ்செல்வமாகக் கருதும் மாடுகளைக் குளிப்பாட்டி, வண்ணப்பொடிகளால் அழகுபடுத்திக் கழுத்தில் சலங்கைகட்டிக் கொம்பிலும் நெற்றியிலும் மஞ்சள்பூசிக் குங்குமப்பொட்டு வைத்துப் பொங்கலிட்டு வணங்குவர். பச்சரிசிக் கோலமிட்டுப் புதுப்பானை வைத்துப் பொலிவு பெற, அதனை மஞ்சள் இஞ்சியால் அலங்கரித்துச் செந்நெல் அரிசியும் செங்கரும்பின் சாற்றையும் கூட்டிப் படைக்கும் பொங்கலுக்கு இணையான உணவுமுண்டோ? பெரியவரும் சிறியவரும் சுற்றி நின்று பொங்கி வரும்போது பொங்கலோ பொங்கல், பொலியோ பொலி என்றெழுப்பும் உற்சாகக் குரலுக்கு இணையான இன்ப இசைதான் உண்டோ!

உலகில் தோன்றிய தொன்மைக்குடிகள் தமிழர்களே. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஓரிடத்தில் நிலைத்து உழவுத்தொழில் செய்து, பண்பட்ட நாகரிக வாழ்வை மேற்கொண்டவர்கள் தமிழர்கள். அவ்வுழவுத்தொழில் நாகரிகத்தின் அடையாளச் சின்னமாக இன்றும் திகழ்ந்து, பண்டைய மரபையும் பண்பாட்டையும் பறைசாற்றி நிற்பதுதான் உழவர் திருவிழா. இந்நன்னாளின் பழைமைச் சிறப்பை நோக்கித் தமிழர் திருநாள் என இன்றும் போற்றப்படுகிறது.

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. – குறள், 1031

என்னும் வள்ளுவத்திற்கேற்பச் சிற்றூர்கள் நிறைந்த நம்நாட்டில் உழவுக்கும், உழவர்க்கும் பெருமை சேர்க்கும் விழா பொங்கல்விழா எனக் கூறுதல் பொருந்தும்.

மாட்டுப்பொங்கலைத் தொடர்ந்து, எருதுவிடும் திருவிழா நடைபெறும். இவ்விழா மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களில் மஞ்சுவிரட்டு, சல்லிக்கட்டு எனவும், தமிழ்நாட்டு வடமாவட்டங்களில் எருதுகட்டு என்றும் வழங்கப்பட்டுத் தொன்றுதொட்டு மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்ற விழாவாகத் திகழ்கிறது. இது, தமிழரின் வீரத்தை வெளிப்படுத்தும் விழாவாகும். பண்டைத் தமிழர் இந்நிகழ்வை ஏறு தழுவுதல் என்றழைத்தனர். ஏறு தழுவி வெற்றி பெற்ற ஆடவரையே அக்காலக் கன்னிப்பெண்கள் விரும்பி மணப்பர் என்பது மாட்டுப்பொங்கலின் மரபு தந்திடும் பெருமைச் செய்தி.

காணும் பொங்கல்

பொங்கலுக்கு மூன்றாம் நாள் காணும் பொங்கல். நம்மைச் சுற்றியுள்ள மக்களை, பெரியவர்களை, உறவினர்களை, நண்பர்களை அவர்தம் இல்லம் சென்று வணங்கி அன்பொழுக உரையாடி மகிழ்தலே இத்திருநாளின் நோக்கம். மண்ணின் மணத்தை உணர்த்தவல்ல கும்மி, கோலாட்டம் முதலிய நாட்டுப்புறக்கலைகள் இளம்பெண்டிரின் ஆடல், பாடல்களின்மூலம் உயிர்ப்புப் பெறுவது இந்நாளில் சிற்றூர்கள் தந்திடும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் திருநாள்
வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்யும் பெருநாள்
இயற்கையைப் போற்றும் இனிய திருநாளாக
மனித குலத்தின் மாண்புகளுக்கு மங்கலம் கூறும்
பொங்கல் நாளில் பொங்குக பொங்கல்
எங்கும் தங்குக அன்பும் நலனும்!

குறிப்பு: வானொலி உரைச்சித்திரம் என்பது, குறித்த தலைப்பில் ஒரு நிகழ்வையோ செய்தியையோ உரையாக எழுதிக், கேட்போர் விரும்பும்வண்ணம் குரலேற்ற இறக்கத்துடன் வானொலியில் உரையாற்றுதல்.

ஆந்திரா, கருநாடகா ஆகிய மாநிலங்களில் மகர சங்கராந்தி எனவும் ஜப்பான், ஜாவா முதலிய நாடுகளில் அறுவடைத் திருவிழா எனவும் கொண்டாடப்படுகிறது.	தமிழகம் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, மொரிசியசு, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய கடல்கடந்த நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

மாதிரி வினாக்கள்

அ) குறுவினாக்கள்

1. வானொலி உரைச்சித்திரம் என்றால் என்ன?
2. மக்களின் மனங்களில் பெருமிதம் பொங்கக் காரணம் என்ன?
3. பொங்கல் விழாவைத் தமிழர் திருநாள் எனப் போற்றுவது ஏன்?
4. காணும் பொங்கல் – பெயர்க்காரணம் கூறுக.

ஆ) சிறுவினாக்கள்

1. பொங்கல் கொண்டாடும் முறையை விளக்குக.
2. ஏறு தழுவுதல் பற்றி எழுதுக.
3. மாட்டுப்பொங்கல் எவ்வாறு கொண்டாடப்படுகிறது?

இ) நெடுவினா

தமிழர் திருநாளின் சிறப்புகளை விவரிக்க.

குழுக் கலந்துரையாடல்

விழாக்கள் கொண்டாடுவதன் நோக்கங்களைக் குழுவாகக் கலந்துரையாடுக.

நேர்மை

அம்மா கொடுத்த ரூபாய் நோட்டுகளை எண்ணிப் பார்த்தான் முருகன்; பதினைந்து ரூபாய் இருந்தது.

“இது போதுமா அம்மா?” என்று ஐயத்துடன் கேட்டான், முருகன்.

“போதுமடா கண்ணு. சாதாரணச் சட்டைத் துணியாக எடுத்துக்கொண்டால் போதும். நான், நம் சீனு மாமாவிடம் சொல்லியிருக்கிறேன். அவர் வேலை பார்க்கிற துணிக்கடைக்குப் போ. அவரே உனக்கு எடுத்துக் கொடுப்பார். எனக்கு வர நேரமில்லை. இப்போது நான் மருத்துவர் வீட்டுக்கு வேலைக்குப் போகவேண்டும்” என்றாள் அம்மா.

முருகன், அந்த ரூபாய் நோட்டுகளை மடித்துத் தன் சட்டைப்பைக்குள் வைத்துக் கொண்டான். அவன் சட்டையிலும் கால் சட்டையிலும் ஆங்காங்கே நைந்து போயிருந்தது. அந்தச் சட்டைகளை அடித்துத் துவைக்கவே முடியாது. பஞ்சுப் பஞ்சாகப் போய்விடும். மிகவும் கவனமாகத்தான் துவைக்கவேண்டும். அப்படிக் கவனமாகத் துவைக்க அவன் அம்மாவுக்குத்தான் தெரியும்.

பள்ளிக்கூடத்தில் மற்ற மாணவர்கள் ஓடி ஆடி விளையாடும்போது, முருகன் கெட்டிக்காரத்தனமாக ஒதுங்கிக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், விளையாட்டு முனைப்பில் அவனுடைய சட்டையின் கதி என்னவாகும் என்று சொல்ல வேண்டியதில்லை.

சட்டையில் போடவேண்டிய ஒட்டுக்களையெல்லாம் போட்டாகிவிட்டது. மரவட்டை மாதிரிச் சுருட்டிச் சுருட்டித் தைத்தும் ஆகிவிட்டது. இனிமேலும் முடியாது என்ற நிலைமையில்தான் புதுச்சட்டை தைக்கும் முயற்சியில் இறங்கினாள், அம்மா.

பாவம், அவள்தான் என்ன செய்வாள்? அவர்கள் இருவரையும் தவிக்க விட்டுவிட்டுத்தான் அப்பா செத்துப் போய்விட்டாரே. அம்மா, ஏதோ நாலைந்து வீடுகளில் வேலை செய்வதன்மூலம் ஒருவழியாகக் காலம் தள்ள முடிகிறது. இந்தப் பதினைந்து ரூபாய் சேர்ப்பதற்குள் உன்பாடு என்பாடு என்றாகிவிட்டது.

ஆனாலும், அவன் கடினப்பட்டுப் படித்து முன்னுக்கு வந்துவிடுவான் என்னும் நம்பிக்கையுடன் அவள் இருந்தாள்.

சட்டைப் பையைத் தொட்டுத்தொட்டுப் பார்த்துக்கொண்டே துணிக்கடைக்கு நடந்தான் முருகன். சாலை ஓரம், ஓரிடத்தில் ஒரே கும்பல். ‘பம்...பம்’ என்று உடுக்கை சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

‘வாங்கோ சாமி, வாங்கோ... நீங்க நினைக்கிறதெல்லாம் நடக்கும். இந்தத் தாயத்து ஒண்ணு வாங்கிக் கட்டிக்குங்கோ! நற்பேறு உங்களைத் தேடிவரும்!” என்ற குரல் பலமாகக் கேட்டது.

'ஓகோ, தாயத்து விற்கிறவன்!'

"இந்தத் தாயத்தைக் கட்டிக்கிட்டா, உங்க வறுமை நீங்கும். திருப்தியான நல்ல சாப்பாடு கிடைக்கும். நல்ல துணிமணிங்க கிடைக்கும்...."

முருகன் உள்ளே எட்டிப் பார்த்தான்.

"இந்த ஒரு ரூபாய் செலவைப் பாக்காதீங்க சாமி. இந்த ஒரு தாயத்தாலே உங்களுக்கு ஒரு வேலை கிடைக்கும். வேலையிலே இருக்கிறவங்களுக்கு, மேல் பதவி கிடைக்கும்..."

கும்பலில் சிலர் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"பொய் இல்லே சாமி, நிஜம்தான். படிக்கிற பையன்கள் இதைக் கட்டிக்கிட்டா, பரீட்சையக் கூடச் சுலபமா எழுதிப் பாஸ் பண்ணிடலாம்!" என்றான், தாயத்து விற்கிறவன்.

சின்னப் பையன்கள் கைதட்டினார்கள்.

உடுக்கைச் சத்தம்.

அங்கே இருந்த குறும்புக்காரச் சிறுவன் ஒருவன், "தாயத்து விற்கிறவரே, முதல்லே நீங்க ஒரு தாயத்துக் கட்டிக்குங்க, தாயத்தெல்லாம் நல்லா விற்கும்" என்றான்.

மீண்டும் எல்லாரும் சிரித்தார்கள்.

முருகன் சிரித்துக்கொண்டே, கும்பலிலிருந்து வெளியேறினான்; கடைக்கு நடந்தான். அம்மாவிடம் இதைப் பற்றியெல்லாம் சொல்லவேண்டும் என்று நினைத்துக்கொண்டான்.

சிறிது தொலைவு போன முருகன், சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தான், 'பகீர்' என்றது. பையிலிருந்த ரூபாய் நோட்டுக்களைக் காணோம்!

'ஐயோ, தாயத்து விற்பவனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தபோது எவனோ திருடிவிட்டானே!'

முருகனுக்குக் 'குப்'பென்று வியர்த்துவிட்டது. உடம்பு கிடுகிடுவென்று ஆடியது கண்களில் நீர் வழிந்தது.

‘அம்மா எவ்வளவு கடினப்பட்டுப் பணத்தைச் சேர்த்துக் கொடுத்தாள்! நான், வேடிக்கை பார்க்கப் போய்ப் பணத்தைப் பறிகொடுத்துவிட்டேனே!’ என்று கலங்கினான்.

திரும்பிப் போய்ப் பார்த்தான். அங்கே தாயத்து விற்கிறவனையும் காணோம், கும்பலையும் காணோம்!

முருகனுக்கு அழுகை அழுகையாக வந்தது. புதுச்சட்டை தைத்துக் கொள்ளலாம் என்று அவன் எவ்வளவு ஆசையாக இருந்தான்!

‘என்னுடைய இந்தக் கிழிந்த சட்டையைப் பார்த்த பிறகும் பணத்தைத் திருடியிருக்கிறானே; அவன் மனம் கல்லா, இரும்பா? வீட்டுக்குப் போய் அம்மாவிடம் என்ன சொல்லுவது?’ என்று தனக்குள் புலம்பினான் முருகன்.

அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. சாலை ஓரமாக இருந்த அரசமரத்தின் மேடையில் சோர்வுடன் உட்கார்ந்தான். அங்கே இருந்த பிள்ளையாரைக் கலக்கத்துடன் பார்த்தான்.

நேரமாகிக்கொண்டு வந்தது.

அப்போது, அரசமரத்து வேரின் இடுக்கில், என்னவோ ஒரு காகிதப் பொட்டலம் கிடப்பது தெரிந்தது. அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தான் முருகன். அதில் முப்பது ரூபாய் இருந்தது!

அவன் பறிகொடுத்தது பதினைந்து ரூபாய். இப்போது கிடைத்திருப்பது முப்பது ரூபாய். ‘ஒன்றுக்கு இரண்டு மடங்காகக் கிடைத்திருக்கிறதே, என்று நினைத்தான் அவன்.

ஆனால், சட்டென்று அவன் மனத்தில் ஓர் உறுத்தல். ‘சே! சிறிது நேரத்திற்குள் என்ன அற்பமான ஆசை வந்துவிட்டது! பாவம் யார் பணமோ? அவர்கள் எதற்கு வைத்திருந்தார்களோ? அதைப்போய் எப்படி என்னுடையதாக்கிக் கொள்ள நினைக்கலாம்?’ என்று தன்னைத்தானே திட்டிக்கொண்டான்.

யாராவது தேடிக்கொண்டு வருகிறார்களா என்று நெடுநேரம் உட்கார்ந்திருந்தான்; தேடிக்கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்தான்.

ஒல்லியான ஒருவர் பரக்கப் பரக்க அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே வந்தார்.

“தம்பி, தம்பி, இங்கே ஏதாவது காகிதப் பொட்டலம் கிடந்ததா? நீ பார்த்தாயா? அதிலே முப்பது ரூபாய் பணம் வைத்திருந்தேன். என் மனைவிக்கு உடம்பு சரியில்லை. மருந்து வாங்கப் பணம்கொண்டு வந்தேன். சாமியைக் கும்பிட்டுவிட்டுப் போகலாம் என்று இங்கே வந்தேன். ஒருவேளை, இங்கே மடியிலிருந்து விழுந்திருக்கலாம் என்று தோன்றுகிறது!” என்றார் அவர்.

முருகன், அந்தக் காகிதப் பொட்டலத்தை அவரிடம் கொடுத்தான். “இது தானே?”

பொட்டலத்தை அவசரம் அவசரமாகப் பிரித்துப் பார்த்துவிட்டு, “இதுதான் தம்பி! இதுதான்! என்று மகிழ்ச்சியுடன் சொன்னார் அவர். “தம்பி, உனக்கு எப்படி நன்றி சொல்லுவதென்றே எனக்குத் தெரியவில்லை. உனக்கு மற்றவர்கள் பொருளின்மேலே ஆசையில்லாத நல்ல மனம் இருக்கிறது. நீ நன்றாக இருப்பாய்!” என்று அவர் வாழ்த்திவிட்டுப் போனார்.

பணத்தைப் பறிகொடுத்த செய்தியை அம்மாவிடம் எப்படிச் சொல்லுவது என்று கவலையுடன் அரசமரத்து மேடையிலேயே உட்கார்ந்துவிட்டான், முருகன்.

ஆனால், அவன் அம்மாவே அவனைத் தேடிக்கொண்டு வந்துவிட்டாள்.

“அம்மா!”

“என்னடா கண்ணு, உன்னை எங்கெல்லாம் தேடுவது? ஏன் இங்கே உட்கார்ந்து இருக்கிறே?” என்று பதற்றத்துடன் கேட்டாள், அம்மா.

முருகன் தேம்பித்தேம்பி அழுதான். தாயத்து விற்கிறவனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தபோது பணத்தை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டதைச் சொன்னான்.

அம்மா அப்படியே மலைத்து நின்றுவிட்டாள்.

“பணத்தை வைத்துக்கொண்டு வேடிக்கை பார்த்தது தப்புதாம்மா!” என்றான் முருகன்.

அம்மா பெருமூச்சுவிட்டாள்.

“அம்மா, நான் இங்கே உட்கார்ந்திருந்தபோது, ஒரு காகிதப் பொட்டலம் கிடந்து எடுத்தேன். அதில் முப்பது ரூபாய் இருந்தது!” என்றான் முருகன்.

“அதை நீ என்ன பண்ணினே?” என்று பரபரப்புடன் கேட்டாள் அம்மா.

“யாராவது தேடிவந்தால் கொடுத்துவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். பணத்தைத் தவறவிட்டவர் தேடிக்கொண்டு வந்தார். அவரிடம் கொடுத்துவிட்டேன்!”

“கண்ணு!” என்று நாத் தழுதழுக்க, மகனை இறுக அணைத்துக்கொண்டாள், அம்மா. அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

“நீ செய்தது ரொம்ப சரிடா கண்ணு. நமக்கு ஆயிரம் கஷ்டங்கள் வரலாம்; நஷ்டங்கள் வரலாம். அதற்காக மற்றவர்கள் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்காக மற்றவர்களை வருத்தப்பட வைக்கக் கூடாது!” என்றாள் அம்மா.

“எனக்குக் கிழிந்துபோன சட்டைதானே இருக்கிறது அம்மா?” என்றான் முருகன் மிகுந்த வருத்தத்துடன்.

“சட்டை கிழிந்திருந்தால் என்னடா கண்ணு? மனம்தான் நன்றாக இருக்க வேண்டும். இவ்வளவு கஷ்டத்திலேயும் இந்த வயதிலே உனக்குக் கடவுள் நல்ல மனத்தைக் கொடுத்திருக்கிறாரே! எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதுடா. இன்னும் கொஞ்ச நாளிலே பணம் சேர்த்துப் புதுச்சட்டை தைத்துக் கொள்ளலாம்’ கடவுள் கொடுப்பார். வா, வீட்டுக்குப் போவோம்!” என்றாள் அம்மா. அந்த ஏழைத்தாய், தன் நேர்மையான மகனின் கையைப் பிடித்துக்கொண்டு பெருமையுடன் வீட்டுக்கு நடந்தாள்.

பணம்? அதுவா முக்கியம்?

நன்றி : ஆழி வே. இராமசாமி, நல்லொழுக்கக் கதைகள்

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. முருகன், தனது பணத்தை எங்கு, எவ்வாறு தொலைத்தான்?
2. முருகனின் நேர்மையை விளக்கி எழுதுக.

ஆகுபெயர்

கருவியாகு பெயர், காரியவாகு பெயர், கருத்தாவாகு பெயர், உவமையாகு பெயர்

ஒரு பொருளின் பெயர், தனக்குரிய பொருளைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும். பதினாறு வகையான ஆகுபெயர்களுள் இறுதியாக உள்ள நால்வகை ஆகுபெயர்களை இந்தப் பருவத்தில் அறிந்து கொள்வோம்.

1. கருவியாகு பெயர்

யாழ் கேட்டு மகிழ்ந்தாள்.

இத்தொடரில், யாழ் என்னும் கருவி இசைக்கு ஆகி வந்ததனால் கருவியாகு பெயர்.

கருவியாகு பெயர் : கருவிப் பொருளைக் குறிக்காமல், அதனின் தோன்றிய காரியத்திற்கு ஆகிவரும். (எ.கா.) வீணை கேட்டு மெய்ம்மறந்தேன்.

2. காரியவாகு பெயர்

நான் சமையல் கற்றேன்.

இங்குச் சமையல் என்னும் காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்குப் (கருவிக்கு) பெயராகி வருவது காரியவாகு பெயர்.

காரியவாகு பெயர் : காரியப்பொருள் கருவிப்பொருளுக்கு ஆகிவருவது. (எ.கா.) நன்னூல் கற்றேன்.

3. கருத்தாவாகு பெயர்

திருவள்ளுவரைப் படித்துப்பார்.

இத்தொடரில் திருவள்ளுவர் என்பது, அவரால் இயற்றப் பெற்ற நூலுக்கு ஆகிவந்ததனால், கருத்தாவாகு பெயராயிற்று.

4. உவமையாகு பெயர்

ஒருவரைப் பார்த்து, நாரதர் வருகிறார் எனல்.

இத்தொடரில் நாரதர் என்னும் பெயர் அவரைக் குறிக்காமல், அவரைப்போன்ற (கலகமூட்டுபவர்) வேறொருவர்க்கு ஆகிவந்தது. அதனால், இஃது உவமையாகு பெயராயிற்று.

பொருள்முதல் ஆறோடு அளவை சொல்தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்

ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே.

– நன்னூல், 290

பயிற்சி : கீழ்க்காணும் தொடர்களிலுள்ள ஆகுபெயர்களின் வகைகளைக் கண்டறிக.

அ) கம்பரைப் படித்தேன்.
ஆ) காளை வந்தான்.
இ) திருக்குறள் கற்கிறேன்.
ஈ) வானொலி கேட்டு மகிழ்ந்தேன்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினா

கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. கருவிப் பொருளைக் குறிக்காமல், அதனின் தோன்றிய காரியத்துக்கு ஆகிவருவது ________ ஆகுபெயராகும்.
2. நான் சமையல் கற்றேன். இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர் ________ ஆகும்.

ஆ) குறுவினாக்கள்

1. கருவியாகு பெயரைச் சான்றுடன் விளக்குக.
2. நன்னூல் கற்றேன். இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயரை விளக்குக.
3. கருத்தாவாகு பெயர் என்றால் என்ன ? சான்று தருக.
4. வேல்விழி பார்த்தாள். இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயரை விளக்குக.

பொருள்கோள்

அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள்

ஒரு செய்யுளிலுள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொள்ளும் முறையைப் பொருள்கோள் என்பதனை நினைவு கூர்வோம்.

எண்வகைப் பொருள்கோள்களுள், முதல் ஐந்து பொருள்கோளையும் அறிந்துகொண்ட நீங்கள், இந்தப் பருவத்தில் இறுதியாக உள்ள மூன்று பொருள்கோளையும் அறிந்துகொள்ளலாம்.

1. அளைமறிபாப்புப் பொருள்கோள்

பாம்பு, புற்றில் தலைவைத்து நுழையும்போது, தலை மேலாகவும், உடல் அடுத்தும் செல்வதுபோலச் செய்யுளின் இறுதியிலிருந்து சொற்களை எடுத்து முதலில் வைத்துக்

கூட்டிப் பொருள் கொள்வது அளைமறிபாப்புப் பொருள்கோள். (அளை – புற்று, பாப்பு – பாம்பு.)

(எ.கா.) தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
நாற்கதியிற் சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த
வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து
நெறிமுன்னி முயலா தாரே.

இப்பாடலில் 'வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே' என்னும் ஈற்றடியைப் பாடலின் முதலில்கொண்டு பொருள் கொள்ளுதல் வேண்டும்.

2. கொண்டுகூட்டுப் பொருள்கோள்

செய்யுளின் பல அடிகளிலும் கூறப்பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்பக் கூட்டிப் பொருள்கொள்வது கொண்டுகூட்டுப்பொருள்கோள்.

(எ.கா.) கட்டிக் கரும்பு கசக்கும் மிகக்கனிந்த
எட்டிக் கனியினிக்கும் என்னூரில் – பட்டியுள
காளை படிபால் கறக்குமே நல்லபசு
வேளை தவிரா துழும்.

இப்பாடலை அப்படியே படித்தால் பொருள் விளங்காது. இதில் உள்ள சொற்களைக் கட்டிக் கரும்பு இனிக்கும்; மிகக்கனிந்த எட்டிக்கனி கசக்கும்; பட்டியிலிருக்கும் காளை மாடு நேரந்தவிராது உழும். நல்ல பசு படி பால் கறக்கும் எனப் பொருள் கொள்வதற்கு ஏற்ப அடிதோறும் மாறிக்கிடக்கின்ற சொற்களைப் பொருத்தமாக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

குறிப்பு : மொழிமாற்றுப் பொருள்கோள் என்பது அந்தந்த அடிகளில் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிக்கொள்வது. கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்பது பல அடிகளிலும் உள்ள சொற்களை மாற்றிப் பொருள்கொள்வது.

3. அடிமறிமாற்றுப் பொருள்கோள்

செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது அடிமறிமாற்றுப் பொருள்கோள்.

(எ.கா.) மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்தோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழி யான்வாழு மாறே.

இப்பாடலில் உள்ள அடிகளை முன்பின்னாக எப்படி மாற்றிப் பொருள்கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாது.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அளை என்பதன் பொருள் ______ .
2. பாடலின் ஈற்றடியைப் பாடலின் முதலில்கொண்டு பொருள் கொள்வது ______ பொருள்கோள் ஆகும்.
3. செய்யுளின் பல அடிகளிலும் கூறப்பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கேற்பக் கொண்டுகூட்டிப் பொருள் கொள்வது ______ பொருள்கோளாகும்.
4. செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது ______ பொருள்கோளாகும்.

ஆ) குறுவினாக்கள்

1. பொருள்கோள் என்பது யாது ?
2. கொண்டுகூட்டுப் பொருள்கோளுக்குச் சான்று தந்து விளக்குக.
3. மொழிமாற்றுப் பொருள்கோளுக்கும் கொண்டுகூட்டுப் பொருள்கோளுக்கும் உள்ள வேறுபாடு யாது ?
4. அளைமறிபாப்புப் பொருள்கோள் என்பது யாது ? சான்று தருக.
5. அடிமறிமாற்றுப் பொருள்கோள் எவ்வாறு வரும் ? சான்று தந்து விளக்குக.

வகுப்பறைத்திறன்கள்

படைப்பாற்றல்

வானொலி உரைச்சித்திரம் அமைத்தல்

உன் ஊர்த்திருவிழா குறித்து வானொலி உரைச்சித்திரம் அமைக்க.

அறிக்கை எழுதுதல் : உங்கள் பள்ளியில் நடைபெற்ற குடியரசுநாள் கொண்டாட்ட நிகழ்வுகளை அறிக்கையாக எழுதுக.

தமிழ்

மொழித்திறன் பயிற்சி

அ) உரிய பொருளைத் தேர்ந்தெழுதுக.

1. கொண்டல் (வேகம், தாகம், மேகம்) ______________ .
2. ஆகுலம் (வருத்தம், சோர்வு, தளர்வு) ______________ .
3. தாமம் (அணி, ஆடை, மாலை) ______________ .
4. புரிசை (அகழி, வாயில், மதில்) ______________ .
5. மல்லல் (குளம், களம், வளம்) ______________ .

ஆ) கையெழுத்து இதழ் ஒன்றனை உருவாக்குக.

கையெழுத்து இதழ் (மாதிரி வடிவம்)		
சிறுசேமிப்புச் சிறப்பிதழ்		
பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை		
துணுக்குகள்	ஓவியம்	உரையாடல்
சிறுசேமிப்புக் குறித்த துணுக்குகள்	சேமிப்பை விளக்கும் படங்கள்	சேமிக்கும் வழிகள்
கவிதை	சிறுகதை	நாடகம்
சிறுதுளி பெருவெள்ளம்	வரவு எட்டணா செலவு பத்தணா	சேமிப்பில்லா நாடு கூரையில்லா வீடு
கட்டுரை	பழமொழிகள்	பாடல்
சிறுசேமிப்பும் அதன் பயன்களும்	சிக்கனம் வீட்டைக் காக்கும் சேமிப்பு நாட்டைக் காக்கும்	சேமிப்பு
இத்திங்களுக்குரிய தமிழ்மன்ற நிகழ்ச்சிகள்		

இ) கதையை நீ விரும்புமாறு முடிக்க.

கதிரவன் மறைந்து காரிருள் மெல்லமெல்ல வானைக் கவ்வத் தொடங்கியது. அவ்வேளையில் ஊருக்கு நடுவே ஒருவீட்டின்முன் மக்கள் கூட்டமாகத் திரண்டிருந்தனர். அவ்வீட்டுத் திண்ணையில் பாடகர் ஒருவர் பாடிக்கொண்டிருந்தார். கூடியிருந்தோர் தங்களை மறந்து இசையைக் கேட்டு மகிழ்ந்துகொண்டிருந்தனர். அப்போது, அவ்வழியே சிறுவன் ஒருவன் வந்தான். அவனும் கூட்டத்தில் நின்று வேடிக்கை பார்க்கத் தொடங்கினான். சிறிதுநேரம் கடந்ததும், அச்சிறுவன் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான். அவனிடம் பெரியவர் ஒருவர், “ஏனப்பா அழுகிறாய் ?” என்று கேட்டார். அழுகையை நிறுத்தாமலேயே அவன் சொல்லத் தொடங்கினான். “ஐயா, எங்கள் வீட்டில் ஆடு வளர்க்கிறோம். ஒருநாள்..........

ஈ) பொருந்தாத தமிழெண்களை வட்டமிடுக

கக	–	11
உஉ	–	12
கஉ	–	17
ரு	–	5
௯O	–	10

உ) கட்டுரைப் பயிற்சி : தமிழர் திருநாள்.

ஊ) கடிதப் பயிற்சி : நண்பனை ஊர்த்திருவிழாவிற்கு வருமாறு கடிதம் எழுதுதல்.

வாழ்க்கைத்திறன்

சிறப்பாகத் தொடர்புகொள்ளும் திறன்

எட்டாம் வகுப்பு முடித்ததும் மணிமேகலைக்குத் திருமணம் செய்துவைக்க, அவள் பெற்றோர் எண்ணினர். இதனை அறிந்த அவள், திருமணம் ஆகும்வரையாவது படிக்கிறேன் எனப் பெற்றோரிடம் கேட்டுக்கொண்டாள். அவள் தற்பொழுது ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறாள்.

பெற்றோர் திருமணம் செய்துவைத்துவிடுவார்களோ என்னும் கவலை அவளை வாட்டிக் கொண்டிருந்தது. வகுப்பாசிரியரிடம் தன் நிலையைக் கூறி, இதற்கு ஒரு தீர்வு வேண்டினாள். திருமண வயது, பெண்கல்வியின் தேவை ஆகியவற்றை அவளின் பெற்றோரிடம் எடுத்துக்கூறித் திருமணத்தைத் தள்ளிப்போடவும் மேற்கொண்டு படிக்க வைக்கவும் உதவுவதாக வகுப்பாசிரியர் ஆறுதல் கூறி அவளை அனுப்பிவைத்தார். கூறியவாறே அவளின் பெற்றோரைச் சந்தித்து மணிமேகலையை மேற்கொண்டு படிக்கவைக்க ஒப்புக்கொள்ளச் செய்தார். மணிமேகலை தனக்கேற்பட்ட சிக்கலை உரியமுறையில் வகுப்பாசிரியரிடம் கூறியதனால், அவளுக்கொரு தீர்வு கிடைத்தது.

வாழ்க்கையில் சிக்கல் ஏற்படுவது இயற்கை. ஆனால், அதற்காகத் துவண்டுவிடாமல், நம்பிக்கைக்கு உரியவரிடத்தில் தன் சிக்கலை எடுத்துக்கூறி வழிகாண்பதே சிறந்தது; அப்படியில்லாமல், மனத்திற்குள்ளேயே வைத்துக்கொண்டு கவலைப்படுவதனால் யாதொரு பயனும் இல்லை.

மதிப்புக்கல்வி

தன்னம்பிக்கை

திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்தவர் அவர். படிப்பில் நாட்டம் இல்லாததனால், கையிலிருந்த சிறிதளவு பணத்துடன் சென்னைக்குச் சென்றார்.

பணம்தான் கையில் குறைவாக இருந்ததே தவிர, அவரிடம் இரண்டு மூலதனங்கள் இருந்தன. ஒன்று தன்னம்பிக்கை; மற்றொன்று, எந்த வேலையாக இருந்தாலும் அதில் உயர்வுதாழ்வு பார்க்காமல் வேலை செய்யும் இயல்பு.

மிதிவண்டிக் கடை ஒன்றில் மிகக் குறைந்த வருமானத்தில் வேலைக்குச் சேர்ந்தார். அலுவலகத்தைக் கூட்டிப் பெருக்குபவர் அன்று வரவில்லையென்றால், அந்த வேலையையும் அவரே செய்வார். மற்றத் தொழிலாளர்கள் கேலி செய்தபோதும், அவர் அதனைப் பொருட்படுத்தவில்லை.

உழைப்பின் காரணமாக, இராயல் மிதிவண்டி நிறுவனம் என்று தனியாக ஒரு நிறுவனத்தைத் தொடங்கினார். படிப்படியாக முன்னேறி ஈசன் பொறியியல் நிறுவனம் தொடங்கி, இன்று ஈசன் குழும நிறுவனங்களில் எழுநூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உழைத்து வருகின்றார்கள். தன்னம்பிக்கை கொண்டு உழைப்பால் உயர்ந்தவர்தாம் தொழிலதிபர் ஈசுவரன்.

மொழியாக்கம் செய்க.

There is a beauty in nature. The pathless woods give us pleasure. We sit under the green trees. We enjoy the beauty of multi-coloured flowers. The songs of the birds fill the air with sweet music. Squirrels keep running about. They leap from tree to tree. How brisk they are! The forest is alive with different kinds of animals.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. Anger is sworn enemy.
   கோபம் குலத்தைக் கெடுக்கும்.

2. Break my head and bring a plaster.
   பிள்ளையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவதுபோல.

3. There is danger in men's smiles.
   தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்.

4. Like hand and glove.
   நகமும் சதையும் போல.

5.. Wealth is best known by want.
   நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

தமிழ்

வளரறி செயல்பாடுகள்	
கேட்டல் திறன்	செயல்பாடு – 1

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

ஒழுக்கமே ஒருவற்குப் பெருமையும் சிறுமையும் தருவதாகும். ஒழுக்கம் இல்லாதவன் உயர்குடிப் பிறப்பினனாயினும் அச்சிறப்பினை இழப்பான். இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும் என்றே வள்ளுவரும் குறிப்பார்.

வேதியன், கற்ற வேதத்தை மறந்தாலும் பின்னும் ஓதி அவ்வறிவைப் பெற்றுக்கொள்ளலாம். அவன் குலவொழுக்கம் குன்றுவானாயின் எல்லா நலங்களும் இழந்தொழிவான். ஆதலின், ஒழுக்கம் உடைமையே உயர்குடிப் பிறப்பாகும். அதுவே எல்லார்க்கும் சிறப்பினைத் தருவது. உயிரினும் மேலாக ஓம்பத்தக்கது என்பர்.

அறங்கள் பலவற்றையும் ஆராய்ந்து தெளிந்தாலும் இருமைக்கும் துணையாவது ஒழுக்கமேயாகும். இந்த உண்மைகளை அறிந்த சான்றோர் என்றும் ஒழுக்கத்தில் தவற மாட்டார்கள். தவறுவாராயின் அடையத் தகாத பெரும்பழி வந்து சாரப் பெறுவர். அன்னார் மறந்தும் தீய சொற்களை வாயால் கூறார்.

வினாக்கள்

1. உரைப்பத்தியின் மையக்கருத்து யாது ?
2. உரைப்பத்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள எதிர்ச்சொற்களைக் கூறுக.
3. இருமைக்கும் துணையாவது ஒழுக்கமே – இத்தொடரில் இருமை என்பதன் பொருள் யாது ?
4. உரைப்பத்திக்கு ஏற்புடைய திருக்குறள் கூறுக.
5. ஒழுக்கமுடைமை – இச்சொற்றொடர் போன்று உடைமை என முடியக்கூடிய மூன்று சொற்களைக் கூறுக.

பேசுதல் திறன்	செயல்பாடு – 2

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்துக் குழுவில் கலந்துரையாடுக.

தமிழ் அறிஞர்களே! தமிழ்நாடெங்கும் தமிழ்ச்சங்கங்கள் நிறுவுங்கள்; தமிழ்ப்பாடம் சொல்லுங்கள்; கலைச்செல்வத்தை வாரி வழங்குங்கள்; தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யுங்கள். இவ்விதம் ஒல்லும் வகையால் நாம் ஒவ்வொருவரும் பணி செய்வோமானால் இன்னும் பத்தாண்டுகளில் தமிழ்நாடு புத்துயிர் பெற்றுவிடும்.

அக்காலத்தில் நாடு முற்றும் தமிழுணர்ச்சி பொங்கித் ததும்பிப் பூரணமாய் நிற்கும். கல்லூரிகளில் நல்லாசிரியர்கள் எல்லாரும் தமிழறிஞராயிருப்பர். பல்கலைக் கழகங்களில் நக்கீரர் போன்ற நற்றமிழ்ப் புலவர் தலைவராக வீற்றிருப்பர்.

'எந்த மொழியும் நமது சொந்த மொழிக்கு இணையாகாது' என்று தமிழ்நாட்டு இளைஞர் செம்மாந்து பேசுவர்; 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம்' என்று

முரசு கொட்டுவர். எட்டுத் திசையிலும் தமிழ்நாடு ஏற்றமுற்று விளங்கும். அந்த நிலையினை இன்று எண்ணிப் பாரீர்! அதனை எய்தியே தீர்வோம்! பணி செய்ய வாரீர்!

– ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழின்பம்

படித்தல் திறன்	செயல்பாடு – 3

கீழ்க்காணும் உரைப்பத்தியை வாய்விட்டுப் படிக்க.

அமிழ்தம் என்பது அழகிய இனிய தமிழ்ச்சொல். அச்சொல்லின் இனிமைக்கு அதன்கண் உள்ள சிறப்பு ழகரமே சான்று. இயற்கை நலம் கெழுமிய இன்பத் தமிழ்மொழியே இனிமை வளம் கொழிப்பது. தமிழ் என்னும் சொல்லுக்கே இனிமை என்னும் பொருளுண்டு. கற்பதற்கும் கேட்பதற்கும் களித்து உரையாடுவதற்கும் எளிமையும் இனிமையும் வாய்ந்தது இம்மொழி. அமிழ்தம்போன்று ஆருயிர் தழைக்கச் செய்யும் ஆற்றல் உடையது.

இந்நாள் உலகில் வழங்கும் மொழிகள் மூவாயிரம். அவற்றுள் பழைமையும் இலக்கிய வளமும் பொருந்திய மொழி நந்தம் செந்தமிழ் மொழி. முன்னைப் பழமொழிக்கும் முன்னைப் பழமொழியாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய் இனிமையே உருவாய் இலங்குகின்றது.

எழுத்து, சொல், பொருள் அமைதிகளால் உயர்வுற்றது. பல்வேறு சொல்வளத்தால் தனித்தியங்கும் ஆற்றல் உடையது. குறைவறத் திருந்திய செம்மைகொண்டது. ஆதலின் உயர்தனிச் செம்மொழி எனப் போற்றும் ஆற்றல் உடையது.

உயர்தனிச் செம்மொழியாகிய நந்தம் செந்தமிழில் இனிய பொருள்களைக் குறிக்கும் சொற்களெல்லாம் தனிச் சிறப்புடையன. குழல், யாழ், எழில், பழம், மழை, எழிலி, அழகு, மழலை, தழை, உழை, முழவு, உழவு, அமிழ்து முதலாய சொற்களை நோக்குங்கள். எல்லாச் சொற்களும் வாயால் சொல்லவே நல்லின்பம் விளைவிப்பனவாக உள்ளன. தமிழுக்கே உரிய சிறப்பு ழகரம் அச்சொற்கள் அனைத்தினும் ஒலிப்பதனைக் காணலாம்.

சொல்வதனை எழுதுதல்	செயல்பாடு – 4

மாணவன் கற்பனவற்றைக் கசடறக் கற்றல் வேண்டும்.

ஐயம் திரிபுகளாகிய குற்றங்கள் அகலக் கற்கும் கல்வியே பயனுடையதாகும். ஆதலின், 'கற்க கசடறக் கற்பவை' என்பார். தெளிவுறக் கற்ற கல்வியே உளத்திற்குத் தீஞ்சுவை பயக்கும்.

உலகில் எண்ணிறந்த நூல்கள் உள்ளன. பரந்த கடலைப் போன்று விரிந்து நிறைந்துள்ளன. அத்தனையும் கற்றறிதல் எத்தகையார்க்கும் ஏலாத செயலே. ஆதலின் வள்ளுவர், கற்பவை என்னும் சொல்லால் நூல்களைப் பாகுபாடு செய்கிறார். கற்றற்குரிய நூல்களையே கற்றல் வேண்டும் என்பதனை வற்புறுத்துகின்றார்.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப்பொருள்களை உணர்த்தும் நூல்களையே ஓதியுணர்தல் வேண்டும்.

அகர வரிசைப்படுத்துதல்	செயல்பாடு – 5

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்தில் அமைந்த சொற்களை அகரவரிசைப்படுத்தி எழுதுக.

இன்று தமிழர் திருநாளாம் பொங்கல் விழா; தைத்திங்கள் நாள் விழா; தமிழினத்தின் தனி விழா; பண்பாட்டுத் திருவிழா. இந்த மகிழ்ச்சி வெள்ளத்துக்குக் காரணம் இதுதானா!

ஊரே விழாக்கோலம் பூண்டிருக்கிறது! அனைவர் முகத்திலும் மகிழ்ச்சிப் பொங்கல் பூத்துக் குலுங்குகின்றது. உலகின் உயரிய வாழ்வுக்கு அச்சாணியாய், மூல ஒளியாய்த் திகழ்கின்ற எழுகதிரைப் போற்றி வணங்குகின்ற உயிர்ப்புள்ள திருநாள்தான் பொங்கல்.

மக்கள் மனங்களில் நிறைந்திருக்கின்ற அன்புப்பெருக்கம், நன்றிகாட்டல், பொதுமை நாட்டம், இயற்கை போற்றல், சிற்றுயிர் காத்தல், புதுமை வேட்டல், இன்பம் கூட்டல் முதலிய உணர்வுகள் ஒட்டுமொத்தமாகப் பொங்கிப் பெருகிடும் பொன்விழாவே பொங்கல் நன்னாள்!

வளமையின் அடையாளமே அறுவடைக்காலம்! நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த உழுது, பண்படுத்தி, ஆடிப்பட்டம் தேடி விதைப்பவர்கள் சிற்றூர்வாழ் பெருமக்கள்! அவர்களின் உழைப்பின் பயனே இப்பொங்கல் திருநாள்.

இணைப்புச்சொல் பயன்பாடு	செயல்பாடு – 6

கீழ்க்காணும் இருதொடரை 'ஆயினும்' என்னும் இணைப்புச்சொல் சேர்த்து ஒரே தொடராக்குக.

(எ.கா.) நேற்றிரவு பெருமழை பெய்தது; பள்ளியில் மாணவர் வருகை மிகுதியாய் இருந்தது.

நேற்றிரவு பெருமழை பெய்தது ஆயினும் பள்ளியில் மாணவர் வருகை மிகுதியாய் இருந்தது.

1. கண்ணனுக்கு உடல்நலமில்லை; தேர்வெழுதச் சென்றான்.
2. தமிழரசனுக்குக் காலில் காயம் ஏற்பட்டது; ஓட்டப்போட்டியில் கலந்துகொண்டான்.
3. அறிவழகனார் தள்ளாத வயதுடையவர்; தாமே தம் வேலைகளைப் பார்த்துக்கொண்டார்.
4. சேரன் வறுமையில் வாடினான்; உயர்கல்வி பெறுவதில் உறுதியாய் இருந்தான்.
5. வளவன் சோர்வாக இருந்தான்; நீந்தி அக்கரைச் சேர்ந்தான்.

அட்டவணைப்படுத்துதல்	செயல்பாடு – 7

கீழ்க்காணும் உரைப்பத்தியில் அமைந்துள்ள ஆகுபெயர்களைக் கண்டறிந்து, அவற்றை வகைப்படுத்துக.

பொன்மாலைப் பொழுது. வீட்டுக்குள் நுழைந்த சுடர்விழி, இனிய குழல் கேட்டு மெய்ம்மறந்து நின்றாள். 'சுடர், ஏன் அங்கேயே நின்றுவிட்டாய்?' எனத் தந்தையின் குரல் கேட்டு தன்னிலைக்கு வந்தாள் சுடர்விழி. 'அப்பா, அண்ணன் நன்கு குழலூதுகின்றான் அல்லவா!' என வியப்புடன் கூறினாள். 'ஆம், உன் அண்ணனை நல்ல இசைப்பள்ளியில் சேர்த்துவிடலாம் சுடர்விழி' என்றார், அவளின் தந்தை.

அவரருகில், தம்பி நூலொன்றனைப் படித்துக் கொண்டிருந்தான். ‘செல்வா, என்ன படிக்கிறாய்?’ எனக் கேட்டாள் சுடர்விழி. ‘அக்கா, நான் திருவள்ளுவரைப் படிக்கிறேன்’ என்றான், செல்வம். அவனருகில் இருந்த வேல்விழி, ‘அக்கா, நானும் கம்பரைப் படிக்கிறேன்’ என்றாள். அவர்களிருவரும் கூறியதனைக் கேட்ட சுடர்விழி, ‘நானும் இன்று நன்னூல் கற்கப்போகின்றேன்’ என்றாள். அப்போது, வாயிற்கதவு தட்டப்பட்டு, ‘நான் உள்ளே வரலாமா?’ எனத் தந்தையின் நண்பருடைய குரலைக் கேட்ட செல்வம், ‘அப்பா, பேச்சாளர் வந்துவிட்டார்’ எனக் கூறிக்கொண்டே கதவைத் திறக்கச் சென்றான்.

வ. எண்	சொற்றொடர்	ஆகுபெயரின் வகை
1.	குழல் கேட்டு மெய்ம்மறந்து நின்றாள்	கருவியாகுபெயர்
2.		
3.		
4.		
5.		

சொல்லுருவாக்கம்	செயல்பாடு – 8

கீழ்க்காணும் சொற்களில் இடைஎழுத்தை நீக்கி, இடையில் இரண்டு அல்லது மூன்று எழுத்தைச் சேர்த்துப் புதியசொற்களை உருவாக்குக.

(எ.கா.) அறம் – அமுதம், அப்பம், அன்னம், அரங்கம், அறிமுகம், அழுத்தம்

கலம் – ________ , ________ , ________ , ________ , ________ , ________ .

தரம் – ________ , ________ , ________ , ________ , ________ , ________ .

பணம் – ________ , ________ , ________ , ________ , ________ , ________ .

மரம் – ________ , ________ , ________ , ________ , ________ , ________ .

தொடர் அமைத்தல்	செயல்பாடு – 9

கீழ்க்காணும் சொற்களைப் பெயராகவும் வினையாகவும் கொண்டு தொடர் அமைக்க.

(எ.கா.) படி – ஒவ்வொரு வீட்டு மாடிக்கும் படி உண்டு. (பெயர்)

– தேர்வுக்குரிய பாடங்களைப் படி. (வினை)

மறை ________________________________

____

அணி ________________________________

____

தமிழ்

காய்

நாடு

கலை

படைப்பாற்றல் திறன்	செயல்பாடு – 10

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்துணர்ந்து, நாலடிப் பாடல் ஒன்று எழுதுக.

கிழக்கு வெளுத்துக் கீழ்வானம் சிவந்து, கதிரவன் தோன்றும் காட்சி, கண்கொள்ளாக் காட்சி. சில்லென்ற காற்று மேனியைக் குளிரூட்டும்; கொட்டும் அருவி ஓசை; கூவும் குயிலோசை; பல்வகைப் பறவைகளின் சிறகு ஓசை செவிகளில் இனிமை சேர்க்கும். ஆடும் மயிலின் நடனம் கண்களுக்கு விருந்து படைக்கும்.

(இக்காட்சியினை ஓவியர் கண்டால் வரைந்துவிடுவார்; சிற்பி கண்டால் செதுக்கிவிடுவார்; கவிஞராகிய நீங்கள் பாடல் எழுதத் தொடங்கிவிட்டீர்களே!)

கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

காலம் : 15 மணித்துளி — உயர் மதிப்பெண் : 10

1. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரிரு வரியில் விடையளிக்க. 5× 1 = 5

   1. இரட்சணிய யாத்திரிக நூலின் ஆசிரியர் யார்?
   2. இரட்சணிய யாத்திரிகம் என்பதன் பொருள் யாது?
   3. யூதர்கள், இயேசுநாதரை எவ்வாறு துன்புறுத்தினார்கள்?
   4. யூதர்கள், தம்மைத் துன்புறுத்தியபோது இயேசுநாதர் இறைவனிடம் வேண்டியது யாது?
   5. இறைவனின் உண்மையான அடியவர் யார்?

2. கீழ்க்காணும் வினாவுக்கு ஐந்துவரிக்கு மிகாமல் விடையளிக்க. 1× 5 = 5

   உலக இரட்சகர் இயேசுநாதர் – இக்கூற்றை நிறுவுக.

தமிழ்

புறநானூறு

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர்ஒக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே.

– மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

பொருள் : இவ்வுலகம், தெளிந்த கடல்நீரால் சூழப்பட்டது. இவ்வுலகம் முழுவதனையும் பொதுவின்றித் தனதாக்கி ஒரு குடையின்கீழ் ஆட்சி செய்பவன் மன்னன். அவனுக்கும், நள்ளிரவிலும் பகலிலும் உறங்காது விரைந்தோடும் விலங்குகளை வேட்டையாடி வீழ்த்த எண்ணுகின்ற கல்வியறிவற்ற ஒருவனுக்கும், உண்ணத் தேவைப்படும் பொருள் நாழியளவே; உடுத்தும் உடை மேலாடையும் இடுப்பாடையும் ஆகிய இரண்டே. மற்றவை எல்லாமும் இவ்வாறாகவே அமையும். ஆகவே, ஒருவன் தனது செல்வத்தினால் பெறும் பயன், அதனை மற்றவர்க்கும் கொடுத்தலாகும். அவ்வாறன்றித் தாமே நுகர்வோம் என எண்ணினால், பலவற்றை அவன் இழக்க நேரிடும்.

சொற்பொருள்: நிழற்றிய – நிழல் செய்த; நடுநாள் யாமம் – நள்ளிரவு: துஞ்சான் – துயிலான்; மா – விலங்கு; கல்லா – கல்வியறிவில்லாத; நாழி – அளவுப்பெயர்; ஈதல் – கொடுத்தல்; துய்ப்பேம் – நுகர்வோம்; தப்புந – இழக்க.

இலக்கணக்குறிப்பு: வெண்குடை – பண்புத்தொகை; கல்லா ஒருவற்கும் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; நாழி – ஆகுபெயர்; ஈதல் – தொழிற்பெயர்; துய்ப்பேம் – தன்மைப் பன்மை வினைமுற்று.

பகுபத உறுப்பிலக்கணம்: துஞ்சான் – துஞ்சு + (ஆ) + ஆன். துஞ்சு – பகுதி; (ஆ – எதிர்மறை இடைநிலை ஆ – மறைந்தது.); ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; ஈதல் – ஈ + தல்; ஈ – பகுதி; தல் – தொழிற்பெயர் விகுதி; துய்ப்பேம் – துய் + ப் + ப் + ஏம். துய் – பகுதி; ப் – சந்தி; ப் – எதிர்கால இடைநிலை; ஏம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.

ஆசிரியர் குறிப்பு : மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார். இவர், இறையனார் எழுதிய களவியலுக்கு உரை கண்டவர்; பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படையையும் நெடுநல்வாடையையும் இயற்றியவர். இப்பாடலில் இவர், உலகியல் உண்மையைக் கூறியுள்ளார்.

நூற்குறிப்பு : புறநானூறு = புறம் + நான்கு + நூறு. புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டதனால் புறநானூறு எனப் பெயர் பெற்றது. புறம் என்பது ஒருவரின் வீரம், கொடை, கல்வி முதலிய சிறப்புகளைக் குறிக்கும். இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இந்நூலிலுள்ள பாடல்கள் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்றவை. இப்பாடல்கள் வாயிலாகப் பண்டைத் தமிழ் மன்னர்களின் ஆட்சிச்சிறப்பு, வீரம், கொடை, கல்வி முதலியவற்றை அறியலாம். இந்நூலின் சில பாடல்களை ஜி. யு. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தினைக்கொண்டு நிரப்புக.

1. தெ ____ கடல் வளாகம் பொதுமை இ ____ றி. (ண்/ந்/ன்)
2. வெண்குடை நிழற்றிய ஒருமையோ ____ க்கும். (ர்/ற்)

ஆ) குறுவினாக்கள்

1. புறநானூறு – சிறுகுறிப்பு எழுதுக.
2. நக்கீரர் இயற்றிய வேறு நூல்கள் யாவை ?
3. உண்பது உடுப்பது பற்றிப் புறநானூறு கூறும் கருத்து யாது ?
4. செல்வத்தின் பயன் யாது ?

இ) சிறுவினா

செல்வத்துப் பயனே ஈதல் – என்பதனைப் புறநானூற்றின் வழிநின்று விளக்குக.

குறுந்தொகை

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே. *

– தேவகுலத்தார்

பொருள் : மலைப்பகுதியிலுள்ள குறிஞ்சியின் கரிய கொம்புகளில் குறிஞ்சிப்பூக்கள் பூத்திருக்கின்றன. அப்பூக்களிலிருந்து வண்டுகள் தேனைத் திரட்டுவதற்கு இடமாகிய நாட்டை உடையவன் தலைவன். அத்தலைவனோடு "யான்கொண்ட நட்பானது நிலத்தைவிடப் பெரியது; வானத்தைவிட உயர்ந்தது; கடலைவிட ஆழமானது" எனத் தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள் : நீர் – கடல்; கருங்கோல் – கருமை நிறமுடைய கொம்பு; உயர்ந்தன்று – உயர்ந்தது; அளவின்று – அளவினையுடையது.

இலக்கணக்குறிப்பு : நிலத்தினும், வானினும், நீரினும் – உயர்வுச்சிறப்பும்மைகள்; கருங்கோல், பெருந்தேன் – பண்புத்தொகைகள்.

பிரித்தறிதல் : ஆரளவு = அருமை + அளவு; கருங்கோல் = கருமை + கோல்; பெருந்தேன் = பெருமை + தேன்.

நூற்குறிப்பு : குறுமை + தொகை = குறுந்தொகை. குறைந்த அடியளவால் பாடப்பெற்ற பாடல்களின் தொகுப்பே குறுந்தொகை. இந்நூல், எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இதில், கடவுள் வாழ்த்துடன் நானூற்றொரு பாடல்கள் உள்ளன. அகப்பொருள் பற்றிய பாடல்களைப் பல்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர்கள் பாடியுள்ளார்கள். இப்பாடல்கள் குறைந்த அளவாக நான்கடிகளையும் அதிக அளவாக எட்டு அடிகளையும் கொண்டிருக்கின்றன. இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ. பாரதம் பாடிய பெருந்தேவனார் இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். இப்பாடலாசிரியர் குறித்த செய்திகள் கிடைக்கவில்லை. இந்நூல் வாயிலாகப் பண்டைத்தமிழரின் இல்வாழ்க்கை, ஒழுக்கம், மகளிர் மாண்பு, அறவுணர்வு முதலியவற்றை அறியலாம்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. எட்டுத்தொகை நூல் ______________.

அ) சிலப்பதிகாரம் ஆ) திருக்குறள் இ) குறுந்தொகை

2. குறுந்தொகைப் பாடல்களின் எண்ணிக்கை ______.

அ) 401 ஆ) 501 இ) 601

3. குறுந்தொகையின் அடிவரையறை ______.

அ) 4–8 ஆ) 13–31 இ) 8–16

ஆ) குறுவினாக்கள்

1. குறுந்தொகை – சிறுகுறிப்பு எழுதுக.
2. குறுந்தொகை வாயிலாக நீவிர் அறிவன யாவை?
3. குறுந்தொகைப் பாடலில் தலைவனது நாடும் நட்பும் எங்ஙனம் சிறப்பிக்கப்படுகின்றன?

இ) கீழ்க்காணும் செய்யுள் அடிகளிலுள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதி அடிக்கோடிடுக.

கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

ஈ) ஒருமைப் பன்மைப் பிழைநீக்கி எழுதுக.

1. தலைவனது நட்பு நிலத்தினைவிடப் பெரியன ______________________.
2. குறிஞ்சிப் பூக்கள் பூத்திருந்தது ______________________.

தமிழ்

உயிர்க்கோளம்

மலையும் கடலும் காடும் கொண்ட உலகம் பிறந்து அளவற்ற காலம் ஆகிவிட்டது. காய்கின்ற கதிரவன் சுழன்றபோது சிதறி வந்த ஒருபகுதி, உருண்டை வடிவம் பெற்றுத் தானும் சுழன்றது. நெருப்புக்கோளமாக இருந்த அது, காலப்போக்கில் குளிர்ந்தது. நீரும் நிலமும் தோன்றின. உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற உயிர்க்கோளமாக அது மாறுவதற்குச் சுமார் நூற்றைம்பது கோடி ஆண்டுகளுக்கும் மேலானது. உயிர்கள் முதன்முதலில் நீரில் தோன்றின. அவை நாளடைவில் நிலத்திலும் பரவின. பின்னர், அவை படிப்படியாக நிற்பன, ஊர்வன, பறப்பன, நடப்பன, மனிதன் என வளர்ச்சி நிலைகளைப் பெற்றன. அண்டத்தில் நிலவும் சந்திரன், செவ்வாய் முதலான கோள்களில் உயிரினங்கள் வாழ இயலா. நிலத்தில் மட்டுமே உயிர்கள் வாழ இயலுமாதலால், அதனை உயிர்க்கோளம் என வழங்குகிறோம்.

உயிரினங்களின் இயல்பை அறிஞன் ஆராய்ந்தான். ஓரறிவு முதலாக ஆறறிவுயிர் ஈறாகப் பிரித்தான். ஆறறிவு பெற்ற மனிதன் உயிரினக் குன்றின் மணிமுடியாக வீற்றிருக்கிறான். மனிதனின் அறிவும் ஆற்றலும் அளப்பரியன. மனிதனே உயிர்க்கோளத்தின் மையம். இன்று அதன் பல பக்கங்களிலும் மனித இனங்கள் பல வாழ்கின்றன. உயிர்க்கோளத்தின் இயற்கைச் சூழலுக்கும் மனித வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

நிலத்தின் மேற்பரப்பு

உயிர்க்கோளம் தன்னகத்தே பல இயற்கைக்காட்சிகளைக் கொண்டுள்ளது. பரந்த வான்வெளியும், உயர்ந்த மலை முகடும், மலைவீழ் அருவியும், வற்றாமல் வளம் பரப்பும் ஆறும், கவின்மிகு சோலையும், கனிதரும் மரங்களும், கண்ணைக்கவரும் வண்ண மலர்களும், கருத்தைக் கவரும் வியத்தகு உயிரினங்களும் அதன் நிலைக்களன்கள் ஆகும். உயிரிகளின் வாழ்க்கை இயற்கைச் சூழ்நிலைகளாகிய நீரையும் காற்றையும் கொண்டு நடைபெற்று வருகின்றது. இங்குப் பலவித இயற்கைக் காட்சிகள் நிலவியுள்ள போதிலும், அவையாவும் மாற்றத்திற்கு உட்பட்டவை. மலைகள், ஆறுகள், சமவெளிகள் முதலியன அன்றிருந்ததுபோல இன்று இல்லை. அவை பல மாற்றங்களைப் பெற்றுள்ளன. சான்றாக, அன்றிருந்த பூம்புகாரும், தனுசுக்கோடியும் இன்று கடலுக்குள் மூழ்கிவிட்டன.

கடற்கரைக் கோவில்களுள் மாமல்லபுரம் ஒன்றுதான் எஞ்சியுள்ளது. எரிமலைகள் மற்றும் நிலநடுக்கங்களால் நிலப்பகுதிகள் கடலில் மூழ்கிவிடுவதும், புதிய நிலத் தோற்றங்கள் உருவாவதும் உண்டு.

கடல் வளம்

உயிர்க்கோளம் என்றால், நாம் வாழும் நிலப்பகுதியை மட்டும் கருத்தில் கொள்ளாமல், அதில் அடங்கியுள்ள நீர்ப்பகுதியையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும். நிலத்தின் மேற்பரப்பில் முக்கால் பங்கு கடல்நீர் சூழ்ந்துள்ளது. கடல், என்றும் வற்றாத நீர் நிலையாகும். அது, தட்பவெப்பநிலையை ஒழுங்குபடுத்துகிறது. கடல் நீர் ஆவியாக மாறி, மேகங்களாகத் திரண்டு மழையாகப் பொழிகிறது. வளம் குன்றாத மீன்துறையாகக் கடல் பயன்படுகிறது; மனித வாழ்க்கைக்குத் தேவையான உப்பு, தாதுப்பொருள் முதலியவற்றை வழங்குகின்றது. முத்து, பவளம், கிளிஞ்சல், கடற்பஞ்சு, சங்கு முதலிய பொருள்களை அளிக்கின்றது. கடலில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன.

வளிக்கோளம்

நிலப்பரப்பில் கடல்நீர் சூழ்ந்துள்ளதுபோலவே, காற்று மண்டலமும் மேலே பரவியுள்ளது. நீர்ப்பாகத்தை நீர்க்கோளம் என்றும், காற்றுமண்டலத்தை வளிக்கோளம் என்றும் கூறுவர். காற்றுமண்டலம் ஒரு கலவை. அதில் உயிர்வளி (ஆக்சிசன்) 21 %, உப்புவளி (நைட்டிரசன்) 78 %, மற்ற வளிகள் 1 % கலந்துள்ளன. உயிரினங்கள் வாழும் பகுதியில் உள்ள நிலம், நீர், காற்று போன்றவை அடங்கிய நிலை சுற்றுச்சூழல் எனப்படும்.

உலக வளிக்கோளம், உயரத்தையும் வெப்பநிலையையும் அடிப்படையாகக்கொண்டு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவுகளில் குறிப்பிடத்தக்கவை அடிவளி மண்டலம், மேல்வளி மண்டலம் ஆகியன. அடிவளிமண்டலம் நிலத்தின் வெப்பநிலையை ஒரே சீரான நிலையில் வைத்திருக்கப் பெரிதும் உதவுகிறது. புவிக்கு வரும் வெப்பத்தைச் சீர்செய்து அனுப்ப, பசுமைக் கூண்டுபோல் இம்மண்டலம் செயல்படுகிறது. மேல்வளி மண்டலத்திலுள்ள உயிர்வளிப் படலம் (ஓசோன்) உயிர்கள் செழிக்க இயற்கை அளித்திருக்கும் பாதுகாப்பு அரணாகும். கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்கள் நிலப்பரப்பைத் தாக்காத வகையில் இப்படலம் தடுக்கிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த உயிர்வளிப் படலத்தில் (ஓசோன்) சிதைவு ஏற்பட்டிருப்பது தற்பொழுது கண்டறியப்பட்டுள்ளது. குளிர்பதனப்பெட்டியில் பயன்படுத்தப்படும் குளோரோ ஃபுளுரோ கார்பன், இவ்வுயிர் வளிப்படலத்தைச் சிதைப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது.

சுற்றுச்சூழல் மாசடைதல்

நிலம், நீர், காற்று ஆகிய மூன்றும் முறையே திண்ம, நீர்ம, வாயுப்பொருள் கழிவுகளால் சீர்கேடு அடைகின்றன. மக்களால் அன்றாடம் பயன்படுத்தப்பட்ட பிறகு கழிவாக மாறும் குப்பைகள், விவசாயக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள் முதலியவற்றால் நிலம் மாசடைகிறது. வீடுகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர், ஆலைகள் வெளியேற்றும் வேதியியல் கழிவுகள் இவற்றாலும் நீர் மாசடைகிறது. போக்குவரத்து ஊர்திகள், தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் நச்சுப்புகை, அணுமின்நிலையங்கள் வெளியேற்றும் கதிரியக்க மாசு முதலியவற்றினால் காற்றும் பெருமளவு மாசடைந்து வருகிறது. சூழலைக்

கெடுக்கும் இக்காரணிகளை உரிய முறையில் சீர்செய்து சூழலைப் பாதுகாப்பது இன்றியமையாதது.

மாசு நீக்கும் வழிமுறைகள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மரங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. உயிரினங்களைக் காக்க வனங்களை உருவாக்கிப் பாதுகாப்பது இன்றியமையாததாகும். மரங்களைத் தொடர்ந்து அழித்து வருவதனால் நிலச்சரிவு, மண்ணரிப்பு, மழையின்மை ஆகியவை நிகழ்கின்றன. எனவே, மழைவளம் பெருகவும் சூழலைப் பாதுகாக்கவும் மரங்களை வளர்த்தல் வேண்டும். நிலமகளின் காய்ச்சலுக்கு மரங்களே நல்ல மூலிகைகளாகும். நலமான சூழல் நிலவியபோது குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான்; இன்றைய சூழலில் என்ன பிறக்குமோ? என மாசுபடிந்த சூழலை விளக்குவர் புதுக்கவிஞர். விண்ணை வெற்றிகொள்ளும் முனைப்பில் மண்ணை இழக்காமல் பாதுகாப்பது நம் கடமையாகும்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. முதன்முதலில் உயிர்கள் ______________ தோன்றின.
2. மனிதன் உயிரினக்குன்றின் ______________த் திகழ்கிறான்.
3. மழைவளம் பெருக ______________ வளர்த்தல் வேண்டும்.
4. கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்களைத் தடுப்பது ____________ படலம்.

ஆ) குறுவினாக்கள்

1. நிலக்கோளத்தை உயிர்க்கோளம் என அழைப்பதேன்?
2. உயிர்க்கோளத்தில் காணப்படும் இயற்கைக்காட்சிகள் யாவை?
3. கடலிலிருந்து நமக்குக் கிடைக்கும் பொருள்கள் யாவை?
4. வளிமண்டலம் பற்றிக் குறிப்பு வரைக.
5. உயிர்க்கோளம் மாசடைவதற்கான காரணங்கள் யாவை?

இ) சிறுவினாக்கள்

1. நிலக்கோளத்தில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி எழுதுக.
2. வெப்பமயமாதல் – விளக்குக.
3. உயிர்க்கோளத்தைப் பாதுகாக்கும் வழிமுறைகள் யாவை?

ஈ) நெடுவினா

உயிர்க்கோளத்தில் ஏற்படும் மாசுகளையும் அவற்றை நீக்கும் வழிமுறைகளையும் விவரிக்க.

நல்ல உள்ளம்

சரியாகப் பத்து ஆண்டுகளுக்குமுன் இதுபோன்ற ஒரு காலை நேரத்தில்தான் சண்முகத்தை நான் முதன்முதலாகப் பார்த்தேன். அன்று, அவர் வீட்டுத்திண்ணையில் நானும் நம்மாழ்வாரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அவருடைய ஒன்பது வயதுடைய பேரனும் எட்டு வயதுடைய பேத்தியும் முற்றத்து வேப்பமர நிழலில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். வலக்கைப் புறத்திலிருந்த நீண்ட தொழுவில் பத்துப் பதினைந்து பசுக்களும், ஐந்தாறு எருமைகளும் தீவனம் தின்றுகொண்டிருந்தன. வீட்டில் வேறு யாரும் இல்லை. எல்லாரும் காடுகரைகளுக்குப் போயிருந்தனர்.

ஐந்தாறு நாளில் நான் திருநெல்வேலிக்குப் போவதாக இருந்த செய்தியைச் சந்தர்ப்பவசமாக நம்மாழ்வாரிடம் சொன்னேன். திருநெல்வேலியில் தமக்கு ஒரு நல்ல போர்வை வாங்கி வரவேண்டும் என்று அவர் என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தபோது, “ஐயா! கும்பிடுகிறேன்” என்ற குரல் கேட்டு, நானும் அவரும் திரும்பிப் பார்த்தோம். முற்றத்தில் சண்முகம் நின்று கொண்டிருந்தான்.

“வாப்பா, சண்முகம்!” என்றார் நம்மாழ்வார். பிறகு, “வா, இப்படி உட்காரு” என்று சொல்லிப் பக்கத்துத் திண்ணையை அவனுக்குச் சுட்டிக் காட்டினார்.

ஆனால், அவன் வந்து உட்காரவில்லை. மரியாதையோடு முற்றத்திலேயே நின்று கொண்டிருந்தான்.

“இவருக்கு எந்த ஊரோ ?” என்று நம்மாழ்வாரைக் கேட்டேன்.

“மந்தித்தோப்பு!” என்றார் நம்மாழ்வார்.

அது எங்கள் ஊரில் இருந்து ஆறு மைல் தூரத்தில் இருக்கும் கிராமம்.

சண்முகம், தான் வந்த காரியத்தைப் பேசத் தொடங்கினான்.

“ஐயா! நோட்டு விசயமாத்தான் உங்களைப் பார்க்க வந்தேன்” என்றான்.

“நோட்டு விஷயமா ? போன மாசத்துக்கு முந்தின மாசந்தானே வட்டியைக் கொண்டாந்து குடுத்தே ? அதுக்குள்ளே என்ன ?”

“ஐயா! அந்த நோட்டை இன்னும் பத்து ஆண்டு ஆனாலும் என்னாலே மீட்க முடியும்னு தோணல்லே. நானும் ஆனமட்டும்தான் பார்க்கிறேன். வரவுக்கும் செலவுக்கும் சரியாய்த்தான் இருக்கு. ஒரு காசு மிஞ்சல்லே. ரெண்டு ஆண்டு போனால், என்னாலே வட்டிகூடக் கட்ட முடியாது போலிருக்கு. குடும்பமும் நாளுக்குநாள் பெரிசாகிக்கிட்டே வருது. போன மாசம்கூட எனக்கு ஒரு கொளந்தை...” என்று சங்கோஜத்துடன் சொல்லி நிறுத்தினான் சண்முகம்.

தமிழ்

நம்மாழ்வார் இலேசாகச் சிரித்துக்கொண்டு, “என்ன குழந்தை ? ஆணா ? பெண்ணா ?” என்று கேட்டார்.

ஆம்பளைப் புள்ளைதான் ஐயா!”

“போகட்டும் போகட்டும். உனக்கு இப்போ எத்தனை குழந்தை ?”

“கடவுள் புண்ணியத்திலே அஞ்சு கொளந்தை இருக்கு, ஒரு பொண்ணும் நாலு ஆணுமா”

“சரி! நோட்டைத் திருப்ப முடியல்லேன்னா என்ன செய்யப் போறே ?”

“அதனைச் சொல்லத்தான் வந்தேன். என் நெலத்தை எடுத்துக்குங்க” என்று சுருக்கமாகச் சொன்னான் சண்முகம்.

“ரொம்பக் கெட்டிக்காரன்டா, ரொம்பக் கெட்டிக்காரன்! இந்த மாதிரி யோசனை வேறே யாருக்குத் தோணும் ?” என்று சொன்ன நம்மாழ்வார், என்னைப் பார்த்துத் திரும்பி, சண்முகம் கடன் வாங்கிய விவரத்தைக் கூறினார்.

மூன்று ஆண்டுகளுக்குமுன், தன் தங்கை கல்யாணத்துக்கும், தன் குடும்பச் செலவுக்குமாகச் சேர்த்து நம்மாழ்வாரிடம் அவன் ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கியிருக்கிறான். சொந்த ஊரில் அவனுடைய நான்கு ஏக்கர் நிலத்தின் பேரில் அவ்வளவு தொகையைக் கடன் கொடுக்க யாரும் தயாராக இல்லை. அதனால் ஆறு மைல் தூரம் ஊர்விட்டு ஊர் நடந்துவந்து, நம்மாழ்வாரிடம் நோட்டு எழுதிக்கொடுத்துப் பணம் வாங்கியிருக்கிறான். ஆண்டு தவிராமல் வட்டியும் செலுத்திக்கொண்டு வந்தானாம். இப்போது, கடனைக் கட்ட தனக்குச் சக்தி இல்லை என்று சொல்லி நிலத்தை எடுத்துக்கொள்ளும்படி நம்மாழ்வாரைக் கேட்டுக்கொள்ள வந்திருக்கிறான்.

அவனுடைய நிலம் ஐந்நூறு ரூபாய் பெறுமா என்பது எனக்குத் தெரியாது. நம்மாழ்வாரின் நல்ல குணத்தைக் கண்டு அவரை அவன் ஏமாற்றிவிடக் கூடாதே என்று நினைத்தேன். அதனைச் சூசகமாக அவருக்குத் தெரிவிக்கவும் முடியவில்லை. எனினும், நிலம் நன்றாக விளையவில்லையோ, அதனால்தான் கடன் கட்ட முடியவில்லையோ என்று கேட்பவனைப்போல், “நிலம் எப்படி ?” என்று சண்முகத்தைக் கேட்டேன்.

உடனே நம்மாழ்வார் இடைமறித்து, “நிலம் எப்படி இருக்கும் ? இவனுக்கு இருப்பதே அந்த நாலு ஏக்கர்தான். அதனைக் கண்ணும்கருத்துமா உழுது உரம்போட்டு வச்சிருப்பான். ஏழைநிலம் தரிசாகக் கிடக்குமா ?” என்றார். “நிலத்தை எனக்குக் குடுத்திட்டு நீ பிள்ளை குட்டிகளை எப்படிக் காப்பாத்துவே ?” என்று சண்முகத்தைக் கேட்டார்.

அப்பொழுது அவன் ஒரு கணக்குப் போட்டுக் காட்டினான்:

“ஐயா! இந்த நாலு ஏக்கரிலே பாடுபட்டால், என் குடும்பத்துக்கு ஆறுமாசச் செலவுக்குத்தான் சரியாயிருக்கு. மிச்சம் ஆறுமாசமும் கூலிவேலைக்குப் போய்த்தான் குடும்பத்தைக் காப்பாத்தி வர்றேன். உங்களுக்கு நெலத்தை விட்டுட்டால் ஆண்டுமுழுவதும் கூலிவேலைக்குப் போவேன். கணக்குப் பார்த்தால், எனக்கு நெலம் இருக்கிறதும் ஒண்ணுதான்; இல்லாததும் ஒண்ணுதான்.

“அதனாலே நிலத்தைக் குடுத்திட்டா உனக்கு நஷ்டமில்லே என்கிறே?”

“நஷ்டமுமில்லே. அதே சமயத்திலே கடனும் தீர்ந்துபோகும்.

சண்முகத்தின் கணக்கைக் கேட்டுவிட்டு நம்மாழ்வார் மற்றொருமுறை சிரித்தார். அவன் புத்திசாலித்தனத்தையும் நேர்மையையும் என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

நம்மாழ்வார் தலையைக் குனிந்துகொண்டு சிறிதுநேரம் யோசனை செய்தார். ஏதோ நினைவுக்கு வந்தவர்போல், தொழுவை இக்கடைசியிலிருந்து அக்கடைசிவரை பார்த்தார்.

“சண்முகம்! அந்தா கிடக்கிற புல்லுக்கட்டை அவுத்து, அந்தக் கோடியிலே நிக்கிற வெள்ளைப் பசுவுக்கு முன்னாலே கொண்டுபோய்ப் போடு. தீவனம் இல்லாமல், பக்கத்துப் பசுவுக்கு முன்னாலே கிடக்கிற புல்லுக்குத் தலையைத் தலையை நீட்டுது” என்றார் நம்மாழ்வார்.

சண்முகம் அப்படியே போய், அந்தப் பசுவுக்குமுன் புல்லைப் போட்டுவிட்டு வந்தான். வந்து, “புல்லு நெறையத்தான் கிடக்கு. அது சும்மாதான் தலையை அந்தப்பக்கம் நீட்டுது” என்று சொன்னான்.

அப்பொழுது நம்மாழ்வாரின் பேரன் முற்றத்திலிருந்து வந்து எங்கள் பக்கத்தில் உட்கார்ந்தான். சிறிதுநேரம் எல்லாரும் மௌனமாக இருந்தோம்.

“ஐயா, அப்போ என்ன சொல்றீக? எனக்கும் நேரமாகுது” என்று தன் விஷயத்தை நம்மாழ்வாருக்கு ஞாபகமூட்டினான் சண்முகம்.

சிரித்த முகத்தோடு அவனைப் பார்த்துக்கொண்டு, “சண்முகம்! உனக்குப் படிக்கத் தெரியுமா?” என்று, அவர் கேட்டார்.

சம்பந்தமில்லாத இந்தக் கேள்வி எனக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணியது.

“நான் எங்கே படிச்சேன், ஐயா? நோட்டுலேகூட நான் ரேகைதானே வைச்சேன்?”

“அதுதானே கேட்டேன்! உனக்குக் கையெழுத்துக்கூடப் போடத் தெரியாது. ஆனால், எனக்குப் போடத் தெரியும். கையெழுத்துப் போடத் தெரியாத உனக்கு இப்படிக் கணக்குப் போடத் தெரிஞ்சிருந்தால், கையெழுத்துப் போடத் தெரிஞ்ச எனக்கு எப்படியெல்லாம் கணக்குப் போடத் தெரியும்னு யோசனை பண்ணிப் பார்த்தியா? நீ நிலத்தை வச்சிருந்தாலும் ஒண்ணு; எனக்குக் குடுத்தாலும் ஒண்ணு. நெலத்தைக் குடுக்கிறதனாலே உனக்கு நஷ்டமில்லை. வாஸ்தவம். ஆனால், அந்த நிலத்தை நான் எடுத்துக்கிட்டால் எனக்கு லாபம் இருக்கணுமில்லே? உன் நிலம் – அதுவும் ஆறு மைலுக்கு அந்தப் பக்கம் அடுத்த ஊரிலே இருக்கிற நாலு ஏக்கர் – எனக்குக் கிடைக்கிறதனாலே, என் உடம்பு எவ்வளவு பருக்கும்? எத்தனை கோபுரம் என்னாலே கட்ட முடியும்?”

“அப்படியா சொல்றது?” என்றான் சண்முகம்.

“வேறே எப்படிச் சொல்றது? உன் கணக்குப்படி நிலத்தைக் குடுக்கிறதனாலே உனக்கு நஷ்டமில்லை. என் கணக்குப்படி, நிலத்தை எடுத்துக்கிறதனாலே எனக்கு லாபமுமில்லை” என்று கூறிவிட்டுச் ‘சரி தானே?’ எனச் சிறு குழந்தையைப்போல் என்னைப் பார்த்துக் கேட்டார்.

நான் என்ன பதில் சொல்லுவது ?

“நீங்க நெலத்தை எடுத்துக்கிடலேன்னா என் கடன் தீராதே! உள்ளூரிலேயே வித்துப் பணத்தைக் குடுத்திறலாம்னுதான் பார்த்தேன். ஆனால், வலிய விக்கப் போகிறபோது ஏக்கரை ஐம்பது ரூபாய்க்குக் கேக்கக்கூட ஆளில்லை. அநியாயமாக் கொறைச்சிக் கேக்கிறாக!”

அந்தச் சமயத்தில் நம்மாழ்வாரின் பேத்தியும் திண்ணைக்கு வந்தாள்.

அவர் ஒன்றும் சொல்லாமல் வீட்டுக்குள்ளே எழுந்துபோய், ஐந்து நிமிஷங்களுக்குள் சண்முகம் எழுதிக்கொடுத்த புரோநோட்டுடன் வெளியில் வந்தார். “சண்முகம்! இப்படி வா” என்று அவனைக் கூப்பிட்டார். அவன் அருகில் வந்ததுதான் தாமதம், நோட்டை இரண்டாகக் கிழித்து அவன் கையில் கொடுத்துவிட்டார், நம்மாழ்வார்.

சண்முகத்தின் கைகள் நடுங்கின. இரண்டு கைகளையும் தலைக்குமேல் தூக்கி, “ஐயா..!..” என்று என்னவோ சொல்ல முன்வந்தான்.

நம்மாழ்வார் தன் பேத்தியைப் பார்த்து, “ருக்மிணி, சண்முகத்துக்கு மோர் கொண்டுவந்து குடு. நம்ம பசுவுக்கு, அவன் புல்லெல்லாம் எடுத்துப் போட்டான் பார்த்தியா ? போ, சீக்கிரம் கொண்டு வா” என்றார்.

சண்முகத்தைத் திரும்பியே பார்க்காமல் என் பக்கம் திரும்பிக்கொண்டு, “தம்பி! நான் சொன்னதை மறந்திறாதே. நல்ல போர்வையா இருக்கணும், பார்த்து வாங்கி வா” என்று பேச்சை மாற்றினார்.

அப்போது ருக்மிணி, ஒரு பெரிய செம்பைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு வந்து சண்முகத்திடம் கொடுத்தாள். வாங்கிப் பார்த்தால் அதில் மோர் இல்லை; பால் இருந்தது.

தெரியாமல், பால் பானையில் மொண்டுகொண்டு வந்துவிட்டாள் குழந்தை!

“தம்பி, நம்ம பேத்தி எப்படி ?” என்று என்னிடம் சொல்லிவிட்டு நம்மாழ்வார் சிரித்தார்.

எனக்கு மெய் சிலிர்த்தது.

“உங்கள் கணக்கை உங்கள் பேத்தியும் படித்துக் கொண்டாள்” என்று நான் சொன்னதும், அவர் அப்படியே அந்தக் குழந்தையைத் தமது மடிமீது இழுத்து வைத்துக்கொண்டு கொஞ்சியதும் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கின்றன.

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. சண்முகம், தன் நிலத்தை நம்மாழ்வாரையே எடுத்துக்கொள்ளுமாறு கூறியது ஏன் ?
2. நம்மாழ்வார் போட்ட கணக்கு என்ன ?

யாப்பு : செய்யுள் உறுப்புகள்
(அடி, தொடை)

அடி

சீர்கள் பல அடுத்து நடப்பது அடி எனப்படும். குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என அடி ஐவகைப்படும்.

1. குறளடி : அடிதோறும் இருசீர்களைப் பெற்று வருவது குறளடி எனப்படும்.

(எ.கா.) முக்தி வேண்டுமேல்
பக்தி வேண்டுமால்
சத்தி யம்இது
புத்தி நெஞ்சமே.

2. சிந்தடி : அடிதோறும் முச்சீர்களைப் பெற்று வருவது சிந்தடி எனப்படும்.

(எ.கா.) பழுதி லாத பயிர்த்தொழில்
பழுதி லாது பயிற்றவே
பழுதி லாது பலதொழில்
பழுதி லாது பயிற்றினர்.

3. அளவடி : அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது அளவடி அல்லது நேரடி எனப்படும்.

(எ.கா.) தாய்மொழி தாயினும் தகவிற் போற்றுவன்
ஆய்மொழி யாளர்தம் அன்புக்கு ஏற்றவன்
காய்மொழி யாவதுங் கடிந்து மாற்றுவன்
வாய்மொழி தப்பிடா வகையில் ஆற்றுவன்

4. நெடிலடி : அடிதோறும் ஐந்து சீர்களைப் பெற்று வருவது நெடிலடி எனப்படும்.

(எ.கா.) ஆடும் கடைமணி நாஅசை யாமல் அகிலமெங்கும்
நீடும் குடையைத் தரித்த பிரானிந்த நீள்நிலத்தில்
பாடும் புலவர் புகழ்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழனென் றேயெனைச் சொல்லுவரே!

5. கழிநெடிலடி : அடிதோறும் ஆறு அல்லது அதற்குமேற்பட்ட பல சீர்களைப் பெற்று வருவதனைக் கழிநெடிலடி எனக் கூறுவர்.

(எ.கா.) வாழ்வினில் செம்மை வேண்டும்
வாய்மையே பேசல் வேண்டும்
பாழ்ச்செயல் விலக்கல் வேண்டும்
பண்பினைக் காத்தல் வேண்டும்

தாழ்வினை அகற்ற வேண்டும்
தருக்கினை விடுதல் வேண்டும்
சூழ்நிலை உணர்தல் வேண்டும்
சோம்பலைப் போக்க வேண்டும்

இப்பாடல் அடிதோறும் ஆறுசீர்கள் பெற்றுள்ளதனால், இதனைக் கழிநெடிலடி என்பர். பாடலிலுள்ள சீர்களை எண்ணி, இதனை அறுசீர்க்கழிநெடிலடி என்பர். இதுபோல் ஏழுசீர்கள் இருந்தால் எழுசீர்க்கழிநெடிலடி என்றும், எட்டுச் சீர்கள் இருந்தால் எண்சீர்க்கழிநெடிலடி என்றும் கூறுவர்.

தொடை

மலர்களைத் தொடுப்பதுபோலவே சீர்களிலும் அடிகளிலும் மோனை முதலியன அமையத் தொடுப்பது தொடை எனப்படும். (தொடை – தொடுக்கப்படுவது; தொடை – மாலை). பாவின் ஓசையின்பத்திற்கும் சிறப்பிற்கும் இத்தொடை வேண்டுவதாகும். தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்பது பழமொழி.

தொடை எண்வகைப்படும். அவை : 1. மோனைத்தொடை, 2. எதுகைத்தொடை, 3. முரண்தொடை, 4. இயைபுத்தொடை, 5. அளபெடைத்தொடை, 6. இரட்டைத்தொடை, 7. அந்தாதித் தொடை, 8. செந்தொடை.

அவற்றுள் முதல் ஐந்து தொடைக்கான விளக்கங்களைக் காண்போம்.

1. மோனைத்தொடை : செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத் தொடை எனப்படும்.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. – குறள், 467

இக்குறட்பாவில் முதல் அடியின் முதற்சீரிலுள்ள முதல் எழுத்தும் (எ) இரண்டாம் அடியின் முதற்சீரிலுள்ள முதல் எழுத்தும் (எ) ஒன்றி வந்துள்ளதனால், இது மோனைத்தொடை.

2. எதுகைத் தொடை : அடிதோறும் முதலெழுத்து அளவொத்து (ஓசையில்) நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத்தொடை எனப்படும்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. – குறள், 1

இக்குறட்பாவில் முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் க என்னும் இரண்டாம் எழுத்து ஒன்றி வந்துள்ளது. எனவே, இஃது அடியெதுகைத்தொடை எனப்படும்.

3. முரண் தொடை : அடிதோறும் முதற்சீர் முரண்படத் தொடுப்பது அடிமுரண்தொடை எனப்படும்.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். – குறள், 628

இப்பாடலில் முதலடியில் இன்பம் என்றும், இரண்டாம்அடியில் துன்பம் என்றும் முரண்பட்ட சொற்கள் வந்துள்ளன. எனவே, இஃது அடிமுரண்தொடை எனப்படும்.

4. இயைபுத்தொடை : அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது அடிஇயைபுத்தொடை எனப்படும்.

கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டத் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம்விளை யாடும்.

இப்பாடலில் அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றி வந்துள்ளதனால் அடிஇயைபுத் தொடை ஆயிற்று.

5. அளபெடைத் தொடை : அடிதோறும் முதல் சீர் அளபெடுத்து வருவது அடியளபெடைத் தொடை எனப்படும்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. – குறள், 15

இப்பாடலில் கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என இரண்டடிகளிலும் அளபெடுத்து வந்துள்ளமையால், அடியளபெடைத் தொடை எனப்படும்.

தொடை விகற்பங்கள்

நான்குசீர்களையுடைய ஓரடியில் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றனைக்கொண்டு தொடுப்பது தொடை விகற்பம் எனப்படும். இவ்வேழும் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகிய ஐந்தும் பொருந்தத் தொடை விகற்பம் முப்பத்தைந்து வகைப்படும்.

மோனை

1. இணைமோனை (1, 2)

நாலடி கொண்ட சீருள் முதலிரு சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இணைமோனை எனப்படும்.

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. – குறள், 99

2.பொழிப்பு மோனை (1, 3)

ஓர் அடியுள் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் முதலெழுத்து ஒன்றி வருவது பொழிப்பு மோனை எனப்படும்.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று. – குறள், 22

3. ஒரூஉ மோனை (1, 4)

ஓர் அடியுள் முதற் சீரிலும் நாலாம் சீரிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, ஒரூஉ மோனை எனப்படும்.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். – குறள், 28

4. கூழைமோனை (1, 2, 3)

ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றி வருவது கூழைமோனை எனப்படும்.

தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். – குறள், 19

5. மேற்கதுவாய் மோனை (1, 3, 4)

ஓர் அடியுள் முதல், மூன்று, நாலாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் மோனை எனப்படும்.

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துள்நின்று டற்றும் பசி. – குறள், 13

6. கீழ்க்கதுவாய்மோனை (1, 2, 4)

ஓரடியுள் முதல், இரண்டு, நாலாம் சீர்களில் முதல்எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் மோனை எனப்படும்.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. – குறள், 5

7. முற்றுமோனை (1, 2, 3, 4)

ஓர் அடியின் நாலு சீர்களிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்றுமோனை எனப்படும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. – குறள், 391

குறிப்பு: நாலு சீர்களில் மோனைக்குரிய விகற்பங்கள் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என ஏழிற்கும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது போலவே எதுகையும் வரும்.

எதுகைத்தொடை

1. இணை எதுகை (1, 2)

முதலிரு சீர்களின் முதலெழுத்து அளவொத்து நிற்க (ஓசையளவில்) இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இணைஎதுகை எனப்படும்.

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். – குறள், 225

2. பொழிப்பு எதுகை (1, 3)

ஓர் அடியுள் முதற் சீரிலும் மூன்றாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது பொழிப்பு எதுகை எனப்படும்.

அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி. – குறள், 245

3. ஒரூஉ எதுகை (1, 4)

ஓர் அடியுள் முதல் சீரிலும் நாலாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது ஒரூஉ எதுகை எனப்படும்.

அருளிலார்க் கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு. – குறள், 247

4. கூழை எதுகை (1, 2, 3)

ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கூழை எதுகை எனப்படும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. – குறள், 350

5. மேற்கதுவாய் எதுகை (1, 3, 4)

ஓர் அடியுள் முதல், மூன்று, நாலாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் எதுகை எனப்படும்.

அழக்கொண்ட எல்லாம் அழப்போம், இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. – குறள், 659

6. கீழ்க்கதுவாய் எதுகை (1, 2, 4)

ஓர் அடியுள் முதல், இரண்டு, நாலாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் எதுகை எனப்படும்.

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். – குறள், 629

7. முற்றெதுகை (1, 2, 3, 4)

ஓர் அடியுள் உள்ள நாற்சீர்களிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்றெதுகை எனப்படும்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. – குறள், 12

தொடை விகற்பம்	சீர்கள்			
	1	2	3	4
இணை	★	★		
பொழிப்பு	★		★	
ஒரூஉ	★			★
கூழை	★	★	★	
மேற்கதுவாய்	★		★	★
கீழ்க்கதுவாய்	★	★		★
முற்று	★	★	★	★

மேற்கண்ட அட்டவணைக்கேற்ப இயைபு, முரண், அளபெடையைப் பொருத்திக் காண்க.

பயிற்சி

1. சிந்தடி வருமாறு (அடிதோறும் மூன்றுசீர்கள்) ஆறு அடியளவில் ஒரு பாடலை எழுதுக.
2. பின்வரும் அடிகளில் காணும் தொடை வகைகளை எடுத்தெழுதுக.

அ) இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்

ஆ) சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்

தமிழ்

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. தொடை ________________ வகைப்படும்.

அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு

2. முதல், மூன்று, நாலாம் சீர்களில் மோனை ஒத்து வருவது.

அ) முரண் ஆ) மேற்கதுவாய் இ) கீழ்க்கதுவாய்

3. அளவடிக்கு ____________________ என்னும் வேறுபெயருண்டு.

அ) குறளடி ஆ) சிந்தடி இ) நேரடி

4. இணையெதுகை என்பது __________,__________ சீர்களில் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

அ) 1, 2 ஆ) 1, 3 இ) 1, 4

2. பொருத்துக.

கூழை	–	1,3,4 சீர்களில் வரும்.
மேற்கதுவாய்	–	1,2,3,4 சீர்களில் வரும்.
கீழ்க்கதுவாய்	–	1,2,3 சீர்களில் வரும்
முற்று	–	1,2,4 சீர்களில் வரும்.

ஆ) குறுவினாக்கள்

1. அடி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. சிந்தடி என்றால் என்ன ? சான்று தருக.
3. அளவடி என்றால் என்ன? சான்று தருக.
4. நெடிலடியை விளக்குக.
5. தொடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. தொடைவிகற்பம் என்றால் என்ன?

அணி

"அவள் நடந்து வந்தாள்."

"அவள் அன்னம்போல் நடந்து வந்தாள்."

இவ்விரு தொடர்களைப் படித்துப் பாருங்கள். முதல் தொடர் இயல்பாக உள்ளது. அடுத்த தொடர் படிப்பதற்கு இனிமை தருகிறது.

பெண்ணொருத்தி, தன் இயல்பான அழகை ஆடை, அணிகலன்கள் அணிந்து, ஒப்பனைசெய்து கொள்வதுபோலப் புலவர், தம் கற்பனை ஆற்றலாலும் மொழிப்புலமையாலும் சொல்லிலும் பொருளிலும் அழகு சேர்த்துப் பாடல்கள் இயற்றுவர்.

இத்தகைய செய்யுள்களில் காணப்படும் அழகே அணி எனப்படும். இதனால், சொல்லப் புகும் கருத்து எளிதில் விளங்கும்; படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் இனிமை சேர்க்கும்.

அணிகள் சிலவற்றை இங்குக் காணலாம்.

1. ஏகதேச உருவக அணி

கவிஞர், தாம் எடுத்துக்கொண்ட பல பொருள்களை உருவகப்படுத்திக் கூறும்போது ஒன்றனை மட்டும் உருவகப்படுத்தி, அதனோடு தொடர்புடைய மற்றொன்றனை உருவகப்படுத்தாமல் விடுவது, ஏகதேச உருவக அணி எனப்படும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். – குறள், 10

இக்குறட்பாவில் பிறவியைக் கடலாக உருவகப்படுத்திவிட்டு, அதனைக் கடக்க உதவும் இறைவனடியைத் தெப்பமாக உருவகப்படுத்தாமையால், இஃது ஏகதேச உருவக அணி ஆயிற்று.

2. நிரல்நிறை அணி

சொல்லையும் பொருளையும் வரிசையாக (நிரலாக) நிறுத்தி, நேரே பொருள் கொள்வது நிரல்நிறை அணி யாகும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. – குறள், 45

இக்குறட்பாவைப் படித்துப் பாருங்கள். "இல்வாழ்க்கையின் பண்பு எனப்படுவது அன்பு காட்டுவது. இல்வாழ்க்கையின் பயன் எனப்படுவது அறம்செய்தல் என்பதாகும்" என்பது இக்குறட்பாவின் கருத்து.

இக்குறட்பாவில் அன்பும் அறனும் முதலடியில் அமைந்துள்ளன. அடுத்த அடியில், அச் சொற்களோடு முறையாகப் பொருந்தும் வரிசைப்படி பண்பு, பயன் என்னும் சொற்கள் அமைந்துள்ளன. எனவே, இது நிரல்நிறை அணி.

தமிழ்

பயிற்சி

பின்வரும் பாடல்கள் எவ்வகை அணிகள் எனக் கண்டறிந்து எழுதுக.

அ) அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் பூன்றிய தூண்.

ஆ) விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பல பொருள்களுள் ஒன்றனை உருவகப்படுத்தி, அதனோடு தொடர்புடைய மற்றொன்றனை உருவகப்படுத்தாமல் இருப்பது ________ அணியாகும்.
2. சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, நேரே பொருள் கொள்வது ________ அணியாகும்.

ஆ) குறுவினாக்கள்

1. ஏகதேச உருவக அணி என்றால் என்ன? சான்று தருக.
2. நிரல்நிறை அணி எவ்வாறு வரும்? சான்று தந்து விளக்குக.

வகுப்பறைத்திறன்கள்

எழுதுதல் திறன் : (மாதிரி நேர்காணல்)

செய்தியாளர் : வணக்கம் ஐயா, நேர்காணலைத் தொடங்குமுன் இராசராசன் விருதுபெற்ற தங்களுக்கு எங்கள் இதழின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எழுத்தாளர் : வணக்கம், தங்கள் வாழ்த்துக்கு நன்றி.

செய்தியாளர் : தாங்கள் எழுத்துப்பணியை எப்போது தொடங்கினீர்கள் ?

எழுத்தாளர் : கல்லூரியில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தபோதே எழுதத் தொடங்கி விட்டேன்.

செய்தியாளர் : முதலில் வரலாற்றுப் புதினங்களைத்தான் எழுதினீர்களா?

எழுத்தாளர் : இல்லை. முதலில் சமூகக்கதைகள், இலக்கியக்கதைகள், வரலாற்றுச் சிறுகதைகள் ஆகியவற்றை எழுதினேன். நாளாக நாளாக வரலாற்றுக்கதைகள்மீது ஈடுபாடு அதிகமானதனால், அதிலேயே முழுக்கவனம் செலுத்தி எழுதி வருகிறேன்.

செய்தியாளர் : இதுவரை எத்தனை வரலாற்றுப் புதினங்கள் எழுதியிருக்கிறீர்கள்?

எழுத்தாளர் : இதுவரை அறுபதுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளேன். மேலும், இந்த ஆண்டில் இருநூல்களை வெளியிட இருக்கிறேன்.

செய்தியாளர் : மெத்த மகிழ்ச்சி, ஐயா. நீங்கள் மேன்மேலும் பல நூல்களை எழுதவும், பல விருதுகளைப் பெறவும் வாழ்த்துகள்.

எழுத்தாளர் : மிக்க நன்றி.

பயிற்சி : நேர்காணலை நிறைவு செய்க.

மாணவர் : வணக்கம் , ஐயா. தங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

கவிஞர் : வணக்கம், ____________________

மாணவர் : தாங்கள் முதல் கவிதையை எழுதிய சூழலைக் குறித்துச் சொல்லுங்கள்.

கவிஞர் : எங்கள் கல்லூரியில் கலை இலக்கிய விழாவிற்காகக் கவிதைப் போட்டி ஒன்று நடைபெற்றது. அப்போது ____________________

மாணவர் : அக்கவிதைக்குப் பரிசு கிடைத்ததா ?

கவிஞர் : ஆம். ____________________

மாணவர் : உங்கள் கவிதைகளுக்கான கருப்பொருளை எவ்விதம் தேர்ந்தெடுக்கிறீர்கள் ?

கவிஞர் : பெரும்பாலும் சமுதாயச் சிக்கல்களையே எனது கவிதைகளின் பாடுபொருள்களாகக் கொண்டு எழுதி வருகிறேன்.

மாணவர் : தாங்கள் இதுவரை எவ்வளவு கவிதைகள் எழுதியிருக்கிறீர்கள் ?

கவிஞர் : நான் இதுவரை ______________________

மாணவர் : நீங்கள் என்போன்ற மாணவர்களுக்குக் கூறும் அறிவுரை என்ன, ஐயா ?

கவிஞர் : ______________________

மாணவர் : இதுவரை உங்கள் கருத்துகளை எங்களோடு பகிர்ந்து கொண்டமைக்கு மிக்க நன்றி, ஐயா.

கவிஞர் : நன்றி, உங்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துகள்.

கதைக்குறிப்புகளைக் கொண்டு கதை எழுதுதல்.

பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கதை எழுதுக.

ஆடு மேய்க்கும் சிறுவன் – ஆடுகளை மேய்த்தல் – அரசர் அங்கு வருதல் – அரசருக்கு நீர் வேட்கை – சிறுவன் குளம் இருக்குமிடத்தைக் கூறுதல் – அரசன் சிறுவனை நீர்கொண்டு வருமாறு கூறுதல் – அரசர் என அறியாமை – சிறுவன் போகமுடியாது எனவும், அதற்கான காரணத்தையும் கூறுதல் – அரசர் ஆடுகளைத் தான் பார்த்துக்கொள்வதாகக் கூறுதல் – சிறுவன் மறுத்தல் –அரசரின் பரிவாரங்கள் வருதல் – சிறுவன் மனத்துணிவு – அரசன் சிறுவனைத் தன்னிடமே வேலைக்கு வைத்துக்கொள்ளுதல்.

தமிழ்

மொழித்திறன் பயிற்சி

அ) ஒருமைச் சொற்களைப் பன்மையாக மாற்றுக.

(எ.கா.) யானையின் கண் சிறியது.

யானையின் கண்கள் சிறியன.

பயிற்சி

1. காட்டு மரம் உயரமானது. ______________
2. மயில் அழகானது. ______________
3. பழம் பழுத்தது. ______________
4. நான் படித்தேன். ______________

ஆ) பன்மையை ஒருமையாக மாற்றுக.

(எ.கா.) பசுவும் கன்றும் மேய்ந்தன.

பசுவுடன் கன்று மேய்ந்தது.

பயிற்சி

1. மரத்தில் காயும் கனியும் இருந்தன. ____________________
2. சிறுவனும் சிறுமியும் வந்தனர். ____________________
3. அண்ணனும் தம்பியும் பரிசு பெற்றனர். ____________________
4. பாலும் தேனும் இனித்தன. ____________________
5. யானைப்படையும் குதிரைப்படையும் சென்றன. ____________________

இ) நினைவு கூர்க.

விடுபட்ட தமிழெண்களை எழுதுக.

51	௫௧	61		71		81		91	
52		62		72		82		92	
53		63		73		83	௮௩	93	௯௩
54		64		74		84	௮௪	94	
55		65	௬௫	75		85		95	
56	௫௬	66		76		86		96	
57		67		77		87		97	
58		68		78	௭௮	88		98	
59		69		79		89		99	
60		70		80		90		100	

ஈ) கட்டுரைப் பயிற்சி : சுற்றுச்சூழல் பாதுகாப்பு

வாழ்க்கைத்திறன்

கூர்சிந்தனைத்திறன்

அறிவழகன் எல்லாப் பாடங்களிலும் நல்ல மதிப்பெண் பெறுபவன். இதுவரை எளிதாக இருந்த கணக்குப் பாடம் ஒன்பதாம் வகுப்பிற்கு வந்த பிறகு கடினமானதாகிவிட்டது.

காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளில் மற்றப் பாடங்களைப்போல் உயர் மதிப்பெண்களைப் பெற, அவனால் இயலவில்லை. ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள அவனுக்குத்

தயக்கமாக இருந்தது. அதற்குக் காரணம், கணக்கு ஆசிரியர்மீது அவனுக்கிருந்த அச்சம்தான். இருப்பினும், கணக்குப் பாடத்தில் உயர் மதிப்பெண் பெறவேண்டும் என்னும் உந்துதல், அவன் மனத்தில் இருந்துகொண்டே இருந்தது.

பெற்றோர், கணக்குப் பாடத்தில் மதிப்பெண் ஏன் குறைந்தது எனக் கேட்டனர்; வகுப்பாசிரியரும் கணக்குப் பாடத்தில் மேலும் கவனம் செலுத்துமாறு அறிவுரை கூறினார். கணக்குப் பாடத்தில் நல்ல மதிப்பெண்கள் பெறச் சிந்தித்தவண்ணம் இருந்தான்.

1. இத்தகைய சூழல் உங்களுக்கு எப்பொழுதாவது ஏற்பட்டதுண்டா ?
2. அறிவழகன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் ?

பண்பு

சுற்றுச்சூழல் பாதுகாத்தல்

எல்லாவற்றிலும் தூய்மையை விரும்புபவன் அழகன். அவன், தன் தூய்மையைப் பேணுதலுடன், சுற்றுப்புறத் தூய்மையைப் பற்றியும் சிந்திப்பவன்; தேவையற்ற தாள்களோ பொருள்களோ கண்ணில்பட்டால், அவற்றை எடுத்துக் குப்பைத்தொட்டியில் போடுவான்.

வீட்டிலும் பள்ளியிலும் அவன் அவ்வாறே நடந்துகொள்வான். மேலும், அவன் நண்பர்களையும் தூய்மையைப் பேணுமாறு வலியுறுத்துவான். அவர்களுள் சிலர் இவனைக் கண்டாலே, “சுத்தக்காரன் வரான்டா” என ஏளனமாகப் பேசுவதும் உண்டு.

அவன், அதனைப்பற்றிக் கவலைப்படாமல் சுற்றுச்சூழல் இயக்கங்களிலும் பங்கேற்றுத் தனது பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தான். தன் வீட்டின் பின்புறம் மரக்கன்றுகளை நட்டுப் பாதுகாத்து வந்தான்.

1. தன் தூய்மையைப் பேணும் வழிமுறைகள் யாவை?
2. சுற்றுச்சூழல் இயக்கங்கள்பற்றி நீவிர் அறிந்தன யாவை?
3. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நீவிர் என்னென்ன செய்கிறீர்கள்?
4. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க என்னென்ன செய்யலாம்?

மதிப்புக்கல்வி

தீண்டாமை

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வழக்குரைஞராகச் சில ஆண்டு பணியாற்றினார். ஒருநாள், தொடர்வண்டியில் முதல்வகுப்பில் பயணம் செய்துகொண்டிருந்தார். அப்போது, அதே பெட்டியில் அவருடன் பயணம் செய்த வெள்ளையர் ஒருவர், அவரைக் கீழே இறங்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தினார்.

அதற்குக் காந்தியடிகள், தன்னிடம் முதல் வகுப்புப் பயணச்சீட்டு இருப்பதாகவும், இதில்தான் பயணம் செய்வேன் என்று கூறி இறங்க மறுத்தார். ஆனால், அந்த

வெள்ளையர் தொடர்வண்டிப் பாதுகாவலரை அழைத்துக் கறுப்புநிறம் கொண்ட இந்தியர், வெள்ளையருடன் பயணம் செய்யக்கூடாது என்று கூறிக் காந்தியடிகளைக் கீழே இறக்கிவிட்டார். நிறத்தைக் காரணம் காட்டித் தம்மைத் தீண்டத்தகாதவர் என்று கூறி ஒதுக்கும் தீண்டாமைச் செயலை எண்ணிக் காந்தியடிகள் வருந்தினார்.

வெள்ளையர், காந்தியடிகளிடம் நடந்துகொண்டது முறைதானா ?

மொழியாக்கம் செய்க.

Bamboo is one of the world's fastest growing plants. It can grow as much as 3 feet in a day. One type of bamboo grows to a height of 120 feet. Its stem is tough and hallow. Bamboo is actually a kind of grass. But unlike other grasses, most bamboos grow very tall. We use bamboo to make fishing poles and furniture. Tender bamboo shoots are eaten as vegetables.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. A wolf in sheep's clothing.
   பசுத்தோல் போர்த்திய புலி.
2. Union is strength.
   ஒற்றுமையே வலிமை.
3. No smoke without fire.
   நெருப்பில்லாமல் புகையாது.
4. Might is right.
   வல்லான் வகுத்ததே வாய்க்கால்.
5. Many things fall between the cup and the lip.
   கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.

வளரறி செயல்பாடுகள்

கேட்டல் திறன்	செயல்பாடு – 1

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

பண்டைய தமிழக மக்களின் வானியல் பார்வையைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. வானிலுள்ள கோள்கள், அவற்றின் இயக்கம், அதனால் ஏற்படும் பருவ கால மாற்றங்கள் ஆகியவற்றைக் கணித்துக் கூறக்கூடிய தெளிவு அன்றைய தமிழரிடம் மிகுந்திருந்தது. வானியலைப் பற்றிக் கணித்துக் கூறுபவர்களை அறிவன், கணியன், நாழிகைக் கணக்கர் என அழைத்தனர்.

சூரிய குடும்பத்தில் சூரியனே முதன்மையாகப் போற்றப்படுகிறது. சூரியனைச் சுற்றிக் கோள்கள் சூழ்ந்துள்ளன எனவும், சூரியனின் வெப்பத்தாலேயே புவியில் பருவ கால மாற்றங்கள் தோன்றுகின்றன எனவும் சங்க இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

பண்டைத் தமிழர் சூரியன் முதலான ஒன்பது கோள்களைக் கோள்மீன் எனவும், அசுவினி முதலான இருபத்தேழு விண்மீன்களை நாள்மீன் எனவும் பகுத்துக் கூறியதுடன் ஒவ்வொரு கோளுக்கும் காரணப் பெயரிட்டு அழைத்தனர். செந்நிறமுடைய கோளைச் செவ்வாய் என்றனர். புதிதாக அறிந்ததனால் புதன் என்றனர். இக்கோளுக்கு 'அறிவன்' எனவும் பெயருண்டு. வியா என்றால் பெரிய எனப் பொருள்படும். எனவே, வானில் பெரிய கோளாக வலம் வருவதனை வியாழன் என அழைத்தனர். வெண்மை நிறமுடைய கோள் வெள்ளி எனப்பட்டது. இவையனைத்தும் சங்கப்புலவர்களின் வானியல் அறிவையும் சிந்தனையையும் புலப்படுத்துவதாக உள்ளன.

வினாக்கள்

1. வானியலைப் பற்றிக் கணித்துக் கூறுபவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்கள்?
2. சூரிய குடும்பத்தில் முதன்மையான கோள் எது?
3. கோள்மீன், நாள்மீன் என்பன யாவை?
4. புதன் கோளுக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?
5. வியாழன் கோளுக்குரிய பெயர்க் காரணம் கூறுக.

பேசுதல் திறன்	செயல்பாடு – 2

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்துக் குழுவில் கலந்துரையாடுக.

தமிழ்நாட்டில் நகர அமைப்பு, சிற்றூர் அமைப்பு முறை வளர்ந்த ஒன்று! நடுவூரில் திருக்கோவில் உயர்ந்து விளங்கும்! திருக்கோவிலைச் சுற்றி நான்குபுறமும் மக்கள் சூழ்ந்து வாழ்வர், நான்கு திசைகளிலிருந்தும் மக்கள் திருக்கோவிலுக்குள் வந்து குழும, நான்கு திசைகளிலும் பெரிய வாயில்கள்! ஊர் முழுதும் ஒலித்து அழைக்கும் மணிகள். இஃதோர் அற்புதமான அமைப்பு!

மாலை நேரத்தில் ஊர்மக்கள் அனைவரும் தத்தம் குடும்பத்தினருடன் அணி பெற ஆலயத்திற்கு வருதலும், வணங்கி மகிழ்தலும் சிறந்த காட்சி! இறைவழிபாடு முடிந்தவுடன்

இங்குமங்குமாகத் தனித்தனியாகவும் கூட்டாகவும் ஒருவர் மற்றவரை நலம் விசாரித்தும், கலந்தும் களித்துப் பேசுதலும் மகட்கோடல் முதலிய நிகழ்வுகள் பற்றிப் பேசுதலும் இன்றைக்கும் நடைபெறும் நிகழ்ச்சி.

திருக்கோவிலில் ஒருமனப்பாட்டுடன் மக்கள் கூடுவர்; களித்தும் கலந்தும் பேசுவர். அதனால், திருக்கோவில் வளாகத்துக்குள் அன்பு செறிந்த, அருள்நலம் கனிந்த மனித உறவு வளர்கிறது; மனிதநேயம் வளர்கிறது. சில சமயங்களில் அங்கேயே ஒரு கூட்டம் கூடுகிறது. கிராமத்தின் பொது நிகழ்வுகள் கலந்து பேசப்படுகின்றன. இதனால், சமுதாயம் ஒழுங்கமைவு பெறுகிறது. ஓர் அருமையான கூட்டு வாழ்க்கை கால் கொள்கிறது.

படித்தல் திறன்	செயல்பாடு – 3

கீழ்க்காணும் உரைப்பத்தியை வாய்க்குட் படிக்க.

மனிதன் இயற்கையோடு ஒட்டி உறவாடி வாழ்தல் வேண்டும். செயற்கையை மிகுத்து இயற்கையையும், இயற்கைச் சூழ்நிலையையும் கேடுறச் செய்தால் மனித இனம் வாழ்தல் அரிது என்பது அறிவியல் அறிஞர்களின் கருத்தாகும். இக்கருத்தினைச் சிறிதேனும் உணராத மனித இனம் இன்று தன்னுடைய அழிவுப்பாதையினை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இயற்கைச் சூழ்நிலை என்று சுட்டப்படுகின்றபோது, இங்கு மிகவும் இன்றியமையாத காடுகளின் சுற்றுச்சூழல் சிந்திக்கப்படல் வேண்டும்.

விலங்கினங்கள் வாழ்வதற்கும் காடுகளே வாழிடமாகவும் அமைந்து விலங்கினங்கள் தொடர்ந்து உயிர் வாழ்வதற்கு உறையுள்ளாகவும், உணவும் நல்குகின்றன. எனவே காடுகளின் அழிவு, அங்கு வாழ்கின்ற விலங்குகளுக்கும் குடிமக்களாகிய நமக்கும் அழிவு என்பதாகும். “காடு இருக்கும் வரைதான் மனித வாழ்வு” என்னும் பழமொழி இங்குச் சிந்திக்கத்தக்கது.

சொல்வதனை எழுதுதல்	செயல்பாடு – 4

உயிர்க்கோளம் தன்னகத்தே பல இயற்கைக்காட்சிகளைக் கொண்டுள்ளது. பரந்த வான்வெளியும், உயர்ந்த மலைமுகடும், மலைவீழ் அருவியும், வற்றாமல் வளம் பரப்பும் ஆறும், கவின்மிகு சோலையும், கனிதரும் மரங்களும், கண்ணைக் கவரும் வண்ண மலர்களும், கருத்தைக் கவரும் வியத்தகு உயிரினங்களும் அதன் நிலைக்களன்கள் ஆகும்.

அகர வரிசைப்படுத்துதல்	செயல்பாடு – 5

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்துகளில் அமைந்த சொற்களை அகர வரிசைப்படுத்துக.

வெளித்தோற்றம் கொண்டு ஒருவரை அளவிடுதல் தவறானது. அவரின் உள்ளப் பண்பைக் கொண்டே அளவிடுதல் நலம். பலாப்பழம் முள்ளு முள்ளாகத் தோற்றமளிக்கும்; ஆனால், உள்ளுக்குள் சுவைமிகுந்த சுளைகள் காணப்படும். வீணை கோணலாக இருப்பினும் இனிய இசை வெளிப்படும். எட்டிப்பழம் மேலே பளபளவென இருந்தாலும் தொட்டாலே கசக்கும்.

நாவற்பழம் கருமை. ஆனால் இனிக்கும். பாம்புக்குட்டி பளபளவென இருக்கும்; ஆனால், கொடிய நஞ்சைக் கக்கும். ஆகவே, உருவு கண்டு எள்ளாமை வேண்டும்.

– கிருபானந்த வாரியார்

சொற்பொருளறிதல்	செயல்பாடு – 6

கீழ்க்காணும் தொடர்களில், கோடிட்ட இடத்தில் உரிய சொற்களைக்கொண்டு நிரப்புக.

(ஆக, தவிர, தகுந்த, கொண்டு, பதிலாக, வழியாக, விடவும், காட்டிலும், போல், தோறும்)

1. எனக்குப் ______ இந்த வேலையைச் செய்தது யார்?
2. அவர் உங்களை ______ வயதில் பெரியவர்.
3. உன் கையெழுத்து, வளர்மதியின் கையெழுத்தைப் ______ உள்ளது.
4. உ. வே. சாமிநாதர், பழஞ்சுவடிகளைத் தேடி ஊர் ______ அலைந்தார்.
5. இளஞ்செழியன், ஓவியம் வரைவதில் கதிரவனைக் ______ சிறந்தவன்.
6. புலியைக் கண்டதும் அதனை வாள் ______ வீழ்த்தினான்.
7. சாலை பழுதடைந்துள்ளதனால், யாரும் இந்த ______ச்செல்ல வேண்டா.
8. ஆளுக்குத் ______ பேச்சு வேண்டும்.
9. நாளை நடைபெறவிருக்கும் கருத்தரங்கக் கூட்டத்தில் உனக் ______ காத்திருப்பேன்.
10. உன்னைத் ______ இவ்வூரில் ஒருவரையும் அறியேன்.

பொருளறிந்து நிரப்புதல்	செயல்பாடு – 7

கீழ்க்காணும் தொடர்களில் ஏற்புடைய சொற்களைக்கொண்டு நிரப்புக.

(மட்டும், மட்டுமே, மட்டுமல்லாமல், மட்டுமன்றி, மட்டுமின்றி, மட்டில்லாத)

1. பொதுத்தேர்வில், மாநிலத்திலேயே முதல் மதிப்பெண் பெற்ற தன் மகனைப் பார்த்து அவன் தாய் ______ மகிழ்ச்சியடைந்தாள்.
2. நடைபெற்ற தேர்வில் நான் ஒருவன் ______ தேர்ச்சி பெற்றேன்.
3. கலைக்கல்வியானது, மாணவரிடையே படைப்பாற்றலை வளர்ப்பதனோடு ______ நினைவாற்றலையும் வளர்க்கிறது.
4. அறிஞர் அண்ணா, தமிழில் ______ ஆங்கிலத்திலும் சிறப்பாகச் சொற்பொழிவாற்றக்கூடியவர்.
5. நீ ______ உதவவில்லையென்றால், இந்தப் பணியை என்னால் எளிதாக முடித்திருக்க இயலாது.
6. பள்ளி ஆண்டுவிழாவுக்கு நீ ______ உன் பெற்றோரும் வரலாம்.

தமிழ்

சொல் விளையாட்டு	செயல்பாடு – 8

கீழ்க்காணும் பொதுமொழிகளை மூவகையாகப் பிரித்துப் பொருள் தருக. (குறிப்பு: மூன்றுக்கு மேற்பட்டும் அமையலாம்.)

(எ.கா.) வருந்தாமரை = வரும் + தாமரை (வரும் தாமரை மலர்)

வருந்தாமரை = வருந்தா + மரை (துன்புறாத மான்)

வருந்தாமரை = வருந்து + ஆ + மரை (துன்புறும் பசுவும் மானும்)

வருந்தாமரை = வரும் + தாம் + மரை (வரும் தாவும் மான்)

வருந்தாமரை = வரும் + தாமர் + ஐ (வருகின்ற மாலை அணிந்தவரை)

1. செம்பொன்பதின்கலம் = ______________________

____

____

2. எட்டுவரை = ______________________

____

____

வகைப்படுத்துதல்	செயல்பாடு – 9

கீழ்க்காணும் பயிற்சியில் ஓரினத்தைச் சார்ந்த சொற்களுள் ஒரு சொல் மட்டும் வேறானது. அச்சொல்லைக் கண்டறிக.

1. மாணிக்கம், முத்து, பவளம், சங்கு, கிளிஞ்சல்
2. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், இல்லம்
3. நிலம், காற்று, வானம், மலை, நெருப்பு
4. அருவி, சோலை, ஆறு, கடல், ஏரி
5. நிற்பன, ஊர்வன, பரவின, பறப்பன, நடப்பன

பிறமொழிச்சொற்களை இனங்காணல்	செயல்பாடு – 10

கீழ்க்காணும் தொடர்களில் தமிழ்ச்சொற்களுடன் பிறமொழிச்சொற்களும் விரவியுள்ளன. அவற்றைக் கண்டறிந்து, அவற்றிற்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

1. அகிலம் போற்றும் வகையில் நம் இந்தியா வளர்ச்சி அடைந்து வருகின்றது.

(______________)

2. பார்வை நேரம் முடிந்ததனால், மாவட்ட ஆட்சியரைப் பார்க்க அனுமதி மறுக்கப்பட்டது.

(______________)

தமிழ்

3. பண்டைக்காலத் தமிழர் வில், வேல், வாள் முதலிய ஆயுதங்களை ஏந்திப் போர் புரிந்தனர் (____________)

4. சான்றோர் கூறும் உபதேசங்கள் நம் வாழ்க்கைக்கு ஏற்றமளிப்பவை. (____________)

5. மாறனுக்கு அரசு வேலை கிடைத்ததனால் கம்பீரத்துடன் ஊரை வலம் வந்தான். (____________)

6. நாம் எழுதுவதற்குக் காகிதங்களைப் பயன்படுத்துகிறோம். (____________)

7. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது ஔவை மொழி. (____________)

8. செய்தித்தாளுக்குச் செய்திகளைத் திரட்டித் தருவதில் நிருபரின் பங்கு இன்றியமையாதது (____________)

9. 'நீதிக்குத் தலை வணங்கு' என்பது ஆன்றோர் வாக்கு. (____________)

10. ஒரு வருடத்துக்குப் பன்னிரண்டு மாதம் உள்ளன. (____________)

இடைச்சொல்லின் பொருள் அறிதல்	செயல்பாடு – 11

கீழ்க்காணும் தொடர்களில் 'உம்' என்னும் இடைச்சொல் எத்தகைய பொருளில் வந்துள்ளது என எழுதுக.

குறிப்பு : 'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் ஆகிய பொருள்கள் குறித்து வரும்.

(எ.கா.) நான் மறப்பினும் நீ மறவாதே.

பொருள் : எதிர்மறை (நான் மறக்கமாட்டேன் என்னும் எதிர்மறைப் பொருள்.)

வ. எண்	தொடர்	பொருள்
1.	கரையில் இருப்பது கயிறாகவும் இருக்கலாம்	
2.	கால்நடையும் தீண்டாத செடி	
3.	கவினும் எழிலும் முகிலும் தேர்வு எழுத வந்தனர்.	
4.	உன் கையிலுள்ள நூல் திருக்குறளுமன்று திருவாசகமுமன்று	
5.	சேரனுக்கு இருவிழியும் சிவந்தன.	

தமிழ்

6.	பூப் பூத்துக் காயும் காய்த்தது.	
7.	கருத்தரங்கக் கூட்டத்துக்குச் சிறப்பு விருந்தினரும் வந்துவிட்டார்.	

தமிழெண் பயன்பாடு	செயல்பாடு – 12

1/16	1/8	1/4	1/2	3/4	100	1000
௰	ளு	வ	இ	ஔ	௱	௲

1	2	3	4	5	6	7	8	9	10
க	உ	ங	ச	ரு	சூ	எ	அ	கூ	ய

மேற்கண்ட அட்டவணையைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் விடுகதைகளுக்கான விடைகளைத் தமிழெண்களில் காண்க.

(எ.கா.)	முதலில் எட்டு இடையில் ஐந்து இறுதியில் 'மை' அதனால் வரும் மேன்மை. அஃதென்ன ? விடை : அருமை	3.	எட்டை முதலில் வைத்து ஒன்றை இடையில் வைத்து இறுதியில் 'ம்'மைச் சேர்த்தால், புறத்தின் எதிர்ச்சொல் வரும். அஃதென்ன ? விடை:
1.	முதலில் ஒன்று இடையில் பத்து இறுதியில் 'ல்' சேர்த்தால், அழகிய கண்ணுக்கு உவமையாகும். அஃதென்ன ? விடை:	4.	முதலில் ஏழு இறுதியில் ஐந்து இரண்டும் சேர்ந்தால் வேளாண்மைக்கு உதவும். அஃதென்ன ? விடை:
2.	அரை முதலில் நிற்க ஐந்து இடையில் வர நூற்றின் மேல் புள்ளி வைத்து இறுதியாக்க, ஒளிக்கு அஞ்சுவது வரும். அஃதென்ன ? விடை:	5.	முதலில் இரண்டு இடையில் ஐந்து இறுதியில் காலுடன் 'ம்' சேர்த்தால் வடிவத்தினைக் குறிக்கும் சொல் வரும். அஃதென்ன ? விடை:

ஊடகப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வு	செயல்பாடு – 13

விண்ணரசி ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறாள். விடுமுறை நாளில் தன் அம்மாவின் செல்பேசியை எடுத்து எண்களை அழுத்தி விளையாடுவது, அவளுக்கு மிகவும் பிடிக்கும். ஒருநாள், வழக்கம்போல் தன் அம்மாவின் செல்பேசியை எடுத்த விண்ணரசி, ஏதோவொரு பத்து எண்ணை அழுத்தினாள். செல்பேசியின் எதிர்முனையிலிருந்து ஓர் ஆணின் குரல் கேட்டது. விண்ணரசி அச்சமடைந்து, செல்பேசியின் அழைப்பை உடனடியாக நிறுத்திவிட்டாள். அம்மாவிடம் இதனைப்பற்றிக் கூறாமல், செல்பேசியைக் கொடுத்துவிட்டாள்.

மறுநாள் மீண்டும் அதே நேரத்தில் செல்பேசியை வைத்து விளையாடிக்கொண்டிருந்தாள். அப்போது, செல்பேசியிலிருந்து ஓர் அழைப்பு வந்தது. அந்த எண் யாரிடமிருந்து வருகிறது என்பதனை அறிய ஆவல்கொண்ட விண்ணரசி, உடனடியாக அந்த எண்ணுக்குத் தொடர்பு கொண்டாள். எதிர்முனையில் பேசியவர், விண்ணரசியிடம் பெயர், இருப்பிடம், அம்மாவின் பெயர், அலுவலக முகவரி, அவருடைய வங்கிக் கணக்கு எண், மின்னஞ்சல் முகவரி முதலிய விவரங்களைக் கேட்கத் தொடங்கினார்.

முதலில் கூறுவதற்கு மறுத்த விண்ணரசி, அச்சம் நீங்கி, விவரங்களைக் கூறத் தொடங்கினாள். அப்போது அங்கு வந்த விண்ணரசியின் அம்மா, அவளிடம் நீ யாரிடம் பேசிக்கொண்டிருக்கிறாய் ? எனக் கேட்டார். விவரங்களைக் கேட்ட அவளின் அம்மா, செல்பேசியின் இணைப்பைத் துண்டித்தாள். அவளிடம், முன்பின் தெரியாத ஒருவரிடம் உன்னைப் பற்றியோ, உன்னைப் பற்றிய விவரங்களையோ எக்காரணத்தைக் கொண்டும் கூறக் கூடாது எனக் கூறினார். ஏனென்றால், அவ்விவரங்களைக் கொண்டு ஒருவருடைய மின்னஞ்சலுக்கான கடவுச்சொல், வங்கிக் கணக்கெண்ணுக்கான கடவுச்சொல்லைக் கண்டறிந்து நம்சார்ந்த விவரங்களையும், வங்கியிலுள்ள பணத்தையும் எடுத்துக் கொள்ளுவார்கள். பெரும்பாலானோர் மின்னஞ்சல், வங்கிக்கணக்குக்கு அம்மா, அப்பா, மனைவி, பிள்ளைகள், நண்பர், ஊர், அஞ்சல் குறியீட்டுஎண் முதலியவற்றைக் கடவுச்சொல்லாக வைத்துள்ளனர். ஏமாற்றுவோர் இதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். ஆகவே, செல்பேசியைப் பயனறிந்து பயன்படுத்துவதோடு எச்சரிக்கையாகவும் இருத்தல் வேண்டும்.

வினாக்கள்

1. முன்பின் தெரியாத ஒருவரிடம் விண்ணரசி, செல்பேசியில் பேசியது முறையா ?
2. நம்மை அறிந்திராத ஒருவரிடம் நம்மைப் பற்றிய விவரங்களைச் செல்பேசியில் ஏன் தெரிவித்தல் கூடாது ?
3. செல்பேசியைப் பயன்படுத்தும்போது மேற்கொள்ளவேண்டிய பாதுகாப்பு முறைகள் யாவை ?
4. பெற்றோரின் இசைவின்றி, அவர்தம் செல்பேசியைப் பயன்படுத்தலாமா ?
5. உங்கள் செல்பேசியை மற்றவருக்குக் கொடுப்பீர்களா ? இல்லையெனில் ஏன் எனக் காரணம் கூறுக.

படைப்பாற்றல்	செயல்பாடு – 14

கீழ்க்காணும் படம் உணர்த்தும் கருத்தை எழுதுக.

கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

காலம் : 15 மணித்துளி

உயர் மதிப்பெண் : 10

1. கோடிட்ட இடத்தை நிரப்புக. 5 × 1 = 5

   1. உயிர்கள் முதன்முதலில் தோன்றிய இடம் ________________ .
   2. உயிரினம் வாழ்வதற்குத் தகுதி இல்லாத கோள்களுள் ஒன்று ________________.
   3. காற்றுமண்டலத்தை ________________ கோளம் எனக் கூறுவர்.
   4. ஓசோன் ________________ படலம் என அழைக்கப்படுகிறது.
   5. மண்ணரிப்பு ஏற்படாமல் ________________ பாதுகாக்கின்றன.

2. கீழ்க்காணும் வினாவுக்கு ஐந்துவரிக்கு மிகாமல் விடையளிக்க. 1 × 5 = 5

   புவிவெப்பமயமாதலினால் ஏற்படும் தீங்குகள் யாவை ? அவற்றை எவ்வாறு தடுக்கலாம் ?

“என்னால் முடியும், நானே செய்தேன்”

('I can, I did')

மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

வ.எண்	நாள்	பாட எண்	பாடத்தலைப்பு	செயல்பாடு	குறிப்புரை